636

42494

# VASANTHA KOKILAM

(AN EXCELLENT TAMIL DRAMA)

636
1.T.9

FEB 1919

BY

VADUVUR
K. DURAISWAMI AYYANGAR, B.A.
(MEDALIST)

PUBLISHED BY
S. S. MANIA & CO.
BOOKSELLERS, AND PUBLISHERS
VEPERY, MADRAS

Copy Right] [Registered

Price As. 12

O-,2MDI,V
N18
K42553

111

# வஸந்த கோகிலம்

அல்லது

## மிருச்சகடி

636
1·19
5-FEB 1919
MADRAS

வடுவூர். கி. துரைசாமி அய்யங்கார், பி. ஏ
(நூலாசிரியர்.)

---

வேப்பேரி
எஸ். எஸ். மணியா அண்டு கம்பேனியாரால்
பிரசுரிக்கப்பட்டது.

திருவல்லிக்கேணி,
கம்மேர்ஷியல் அச்சுக்கூடம்.
1918

காபி ரைட்] [விலை அணு. 12.

1917
894.8112
42494

# எங்களுடைய சொந்தப் பிரசுரங்கள்

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | சந்திரரேகை ... ... | 1 | 4 | 0 |
| 2. | *72 மேளராக மாலிகை ... | 1 | 0 | 0 |
| 3. | வஸந்த கோகிலம் ... ... | 0 | 12 | 0 |
| 4. | லீலாவதி ... ... | 0 | 12 | 0 |
| 5. | ஜெயலட்சுமி ... ... | 0 | 10 | 0 |
| 6. | மாயஸுந்தரி ... ... | 0 | 8 | 0 |
| 7. | செல்வராமன் ... ... | 0 | 5 | 0 |

* இஃது உலகப்பிரஸித்தமாய் விளங்கிக் கொண்டிருந்த ஸங்கீத வித்வான் வேதஸ்ரீ மஹாவைத்யநாதையரவர்கள் தஞ்ஜாவூரை ஆண்ட **His Highness** சிவாஜி மஹாராஜா அவர்கள் மாப்பிள்ளை, *M R.Ry.* ஸகாராம் ஸாஹேப் அவர்களின் வேண்டுகோளின்பேரில் நூதனமாய் அற்புதம் தோன்ற இயற்றிய 72 மேளராக மாலிகை இலக்கணப்படி ஸுரப்படுத்தி தெலுங்கு லிபியில் பிரசுரிக்கப்பட்டது. ஸங்கீத வித்வான்களுக்கும், அப்யாஸிகளுக்கும் மிகவும் இன்றியமையாதது. இதில் மஹா வைத்யநாதையருடைய பரம குருவாகிய வையை ஆனையா அவர்கள் இயற்றிய கீர்த்தனைகளில் சிலவற்றையும், மஹா வைத்யநாதையருடைய தமயனார் இராமஸ்வாமி அய்யர் அவர்கள் இயற்றிய கீர்த்தனங்களில் சிலவற்றையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

1919
890.882
5-FEB 1919

# FOREWORD.

The immortal Sanskrit play Mrichchakati by our King-poet Kshudraka, written centuries ago, needs no introduction to the public and it will be nothing short of impudence to attempt it.

2. The late Pandit Natesa Sastriar has alreardy produced a prose version of the drama and this attempt of mine is not one intended to out-do it or to cast any slur on it; but has been made from a different stand-point. As a stage conductor of an Amateur dramatic society, I adapted this from the original as a drama for the Tamil Stage at the request of many of my Saidapet friends, as I thought and I still think that the play, if enacted, would be very successful and would mightily please the audience.

3. I, however, owe an apology to the public for having made certain deviations and alterations. Some of the names including that of the hero being old fashioned, harsh and unknown to the Tamil world, I have changed them to lend freshness and attractiveness. The incidents of the story have also been slightly changed here and there to suit, as far as possible, the customs and manners of Southern India and the modern conditions.

4. In publishing this small work for the enjoyment of the Tamil world, it is my firm belief that the public would show me the same indulgence as they have done in regard to my previous productions such as **Sundarangi**, **Rajendra Mohana**, etc, etc., in respect of any blunders or omissions that might have crept into this book.

ROYAPETTAH,
5th Decr. 1918,

VADUVOOR. K. DURAISWAMI.

O.A.2MDI,V

# நடிப்போர்.

---

மாதவராயர்—பெருத்த தனிகரான நகராதிபதியின் புத்திரர்.

ஸோமேசன்—அவருடைய அரிய மித்திரன்.

சிசுபாலன்—அவருடைய குழந்தை.

குணசீலன்—அவருடைய வேலைக்காரன்.

வீரஸேனன்—மங்களபுரி அரசனுடைய மைத்துனன்.

பத்மநாபன்—அவனுடைய வண்டிக்காரன்.

மகிபாலன்<br>திண்டன்<br>முண்டன் } சூதாடிகள்.

கமலேசன்—மகிபாலனுடைய நண்பன்.

சசிமுகன்—பிராம்மணத் திருடன்

தனபாலன்—வஸந்தஸேனையின் நட்டுவன்.

வீரகன்<br>சந்தானகன் } காவலர் தலைவர்கள்.

பிரதாபன்—இடையன்; பிறகு அரசனானவன்.

கோகிலம்—மாதவராயரின் மனைவி.

வஸந்தஸேனை—ஒரு விலைமகள்.

மல்லிகா—அவளுடைய பணிப்பெண்.

கோமளா—கோகிலத்தின் பணிப்பெண்.

தோழன், தோழி, தாய்க்கிழவி, நியாயாதிபதி, விசாரணை கர்த்தா, சேவகர், வக்கீல்கள், சண்டாளர், முதலியோர்.

இடம்:—மங்களபுரி.

636
1-1919

# வஸந்த கோகிலம்

## அல்லது

# மிருச்சகடி

---

## முதல் அங்கம்

---

### முதற்காட்சி

இடம் :—மங்களபுரியில் ஒரு வீதி. மாதவராயருடைய மாளிகை, எதிரிற் காணப்படுகின்றது.

பொழுது :—இரவு 7½ மணி சமயம்.

ஸோமேசன்.— (மாதவராயருடைய மாளிகையின் வாசலில் நின்றுகொண்டு தனக்குள்):—ஸோமேசா! நீ எவ்வளவு கேவல நிலைமைக்கு வந்துவிட்டாய்! மாதவராயர் பெருத்த தனவந்தரா யிருந்தகாலத்தில் நீ எப்படி இருந்தாய்! ஆகா! என்னபோஜனம்! என்ன பரிபக்குவ பதார்த்தங்கள்! என்ன உபசரணை! என்ன தாம்பூலம்! இந்த மாளிகைக்கு வரும் விருந்தினர் எத்தனைபேர்! எல்லாம் கனவோ நினைவோ என்று நினைக்கும்படி ஒழிந்துபோய் விட்டனவே! நான் ஊர்க்காளையைப்போல, மூக்கின் வழியாக நெய்யும், பருக்கையும் வரும்வரையில் உண்டு, மதோன்மத்தனாய் இந்தத்திண்ணையிலுள்ள திண்டிற் சாய்ந்து, படுத்துப்புரண்டு புரண்டிருந்த நாட்கள் இனித்திரும்பி வருமோ? அப்பொழுது எனக்கென்ன குறைவாயிருந்தது? பசியும், மனக்குறையுமே குறைவா யிருந்தன! இப்

பொழுது என்கதி எப்படி இருக்கிறது? ஒருநெல் எவ் விடத்தில் அகப்படுமோ வென்று நாள்முழுதும் அலைந்து திரியும் பறவையைப்போல, எவன் போஜனத்திற்கழைப் பான், எப்படி ஒருவேளை கழியுமென்பதே நினைவாகவும், பசியே நீங்காத்துணைவனுகவும் பெற்று வருந்தியலைகிறேன். என்ன செய்கிறது! எல்லாம் கால வித்தியாஸம்! என் னுடைய ஆப்தமித்திரராகிய மாதவராயருடைய செல்வ மெல்லாம் எவ்விதம் குறைந்தபோதிலும், அவரிடத்தில் எனக்குள்ள அன்பும், ஆசையும் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்துக் கொண்டே வருகின்றன! எந்நன்றி கொன்ற வர்க்கும் உய்யும் வழியுண்டு. செய்ந்நன்றி கொன்றவர்க்கு அந்தப்பாவத்தைத் தொலைப்பதற்கு வழியேது? என் நண்ப ரிடத்திற்போய் அவருக்கு ஆறுதல் சொல்லுகிறேன். அவர் குடும்ப தெய்வங்களுக்குப் பூஜை செய்யும் சமயமாயிருக்க லாம். (உள்ளே நுழைகின்ருன்.)

(மாதவராயரும், கோமளாவும் பூஜைத்தட்டு முதலிய வற்றை எடுத்துக்கொண்டு வருகின்றனர்.)

தேவாரம்-இராகம் தேசிகதோடி-தாளம் ரூபகம்.

மாத.—(1) வீடலால வாயிலாய் விழுமியார்க ணின்கழற்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே!
காடலால வாயிலாய் கபாலிநீள் கடிம்மதிட்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே!

(2) பட்டிசைந்த மேனியாள் பாவையாளோர் பாகமா
யொட்டிசைந்த தன்றியும் முச்சியா னொருத்தியாக்
கொட்டிசைந்த வாடலாய்க் கூடலால வாயிலா
யெட்டிசைந்த மூர்த்தியா யிருந்தவாறி தென்னையோ!

மாத.—(பெருமூச்சு விட்டு) ஆகா! என்ன கால வித்தியாஸம்! என்னுடைய உன்னத நிலையில் நான் கொடுத்த பலிபிண்டத்தை எத்தனையோ காகங்களும், அன் னங்களும், மற்றப் பறவைகளும் என் மாளிகை வாசலில் வந்து நிறைந்து, வாரிக்கொண்டு போய்க் குதூகலமாகத் தின்றன. இப்பொழுது நான் அர்ப்பணம் செய்வது புல்லி

விருக்கும் எறும்புகளுக்கும் போதாமல் அவ்வளவு அற்பமாய்ப் போய்விட்டதே! ஈசுவரா! இதுவும் உன் அருளோ!

(கீழே உட்காருகிருர்.)

ஸோமே.—ஸ்வாமி! நமஸ்காரம்!

மாத.—மங்கள முண்டாகட்டும். மித்திர ரத்னமே! வா; உட்கார்.

ஸோமே.—ஆக்ஞை; (உட்காருகிருன். மாதவராயர் ஏதோ யோசனை செய்கிருர்) என்ன யோசனை செய்கிறீர்கள்?

மாத.—மித்திரா!

விருத்தம்-இராகம் சங்கராபரணம்.

என்னென வுரைப்பே னன்பா! இன்மையின் கொடிய தன்மை
முன்னுள புகழை நட்பை மொழிகளின் மதிப்பை நீக்கும்;
உன்னினு முடலைத் தீய்க்கு மொண்மையு மிளமை போக்கும்;
அன்னையும் பகைமை கொள்ளும்; அலகிலாச் சிறுமை மல்கும்.

துக்கத்தை யடுத்தாற்போலத் தொடர்ந்துவரும் ஸந்தோஷம், இரவிற்குப்பின் சூரியப் பிரகாச முண்டாய் அதை ஓட்டுவதைப்போ லிருக்கிறது. ஆனல் செல்வத்திலிருந்து தரித்திர நிலைமையை யடைபவன் பார்வைக்கு மனிதனைப்போ லிருந்தபோதிலும் அவன் நடைப்பிணமே யொழியவேறில்லை. இந்நிலைமையைக் காட்டிலும் கொடியது வேறென்னவிருக்கிறது!

ஸோமே.—அப்படியானல் தரித்திர நிலைமையிலிருப்பவர்கள் யாவரும் உயிரைவிட்டு விடவேண்டு மென்று நினைக்கிறீர்கள்?

மாத.—என் விருப்பத்தின்படிக் காரியம் நடப்பதாயிருந்தால், இவ்விதம் உயிர் வாழ்தலைக் காட்டினும், உயிரைத் துறப்பதையே உத்தமமாகக் கொள்வேன். பிராணனை விடுவது சொற்பக்கஷ்டமேயாகும். தரித்திரனயிருப்பது ஆயுட்காலம் முழுதும் ஒழியா வேதனையைத் தரக்கூடிய தல்லவோ!

ஸோமே.—ஸ்வாமீ!

விருத்தம்-இராகம் தோடி.

உயிரினு மரிய நண்பீர்! உருகினீர் வானங் காணுப்
பயிரினு மதிகம் வர்டிப் பரிபவ முறுத லென்னே?
செயிரினை யடையா நன்மைச் செல்வமே நிதிக்கு மேலாம்;
துயரினை விடுப்பீர் காணத் துடித்தனே னினிய அன்பீர்!

நீங்கள் இதைப்பற்றி ஏன் கவலைப் படுகிறீர்கள்? நீங்கள் ஏழ்மை நிலைமையை அடைந்ததினுலேயே உங்களுக்குத் தாழ்மையும், இகழ்ச்சியுமுண்டாய் விடுமோ? நண்பர்களுக்கும், இல்லை யென்று வந்த யாசகர்களுக்கும் வாரி வாரிக் கொடுத்து, ஐசுவரியத்தை யெல்லா மிழந்ததினுல் உங்களுடைய கீர்த்தி அதிகரித்ததே யொழிய இதனுல் உங்களுக்கு யாதொரு மானஹானியும் உண்டாகவில்லை. சந்திரன் தேய்ந்து தேய்ந்து, அற்பத்திலு மற்பமாய்த் தோன்றும் சமயமாகிய மூன்ரும் பிறையிலே தானே அது மிகவும் நேத்திரானந்தமாய்க் காணப்படுகிறது.

மாத.—பிரிய நண்பா! என்னுடைய ஸொந்த உபயோகத்திற்கு ஐசுவரியமில்லை யென்று நான் சிறிதும் விஸனிக்கவில்லை.

விருத்தம்—இராகம் மோகனம்.

கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்யன்—உருப்பெற்ருல்
ஊட்டி வளர்க்கானே ஓமெகடுவா யன்னுய்! கேள்
வாட்ட முனக்கேன் மகிழ்.

என்று யாவராலும் ஸ்தோத்திரம் செய்யப்பெற்ற சர்வேசுவரனுடைய மகிமையை நீயறிய மாட்டாயா? நாம் பத்து மாதகாலம் அன்னையின் வயிற்றிலிருந்தோமே; அப்பொழுது நமக்குத் தேவையான ஆகாரத்தையும், பிறவற்றையும் சமயம் பார்த்துக்கொடுத்துக் காப்பாற்றியது யார்? பிறகு நாம் குழவியா யிருந்தோமே; "குழந்தைக்குப் பல் இல்லையே. அதன் வாய் புஷ்பத்திலும் மிருதுவான தல்லவா. அதற்குத் தகுந்த உணவைச் சேகரம் செய்து,

ஸௌலபமாக ஊட்டுவிக்க வேண்டுமென்று கவலைகொண்டு, அன்னையின் தேகத்தில் மிருதுவான ஓரிடத்தில் தேகாரோக்கியமான பாலை உண்டாக்கி வைப்பவன் யார்? நம்முடைய வேண்டுகோளில்லாமலே நம்மைப்பற்றி இவ்வளவு கவலைப்பட்டு, நம்மைக் காப்பாற்றிய சர்வேசுவரன் நாம் பெரியவர்களாய்விட்ட வுடன் நம்மை மறந்து விடுவானென்று நினைக்கிறாயா? ஆகையால் நான் என் ஸொந்த விஷயத்தைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. முன்போலவே அநேகருக்கு உதவிசெய்து பல ஆன்மாக்களுக்கு ஆனந்தத்தை உண்டாக்கக்கூடிய நிலைமையில் நான் இல்லாததே என்னுடைய விஸனம். இதற்குமுன் கும்பல் கும்பலாகவந்து கொண்டிருந்த விருந்தினர், தனத்தை இழந்த இந்த மாளிகையைத் தேடி வராமலிருப்பதே எனக்குப் பெரிதும் வேதனையை யுண்டாக்குகிறது. தேனெல்லாம் உலர்ந்துபோன மலரை நன்றி கெட்ட வண்டுகள் எப்படித் தேடிப்போவதில்லையோ அப்படியே முடிந்தது என்னுடைய நண்பரின் அன்பும்.

ஸோமே.—இப்பொழுதுதானென்ன? அவர்கள் இங்கு வரமாட்டோ மென்கிறார்களா? நீங்கள் போஜன மளிப்பதாயிருந்தால் முதல் பந்திக்குத் தயாராக வந்து விடுவார்கள். அதைப்பற்றி நீங்கள் ஸந்தேகித்தலே தேவையில்லை. மாடு மேய்ப்பவன் புதிது புதிதான புல் பூண்டுகளின்பேரில் மாடுகளை மேயவிட்டுக்கொண்டே போவதைப்போல, இவர்களும் பசுமையா யிருக்குமிடத்தையே நாடிச்செல்கிறார்கள். இலாபமில்லாதக் காரியத்தை யார் தாம் செய்வார்கள்? இதிலென்ன குற்றம்?

மாத.—ஆம்! உண்மை தான்; இலாபத்திலும், சுயநலத்திலுமே கண்ணும் கருத்துமா யிருப்பவருக்கு உற்றார், பெற்றார், அன்பினர், பகைவர் என்னும் பேதமெப்படி யுண்டாகும்! கல்லினும், எஃகினுங் கடிய அவர்மனது எவ்விதமான பற்றினாலும் இளகுமோ? ஒரு நாளுமில்லை.

ஸோமே.—அவர்கள் விஷயத்தில் நம்முடைய பொருட்களைச் செலவழித்தது போதாதென்று இவ்விதம்

நம்முடைய பொழுதையும் அவர்களைப் பற்றி நினைப்பதில் வீணுக்குவானேன். கொட்டிக் கொட்டி அளந்தாலும் குருணி பதக்காகுமோ? தினந்தினம் இதைப்பற்றி ஓயாமல் வருந்தி மனதை என் வதைத்துக் கொள்ளுகிறீர்கள்?

**மாத.**—ஆஹா! என்ன செய்வேன்?

(நந்தன் சரித்திரம் "சிவலோக நாதனைக் கண்டு" என்ற பாட்டின் வர்ணமெட்டு)

**இராகம்—செஞ்சுருட்டி; தாளம்—ரூபகம்.**

**பல்லவி.**

இதுவோ நின் சோதனை? இன்னம் ஏனிக்கொடுமை? ஈசா!

**அநுபல்லவி.**

விதிவயமிதுவாமோ?—பவ
விதைகளளித்த பயனுகுமோ? (இது)

**சரணம்.**

1. பணமே தெய்வம் பாழுமுலகில்; பாதகங்களைச் செய்யும்;
பிணமே தனமில்லாதன்; ஏனே பிறந்தே னில்லாதவன்.
(இது)

2. இல்லான் முகமில்லாள் முதல் எவரும் விரும்பிப்பாரார்;
சொல்லார் மொழி; விலகி நடப்பர்; பொல்லா விஷமெனவே
[வெறுப்பர். (இது)

விஸனம் நெருப்பைப்போல என்மனதை வேகவைத்து என்னை வதைக்கிறதே யொழிய, என் தேகத்தை எரித்துச் சாம்பலாக்காமலிருக்கிறதே! சே! தரித்திரக்கொடுமையினும் கொடிது வேறொன்றுமே யில்லை. நம்மிடத்தில் பரம ப்ரீதி கொண்டவர்களைப்போல்நடித்தவர்களெல்லோரும்இப்பொழுது நம்மை அவமதித்து ஏளனம் செய்வதைக்காண, மனிதனுக்கு உண்மையில் ஒரு யோக்கியதையுமில்லை யென்பதும், பெருமையும் சிறுமையும் செல்வத்தினுலேயே ஏற்படுகிறதென்பதும் நன்ருய் விளங்குகிறது. மனிதர்களுடையகுணம் எப்படி இருக்கிறது? ஒருவன் தனவந்தனுயிருந்தால் அவனைப் பார்த்துப் பிறர் பொருமை யடைந்து வயிற்றெரிச்சல் கொள்வது; அவன் ஏழையாய் விட்டால்

அவனைப் பார்த்து ஏளனம் செய்வது.—அதிருக்கட்டும், தயவுசெய்து இந்தப் பலிபிண்டத்தை எடுத்துக்கொண்டு போய் முச்சந்தியில் வைத்துவிட்டு வா.

**ஸோமே.**—ஸ்வாமி! நான் போகமாட்டேன்.

**மாத**—[புன்சிரிப்புடன்]. ஒருநாளும் இப்படிச்சொல்ல மாட்டேயே! இன்றையதினம் என் நீ இப்படிச் சொல்கிறாய்?

**ஸோமே:**—

**விருத்தம்—இராகம் கல்யாணி.**

இல்லையோ புவியில் தெய்வ மிதுவரை நீவிர் பாழுங்
கல்லையோ தொழுதீர்? செய்த காரியம் விழலுக் கீந்த
தில்லையோ? கடவுள் செய்தி யின்னனமாக, மாந்தர்
புல்லியோ ராதல் சாலப் புதுமையோ! விடுப்பீர் யாவும்.

இதனால் என்ன பலன்! நீங்கள் எவ்வளவோ காலமாகத் தெய்வங்களை ஆராதனை செய்து கொண்டிருக்கிறீர்களே; அவைகள் உங்களுக்கு என்ன நன்மை செய்தன? மனிதருக்கு நன்றியில்லையென்று சொன்னோமே. தெய்வங்களுக்கே நன்றி இல்லாத பொழுது, மனிதர் விஷயம் ஒரு பொருட்டா? தெய்வங்களை ஆராதிப்பது விழலுக் கிறைத்த நீரே யொழிய வேறில்லை.

**மாத.**—அப்பா ஸோமேசா! தெய்வங்களைத் தூஷிக்காதே! நமக்குத்துன்பமுண்டாவதற்கு நாமே காரணமன்றி அது தெய்வத்தின் குற்றமன்று. நாம் நன்மை செய்தால் நன்மையைப் பெறுகிறோம். தீமை செய்தால் தீமையையே கைம்மாறாய்ப் பெறுகிறோம். தெய்வத்தை ஆராதிப்பது வீணாகுமென்று நினைக்காதே. 'மாரடித்தகூலி மடிமேலே' என்பார்களே அவ்விதம் இதில் நாம் உடனே பலனை விரும்பலாமோ? அரசன் அன்று தரும்; தெய்வம் நின்று தரும். நமக்கு எது நன்மையோ அது கடவுளுக்கு நன்றாய்த்தெரியும். அவர் அதை அவசியம் செய்வார். நேரமாகிறது. இருள் அதிகமாகச் சூழ்கிறது. சீக்கிரம் போய் விட்டு வந்து விடு.

**ஸோமே.**—இந்த இருளில் வெளியிற் போக எனக்கு மிகவும் அச்சமாக இருக்கிறது. ஊரில் துஷ்டர்களும், துன்மார்க்கர்களும், திருடர்களும் அதிகரித்து விட்டனர். அவர்கள் இப்பொழுதே அலைந்து திரியும் சமயம்; நான் இந்த இருளில் வெளியிற் போவேனாகில் தேரைக்காகக்காத்துக்கொண்டிருந்த பாம்பின் வாயில் வந்து விழுந்த சுண்டெலியைப்போல நான் துன்பப்படவேண்டி வரும்.

**மாத.**—ஸரி! அப்படியானால் கொஞ்சநேரம் உட்கார். ஜெபம் செய்துவிட்டு நானும் வருகிறேன். இரண்டு பேருமாய்ப் போகலாம்.

**ஸோமே.**—அப்படியே!

(இருவரும் ஒரு பக்கமாய்ப்போகிறார்கள்.)

[அந்தத் தெருவில் வஸந்த ஸேனை முன்னால் ஓடிவர, அவளைத்துரத்தியவண்ணம் வீரஸேனனும், அவன் தோழனும், ஸேவகனும் வருகின்றனர்.]

**வீர.**—அடி வஸந்தசேனை! ஓடாதே! நில் நில்.

**தோழன்.**—வஸந்தஸேனை! ஏன் இந்தப் பாடுபட்டு ஓடுகிறாய்! இப்படி ஓட உனக்கு நாணமில்லையா?- பரத நாட்டியத்தில் அழகாய் உபயோகப் படுத்தவேண்டிய உன்னுடைய பாதங்களை ஏன் இப்படி வதைத்துக்கொள்கிறாய்? வேடனால் துரத்தப்படும் மான் நாற்புறங்களையும் பார்த்துப் பயந்து மருண்டு ஓடுவதைப்போலச் செல்கிறாயே! நில் நில்! பயப்படாதே.

**வீர.**—ஆஹா! ஒவ்வொரு அடியிலும்தடுமாறி விழுகிறாயே! ஐயோ பாவம்! ஏன் உனக்கு இவ்வளவு சிரமம்? நான் பேயா? பூதமா? என்னைக் கண்டு ஏன் இவ்விதம் அஞ்சி யோடவேண்டும். நான் உன்னைத் தின்றுவிடுவேனா? உன்பேரில் நான்கொண்ட மோகத்தினாலல்லவோ இவ்விதம் வருகிறேன். உன் நினைவினால் என் மனம் தணலாய் எரிய, அனலிலிடப்பட்ட புலாலைப் போல என் தேகமுழுதும் கருகுகிறதே! அடி வஸந்த ஸேனா! ஓடினதுபோதும். நில்! நில்!

**ஸேவகன்.**—அடியாத்தே! என்னமா ஓடியாருங்க றேன் பயமவ! ஏகுட்டி! நீ எம்பிட்டுத்தூரந்தான் ஓடினே! ஒன்னை உட்டுடுவாங்கன்னு நெனைக்காதே! என் சொம்மா ஓட்றே! நில்லு! நில்லு! வீணுக் கெட்டுப்போவாதே!

**வீர.**—அடி ஸுந்தரீ! இப்படி ஓடினால், புஷ்பத்தி லும் மெல்லிய உன்னுடைய பாதங்கள் எப்படி வருந்தா! உன்னையே நினைத்துருகும் காதலை வெறுத்து விலக்கி ஏன் இப்படி ஓடுகிறாய்? பகலிலோ எனக்கு நித்திரையே இல் லாமற் செய்துவிட்டாய். இரவிலோ என் கண்ணிற் படா மல் தப்பித்துக்கொள்கிறாய். என்றைக்கும் உன் தந்திரம் பலிக்குமென்று நினைக்காதே! என்னிடத்தில் நீ ஒருக்கா லும் தப்பமாட்டாய். இராவணன் கையில் திரௌபதி அகப்பட்டுக்கொண்டதுபோல நீ எப்படியும் என்னிடத்தில் அகப்பட்டுக்கொள்வாய். ஏன் வீண் முயற்சி செய்கிறாய்?

**தோழன்.**—கருடனைக்கண்ட நாகம் ஓடி ஒளிவதைப் போல, இப்படி ஏன் பெருத்த அச்சத்தை யடையவேண் டும்? கரும்புத் தின்னக்கூலி கேட்பாருமுண்டோ? இராஜா வின்மைத்துனர் இச்சிக்கும் பாக்கியம்யாருக்காயினும் எளி தில் கிடைக்கக் கூடியதா? உனக்கென்ன பைத்தியமா? நீ படித்தவளல்லவா? நன்றாய் யோசித்துப்பார்! ஓடினது போதும்.

**வீர.**—கீசகனைக் கண்டு ஸாவித்ரி ஓடியதைப்போல நீ எவ்வளவுதான் ஓடியபோதிலும் சுபத்திரா தேவியின் பேரில் அநுமான் பாய்ந்து பிடித்துக் கொண்டதைப்போல நான் உன்னை இதோ பிடித்துக்கொள்கிறேன் பார்.

**வஸந்தஸேனை.**—(தனக்குள்) ஐயோ! இப்படி எவ் வளவு தூரந்தான் ஓடுவேன். இந்தச் சண்டாளர்கள் விடா மல் துரத்திக்கொண்டு வருகிறார்களே! என்னுடன் ஓடி வந்த பணிப் பெண்களைக்கூடக்காணேனே! அடி மல்லிகா! அடி வத்சலா! எங்கேபோய் விட்டீர்கள்? நான் இதோ இருக்கிறேன்; ஓடிவாருங்கள், ஓடிவாருங்கள்.

**வீர.**—அடே நண்பா! அவள் யாரோ ஆட்களை உதவிக்கு அழைக்கிருள்! நாம் என்னடா செய்கிறது?

**தோழன்.**—பயப்பட வேண்டாம். நானிருக்கிறேன்.

**வஸ.**—அடி கோமளா!—எங்கே மாயமாய் மறைந்துவிட்டீர்கள்?

**தோழ.**—நல்ல புத்திசாலி! தன் பணிப்பெண்களையல்லவோ கூப்பிடுகிருள்.

**வீர.**—அப்படியா! நல்ல வேளைதான்; நான் நூறுமனிதரை அடிக்கக்கூடிய வீரனல்லவா? அதனுல்தானே நான் பிறந்த பொழுதே எனக்கு வீரஸேனனென்று பெயர் கொடுத்தார்கள். இந்த ஸ்திரீகள் என்னை என்ன செய்யக்கூடும்? வரட்டும் ஒரு கை பார்க்கிறேன்.

**வஸ.**—(கைகளைப் பிசைந்துகொண்டு) ஐயோ! என் பணிப்பெண்களில் ஒருத்தியையாயினும் காணேனே! என் செய்வேன்! இன்னமும் ஓடித்தான் தப்பவேண்டும்.

[ஓடுகிருள்.]

**வீர.**—நீ எங்கு ஓடினுலும் உன்னை நான் விடப்போகிறதில்லை.

**வஸ.**—பெரிய மனிதர்களே! நான் சக்தியில்லாத அபலை ஸ்திரீ! என்னை ஏன் இப்படி உபத்திரவிக்கிறீர்கள்?

**வீர.**—உன்னை நான் கொல்ல நினைக்கவில்லை. நீ ஸுகமாய் என்னுடன் வாழலாம். ஏன் பயந்து ஓடுகிருய்?

**தோழ.**—ஓடுவது உன்னுடைய குற்றமல்லவா? உன்னை நாங்கள் ஓடச் சொன்னேமா?

**வஸ.**—(தனக்குள்) என்ன நற்குணமப்பா! இவர்களுடைய உபசார வார்த்தைகளே இவ்வளவு பயங்கரமாமாயிருக்கின்றனவே! இவர்களுக்குக் கோபம் வந்தால் அது எப்படி இருக்குமோ? (அவர்களை நோக்கி) ஐயா! உங்களை வேண்டிக் கொள்கிறேன். தயவு செய்து என்னை விட்டு விடுங்கள். உங்களுக்கு என்னுடைய ஆபரணங்கள்

தேவையானால் இதோ யாவற்றையும் கொடுத்து விடுகிறேன். வாங்கிக்கொண்டு போங்கள்.

தோழ.—சே! உன்னுடைய ஆபரணங்கள் எங்களுக்கு ஏதற்காகவேண்டும்? பூங்கொடியில் அழகாய் மலர்ந்திருக்கும் புஷ்பங்களை அழகின் மகிமையை யறியாத மூடர்களல்லவோ பறிப்பார்கள்.

வஸ.—அப்படியானால் உங்களுடைய தேவைதானென்ன?

வீர.—பேஷ்! வழிக்குவந்தாயா! ஸரி! இதோபார்; நான் யாரைப்போலிருக்கிறேன்? அந்தப் பரமசிவனும் அழகில் எனக்கிணையாக மாட்டான். அவ்வளவு மேன்மை பொருந்திய நான் உன்னுடைய பிரியத்தைத்தான் வேண்டுகிறேன்.

வஸ.—அழகு! அழகு! போதும் நில்லுங்கள். இது வீண்பேச்சு! ஒருநாளும் என்னிடத்தில் இது செல்லாது.

தோழ.—அடி! வஸந்தஸேனை! நீ உன்னுடைய ஜாதிக் கிரமத்திற்கு விரோதமாக நடக்கிறாயே! வேசியின் வீடு பால்யர்களுக்குப் புகலிடமல்லவோ? நீங்கள் பாட்டைக் கருகில் படரும் கொடிக்கு ஸமான மானவர்கள்! உங்களுடைய தேகமும், பிரியமும் விலைக்கு அகப்படக் கூடிய பொருள்களல்லவோ? நீங்கள் சந்நியாசியையும், பைத்தியக்காரனையும், பிராம்மணனையும், பறையனையும், அழகுடையவனையும், குரூபியையும், சிறுவனையும், கிழவனையும் ஒரே விதமான ஆசையோடு விரும்பக் கூடியவர்களாயிற்றே! அப்படி இருக்க நீ அன்னிய புருஷர்முகம் பாராத குலஸ்திரீயைப்போலவும், படிதாண்டாப் பத்தினியைப்போலவும் ஆண்வாடை யடிக்கக் கூடாதென்று ஓடுகிறாயே!

வஸ.—ஐயா! நீர் சொல்வதெல்லாம் உண்மையாயிருக்கலாம். ஆனால் ஒரு ஸ்திரீயினுடைய பிரியத்தை யோக்கியதையினால் ஸம்பாதித்துக் கொள்ளவேண்டுமே

யொழிய மிருகத்தின் முரட்டுத் தன்மையை உபயோகித்துப் பெறமுடியுமா?

**வீர.**—அடே! உண்மை இன்னதென்று நீ அறிந்து கொள்ளவில்லையே! இந்த வேசி நித்திய தரித்திரனாகிய மாதவராயன் பேரில் மோகங்கொண் டிருக்கிறாளென்று நான் கேள்விப்பட்டேன். அவனுடைய வீடு இதோ ஸமீபத்திலிருக்கிறது. அதனாலேதான் இவ்வளவு தைரியமாய்ப் பேசுகிறாள். தப்பித்துக்கொண்டு இந்த வீட்டிற்குள் நுழைந்து கொள்ளப் போகிறாள்; ஜாக்கிரதை.

**தோழ.**—(தனக்குள்) மூடர்களில் இவனுக்குத்தான் முதல் தாம்பூலம் கொடுக்கவேண்டும். அவளுக்குத் தப்பிப் போகும் வழியை இவனே சொல்லிக் கொடுக்கிறான்.

**வஸ.**—(தனக்குள்) ஆஹா! அப்படியா! என் துரை மாதவராயருடைய மாளிகை இதுவா? அவரை நான் ஸந்திக்கும்படி இவர்கள் செய்ததும் நன்மைதான். இந்த மாளிகைக்குள் போகிறேன்.

**வீர.**—அடே நண்பா! எங்கே அவளைக் காணோமே? இந்த இருளில் எப்படி அவளை அடையாளங் கண்டு பிடிக்கப்போகிறோம்?

**தோழ.**—அவளுடைய ஆபரணங்கள் கலீர் கலீர் என்று ஒலிப்பதினாலும், அவளுடைய உடம்பிலணிந்து கொண்டிருக்கும் பரிமள கந்தம், புஷ்பம் முதலியவற்றின் வாஸனையினாலும் அறிந்து கொள்ளலாம்.

**வீர.**—அவளுடைய புஷ்பமாலையின் வாஸனையை மாத்திரம் இந்த இருளில் என் நாசி முகருகிறது? ஆபரணங்களின் ஒலி கண்ணிற்குப் புலப்படவில்லையே! எங்குபோய் விட்டாளோ தெரியவில்லையே. அவளை எப்படிக் கண்டு பிடிக்கப்போகிறோம்?

**வஸ.**—ஆஹா! அப்படியா! என்னுடைய மாலையைக் கழற்றி எறிந்து விடுகிறேன். சப்திக்கும் ஆபரணங்களையும் வாங்கிக் கையில் வைத்துக் கொள்கிறேன். இது தான் மாளி

கையின் கதவு; (கதவைக் கையால் தடவிப்பார்க்கிருள்.) கதவு சாத்தப்பட்டிருக்கிறதே! என்ன செய்யப்போகிறேன்! வேறு ஏதாவது வாசலிருக்கிறதோ பார்க்கிறேன்.

மாத.—(மாளிகைக்குள்) ஸோமேசா! ஜெபம் செய்தாய் விட்டது. நானும் அவசியம் வரத்தான் வேண்டுமோ? நீ போகக்கூடாதா?

ஸோமே.—நான் உண்மையை முன்னமேயே தெரிவித்தேனே!

மாத.—ஆஹா! ஈசுவரா! என்னுடைய நிலைமை இப்படியா ஆய்விட்டது! மற்ற நண்பர்தாம் என்னை அலட்சியம் செய்து விட்டதாக நினைத்தேன். நீயும் அப்படியே செய்கிருய். இது உன்னுடைய குற்றமல்ல; இது தரித்திர நிலைமையின் ஸ்பாவம். தரித்திரனுடைய வார்த்தைக்கு மதிப்பேது? பூலோகத்தில் அவனை யார் மதிக்கப்போகிருர்கள்? இல்லானை இல்லாளும் வேண்டாளென்ருல் பிறரைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா! இந்தப்பயனற்ற உடலைச் சுமந்து பூமிக்குப் பாரமா யிருத்தலைவிட, உயிரைவிட்டு விடுவதே உத்தமம்.

ஸோமே.—ஸ்வாமி! நீங்கள் வருத்தப்படவேண்டாம். நான் இதோ போகிறேன். என்னுடன்கூட உங்களுடைய பணிப்பெண் கோமளாவையாயினும் அனுப்புங்கள்.

மாத.—கோமளா! இவருடன் கூடப்போய்விட்டு வா.

கோம.—உத்தரவுப்படி செய்கிறேன்.

[ஸோமேசன் கையில் ஒரு தடியை எடுத்துக்கொள்கிருன். மாளிகையின் கதவைத் திறந்து வைத்துவிட்டு இருவரும் வெளியிற் போகிருர்கள்.]

வஸ.—(தனக்குள்) இதுவும் நல்ல அதிர்ஷ்டந்தான். இவர்கள் சமயத்தில் கதவைத் திறந்து வைத்தார்கள். மெதுவாய் நான் உள்ளே போகிறேன்.

[வஸந்த ஸேனை மாளிகைக்குள்ளே போய்விடுகிருள்;

ஸோமேசனும், கோமளாவும் இருளில் நடந்து வெளியிற் போகிறார்கள்.]

வீர.—(வெளியில்) அவள் இந்த இருளில் எங்கு போயிருப்பாள்?

தோழ.—போங்கள்! போங்கள்! நிற்கவேண்டாம்.

வீர.—(தேடுகிறான்) எந்த இடத்திலும் காணோமே ஆகா! இதோஅகப்பட்டாள் (இருளில் தோழனைக்கட்டிக் கொள்கிறான்.)

தோழ.—அடாடா! எவ்வளவு ஸாமர்த்தியமாய் என்னைப்பிடித்துக் கொண்டீர்கள். விட்டுவிடுங்கள்; விட்டு விடுங்கள். என்னைப் பிடித்த மாதிரி வஸந்த ஸேனையைக் கட்டிப்பிடித்திருந்தால், அவளுடைய உயிர்போயிருக்குமே! போதும்! முதலில் என்னை விடுங்கள்.

வீர.—அப்படியானால் போ அப்பால். இதுயார்? அகப் பட்டாள்! அகப்பட்டாள்! இதோ அகப்பட்டாள்! (ஸேவ கனைப் பிடித்துக்கொள்கிறான்.)

ஸேவ.—ஐயோ! எசமாங்களே! என்னேல்ல கட்டிக் கிட்டீங்க! இது என்னாங்கிறேன் வெக்கக் கேடு! உடுங்க, உடுங்க, நசுக்காதிங்க! ஐயோ செத்தேன்.

வீர.—அடாடா! நீயா! போ; (விட்டுவிடுகிறான்) இப்ப டித்தானே போனாள்! எங்கே போயிருப்பாள்? ஆஹா! இப் பொழுதுதான் அந்தச் சிறுக்கியைப் பிடித்தேன் (முன்னாக வந்த கோமளாவின் தலை மயிரைப் பிடித்துக்கொள்கிறான்). ஓடவா பார்க்கிறாய்! நான் சூரப்புலி என்பது உனக்குத் தெரியாதோ! உன் சாமர்த்தியம் என்னிடத்திலா செல்லும்! அடே நண்பா! இதோ அகப்பட்டாள் வேசி! கிருஷ்ணன் சீதையின் தலை மயிரைப் பிடித்துச் சபைக்கு இழுத்து வந்ததைப்போல, நான் இவளைப் பிடித்துக் கொண்டேன்.

தோழ.—ஸ்திரீயே! பால்யர்களான நாங்கள் ஓடி வரும்போது எங்களை ஏமாற்ற உன்னால் முடியுமா?

[stamp]

கோமளா.—ஆகா! இதென்ன அநியாயம்! என்னை ஏன் பிடித்துக்கொண்டீர்கள்? விடுங்கள்! விடுங்கள்! ஓய்! ஸோமேசரே! வாரும்! வாரும்!

தோழ.—இதென்ன ஆச்சரியம்! வேறு குரலா யிருக்கிறதே!

வீர.—பூனை வெண்ணெயைத் திருடப்போகும் சமயத்தில் பலவிதமாகத் தன் குரலை மாற்றிக் கொள்வதைப்போல ஸ்திரீகளுக்கும் தம்குரலை மாற்றிக்கொள்ளும் வல்லமை யுண்டல்லவா!

[ஸோமேசன் கையில் தீபத்துடன் வருகிறான்].

ஸோமே.—(தனக்குள்) காற்றில் விளக்கு அணைந்து விடும் போலிருக்கிறதே! இருளா இருக்கிறதென்று தீபத்தை எடுத்து வரப்போனேன். அதற்குள் கோமளா முன்னுற் போய்விட்டாளே! (யாவரையும் பார்த்துவிட்டு) யார் இவர்கள்? இங்கென்ன செய்கிறார்கள்? (உரக்க) கோமளா! கோமளா!

வீர.—அடே! யாரோ மனிதன் வந்து விட்டான்!

ஸோமே.—ஆஹா! கோமளா! இதென்ன இது?

கோம.—ஸோமேசரே! வாரும் வாரும்! இவர்கள் என்னை உபத்திரவிக்கிறார்கள்.

ஸோமே.—யாரையா நீங்கள்? இதென்ன அநியாயம்? மாதவராயர் ஏழ்மை நிலைமைக்கு வந்து விட்ட தினாலேயே அவரை இவ்விதம் அவமானப் படுத்தலாமா? இதென்ன அக்கிரமம்?

கோம.—ஸோமேசரே! இதோ பாரும் என்னை இவர்கள் அவமானப்படுத்துகிறார்கள்.

ஸோமே.—இது உனக்கு மட்டுமல்ல; எங்களையும் அவமானப்படுத்திய மாதிரியல்லவா! இவர்களுக்கு எவ்வளவு துணிவு! நம்முடைய வீட்டுவாசலிலே இப்படி

அக்கிரமமான காரியம் செய்யும் இவனைத் தக்கபடி தண்டிக்காவிட்டால் நமக்கென்ன யோக்கியதை இருக்கிறது. ஒரு நாய்கூடத் தன் கொட்டத்தருகில் வருபவர் பேரில் குலைத்து கொண்டுபோய் விழுகிறதே. பிராம்மணனாகிய நான் இதைப் பார்த்துக்கொண்டு பேசாமலிருப்பேனோ!—[தன் கையிலிருந்த தடியை ஓங்கிக்கொண்டு] சே! நான் இதை ஒரு க்ஷணமும் ஸகிக்கமாட்டேன்! என்னுடைய அதிர்ஷ்டத்தைப்போலக் கோணிக்குறுகி இருக்கும் இந்தத்தடியால் இத்துஷ்டர்களின் மண்டையைச் சுக்கல் சுக்கலாய் உடைத்தெறிகிறேன் பார்.

**தோழன்.**—பிராம்மணோத்தமரே! நமஸ்காரம்! கோபிக்கவேண்டாம். பொறுத்துக் கொள்ளும்.

**ஸோமே.**—[தோழனைப்பார்த்துத் தனக்குள்] குற்றவாளி இவனல்ல. துன்பம் செய்பவன் அதோ நிற்கிறான். அடே துஷ்டா! அந்தப்பெண்ணை விடுகிறாயா! அல்லது ஒரே அடியில் உன் மண்டையை உடைக்கட்டுமா!—அடாடா! இவன் இராஜனுடைய மைத்துனனல்லவோ! ஐயா! பெரிய மனிஷ்யாளுடைய யோக்கியதை இது தானோ? மாதவ்ராயர் எவ்வளவு தான் ஏழையாய்ப் போனபோதிலும், அவரைச் சேர்ந்தவர்களை இப்படி அவருடையமாளிகை வாசலிலேயே வருத்திஅவமதிக்க எப்படித் துணிந்தீர்! துரதிர்ஷ்டமும், ஏழ்மைத்தனமும் உண்டாவது அவமான மல்ல! இவ்விதமான கெட்டகாரியம் செய்வதே கேவலம் அவமானத்தை யுண்டாக்கக் கூடிய விஷயம். ஒருவன் தனவந்தனா யிருந்தாலென்ன! அவனிடத்தில் கண்ணிய மில்லாவிட்டால், அவன் ஒரு நாளும் பெரிய மனிஷ்யனாகமாட்டான். அவனை எவ்விதம் இகழ்ந்தாலும் குற்றமாகாது!

**தோழ.**—ஓய்! பிராம்மணரே! மன்னித்துக்கொள்ளும். அடையாளந் தெரியாமையாற் செய்துவிட்டோம். உங்களை அவமானப் படுத்தவேண்டுமென்று நாங்கள் மனதில் நினைக்கவில்லை. நாங்கள் ஒரு ஸ்திரீயைத்தேடிவந்தோம்.

**ஸோமே.**—இவளையா?

**தோழ.**—இல்லை இல்லை. எங்களை ஏமாற்ற நினைத்து, இங்கு ஓடி வந்த வேறொரு மங்கையை நாடி வந்தோம். இருட்டில் ஆள் மாறாட்டமாய் இவளைப் பிடித்தோம். க்ஷமிக்க வேண்டும். இது மனதாறச்செய்த குற்றமல்ல. நீர் எங்களை எவ்விதம் வேண்டுமானாலும் தண்டிக்கலாம் (தன் கத்தியை நீட்டி அவரை மண்டியிட்டு வணங்குகிறான்.)

**ஸோமே.**—நீ மிகுந்த புத்திமான். எழுந்திரு. நான் முதலில் உன்னுடைய நற்குணத்தை அறிந்து கொள்ளாமல் துடுக்காய்ப் பேசிவிட்டேன். போதும் எழுந்திரு.

**தோழ.**—ஸ்வாமி! நான் கேட்பதற்கு ஸம்மதிப்பதானால் எழுந்திருக்கிறேன்.

**ஸோமே.**—என்ன வேண்டும்? தெரிவி.

**தோழ.**—வேறொன்றுமில்லை! நடந்தவைகளை மாதவராயரிடம் தெரிவிக்காம லிருத்தல் வேண்டும்.

**ஸோமே.**—ஸரி. அப்படியே ஆகட்டும். நான் அவரிடம் ஒன்றும் சொல்வதில்லை.

**தோழ.**—பிராம்மணரே! இந்த உபகாரத்தை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். ஸகலவிதமான உத்தம குணங்களையும் நீர் ஆயுதமாகத் தரித்திருக்க, உம்மை வெல்லக்கூடிய ஆயுதம் வேறென்ன இருக்கிறது!

**வீர.**—(கோமளாவை விட்டுவிடுகிறான்) அடே நண்பா! என்ன இது? கைகளைக் கூப்பிக்கொண்டு கேவலம் தரித்திரனை இவன் காலில் விழுகிறாயே!

**தோழ.**—எனக்கு மிகவும் பயமா யிருக்கிறது.

**வீர.**—எதற்காக?

**தோழ.**—மாதவராயருடைய நற்குணங்களுக்காக.

**வீர.**—உண்மைதான்! வருபவருக்கு ஒரு வயிறு சோறு போடும் வல்லமை இல்லாதிருப்பது உத்தம குணந்தான்!

தோழ.—அப்படிச் சொல்வது தவறு. அவர் தன்னுடைய உதார குணத்தினுலேயே ஏழையானுர். வழிப்போக்கர்களின் தாகத்தைத் தீர்ப்பதினுலேயே கோடை காலத்தில் ஏரி வற்றிப் போவதைப்போலானுர். அவர் தனவந்தராயிருந்த காலத்தில் அப்படி இருந்தமையாற்ருன், அவரை இப்பொழுதும் மரியாதைப் படுத்தாதவரே இல்லை. இந்த நகரத்தில் அவரைப் போற்ருதவரு முண்டோ !

வீர.—அவனைப்பற்றி நான் கேட்கவில்லை. இந்தத் துரும்புயார்? இவனென்ன பெருத்தபோர் வீரனு? இவன் சீதையின் புத்திரன் துரியோதனனு? அல்லது இராவணனுடைய மகன் தருமபுத்திரனே?

தோழ.—ஆகா! நல்ல புத்திமான்! போதும் நாம் போவோம் வாரும். மாதவராயருடைய யோக்கியதையை இந்த ஊரில் அறியாதவர் இல்லை. அவர் வயதில் மிகவும் பாலியரா யிருந்தபோதிலும் அவருடைய முதிர்ச்சி யாருக்குவரும்! நல்லோரைத் தன் உயிரைக் கொடுத்தும் காப்பாற்றுபவர். புத்திமான்களுக்குக் கண்ணுடிபோன்றவர். தீமை செய்தவருக்கும் நன்மையே செய்பவர். நற்குணங்கள் நிறைந்த பொக்கிஷ சாலை. மரியாதைக் கடல். பக்திக்கு உறைகல். புருஷரில் உத்தமன். புத்திமான். தயாளு. தருமபுத்திரன். அணுவளவும் ஸத்தியம் தவருதவர். இந்த ஊரில் அவர் ஒருவரே ஸ்தோத்திரத்திற்கு அருகமானவர். அவ்வளவு சிறந்த யோக்கியரை நாம் அவமானம் செய்தது பெரும் பிழை. நாம் இனி இவ்விடத்தில் நிற்பது தவறு. போகலாம்.

வீர.—என்ன! வஸந்தசேனையை விட்டு விட்டா?

தோழ.—அவள்தான் எங்கேயோ காணுமற்போய் விட்டாளே!

வீர.—அவள் எப்படிக் காணுமற்போய் விடுவாள்? பார்க்கலாம் ஒருகை. அவளைக்கண்டு பிடிக்கிற வரையில் நான் இவ்விடத்தை விட்டுவர மாட்டேன்.

தோழ.—என்ன பிரயோசனம்! நாம் எந்த அருமையான காரியத்தையும் செய்துவிடலாம். காட்டானையைப் பிடித்து அடக்கிவிடலாம். சிங்கம், புலி முதலிய துஷ்ட விலங்குகளைப் பிடித்துக் கட்டிப் பழக்கி விடலாம். ஆனால் ஸ்திரீகளின் பிரியத்தைமாத்திரம் அவர்களுடையமனதிற்கு விரோதமாகத் திருப்பமுடியா தென்பது தெரியாதா? இதனாலே காரியம் ஒருநாளும் பலிக்காது. பழம் தானாய்ப்பழுக்க வேண்டுமே யொழியத் தடியாலடித்தாற் பழுக்குமா? போகலாம் வாரும்.

வீர.—உனக்கு விருப்பமானால் நீ போகலாம். நான் இங்கேதான் இருப்பேன்.

தோழ.—நல்லது நான் போகிறேன் (போகிறான்).

வீர.—இவன்போனால் போகட்டும். கோழி கூப்பிடா விட்டால் பொழுது விடியாதோ? என்ன பிரமாதம். (ஸோமேசனைப் பார்த்து) அடே! முட்டிவாங்கும் பிராம்மணா! என்ன சொன்னாய்? உன்பல்லை உடைக்கிறேன். ஒரே உதையில் உன்னைக்கீழே வீழ்த்துகிறேன் பார்.

ஸோம.—நாங்கள்தாம் ஏற்கனவே கீழே வீழ்த்தப் பெற்றிருக்கிறோமே!

வீர.—யாரால்?

ஸோமே.—தலைவிதியால்.

வீர.—அப்படியானால் எழுந்திரு; பார்க்கலாம்.

ஸோமே.—எழுந்திருக்கத்தான் பார்க்கிறோம்.

வீர.—எப்பொழுது?

ஸோமே—நல்லகாலம் திரும்பி வரும்பொழுது.

வீர.—அப்படியானால் அது வரையில் அழு.

ஸோமே—அப்படித்தான் செய்கிறோம்.

வீர.—எதற்காக அழுகிறீர்கள்?

ஸோமே.—எங்களுடைய காலகதியை நினைத்து அழுகிறோம்.

வீர.—அப்படியானல் சிரி முட்டாள்.

ஸோமே.—அப்படியே ஆகட்டும்.

வீர.—எப்பொழுது ?

ஸோமே.—மாதவராயர் திரும்பவும் தனவந்தராகும் பொழுது ஆகட்டும்.

வீர.—அடே சபிண்டி! போதும் வாயை மூடு! எனக்குக் கோபம் வரும்போலிருக்கிறது. கடைசி முடிவாக நான் ஒரு வார்த்தை சொல்லுகிறேன். நீ போய் அதை மாதவராயனிடம் தெரிவி! "கேவலம் விலைமகளாகிய வஸந்தஸேனையை நாங்கள் எவ்வளவு பலவந்தப்படுத்தியும் அவள் எங்களுக்கிணங்கவில்லை. இவ்வளவு தூரம் துரத்திக்கொண்டு ஓடிவரும் சிரமத்தை அவள் எங்களுக்குக் கொடுத்து, நித்தியதரித்திரனுகிய மாதவராயன் வீட்டிற்குள் போய் நுழைந்துகொண்டிருக்கிருள். அவன் மீதே அவள்காதல் கொண்டிருக்கிருளாம். நாங்கள் அவள் மனதிற்குப் பிடிக்கவில்லையாம். யாதொரு ஆக்ஷேபனையுமில்லாமல் உடனே அவளை அவனே நேரில் என்னிடத்தில் கொண்டுவந்து ஒப்புவித்தால் தப்பினன். இல்லாவிட்டால், எப்பொழுதும் தீராத என்னுடைய பகைக்கு அவன் அருகனுகவேண்டும். அவனிடம் போய் இதைத்தெரிவி. நான் அருகிலிருந்து கேட்டுக்கொண்டிருப்பேன். நீ என்னை ஏமாற்றப்பார்த்தால், பாக்கைக் கதவின் மூலையில் வைத்து நெரிப்பதைப்போல உன் தலையை என்பல்லால் நெரித்து விடுவேன். தெரியுமா?

ஸோமே.—தெரியும். அப்படியே ஆகட்டும்.

வீர.—சரி! போ; நான் இந்தமூலையில் இருக்கிறேன்.

[அவனும் ஸேவகனும் ஒரு மூலையில் மறைகிருர்கள்.]

ஸோமே.—கோமள்ா! இராஜாவின் மைத்துனன் உன்னை இங்கு அவமானப்படுத்தியதை மாதவராயரிடம் சொல்லவேண்டாம். அவர் ஏற்கனவே தன்ஸொந்த விஷயங்களைப் பற்றி வருந்திக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிருர்.

இந்த ஸங்கதியையும் கேள்விப்படுவாரானால் அவருடைய துக்கமும், துன்பமும் இரட்டிக்கும்.

**கோமளா.**—ஸோமேசரே! எனக்குத் தெரியாதா! இதைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா! இதை அவரிடம் தெரிவிப்பதில் இலாபமென்ன. அவருக்கு இதனால் வியாகுலந்தான் உண்டாகும்.

[இருவரும் வீட்டிற்குள் போகிறார்கள்.

**மாத.**—(உள்ளேவந்த வஸந்தசேனையைப் பார்த்துத் தனக்குள்) கோமளா என்ன இதற்குள் வந்து விட்டாளே! இவள் ஸோமேசனுடன் போகவில்லையோ! [உரக்க] கோமளா! குழந்தை சிசுபாலன் குளிர்காற்றில் நெடுநேரமாய் நித்திரை செய்துகொண்டிருக்கிறான். அதிகக்குளிர் உண்டாவதற்குள் இவனை எடுத்துக்கொண்டு போய் உள்ளே படுக்கையில் விடு.

**வஸந்த.**—(தனக்குள்) ஓகோ! என்னை இவர் தன்னுடைய பணிப்பெண்ணென்று நினைத்துக் கொண்டிருக்கிறார். நான் என்ன செய்வேன்! நான் இன்னாளென்று எப்படித் தெரிவிப்பேன்! ஒருவருக்கும் தெரியாமல் நான் உள்ளே வந்ததைப்பற்றி இவர் என் மீதில் என்ன அபிப்பிராயம் கொள்வாரோ! என்ன இவருடைய பேரழகு! கோமளாங்கன் என்றாலும் இவருக்கேதகும்! இவருடைய தேகத்தின் அழகிற் கொத்தவாறு இவருடையகுணமும் புகழத்தக்கதாயிருக்கிறது! இவரைக்கணவனாய் அடைபவளே உண்மையில் பாக்கியசாலி.

**மாத.**—என்ன? கோமளா! நான் சொன்னது காதிற்படவில்லையா? ஏன் பேசாமல் நிற்கிறாய்? சீக்கிரம் குழந்தையை எடுத்துக்கொண்டுபோ.

**வஸ.**—(தனக்குள்) ஐயோ! என்னை இன்னாளென்று அறிந்துக் கொள்ளாமல் இவர் சொல்லுகிறாரே. நான் பிராம்மணர் வீட்டின் உட்புறத்திற் போகக்கூடாதவளாயிருக்கிறேன். இதென்ன தரும சங்கடமாயிருக்கிறது! ஈசுவரா!

நீ தான் இந்த ஸமயத்தில் என் மானத்தைக் காப்பாற்ற வேண்டும்.

**மாத.**—கோமளா! என்ன மௌனமாக நிற்கிறாய்? ஆகா! இதுவும் காலவித்தியாசமோ? நீயும் என்னை ஏழையென்று அவமதிக்க ஆரம்பித்து விட்டாயோ? உன்னுடைய பிரியமும் வெறுப்பாய் மாறிவிட்டதோ? கொடிது கொடிது இல்லாமையே கொடிது! தரித்திரத்தைக் காட்டினும் பெரியதுன்பம் உலகத்தில் வேறொன்றுமில்லை.

(ஸோமேசனும் கோமளாவும் வருகிறார்கள்)

**ஸோமே.**—ஸ்வாமி! உத்திரவை நிறைவேற்றி விட்டு வந்தோம். கோமளாவை ஜாக்கிரதையாய் இதோ கொண்டு வந்து சேர்த்தேன்.

**மாத.**—இதென்ன ஆச்சரியம்! கொஞ்ச நேரத்துக்கு முன் இங்கிருந்தவள் யாவள்? அவளை இன்னாளென்றுஅறிந்துகொள்ளாமல், குழந்தையை எடுத்துக்கொண்டு போகும்படிக் கட்டளை இட்டேனே! என்ன என்னுடைய புத்திக் குறைவு! ஒருவரும் நாடாத என் மாளிகையைத் தேடிவந்து என்னைக் கௌரவப்படுத்திய ஸ்திரீயை நான் அவமரியாதையாய் நடத்தினேனே! ஆகா!

**வஸ.**—(தனக்குள்) இது அவமரியாதையா! இந்தப் பாக்கியம் யாருக்குக்கிடைக்கும்! இந்தப் பணிவிடை என்னுடைய ஆயுட் கால முழுதும் கிடைக்காதா வென்று நான் இராப்பகலாய் என் குலதெய்வத்தை வேண்டித் தவம் செய்கிறேனே!

**ஸோமே.**—அவள் வேறு யாருமில்லை. நம்முடைய நகரத்திய எல்லா மடந்தையரிலும் அழகிற் சிறந்தவளென்று புகழப்படும் வஸந்தஸேனை யென்னும் ஸ்திரீரத்னம். அவள் வேறு யார் மீதிலும் இச்சை கொள்ளாமல் தங்கள் நற்குணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டுத் தங்களையே அடைய வேண்டுமென்று காதல் கொண்டிருக்கிறாளாம்.

**மாத.**—உண்மையில் வஸந்த ஸேனையா வந்தவள்? என்ன ஆச்சரியம்! அவள் என்னை விரும்பவாவது! அவ-

னுடைய செல்வமென்ன! சிறப்பென்ன! கேவலம் தரித்திரனாகிய என்னை அவள் எதற்காக நாடப்போகிறாள்! தவிர நான் ஏற்கனவே ஒரு ஸ்திரீயை மணந்து கொண்டிருப்பவனாயிற்றே! நான் பிரம்மசாரியல்லவோ! நீ சொல்வதில் ஏதோ பிசகிருக்கிறது!

**ஸோமே.**—நான் சொன்னது உண்மையே! அதில் யாதொரு பிசகுமில்லை. இராஜாவின் மைத்துனன் தங்களுக்கு என் மூலமாய் ஒரு சங்கதி சொல்லி யனுப்பியிருக்கிறார்.

**மாத.**—எனக்கா? என்ன சங்கதி?

**ஸோமே.**—'கேவலம் விலை மகளாகிய வஸந்தஸேனையை நாங்கள் எவ்வளவு பல வந்தப்படுத்தியும் அவள் எங்களுக் கிணங்கவில்லை. இவ்வளவு தூரம் துரத்திக்கொண்டு ஓடிவரும் சிரமத்தை அவள் எங்களுக்குக் கொடுத்து நித்திய தரித்திரனாகிய மாதவராயன் வீட்டிற்குட் போய் நுழைந்து கொண்டிருக்கிறாள். அவன் மீதே அவள் காதல் கொண்டிருக்கிறாளாம். நாங்கள் அவள் மனதிற்குப் பிடிக்கவில்லையாம். யாதொரு ஆக்ஷேபனையு மில்லாமல் உடனே அவளை அவனே நேரில் என்னிடத்திற்கொண்டு வந்து ஒப்பு வித்தால் தப்பினான். இல்லாவிட்டால் எப்பொழுதும் தீராத என்னுடைய பகைக்குப் பாத்திரனாதல் வேண்டும். அவனிடம் போய் இதைத் தெரிவி. நான் அருகிலிருந்து கேட்டுக் கொண்டிருப்பேன். நீ என்னை ஏமாற்றப் பார்த்தால் பாக்கைக் கதவின் மூலையில் வைத்து நெரிப்பதைப்போல உன் தலையை என் பல்லால் நெரித்து விடுவேன். தெரியுமா, என்று இராஜாவின் மைத்துனன் சொன்னான்.

**மாத.**—ஆஹா! என்ன ஆச்சரியம்! அப்படியா சொல்லியனுப்பினான்! வஸந்தஸேனையின் குணமல்லவோ குணம்! நற்குணமில்லை யென்று அரண்மனையையே அவள் வெறுக்கிறாளே! இந்த உலகத்தில் பணத்தைக்காட்டினும் குணத்தை விசேஷமாய்க் கொள்பவரும் இருக்கிறார்களா! இது

பெரிதும் விந்தையாயிருக்கிறது ! இவளைக் கோவிலில் வைத்துத் தெய்வமாகக் கொண்டாடினாலும் தகும். இவள் பொருட்டாகத் தானே அவன் என்னை அவ்வளவு ஹீனமாய்ப் பேசினான். அதனால் எனக்கு யாதொரு குறைவுமில்லை. (அவளிருந்த விடத்திற்குப்போய்) வஸந்தஸேனா ! உன்னை இன்னாளென்று அறிந்து கொள்ளாமல், என்னுடைய பணிப் பெண்ணென்று நினைத்து ஏவினதை மன்னித்துக்கொள்ள வேண்டும். அரண்மனையைப் போன்ற உன்னுடைய மாளிகையை விட்டு நீ இவ்வளவு தூரம் இந்தக் குடிசையை நாடி வந்தது அபூர்வமாக இருக்கிறதே !

**வஸ.**—பிரபு ! நானல்லவோ தங்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். மேன்மைக் கிருப்பிடமாகிய இவ்விடத்தில், ஒரு யோக்கியதையு மில்லாத நான் அனுமதியின்றி நுழைந்ததற்குத் தாங்கள் என்னை க்ஷமிக்க வேண்டும்.

**ஸோமே**—நீங்களிருவரும் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் உபசாரம் நன்றாயிருக்கிறது. நன்றாய் முற்றித் தலைவணங்கும் நெற்கதிரைப்போல இருவரும் குனிந்து நிற்கிறீர்கள். ஒட்டகத்தின் முழங்காலைப்போன்ற வளைக்க முடியாத என் சிரத்தால் தாழ்ந்து நானும் வணங்குகிறேன். போதும் உபசாரம் நிமிர்ந்து நில்லுங்கள்.

**மாத.**—ஆம்! உண்மைதான். அதிகஉபசாரம் எதற்கு!?

**வஸ.**—(தனக்குள்) ஆகா !

**விருத்தம் - இராகம் ஆனந்தபைரவி.**

என்பெறு பிறவி கோடி யியற்றிய தவங்கள் கூடிக்
கண்பெறு விருந்தே யென்ன அளித்தவோ குமர வேளைப்
பெண்பெறு தூக்க.மீதோ ? பெறலரு குணத்தின் குன்றோ ?
புண்பெறு மனத்தி னுட்குப் புகலெனத் தோன்றி னாரோ !

என்ன குணம்! என்னதோற்றம்!-கைநிறைந்த பணத்தைக்காட்டிலும் கண்ணிறைந்த கணவனே மேலேன்று சொல்வது உண்மை யென்று இப்பொழுதே தெரிகிறது! இவரைவிட்டு எப்படிப்பிரிந்து என் வீட்டிற்குப் போவேன்! போனால் இத்தகைய ஸமயம் திரும்ப எப்பொழுது வாய்க்

கும்! என்னுடைய மாடமாளிகை, ஆபரணங்கள் முதலிய ஸகலமும் போவதாயிருந்தாலும் நான் கவலைப்பட மாட்டேன். இவருடன் ஸதாகாலமும் இருக்கப்பெற்றால் அந்தப் பரமானந்தம் ஒன்றே போதும். பிறவிக் குருடன் திடீரெனக் கண்ணைப் பெற்று உலகத்திலுள்ள விநோதக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே, திரும்பவும் பார்வையை இழக்க நேர்ந்ததைப் போலானதே என் கதி! இருக்கட்டும் ஒரு தந்திரம் செய்கிறேன். (உரக்க) ஸ்வாமி! நான் உங்களுடைய கருணைகடாட்சத்தைப் பெற்றது உண்மையானால் என்னுடைய ஆபரணங்களை இப்பொழுது இவ்விடத்திலேயே வைத்துவிட்டுப் போக அனுமதிதரவேண்டும். இவற்றை அபகரிக்கும்பொருட்டே இத் துஷ்டர்கள் என்னைத் தொடர்ந்து துரத்திக்கொண்டு வந்தார்கள்.

**மாத.**—ஸ்திரீ ரத்னமே! அவ்விதமான நம்பிக்கையை வைப்பதற்கு இந்த வீடு அருகமானதல்லவே! என்னசெய்கிறது?

**வஸ.**—பிரபு! நாம் நம்புவது மனிதரையே யன்றி வீட்டையல்லவே! ஆகையால் நீங்கள் இவ்விதம் சொல்லக் கூடாது. தயவு செய்யவேண்டும்.

**மாத.**—ஸோமேசா! அப்படியானால் இந்த ஆபரண மூட்டையை வாங்கிக்கொள்.

**வஸ.**—இந்த உபகாரம் செய்தீர்களே! இதுவே போதும். உங்களுக்கு ஸ்வாமி ஒரு குறைவையும் வைக்கமாட்டார்.

**ஸோமே.**—(வாங்கிக்கொண்டு) ஸ்திரீயே! இந்த உபகாரத்தை நான் ஒரு நாளும் மறக்கமாட்டேன். இனி எங்களுக்கென்ன குறைவிருக்கிறது.

**மாத்.**—ஸோமேசா! உனக்கே கொடுத்து விட்டதாக நினைக்கிறாயோ! நீ மிகவும் சமர்த்தன்தான்! இன்றிரவு முழுதும் இவற்றைப்பாதுகாத்துத் திரும்பவும் ஸொந்தக்காரரிடத்தில் ஒப்புவித்தல் வேண்டும்.

**ஸோமே.**—(இரகஸியமாக) நம்மிடத்திலிருப்பது நம்முடைய பொருள்தானே?

**மாத.**—போதும் விளையாட்டு.

**வஸ.**—(வணக்கமாக) எனக்கு இன்னொரு உதவிசெய்தல் வேண்டும். உங்களுடைய நண்பராகிய இவரை என்னுடன்கூடத் துணையாக என் வீடுவரையில் தயவு செய்து அனுப்பவேண்டும்.

**மாத.**—இதுதானா பிரமாதம்! ஸோமேசா! கூடப்போய் விட்டுவா!

**ஸோமே.**—இதற்குத் தகுந்தவர்கள் நீங்களே! அன்னப் பெடையொடு துணைசெல்வதற்குக் காக்கைக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? நான் ஏழைப்பிராம்மணன். எலும்புத்துண்டை நாய் கௌவுவதைப்போல என்னை இந்தக் காமாதுரர் பிடித்துப் பொடியாக்கி விடுவார்கள்.

**மாத.**—ஸரி நானே போகிறேன். வேலைக்காரனைக் கூப்பிட்டுப் பந்தம் தயார் செய்யச்சொல்லு.

**ஸோமே.**—அடே குணசீலா!

**குணசீ.**—ஸ்வாமி!

**ஸோமே.**—சீக்கிரம் பந்தம் கொளுத்து.

**குணசீ.**—எண்ணெயில்லாமல் பந்தம் எரியுமானால், கொளுத்தத்தடையில்லை.

**ஸோமே.**—(மாதவராயரிடத்தில் தனிமையில்) நம்முடைய வீட்டுப்பந்தம் வேசியின் குணத்தையுடையது. அது ஏழைகள் வீட்டில் பிரகாசிப்பதில்லை. தனவந்தரைத்தான் அது மதிக்குமேயன்றி நம்மை மதிக்காது.

**மாத.**—சரி! அப்படியானால் அதையும் நாம் மதிக்க வேண்டாம். மிகவும் பிரகாசத்தோடு ஆகாயத்தில் அதோ சந்திரனிருக்க, நமக்கென்ன கவலை? அவன் ஏழையையும் தனவந்தனையும் ஸமமாக மதிப்பதனாலே அவனுக்கு மதியென்று பெயர்வந்திருக்கிறது. வாருங்கள் போவோம். (மூவரும் நடந்து வெளியிற்போகிறார்கள்.)

---

# முதல் அங்கம்

## இரண்டாவது காட்சி

**இடம்:** மங்கள புரியில் வேறொருவீதி
**பொழுது:** மறுநாட் பகல்.

முன்னால் ஒருவன் ஓடிவருகிறான்; பின்புறம் சற்று தூரத்தில் "உடதே! உடாதே! அதோ ஓட்றான்! அதோ ஓட்றான்! அடே சூதாடிப்பயலே! எங்கே ஓட்றே? நீ அந்த எமலோவத்துக்குபோனாலும் ஒன்னை உடமாட்டோம். அடே மகிபாலா! நீ இந்த மூண்டங்கிட்ட தப்பறதேதுடா? நில்லுடா நில்லுடா!" என்று ஒரு கூச்சல் கேட்கிறது.

**மகிபாலன்.**—(தனக்குள்) ஆகா இந்தப்பாழும் சூதாட்டத்தில் எனக்கென்ன இவ்வளவு பைத்தியம்! இந்தக் கெட்டபுத்திஎப்பொழுதுதான் என்னைவிட்டு விலகுமோ தெரியவில்லையே! கையில் பணமில்லாவிட்டால் கடனாவது வாங்கி ஆடும்படி மனது தூண்டுகிறதே. சூதாட்டத்தில் உட்கார்ந்தால், சோறும் வேண்டாம்; நீரும் வேண்டாம். வீடு, பெண்சாதி, பிள்ளைகள் முதலிய எல்லா ஞாபகமும் இருந்த விடந்தெரியாமல் போய்விடுகிறது. நான் இவர்களிடத்தில் சூதாடக் கடன் வாங்கிய 10 ரூபாயையும் திருப்பிக் கொடுக்கும்படி என்னை அடித்து உபத்திரவிக்கிறார்களே! நான் என்ன செய்வேன்! என்னிடத்தில் இப்பொழுது ஒரு செப்புக் காசுமில்லையே! இந்த இரண்டு நாய்களும் இப்பொழுது என் உயிரை வாங்கி விடும் போலிருக்கிறதே! ஐயோ! அதோ வந்து விட்டார்களே! அடுத்த க்ஷணத்தில் என்னைப் பிடித்துக் கொள்வார்களே! (நான்கு பக்கங்களையும் பார்க்கிறான்) நல்லவேளையாக இதோ ஒரு பாழுங் கோவிலிருக்கிறது! இதற்குள் ஓடி ஒளித்துக்

கொள்ளுகிறேன். (பின்புறமாக நடந்து கோவிலுக்குள் நுழைந்து கொள்கிறான்.)

(முண்டன் திண்டன் என்னும் இரண்டு சூதாடிகள் ஓடி வருகிறார்கள்.)

**முண்.**—உடாதே! உடாதே! புடிச்சுக்கிங்க! புடிச்சுக்கிங்க!

**திண்.**—அடே! நீ அந்தச் சாச்சாத் கடவுளுக்கிட்டப் போயி ஒளிச்சுக்கினுக்கூட ஒன்னே உடப்போறதில்லேடா! அடே அண்ணே! காலடியைப் பாருடா! கோணக்கோணலா இக்குதுடா!

**முண்.**—என்னாத்துனாலே அப்படி இக்குதுன்னு ஒனக்கு அம்புட்டு ரோசனே புரியல்லே பாத்தியா! பயத்துனாலேடா அது! அவன் ஒடம்பு நடுக்க மெடுத்துக்கிச்சு! காலு தாறுமாறாய்ப் போயிக் கெடக்குதுடா!

**திண்.**—காலடி! இத்தோடே நின்னுபோச்சே! இதென்னடா ஓவித்திரியம்! எங்கிட்டோ மாயமாப் பறந்து பூட்டாண்டா சனியம் புடிச்சவன்.

**முண்.**—காலடியைத் திருப்பி வச்சுக்கிறாண்டா! என்னா சாமர்த்திய முண்டா பயமவனுக்கு! மூதுவுப் பக்கமா திருப்பிக்கினு கோயிலுக்குள்ளற போயிருக்கிறாண்டா! என்னா ரோசனேடா இவுனுக்கு! கோயிலுக்குள்ளற நாம்ப வரமாட்டோ முன்னு நெனெச்சுக்கினாண்டா இவன்! வாடா உள்ளறபோயிக் கோளிக்குஞ்சேப் பிராந்து அமுக்கறாப்பலே குபீருன்னு புடிச்சுக்கலாம்.

(உள்ளே போகிறார்கள்.)

மகிபாலன் (தனக்குள்). இவர்கள் இங்கேயும் வருகிறார்களே! என்ன செய்கிறது? இங்கு அதிகமாய் வெளிச்சமில்லாமல் மங்கலாக இருக்கிறது. நான் ஒரு கல் விக்கிரகத்தைப்போல அசையாமல் நிற்கிறேன். இவர்கள் என்னை விக்கிரகமென்று நினைத்துக்கொண்டு போய்விடுவார்கள்.

(அப்படியே நிற்கிறான். உள்ளேவந்த அவ்விருவரும் அவனைக்கண்டு பரிகாசமாகத் தமக்குள் சைகை செய்து கொள்ளுகிறார்கள்.)

மூண்.—அடே திண்டா! அந்தாலே சாமி இக்குது பாத்தியாடா! மனிசனெப்பேலே இக்குதுரு!

திண்.—சாமி எம்பிட்டுப் பெரிசுடா! அண்ணே! அது மரத்துலே சேஞ்சதுரு!

மூண்.—(மகிபாலனை அசைத்த வண்ணம்) இல்லேடா! இது கல்லுமாதிரி இக்குதுரு! ரவையுண்டு கிள்ளிப் பாக்க றேண்டா (கிள்ளுகிறான்.)

திண்.—எல்லாக் கோயில் லெயும் சாமி கல்லுலேயும் மண்ணுலேயுங் கட்டேலெயுந் தாண்டா இக்குது! அடிச்சா அளத்தெரியாதுரு. இந்தச் சாமி உயிருள்ள சாமி மாதிரி புச்சா இக்குதுடா!

மூண்.—ஆமுண்டா! இந்தச் சாமிக்கு புதுமாதிரிப் பூசெ, நிமித்தியம் எல்லாம் பண்ணணும்டா. இந்தச்சாமிக்கு அடிச்சா அளத்தெரியுமான்னு பாக்கறேண்டா.
(முதுகில் ஓங்கி அடிக்கிறான்.)

திண்.—சாமி அளுவல்லெடா நல்ல சாமிடா! பொறு மைப் பொறுத்த வருடா! பூலோவம் ஆண்டவருடா! தப் புதம்! தப்புதம்! சாமி! ஒன்னெ அடிச்சேன்னு சோவிச்சுக் காதே! கன்னத்துலே போட்டுக்கறேன். (மகிபாலனுடைய இரு கன்னங்களிலும் அடிக்கிறான்).

மூண்.—அதெல்லாம் இக்கட்டும். நாம்ப ரெண்டு பேரும் இந்த உயிருச்சாமிக்கு மின்னாலே சூதாடாலாம் வா! சாமி எங்கப்பன் நம்ப தக்ராரைத் தீப்பாரு.

திண்.—சரி ஒக்காரு; ஓனக்காச்சு எனக்காச்சு! ஒரு கை பாக்கலாம்; சாமிகூடகொஞ்சூண்டு கண்ணைத் தொறந்து அதோ என்னெப்பாக்குதுடா!

மூண்.—சாமி! என்னெப்பாக்க மாட்டேங்குதே! இந் தச் சாமிக்குச் சூதாட்டத்துலே ரொம்ப பிரியண்டா!

ரொம்ப பத்தியோடே சூதாட்ற சீசாக்களைக் கண்ணாலே பாத்துமுத்தி கொடுக்கும்டா! பேசற சாமிடா இது!

[இருவரும் எதிரில் உட்கார்ந்து கொண்டு சூதாடுகிறார்கள். அதைப் பார்த்திருந்த மகிபாலனுக்கு ஆட்டத்தில் ஒரு வித இன்பம் ஏற்படுகிறது].

மகி.—[தனக்குள்] நாட்டை இழந்த அரசனுக்குப் பேரிகை வாத்தியத்தின் முழக்கம் எவ்வளவு மனோ வேதனையை உண்டாக்குமோ, அவ்விதமே, பாய்ச்சிக் கைக் காய்களின் ஓசை பணமில்லாத தரித்திரனாகிய என்னை மிகவும் வருத்துகிறதே! கோகிலத்தின் சங்கீதம் காதிற்படுவது எவ்வளவு இன்பமாக விருக்குமோ அப்படி இருக்கிறதே இந்தக் காய்களின் ஒலி! இனி சூதாடக் கூடாதென்று எவ்வளவு உறுதிசெய்து கொண்டாலும் பிறர் ஆடுவதைப் பார்த்தால் என் மனோதிடமெல்லாம் இருந்த விடந்தெரியாமல் ஓடிப்போகிறதே!

திண்.—இந்தா இருக்காப் பன்னெண்டு பாத்துக்க! கெலிப்பு என்னோடே.

முண்.—போவட்டும் இந்தாலே பாரு பகடபன்னண்டு. சாமி! பகடபன்னண்டு விளனும்! நீ எம்பக்கத்துலெ இரு; நீ கண்ணு இக்கர தெய்வமானுப்பாத்துக்க! இந்தா! பகட பன்னண்டு உளுந்திச்சு! போடு துட்டே!

மகி.—[தன்னை மறந்து பீடத்திலிருந்து கீழேகுதித்து] இல்லை இல்லை நன்றாய்ப் பார்! இது இருக்காவெட்டல்லவா?

திண்.—அம்புட்டுக் கிட்டாண்டா ஆளு!

முண்.—(மகிபாலனைப் பிடித்துக்கொண்டு) அடே ரொக்கியா! மாட்டிக்கினியா? போடு பணத்தெ! என்னெ ஆருன்னு பாத்துக்கிட்டெ? சொம்மா ஏமாத்திப் புடலா முன்னு பார்த்தியா? கனமுட்டுரு ரூவாயெ; ஓங்க பாட்டன் வூட்டுப் பணமோ? ஓட்றியா? செவிட்டுலே குடுக்கறேன் பாரு. [அடிக்கிறான்]

திண்.—முளிக்கிருண்டா [ஆடுதிருடின கொறவன் மாதிரி! தோண்டுரு முளியே. (அடிக்கிருன்.)

மகி.—(நயந்து) அப்பா! என்னை அடிக்க வேண்டாம். இன்றைக்குள் எப்படியாவது பணத்தைக் கொடுத்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன்.

முண்.—இப்பவே குடுக்கணும்; இல்லாமெப் போனு உடமாட்டேன் ஒன்னை.

மகி.—ஐயா! கோபித்துக் கொள்ளவேண்டாம். இத்தனை நாள் பொறுத்தது பொறுத்தீர்கள். இன்னம் கொஞ்சம் பொறுக்கக்கூடாதா? என் கையிலிருந்தால் கொடுக்கமாட்டேனு! என்னை அடித்தால் பணம் வந்து விடுமா?

முண்.—ஒதவாது: ஒன்னைக் கொஞ்சூண்டுகூட நம்பவே மாட்டேன். ஒங்கிட்டரோக்கிதையே இல்லே. இப்பத்தான் பணம் ஒணும்; போடு பணத்தெ!

மகி.—ஐயோ! நான் என்ன செய்வேன்! என்னிடத்தில் ஒரு காசு கூட இல்லையே. நான் இப்பொழுது எப்படி 10-ரூபாய் கொடுப்பேன். எனக்கு மயக்கம் வருகிறதே. என் தலை சுற்றுகிறதே!

(மயங்கினவனைப் போலக் கீழே விழுகிருன். இருவரும் அடிக்கிருர்கள்)

முண்.—அடியாத்தே! மயக்கமாவா வருது? எம்பிட்டு சாலங்கிறேன்!

திண்.—சாமிக்குச் சன்னதம் வந்துக்கிது. பூசெ போட்டாச் சரியாப்போவும். (அடிக்கிருன்).

மகி.—(அடியைப் பொறுக்க முடியாதனுய் எழுந்து) ஐயோ! உயிர் போகிறதே! அடிக்கவேண்டாம். அடே! அடிக்கவேண்டாமடா! இனி அடித்தால் பிராணன் போய் விடும். பிறகு பணமும் போய்விடும். சத்தியமாய் இன்றைக்குள் எப்படியாவது பணத்தைக் கொடுத்து விடுகிறேன். கொஞ்சம் சாவகாசம் கொடுங்கள். என்னிடத்தில் இப்பொழுது பணமேயில்லை. சோதனைசெய்து பாருங்கள்.

திண்.—பணம் இல்லாதமுண்டே ஏண்டா கடன் வாங்கினே ?

மூண்.—பணமில்லாட்டி எதெனுச்சும் அடகுவைடா களுந்தே !

மகி.—(திண்டனைத் தனியாய் அழைத்துப்போய்) ஐயா ! உம்மை மிகவும் வேண்டிக்கொள்கிறேன். ஒரு உதவி செய்யவேண்டும்.

மூண் —என்னடா செய்யணும் ?

மகி.—என்னிடத்தில் இப்பொழுது பணமில்லை. பாதி கொடுத்துவிடுகிறேன். இன்னொரு பாதியைத் தள்ளிக் கொடுத்துவிடுகிறீரா ?

மூண்.—சரி! சம்மதிதான்! அதையாச்சும்வை கீளே.

மகி.—(முண்டனைத் தனியாக அழைத்துப் போய்.) அடே! ஒரு உபகாரம் செய். என்னிடத்தில் சிறிய நகை ஒன்றிருக்கிறது. அது பாதிக் கடனுக்குத்தான் சரியாகும் அதைக் கொடுக்கிறேன். இன்னொரு பாதிக்கடனை மன்னித்து விடுகிருயா?

மூண்.—சரி ! அப்பிடியே ஆவட்டும் ; கொண்டா நவையெ.

மதி.—(முண்டனைப்பார்த்து உரக்க) நீ பாதிக்கடனைத் தள்ளிக்கொடுக்கிறது நிச்சயந்தானே?

மூண்.—நிச்சியந்தான்.

மகி.—(திண்டனைப்பார்த்து உரக்க) உனக்கும் சம்மதந்தானே! நீயும் பாதிக்கடனைத் தள்ளிக்கொடுக்கிருயா?

திண்.—ஆவட்டும்.

மிகி.—சந்தோஷம் ! இப்படியார் உதவி செய்யப்போகிறீர்கள் ! நீங்கள் மிகவும் நற்குணமுள்ளவர்கள். இந்த உபகாரத்தை நான் மறக்கவே மாட்டேன். நான் உத்திர பெற்றுக்கொள்ளுகிறேன். (போகிருன்)

மூண்.—எங்கிட்டுவேகமாப்போறே ? நில்ரு நில்லு !

மகி.—ஏன் ஐயா! நிற்கச்சொல்லுகிருய்? நீ பாதிக்கடனைத்தள்ளிக் கொடுத்தாய்; திண்டன் பாதிக்கடனைத்தள்ளிக் கொடுத்தான். கடன்முழுதும் தீர்ந்துபோய்விட்டது. நான் போகிறேன். என்னை ஏன் திரும்பவும் வதைக்கிறீர்கள்?

முண்.—சவாசப்பா! அடே! என்னெ யாருன்னு பாத்துக் கிட்டே? ஒன் சூச்சமெல்லாம் எங்கிட்டச் செல்லாது! எனக்குக் காதாகுத்தறே? என்காதைப் பாத்தியா எம்பிட்டுப் பெரிய தொளே! மின்னயே குத்தியாச்சுடா! பூராப்பணத்தியும் கீளே வச்சுப்புட்டு அந்தாண்டேபோ. அதுக்கு மின்னே அப்பாலே இப்பாலே நகந்தின்னு முட்டியைப் பேத்துப்புடுவேன்; சாக்கிறதே.

மகி.—நான் இங்கே பணம் யாரிடத்தில் வாங்கிக் கொடுப்பேன்?

முண்.—ஆருக்கிட்ட வாங்கினு எனக்கென்னடா? வெக்கங்கெட்டநாயே! ஒங்கப்பனை வித்துக்குட்ரு!

மகி.—என் தகப்பன் இறந்து போய்விட்டானே! எமனுக்குத்தான் சீட்டு எழுதவேண்டும்.

முண்.--இல்லாமேபோனு ஒங்கம்மாளே வித்துக் குட்ரு.

மகி.—அவள் என் தகப்பனைத்தேடிக்கொண்டுபோய் 3 வருஷமாய் விட்டதே! அவளை நான் எங்கே காணப்போகிறேன்? அவள் இருக்கிற இடத்தைக் காட்டினுல் அவளை விற்றுத் தருகிறேன்.

திண்.—போடு பல்லுமேலே; பேசறுண்டா வெறும் பேச்சு! இன்னம் செத்தே நேரத்துலே பணம் வராமெப் போச்சின்னு நீ ஒங்கம்மா இக்கற வெடத்துக்கு பொயிருவே. ஆச்சேபனை இல்லே. பேசாமே ரொக்கத்தெக் கீளே வச்சின்னுப் பொளெச்செ.

முண்.—இல்லாமெப்பொனுலன்னையே வித்துக்குட்ரு.

மகி.—சரி! அப்படியே ஆகட்டும். என்னை இராஜ வீதிக்கு அழைத்துக்கொண்டு போங்கள்.

முண்.—போகலாம் வா! (போகிருர்கள்.)

திண்.—(உரக்க) பத்து ரூவாய்க்கி இந்த மனிசனே விக்கிரும்; வாங்கறவங்க வாங்கலாம். (பலதரம் கூவுகிருன்)

ஒரு வழிப்போக்கன்.—என்னேய்யா கூச்சல் ?

மகி.—பத்து ரூபாய் கொடுத்து என்னே விலக்கு வாங்கிக் கொள்ளும். நான் உமக்கு அடிமையாயிருந்து ஊழியம் செய்கிறேன்.

வழி.—சரிதான் ! உனக்கு யார் சோறு போடுகிறது? எனக்கு வேண்டாம். (போய் விடுகிருன்.)

மகி.—அடாடா! போய்விட்டானே! இன்னெருமுறை கூவிப்பார்க்கிறேன். (உரக்க) என்னே 10-ரூபாய்க்கு வாங்குவாருண்டோ? என்னே அடிமையாக வாங்கிக் கொள்வாருண்டோ? (தனக்குள்) அடாடா! ஒருவரும் வரவில்லேயே! ஆகா! அதிர்ஷ்டஹீனனே ! எப்பொழுது மாதவராயர் தரித்திரராஞரோ அப்பொழுதே எல்லாருக்கும் தரித்திரம் வந்துவிட்டது.

முண்.—ஏண்டா சொம்மா நிக்கிறே? எங்கிடா பணம்? வைடா கீளே ! (பிடித்துக் கொள்கிருர்கள்).

மகி.—நான் நினேத்த உடன் பணம் எங்கிருந்துவரும்? பிரம்மாவாக இருந்தால் உடனே சிருஷ்டி செய்யலாம். (கீழே விழுகிருன்.) இருவரும் அவனே இழுத்துக்கொண்டு போகிருர்கள்.

மகி.—ஐயயோ ! அடிக்கிருர்களே ! கொல்லுகிருர்களே ! ஐயோ ! கேள்விமுறை இல்லேயா? இந்த நகரம் அதிகாரியில்லாமல் பாழாய்ப் போய்விட்டதா ? இந்த அக்கிரமத்தைத் தடுப்பவரில்லேயா ? (கமலேசன் வருகிருன்.)

கமலே.—(தனக்குள்) இதென்னடா எயவாக்கீது ! இந்தச் சூதாடிப் பயவ ஏன் இங்கிட்டு நிக்கிருங்க? சூதாடிப் பயவளுக்கு எசமான் முண்டனும் இன்னெருத்தனும் மகிபாலனே என்னுத்துக்கோ தெரியல்லே கீளே போட்டு இளுத்துக் கிட்டு வாராங்களே ! சூதுலே இருக்கிற இம்பம் எதுலெ வருங்கிறேன் ! அந்த இம்பம் கறிசோறு திங்கறத்துலே கூட வராதே ; நான் முண்டன் ஊட்டுக்குப் போயி

ஆட்டம ஆடி எத்தினி நாளாச்சு! பணமில்லாமே எம் பொஞ்சாதியெப் பதினஞ்சு ரூவாக்கி வச்சு ஆடின பொற வாலே நான் போகவேயில்லியே; என்னெக் கண்டாக்கா ஏன் வல்லேன்னு முண்டன் கோவிச்சுக்கிஞ என்ஞ செய்றது? அவனே பாக்காமே மூஞ்சிலே துணியெப்போட்டு மூடிக் கினு இந்த வழியா போறேன். (தன் வஸ்திரத்தைப் பிரிக் கிருன்) ஆகாகா! முளுக்கக் கந்தலால்ல இக்குது! இதுலே எத்தினி கண்ணு! எத்தினி ஓட்டு! இதுவும் ஒரு மாதிரி அளவுதான்! இல்லே இல்லே! இந்தத் துணியோடே சோக் கைப் பாத்துப் புட்டு எம்புட்டுப்பேரு கண்ணெப் போட்டுட் டாங்கறேன். இதெல்லாம் அந்தக் கண்ணுங்க. இதேப் பிரிச் சுப்போட்டுக்கிஞ இன்னம் கண்போட்டுருவாங்க. மடிச்சே வச்சுக்கறேன். (மடித்து வைத்துக் கொள்ளுகிருன்) என் னெ முண்டன் பாத்தாத்தான் என்ன செஞ்சுடுவான்? போயிப் பார்க்கறேன். (வருகிருன்)

முண்.—ஏண்டா! ரூவா! வரட்டும்டா!

மகி.—எங்கிருந்து வரப்போகிறது?

கமலே.—அடே முண்டா! என்ன விசேசம்? செர்க மா இக்கிறியா?

முண்.—இந்தச் சமயத்துலே நீ எங்கிட்டுரு வந்தே? இந்தக்களுதே 10-ரூவா தரணும். ஏமாத்தராண்டா.

கமலே:—அதுக்கா இம்புட்டு பெரமாதம்!

முண்:—(கமலேசனுடைய அங்கவஸ்திரத்தைப் பிடிங் கிப் பிரித்து) ஆகா!பலே! பாருங்கையா ஆயிரங் கண்ணுடை யாளே! இந்த அளவான துணியேப் போட்ட இந்த பெரபு வுக்கு 10-ரூவா பெரமாத மில்லியாம்.

கமலே.—போடா முட்டாளே! நான் எத்தினியோ பத்து ரூவாயே ஒரு சணநேரத்துலே சூதாடித் தோத்திருப் பேண்டா! முண்டே! மனிசன் பணத்தே என்ஞத்துக்குடா மூட்டையாக் கட்டிவைக்கிறது? பணத்தைத் திங்கமுடியு மாடா? கொலெபாத வண்டா நீ! 10-ரூவாக்காவ இந்த மணி

சனேப் போட்டு இப்புடித்தானடா நசுக்கறது! ஒனக்கு நெஞ்சுலே எரக்க மில்லியாடா?

முண்.—அடே! நீ பெரபு தாண்டா! ஒன்னெத்தெரி யுண்டா! இதாண்டா வளி; நீ போய்த்து வாடா!

கமலே.—அடே! இவனெச் சொம்மாப் போட்டு ஓவித் திரம் பண்ணுதே! நான் ஒண்ணு சொல்றேன். அந்த மாதிரி கேளு! இன்னும் 10-ரூவா இவனுக்கு கடனுக்குடு; அதை வச்சு ஆடி ஒன் கடனேத் தீத்துடுவான்.

முண்.—எப்பிடிடா?

கமலே.—இவன் செலிச்சா நீ பணம் குடுக்க வாணும்.

முண்.—தோத்தான்னு?

கமலே.—அப்பவும் குடுக்க வாணும்.

முண்.—புத்திசாலிடா நீ! என்னெ யாருன்னு பாத்துக் கிட்டே! பெறந்தது மொத ஒன்னேப்பேலே நான் எம்பிட் டுப்பேரெப் பாத்தவனுச்சே! நான் அம்புட்டுப் பேரையும் ஏமாத்தரவனுச்சே! அடே! ரோக்கிதே இல்லாத பயலே! ஒங்கிட்டவாடா நான் பயப்பட்டவன்?

கமலே.—ஆர்ரு ரோக்கிதே இல்லாவன்?

முண்.—நீதாண்டா?

கமலே.—ஓங்கப்பன், பாட்டன், முப்பாட்டன் இவிங்க தாண்டா ரோக்கிதே இல்லாதவிங்க. (ஓடிப்போகும்படி கமலேசன் மகிபாலனுக்குச் சைகை காட்டுகிறான்.)

முண்.—அடே களுதே! இனிமேலே பேசினீன்னு பல்லுகில்லெல்லாம் ஒடெஞ்சுபோவும். ஆருன்னு பாத்துக் கிட்டே? அடே! மகிபாலா! எங்கிடா பணம்? வைறுகீளே!

(இழுக்கிறான்.)

மகி.—ஐயா! ஐயா! இன்றைக்குள் எப்படியாவது கொடுத்து விடுகிறேன். என்னே ஏன் இப்படிக் கொல்லு கிறாய்? இனிமேல் உபத்திரவித்தால் என் உயிர் போய்விடும்.

கமலே. (கோபத்தோடு)—அடே தேவிடியாமகனே! அவனேத்தொடா தேங்கிறேன். போட்டு இளுக்கிறியா?

அவன் மேலே இன்னமேக் கைபோட்டீன்னு ஒன் முதுகுத் தோலெப் பேத்துடுவேன். சாக்கிரதே! அடியாத்தே! ஆருன்னுரோசனே பண்ணிக்கிட்டே?

(முண்டன் மகிபாலனுடைய மூக்கில் அடிக்க இரத்தம் வடிகிறது. அதைக்கண்ட மகிபாலன் சோர்ந்து கீழே விழுகிருன்.)

கமலே .(ஆத்திரமாக)—இதோ பாருடா!ஒரே ஒதேலே ஒன் தலெகிலேல்லாம் எகிரிப்போவுது! (முண்டனே அடிக்கப்போகிருன்.)

முண்.—வாடா; ஒரு கைபாக்கலாம். ஒம்பொஞ்சாதி புள்ளெங்களுக்கு ஒரு எலும்பு கூட இல்லாமெப் பண்ணிப்புட்டேன். (அடிக்கிருன்.)

கமலே.—ஆக்கா! அப்படியா! ராசவீதிலே பட்டப் பகல்லே நீ என்னெ அடிக்கிறியா?ஒருத்தரும் ஒன்னெக்கேக் கறவங்க இல்லேன்னு நெனெச்சுட்டியா? இப்பவே ஒங்க பாட்டன் ஒங்கம்மா புருசன் ஙாயாதிபதி இக்கிருன் பாரு. அவன் கிட்டப் போயிச் சொல்லி ஒன்னெ எங்கிட்டுப் பாக்கணுமோ அங்கிட்டுப் பாக்கறேன். பயப்படாதே!

முண்.—அடே! இந்தப் பூச்சிக்கெல்லாம் இந்த முண்டன் பயந்துடுவான்னு நெனெச்சிக் கிட்டியாடா? கையாலே ஆவாத முண்டே! இப்பவே போயி சொல்லிக்கோடா! நானும் ஒன்னெப் பாக்கறேண்டா! எனக்கும் சாமிகுடுத்த கண்ணு இக்குதுடா!

கமலே —நீயுமா பாக்கப்போறே? அடே எப்புடிடா பாப்பே?அந்த அளவெக் கொஞ்சூண்டு காட்டுருபார்க்கலாம்.

முண்.—இப்புடித் தாண்டா பாப்பேன். (முண்டன் தன் கண்களை நன்ருய்த் திறந்துகொண்டு முகத்தை நீட்டுகிருன்.)

கமலே.—இந்தா நல்லாப்பாருடா! (கமலேசன் ஒரு பிடி மண்ணை எடுத்து முண்டன் கண்களில் போட்டு விடுகிருன். அவன் கண்களை மூடிக்கொண்டு தவிக்கிருன்).

முண்.—அடேடே! கண்ணு போச்சுடா! அடே திண்டா! இங்கிட்டு ஓடியாடோய்! என் கண்ணுலே ஊதுடோய்!

(அந்தச் சமயத்தில் மகிபாலன் எழுந்திருக்கிறான். அவனுக்குக் கமலேசன் சைகை செய்ய, அவன் ஓட்டம் பிடிக்கிறான்).

கமலே.—(தனக்குள்) சரி! நம்ப ஆளு தப்பிச்சுக்கிட்டான். இந்த முண்டன் ராசாவுக்கு நொம்ப வேண்டியவன். இவன் நம்ப தலெக்கிக் கல்லு வச்சுடுவான். பிரதாபன் என்கிற எடையன் ராசாவாகப்போரான்னு சோசியக்காரன் சொல்லிப் புட்டானும். சாணுபேரு அவங்கிட்டப் போயிச் சேந்துட்டாங்களாம். நானும் போயிச் சேந்துக்கறேன். (போய் விடுகிறான்.)

(வஸந்த ஸேனையின் மாளிகை; ஒரு மஞ்சத்தின் மீது அவள் ஏதோ சிந்தனையி லாழ்ந்தவளாய்ச் சாய்ந்திருக்க, அவளுடைய பணிப்பெண் மல்லிகா விசிறியால் வீசுகிறாள்)

மல்லி.—அம்மா! இன்று பூஜைக்குத் தாங்கள் வர முடியவில்லை யென்று தங்கள் தாயிடத்தில் தெரிவித்து விட்டேன்.

வஸ.—(தன் யோசனையிலிருந்து திடுக்கிட்டு) ஆகா! மல்லிகா! நீயா? என்ன சொல்லுகிறாய்?

மல்லி.—பூஜை விஷயமாய்த் தாங்கள் செய்த உத்திரவைத் தெரிவித்து விட்டேனென்றேன்.

வஸ.—ஸந்தோஷம்! (திரும்பவும் யோசனையில் ஆழ்கிறாள்).

மல்லி.—

விருத்தம் - இராகம் எதுகுல காம்போதி.

அன்னையே! அரிய நங்காய்! அகத்தினை வருத்திச் சால
சின்னையே வதைக்கு மெண்ண மென்னென வுரைப்பா யென்பால்.
பொன்னையே நிகர்த்த மேனி பொலிவெலா மிழக்கச் சோமன்
தன்னையே பழித்த வாமத் தண்முக மிழந்த கோலம்.

அம்மா! என்ன விசேஷம்? தாங்கள் அடிக்கடி எதை நினைத்தோ கவலைப்பட்டு வருந்துகிறீர்களே; நான்

கேட்டால் கோபித்துக் கொள்வீர்களோ வென்று இது வரையில் கேட்காமலிருந்தேன். முகமெல்லாம் வெளுத்துப்போய் விட்டது! அடிக்கடி மெய்ம் மறந்து ஏதோ விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்த வண்ணமாகவே இருக்கிறீர்கள். ஊ ணு ற க் க ம் முதலியம் வற்றையும் அலட்சியம் செய்கிறீர்கள். மாந்தளிரையும் வாழையின் குருத்தையும் போன்ற உங்களது மெல்லிய அழகிய தேகத்தை ஏதோ ஒரு மனப்பிணி வருத்திக் கருக்குகின்றதே! தயவு செய்து என்னிடத்தில் தெரிவியுங்கள். எந்தக் காரியத்தையும் மனதிலேயே இரகஸியமாய் வைத்துக்கொண்டு தனிமையில் வியாகுலப் படுவானேன்? ஆப்தர்களான என்னைப்போன்றவர்கள் எதற்காக இருக்கிறோம்? விசேஷமென்ன வென்பதைத் தெரிவித்தால் அதில் என்னால் ஏதாவது உதவி செய்யக்கூடுமானால் அதைச் செய்கிறேன்.

வஸ.—(நாணத்துடன்) அப்படி ஒன்றையும் காணேனே! நான் ஸாதாரணமாக எப்பொழுது மிருப்பதைப் போலத் தானே இருக்கிறேன். சர்க்கரை கசப்பது சர்க்கரையின் குற்றமல்லவே! வாயின் குற்றமல்லவா! ஆகையால் உன் கண்களிலேதான் ஏதோ மாறுபாடு உண்டாயிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

மல்லி —அம்மா!

('சங்கல்பமே' என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.)

பல்லவி.

ஸஞ்சலமே யாதோ மனதில்? தாயே நீ ரதை யினிப் போக்குவீர் (ஸ)

அநுபல்லவி.

நஞ்சானவே ஆகாரந் துயிலும்;
நங்கை நீவிர் வருந்தயான் ஸகிப்பெனோ? (ஸ)

சரணம்.

என்ன வேதனையோ? இனியும் நாணமோ?
என்ன கோலமெனது தேகம் பதைக்குதே!
அன்னாய்! துயர் போது மித்தோடு.
என்ன தேவை வருத்துதோ கூறுவீர். (ஸ)

அம்மணி! எப்போதும் என்னைப் பரிகாஸம் செய்வதைப்போல இப்போதும் செய்வதுதவறு. யாவரிலும்

உயர்ந்து ஆகாயத்தில் உலாவும் அழகிய சந்திரனுக்குத் தன்னிடத்திலுள்ள களங்கத்தை அறிந்துகொள்ளும் வல்லமை இல்லை. அதை நாமல்லவோ அறிந்துகொள்ளுகிறோம். என்னிடத்திற் சொல்வதில் வெட்கமென்ன? நானும் தங்களைப் போல ஒரு ஸ்திரீதானே! "தாய்க்கு ஒளித்த சூலுண்டோ" என்று சொல்லுவார்கள். தங்களை வருத்தும் நோய் இன்னதென்று ஒருவாறு எனக்குத் தெரிகிறது. அதுதானோவென்று நிச்சயமா யறிந்துகொள்ள விரும்புகிறேன். எந்த நோயானாலும் அதை விலக்க மருந்திருக்கிறதே! வியாதியைப்போக்க முயலாமல் ஏன் அனாவசியமாய் அதை அதிகரிக்க விடவேண்டும்? தயவு செய்து தங்களுடைய மனோவியாதியை வெளிப்படுத்துங்கள், அம்மணி!.

வஸ.—சில விஷயங்களில் உலகத்தாரின் அபிப்பிராயம் தவறாய்த் தோன்றுகிறது. அவர்கள் எதை நல்லதென்று நினைக்கிறார்களோ அது கெட்டதாக விருக்கிறது; எதைக் கெட்டதென்று மதிக்கிறார்களோ அது நல்லதாக விருக்கிறது.

மல்லிகா.—அப்படியானால் உலகத்தார் யாவரும் மூடர்களோ? எந்த விஷயத்தில் அப்படித் தவறாக அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள்? தெரிவியுங்கள் கேட்கலாம்.

வஸந்த.—

விருத்தம்—இராகம் கானடா.

மங்கையே! என்ற னாவி மல்லிகா! உண்மைத் தோழீ!
சங்கையை வதைத்துச் சாலச் சலனமே தரும்பொருட்கள்
எங்ஙன முயர்ந்த வாகு மெழிலினாற் குணத்தாற் கூறாய்;
பங்கமார் பொருளே யன்றிப பிறிதெனப் பகர லாமோ?

எது மிகவும் அழகானது, எது மிகவும் நற்குணமுடையது என்று சொல்லப்படுகிறதோ, அது பெரிதும் துன்பத்தைத் தருவதா யிருக்கிறது. குணமும் அழகுமுடைய பொருள் நமது மனதைக் கவர்ந்து, நம்மை ஓயாக்கவலையிலும் ஒழியா மனோ வேதனையிலும் ஆழ்த்துகிறது. செல்வமென்பது சிந்தையின் அமைதியல்லவா? எல்லாச் செல்வத்திலும் அருமையானதும் மேலானதும்

மனதின் திருப்தி யொன்றே! அவ்வித அருமையான திருப்தியைக் குலைத்து மனதைப் பாழாக்குகின்ற பொருளை நல்லதென்று சொல்லலாமோ? நம்முடைய பஞ்சேந்திரியங்களுக்கும் மனதிற்கும் எது இன்பத்தை ஊட்டுகின்றதோ, அதையல்லவோ அழகுடைய பொருளென்றும் நற்குணமுடைய பொருளென்றும் கொள்ளவேண்டும்.

மல்லி.—அழகான ஒரு பொருளைக்கண்டு நாம் வருந்துவது எதனுல்? அந்தப்பொருள் இன்பந் தருவதைக் காணவே, அதை நாமடைதல் வேண்டுமென்று மனதில் உண்டாகும் பேராசையினுல் நமக்கு மனோவேதனை உண்டாகிறது. நம்முடைய துன்பத்திற்கு நமது மனதே காரணமன்றி அந்தப் பொருள் இன்பத்தையே தருகிறது! இது யாருடைய குற்றம்? அந்தப் பொருளை அடைய நாம் அவ்வளவு ஆத்திரப் படுவானேன்? எல்லாவற்றினிடத்திலும் அதிக விருப்பும் வெறுப்பு மில்லாமலிருந்தால் நம்மனதில் அவ்வளவு வேதனை ஏன் உண்டாகிறது? ஆகையால் இன்பமும் துன்பமும் நம்முடைய மனதிலேயே இருக்கின்றன. நாம் நம்முடைய மனதை அடக்கி நடத்துவதிலிருந்து அவை ஏற்படுகின்றன.

வஸ.—உலகத்தில் எல்லோரும் சந்நியாசியைப் போல மனோ உறுதியைக் கொள்ள முடியுமா? எல்லா மனிதரும் துறவிகளாய் விட்டால், இந்த உலகத்தில் நிறைந்திருக்கும் மாயா ரூபமான சிருஷ்டிப் பொருட்கள் யாவும் அனுவசியமாய்விடும். அவற்றைப் படைத்த ஈசுவரனுக்கும் ஒரு வேலையும் இல்லாமற்போய்விடும். உலகப் பற்றை யொழித்த யோகியும் அழகென்று சொல்லப்படும் அந்த வஞ்சகப் பொருளின் மாயவலையிற்பட்டுத் தத்தளிக்கிருனென்ருல், மற்றவரின் தன்மையைப் பற்றிச் சொல்வானேன். ஒரு பொருளைக் கண்டு நாம் வருந்துவது அந்தப் பொருளின் குற்றமா யிருந்தாலென்ன? அது நம்முடைய மனதின் குற்றமா யிருந்தாலென்ன? எவ்விதத்திலும் நாம் அந்தப் பொருளைப் பற்றி வருந்த நேருகிறது. ஆகையால் நம்மைத் துன்புறுத்தும் பொருட்களை நல்லபொருட்களென்று சொல்வது தவறு. எது நம்

முடையமனதில்சலனமுண்டாக்காமலிருக்கிறதோ அதுவே நல்லபொருள். அதையே விசேஷித்ததாய் நாம் கொண்டாட வேண்டும். ஆனால் ஜனங்கள் பின்னதை அலட்சியமாக மதிக்கிறார்கள். அதிருக்கட்டும்; நீ என் மனோவியாதியின் காரணத்தைக் கொஞ்சம் அறிந்து கொண்டதாய்த் தெரிவித்தாயே! எங்கே? இன்னதென்று சொல் பார்க்கலாம்.

மல்லி.—

(மருவே செறித்த என்ற திருப்புகழ் வர்ணமெட்டு)

இராகம் - ஆனந்தபைரவி.

அகமோ விளைக்க முகமோ வெளுக்க அழகே யொளித்த திதுதிது.
அறிவே னளைத்து மதவேள் விடுத்த கணையே வருத்து-குறியாகும்.

இச் சின்னங்களெல்லாம் காதல் நோய்க்குத்தா னுண்டாகும். என்னை ஏன் இப்படிப் பரிட்சிக்கிறீர்கள்? தயவுசெய்து இரகஸியத்தை என்னிடத்தில் தெரிவியுங்கள். அநியாயமாய்த் தங்களுடைய மெல்லிய மேனி வதை படுகின்றதே! எந்த இராஜகுமாரன் தங்களுடைய மனதை இப்படிக் கவர்ந்தான்? உண்மையைச் சொல்லுங்கள்.

வஸ.—

(ஷெடி-வர்ணமெட்டு)

இராகம் - கல்யாணி.

ஸகியே!கணத்திற்பலமாதை நத்து நிருபோர் மனத்தல்ஸரியாமோ?
ஸகியே னெனக்கு விதியோ? மனத்தும் நினையேன் சலிக்கும்—மகி
போரை,

இருந்திருந்து இராஜகுமாரன் பேரிலா காதல் கொள்ள வேண்டும்? அவர்களுக்குச் சென்ற விடமெல்லாம் மனையாட்டியாயிற்றே! அவர்காதல் நிலைத்ததல்லவே! அவர்களை நம்பினோர்களின் கதி அதோகதி யல்லவோ! இன்றைக்கு என்னை விரும்புவார்கள்; நாளைக்கு வேறொருத்தியின் பேரில் மோகங்கொண்டு என்னை அலட்சியம் செய்வார்களே! அவர்களை நம்புவது, மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினாற் போன்றதே!

மல்லி.—

(ஷை வர்ணமெட்டு.)

இராகம் - ஆபேரி.

மயிலே பழித்த இயலே செழித்த மணியே இனித்த மடமானே !
மறையோர் குலத்தி லெழிலா ரொருத்தர் மனமீ திருத்தல்—நிஜமாமே.

அப்படியானால் தங்கள் மனதிற் குடிகொண்ட புண்ணியவான் யாராவது பிராம்மணராய்த்தா னிருத்தல்வேண்டும். தாங்கள் ஸாதாரணமானவர்களின்மீது இச்சை கொள்வீர்களா? அவர் ஸகலவிதமான கல்வியிலும் தேர்ச்சி பெற்றவரும் யௌவனப் பருவமுடையவருமான அந்தணராய்த் தானிருக்க வேண்டும். ஆம் அதோ பாருங்கள். உங்கள் முகத்தில் ஒருவிதப் புன்னகை உண்டாகிறதே!

வஸ.—

(ஷை வர்ணமெட்டு.)

இராகம் - காம்போதி.

கயலே பழித்த விழியாய் ! படித்த மறையோர் மணத்தல்-கருதார்கள்.
அவரோ துதித்துப் பணிவோ டிருத்த அருகான முற்று-மறிவோர்கள்.

பிராம்மணர்கள் வணங்கப்படுவதற்கு அருகரே யொழியக் காதலிக்கப்படக் கூடியவர்கள் அல்லரே! அதற்கென்ன செய்கிறது ?

மல்லி.—அப்படியானால் அவர் வைசிய ஜாதியைச் சேர்ந்தவராக இருக்கலாமோ ? அந்த ஜாதியாரிடத்திலேயே பொருள் குன்றுகுன்றாய்க் குவிந்திருப்பதால் அதுவும் ஒருவிதத்தில் நல்ல ஸம்பந்தந்தான்.

வஸ.—அடி ! மல்லிகா! ஏதேது? நீ என்னை விடமாட்டாய்போலிருக்கிறதே ! ஒவ்வொரு ஜாதியாய்க் கேட்டுக் கொண்டே வருகிறாயே! கடைசியாக நல்லவார்த்தை சொன்னாய்! வெட்கக்கேடு; வைசியனையாராவது கணவனாய் அடைவார்களோ? 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்னும் பழமொழி அவர்களுக்காகச் சொல்லப்பட்டதல்லவோ? இர

விலும் பகலிலும், விழிப்பிலும் துயிலிலும், அவர்களால் வணங்கப்படும் கடவுள் பணமே. அவர்கள் மனிதரிடத்தில் சிறிதும் பிரியம் வைக்கமாட்டார்களே! அவர்கள் ஓயா மல் தூரதேசத்திற்குப்போவதிலும், கடைகளைக்கட்டியழுது கொண்டிருப்பதிலும் தம் ஆயுட்காலத்தைக் கழிப்பவர்க ளல்லவோ. ஸ்திரீகளின் மனது குளிர அவர்கள் வாயி லிருந்து ஒரு அன்பான மொழியும் வராதே! ஆகையால் வைசியர்பேரில் எந்த ஸ்திரீ ஆசைவைப்பாள்!

மல்லி.—அப்படியானல் உங்கள் காதலர் பிராம்மணரு மல்ல, க்ஷத்திரியருமல்ல, வைசியருமல்ல, வேறுயார்?

வஸ.—அடி மல்லிகா! நீ ஒன்றையும் அறியாதவளைப் போல மிகவும் அவஸரமாகக் கேள்விகளைக் கேட்டுக்கொண் டேபோகிருயே! நாம் இரண்டொரு மாசத்திற்குமுன் ஸ்வாமி கோவிலுக்குப் போயிருந்தபோது அங்கு வந்திருந்த ஒருவரைப்பார்த்து 'அவர் யாரென்று' நான் உன்னைக்கேட் டதை மறந்துவிட்டாயா?

மல்லி.—ஓகோ! அப்படியா? அறிந்துகொண்டேன்! அறிந்து கொண்டேன்! நேற்றிரவு நீங்கள் ஒளிந்துகொண்ட தாகச் சொன்னீர்களே, அது அவருடைய மாளிகை யல் லவோ? ஆனல் அவர் மிகவும் ஏழ்மை நிலைமையிலிருப் பதாய் ஜனங்கள் சொல்லிக் கொள்கிருர்களே! அவர்பேரிலா இச்சை கொண்டீர்கள்?

வஸ.—

(எந்துகுவாடலகி நாடு - என்ற பாட்டின் வர்ணமெட்டு)

இராகம் தோடி - தாளம் ரூபகம்.

பல்லவி.

ஸுந்தரனல் எனதுமேனி சோர்ந்ததேவாடி.

அநுபல்லவி.

இந்து வதனத் தினிமை காண
எந்தமாது மாசைமீற வந்துபாதம் போற்றிகுவாள். (ஸு)

சரணம்.

எந்தநாளும் நிறையில்மீறு நீர்மையும் நலமும்
சொந்தமான தனமேயாக—ஸுகமோ செல்வமே?

மனத்தின் பெருமை பணத்திற் காமோ?
மாரன்வாம மேனிகாணத் தீமையரவு நீங்கியோடும். (ஸ்ரீ)

அவர் தனத்தில் ஏழையா யிருந்தபோதிலும் குணத்தில் அவரைவிட மேலான தனிகருண்டோ? கைநிறைந்த பணத்தைக் காட்டிலும் கண்ணிறைந்த கணவனே மேலென்பார்களே. அதற்கிணங்க அவருடைய அழகு கண்கொள்ளாக் காட்சியல்லவா? யோக்கியதையைக் கருதாமல் பணத்தையே தாசியர் நாடுவார்களென்று சொல்லப்படும் தூஷணை எனக்கில்லாமற் போகட்டுமே.

மல்லி.—அம்மணி! மாமரத்தின் புஷ்பங்களெல்லாம் உதிர்ந்துபோன பிறகு, அதை வண்டுகள் நாடுதலுண்டோ?

வஸ.—ஆகையினாலேதான் வண்டிற்குக் காமன் என்று ஒரு பெயர் ஏற்பட்டிருக்கிறது. அறிவில்லா வண்டுகள் அப்படி நன்றியற்றதாயும், சுயநல முடையதாயு மிருந்தால் நன்றாய்ப் பகுத்தறிவைப் பெற்ற நாமும் அதைப் போலச் செய்தல்வேண்டுமா?

மல்லி.—அப்படியானால் அவரை அடையும் வழியைப் பற்றி யோசனை செய்யத் தடை யென்ன?

வஸ.—அதற்காக நான் ஒரு தந்திரம் செய்திருக்கிறேன். அதை ஹேதுவாக வைத்துக்கொண்டு அவரிடம் திரும்பவும் போய்ப்பார்க்கலாம். ஆனால் அவருடைய பிரியத்தைப் பெறுவது ஸுலபமான காரியமல்ல. என்ன செய்கிறது?

மல்லி.—(புன்சிரிப்புடன்) ஓகோ! இந்த எண்ணத்தினாலேதான் ஆபரணங்களை அவருடைய மாளிகையில் வைத்துவிட்டு வந்தீர்களோ?

வஸ.—(திடுக்கிட்டு) இதென்ன சப்தம்? யார் ஓடிவருகிறார்கள். யார் இந்த மனிதன்?

(மகிபாலன் அவர்களிருந்த இடத்திற்குள் வேகமாய் ஓடிவந்து வஸந்த ஸேனையின் காலில் விழுகிறான்.)

மகி.—அம்மணி! அபயம்! அபயம்! இந்த ஆபத்திலிருந்து என்னைக் காப்பாற்றவேண்டும்.

வஸ.—கொடுத்தேன் அபயம்! எழுந்திரு! மல்லிகா! வாசற்கதவை மூடிவிடு. (மல்லிகா போகிறாள்) யாரைக் கண்டு இப்படி ஓடி வருகிறாய்? உனக்கு என்ன ஆபத்து நேர்ந்தது?

மகி—கடன்காரனுக்காகப் பயந்து ஓடி வருகிறேன்.

வஸ.—அடிமல்லிகா! கதவைத் தாளிட்டுவிடு.

மகி.—(தனக்குள்) ஆகா! கடன்காரனென்ற சொல்லைக்கேட்ட உடன் இவள் என்னைக்காட்டிலும் அதிகமாய்ப் பயப்படுகிறாளே! இதுவும் அதிர்ஷ்டந்தான்! ஏராளமான செல்வமும், நற்குணமும் பெற்ற இந்தஸ்திரீ எனக்கு உதவி செய்யாம லிருக்கமாட்டாள். பார்க்கலாம்.

(வீட்டிற்குவெளியில் முண்டன் திண்டன் இருவரும் வருகிறார்கள்.)

முண்.—அவன் எங்கிட்டுத்தான் போனான்; அவனே உடப்போறதில்லே! நமக்காச்சு அவனுக் காச்சு! பாக்கலாம் ஒரு கையி.

திண்.—அவனாவது இன்னமேஆப்புடவாவது! அவன் என்ன சாகசீகம் சேஞ்சுப்புட்டுப் போய்த்தாங்கிறேன்.

முண்.—அவன் மூக்கே கீளே போட்டுத்தேச்சு மூஞ்சிலே மோடு பள்ளமில்லாமெ நெரவிப்புட்டேனே! இந்தாலே பாரு!இன்னம்நெத்தம் சொட்டிக்கினே ஓடிக்கிறான்.

திண்.—நெத்தம் இந்த ஊட்டுக்குள்ளே போயிக்குதுடா! ஆப்புட்டுக்கிட்டாண்டா ஆளு! இந்த ஊட்டுக்குள்ளற ஒளிச்சிக்கினுக்கிறாண்டா திருடன்.

முண்.—கதவே இடிக்கலாண்டா!

(உட்புறத்தில்)

மல்லி.—(மகிபாலனைப் பார்த்து) ஏனப்பா! நீ எங்கிருந்து வருகிறாய்? நீ என்ன தொழில் செய்பவன்? நீ பயந்து ஓடிவந்த காரணமென்ன? என்னுடைய எஜமானி அம்மாளுக்குத் தெரியும்படி சொல்.

மகி.—அம்மா! என்னுடைய ஸொந்த தேசம் குஸு

மபுரம். நான் ஒரு ஏழையின் மகன். எனக்குக் கால்பிடிக்கும் தொழில் ஒன்றுதான் தெரியும்.

வஸ.—அது ஸ்திரீகள் செய்யக்கூடிய தொழில் அல்லவா! அதையா கற்றுக்கொண்டாய்?

மகி.—ஆம்! என்ன செய்கிறது! வயிறு வளர்க்க வேண்டுமே!

வஸ.—ஸரி! மேல் விருத்தாந்தங்களைத் தெரிவி.

மகி.—அந்த தேசத்தில்பிழைப்பதற்குவழி இல்லாமையால் இந்த மங்கள புரத்திற்கு வந்து ஒரு பிரபுவினிடத்தில் வேலைக்கமர்ந்தேன். அவருடைய தேகத்தின் அழகைப்போலவே அவருடைய குணத்தின் அழகும் பொருந்தியிருக்கிறது. அவருடைய அன்பும் தயாளமும் என்னவென்று சொல்வேன்! பிறர்க்கு உதவுவதற்கென்றே தனக்குப் பொருளிருப்பதாக நினைப்பவர்.

மல்லி.—அப்படியா? அவர் முழுத்திருடரா யிருக்கிறாரே!

மகி.—அம்மா! அப்படிச் சொல்லவேண்டாம். பாவம் வந்து ஸம்பவிக்கும். அவரைத் தூஷிக்கும் நாக்கு அழுகிப்போம்.

மல்லி.—என்னுடைய எஜமானி அம்மாளின் குணங்கள் யாவற்றையும் திருடியணிந்து கொண்டிருக்கும் அவரை வேறு எவ்விதமாய் மதிப்பது? அவ்வளவு மேன்மை பொருந்தியவர் யாரப்பா?

வஸ.—ஆம்! அவர் பெயரைக் கேட்கவேண்டுமென்று எனக்கும் ஆவலாகத்தானிருக்கிறது! தெரிவி.

மகி.—அம்மா! அவர் தன்னுடைய தயாளகுணத்தினாலும் ஈகையினாலும்.—

வஸ.—தன்னுடைய தனத்தை யெல்லாம் செலவு செய்து விட்டாரோ?

மகி.—அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது? நான் இன்னம் சொல்லவில்லையே!

வஸ.—அதைச் சொல்லவும் வேண்டுமா! செல்வமும் நற்குணமும் ஒன்ருய்க்கூடி இருப்பது அபூர்வமல்லவோ! உலோபிகளிடதிலேயே பொருள் யாவும் நிறைந்திருப்பது உலக வழக்கம். சாக்கடைக் குழியில் தானே அருந்துவதற்கு அருகமற்ற ஜலம் உச்சி விளிம்பு வரையில் நிறைந்திருக்கும்.

மல்லி.—அவருடைய பெயரைத் தெரிவி.

மகி.—குளிர்ந்த முகத்தை யுடையவராதலால் பூலோக சந்திரனென்று யாவரும் அவரை அழைக்கிருர்கள். அவர் பெயர் மாதவராயர்.

வஸ.—(திடுக்கிட்டுத் தன் ஆஸனத்தை விட்டெழுந்து) அடி! மல்லிகா! இவருக்கு ஆஸனம் கொண்டுவந்து போடு. ஐயா! இது உம்முடைய வீடு; தயவுசெய்துஉட்கார்ந்து கொள்ளும். அடிமல்லிகா! விசிறி கொண்டுவா! அந்தச் சரீரத்தைத் தொட்டு வருடும் பாக்கியத்தையடைய இவர் எவ்வளவோ தவம் செய்திருத்தல்வேண்டும்! இவருடைய பாக்கியம் யாருக்குக் கிடைக்கும்! விசிறியால் வீசு! அபூர்வமாக வந்த நம்முடைய விருந்தினர் களைத்துப்போயிருக்கிருர்.

மகி.—(தனக்குள்) ஆகா! மாதவராயருடைய பெயரைச் சொன்னதற்கு இவ்வளவு மரியாதையா! மெச்சினேன் சிரேஷ்டரே! உலகில் உதித்தால் இப்படிப் புகழுடன் உதித்தல் வேண்டும். இல்லையாயின் பிறக்காமலிருப்பதேஉத்தமம். நீர் ஒருவரே உயிருடனிருப்பவர்; மற்றவர் நடைப்பிணங்களே. தனிகர்களை யடுத்த நாய்க்கும் வண்டியேற்றம் கிடைப்பதை போல், அவரால் எனக்கும் இந்தப் பெருமையோ? அம்மா! தாங்கள் நிற்கவேண்டாம் உட்காருங்கள்.

வஸ.—(உட்கார்ந்து) உமக்குக் கடன் கொடுத்த பிரபுவின் பெயரென்ன?

மகி.—பணமிருந்த திலேயே எல்லாரும் பிரபுவாய் விடுவர்களா? எவனிடத்தில் குணத்தழகும், பிறரை எவ்விதம் கௌரவப்படுத்த வேண்டுமென்னும் உணர்வு மிருக்கின்றனவோ அவனே பிரபு!

வஸ.—சரி! உண்மைதான்; அது போகட்டும்; உமது கடன்காரன் பெயரைச் சொல்லும்.

மகி.—நான் மாதவராயப் பிரபுவின் வேலைக்காரனயிருந்தேன். அவர் ஏழ்மைத்தனமடைந்த பிறகு நானும் அவருக்குப் பாரமாயிருக்கக் கூடாதென்று நினைத்து, அவரைவிட்டு வந்துவிட நேர்ந்தது. பிழைக்க வேறு வழியில்லாமையால் நான் சூதாட ஆரம்பித்தேன். அதில் 10 ரூபாய் தோற்றேன்.

(வெளியில் இரண்டு சூதாடிகளும் கதவை இடிக்கிறார்கள்.)

மகி.—(திடுக்கிட்டு) ஆகா! அவர்கள் வந்து விட்டாற்போலிருக்கிறதே! ஐயோ! என்ன செய்யப்போகிறேன்!

வஸ.—அடிமல்லிகா! இதோ இந்தக் காப்பை எடுத்துக்கொண்டுபோய் 10. ரூபாய்க்குப் பதிலாய்க் கொடுத்துவிட்டு வா. இவரே கொடுத்ததாகத் தெரிவி.

மல்லி.—ஏனையா! உமது கடன்காரனுடைய பெயரென்ன?

மகி.—அவன்பெயர் முண்டன்.

(உடனே மல்லிகா வெளியிற் போய்க் கதவைத் திறக்கிறாள்)

முண்.—அடே! ஆரோ கதவெத் தொறக்கிறாடா!

திண்.—அவன் எங்கிட்டோ போயி நொளஞ்சிட்டாண்டா! இன்னமேலே நம்ம கையிலே சிக்கமாட்டாண்டா! போவோம்டா.

மல்லி.—யார் நீங்கள்? கதவை இப்படித்தானு இடிக்கிறது? இரண்டுபேரில் முண்டன் யார்?

திண்.—அடே அண்ணே! இவ எம்பிட்டு அளவாக்கிறாடா! ஒன்னெத்தாண்டா கேக்கறு!

முண்.—முண்டனெ நீ என்னத்துக்கு தேட்றே? அவுனுக்கு நொம்ப வருசத்துக்கு மின்னெயே கண்ணாளம் ஆயிப்போச்சே!

திண்.—இல்லாமெப்போனு, அவனேடெகூடச் சூதாடலாமான்னு தேட்றியா?

முண்.—இம்புட்டுச் சோக்கான பொண்ணு என்னை என்னாத்துக்குத் தேட்றே? நாந்தான் முண்டன்; ஆசையா தேட்றியே; எனக்கு என்னா தரப்போறே? சொல்லேன்.

மல்லி.—உனக்கு யாராவது பணம் தரவேண்டுமா?

முண்.—ஆமா; ஒருகளுதெ 10 ரூவா குடுக்கணும். அய்யோக்கிய முண்டே. அந்த நாயி இந்த ஊட்டுக்குள்ளற நொளெஞ்சிதே. அவன் ஒனக்கு என்ன சொந்தம்? ஆசெ நாயகனா?

திண்.—அந்தப் பொணத்தெக் கட்டிக்கினு வாள்ந்து பூடுவெ!

மல்லி.—அடே! ஏது வார்த்தைகள் வர வர அதிகரிக்கின்றன? போதும் நிறுத்துங்கள் அதிகப் பிரசங்கத்தை. இதோ! இந்தக் காப்பை அவர் உன்னுடைய கடனுக்காகக் கொடுக்கச் சொன்னார். எடுத்துக்கொண்டு இங்கு நிற்காமல் நடவுங்கள்.

முண்.—ஆகா! சந்தோசம்! அப்புடியானு ரோக்கியந் தான்! அவன்மேலே எங்கிளுக்கு ஒரு கோவமுமில்லெ! எப்போ ஒணுமின்னாலும் இனிமேலே வந்து சூதாடட்டும். அடே! வாடா போவோம்.

திண்.—அடே! இவன் எம்புட்டு அளவான பணக்காரக் குட்டியை சம்பாறிச்சுக்கிட்டான் பாத்தியாடா! இவமேலெ நவெ ஜிலுஜிலுன்னு மின்னுதுடா! (போகிறார்கள்)

(மல்லிகா உள்ளே வருகிறாள்)

மல்லி.—அம்மா! அவர்கள் காப்பை வாங்கிக்கொண்டு ஸந்தோஷமாய்ப் போய்விட்டார்கள்.

வஸ.—ஐயா! நண்பரே! நீர் திரும்பி வராததைப் பற்றி உம்முடைய மனைவி மக்கள் வருந்தி யிருப்பார்கள். சீக்கிரம் போய் அவர்களுடைய ஆவலை நீக்கும்.

மகி.—அம்மணி! எனக்கு மனைவியேது? பிள்ளையேது? ஒன்றுமில்லை. நான் ஏகாங்கி. நீங்கள் செய்த இந்த உதவியை நான் ஒரு நாளும் மறக்கமாட்டேன். ஈசுவரன் உங்களைக் காப்பாற்றுவான். உத்தரவு பெற்றுக்கொள்கிறேன். (போகிறான்).

(வெளியில் வந்து தனக்குள்) ஆகா! இந்தத் தொழில் எவ்வளவு மானக்கேட்டையும் துன்பத்தையும் கொடுத்தது. சே! இப்படித் திக்கில்லாமல் அலைவதைவிடப் பிச்சை எடுத்து வயிறு வளர்ப்பதே நல்லது! என்ன உலகம்! நாணயமாய் வேலைசெய்து இந்த ஒருவயிற்றை வளர்ப்பதற்கு இந்த ஊரில் ஒரு வேலை அகப்படாமற் போய்விட்டதே! இவ்வளவு திடமான சரீரத்தை வைத்துக் கொண்டு நான் பிச்சை யெடுக்கப்போனால் எவன் ஒரு பிடி சோறு போடுவான்! தடியை எடுத்துவந்து மண்டையை உடைத்தனுப்புவான். நல்லது! நான் இப்பொழுதே காஷாயம் முதலியவற்றை பெற்றுச் சந்நியாசி யாகிறேன். அதைவிடக் குறைந்த மனக்கவலையுடைய நிலைமை பூமியில் வேறொன்றுமில்லை. ஆகையால் அப்படியே செய்கிறேன். (போகிறான்)

---

# முதல் அங்கம்

---

## மூன்றாவது காட்சி

இடம்:—மாதவராயருடைய மாளிகை
காலம்:—மறுநாளிரவு

குணசீலன்:—(தனக்குள்) ஏழையா யிருந்தபோதிலும், யோக்கியதையும் நற்குணமுமுடைய எஜமானரிடத்தில் ஸேவகம் செய்வதே வேலைக்காரர்களுக்குப் பரமஸந்தோஷம். அகங்காரமும் கடுகடுப்புமுள்ளவனும், பணத்தைத் தவிர மற்ற எவ்விதமான யோக்கியதையு மில்லாதவனுமான தலைவனிடத்தில் வேலை செய்வதைக் காட்டிலும் ஓயாத்துன்பம் தரக்கூடியது வேறொன்றுமில்லை. எதை மாற்றினாலும் மாற்றலாம். பிறவிக் குணத்தை எப்படி மாற்றமுடியும்? நாம் எவ்வளவுதான் முயன்றாலும் பட்டிமாடு வயலில் நுழைந்து பயிரைத் தின்பதையும், பிறனுடைய மனைவியின் பேரில் மன்தை வைப்பவன்து காரியத்தையும் தடுத்தல்முடியாது. சூதாடுபவன், குடிப்பவன் முதலியோரின் குணத்தை

மாற்ற யாரால்முடியும்? இப்பொழுது நேரம் எவ்வளவிருக்கலாம். நடு இரவாய் விட்டதே! இன்னும் எஜமானர் திரும்பி வரவில்லையே! பாட்டுக்கச்சேரி இன்னும் முடியவில்லையோ? எனக்கோ நித்திரை வருகிறது; அவர் வருமுன் தூங்குவதும் தவறு; அதோ! கதவு தட்டுகிற சப்தம் கேட்கிறது. வந்து விட்டார்கள்.

(மாதவராயரும் ஸோமேசனும் சம்பாஷித்தவண்ணம் வருகிறார்கள்.)

மாத.—ஸோமேசா! திலோத்தமா எவ்வளவு மாதுரியமாய்ப் பாடினாள்! வீணையைப் போன்ற வாத்தியம் வேறு என்ன இருக்கிறது! ஆப்த நண்பர்களைப்போல, அது விஸனத்தினால் வருந்தும் மனதிற்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகிறது! அதைத் தேவர்களின் வாத்திய மென்பதற்குத் தடையே இல்லை.

ஸோமே.—சங்கீதத்தின் இன்பத்தில் பொழுது போனதே தெரியவில்லையே! ஆகா! எவ்வளவு நேரமாய் விட்டது! சந்திரன் அஸ்தமனமாகப் போகிறதே! நாய்கள் கூடக் குலைக்காமல் நித்திரை செய்கின்றனவே! நீங்கள் இனிமேலும் தாமதிக்காமல் சயனித்துக்கொள்ளுங்கள்! அதிகம் கண் விழித்தால் உங்கள் தேகத்திற்குக் கெடுதலாய் முடியும்.

மாத—ஐயோ பாவம்! நமக்காகக் குணசீலனும் நெடுநேரமாய் நித்திரையில்லாம லிருக்கிறான். (அன்போடு) அடே குணசீலா! நேரமாகிறது; நீ போய்ப் படுத்துக்கொள்! கதவுகளை ஜாக்கிரதையாகப் பார்த்து மூடித் தாளிட்டுவிட்டுப் படுத்துக்கொள்.

குண.—ஸோமேசரே! இந்த நகை மூட்டையைப் பகலெல்லாம் நான் வைத்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது உம்முடைய முறை. இதோ வாங்கிக்கொள்ளும்.

(கொடுக்கிறான்)

ஸோமே.—நல்ல வேளையாய் இன்று பகல் ஜாக்கிரதையாய்க் கழிந்தது. இந்த இரவு எப்படிக் கழியப்போகிறதோ தெரியவில்லை. இந்த மங்களபுரத்தில் திருடர்கள்

இல்லாமலிருந்தால், இப்பொழுது எனக்கு இவ்வளவு கவலை இராது; நானும் நன்றாய்த் தூங்கலாம். இனி எனக்கு நித்திரை எங்கு வரப்போகிறது? போய்ப் படுத்துப் பார்க்கிறேன்.

மாத.—மித்திரா! இது நம்பிக்கையின் பேரில் நம்மிடத்தில் வைக்கப்பட்டது! இது ஸொந்தக்காரரிடத்திற் போய்ச் சேரும்வரையில், இதை நாம் ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டும்; பார்த்துக்கொள். (சயனித்துக்கொள்கிறார்.)

(தனக்குள்) ஆகா! அந்த ஸங்கீதம் இன்னமும் என் காதில் சப்தித்துக்கொண்டிருக்கிறதே! எவ்வளவு இனிமை! (தூங்குகிறார்.)

(ஸோமேசனும் வேறொரு பக்கத்திற் படுத்துத் துயிலும்பொழுது கனவு கண்டு உளறுகிறான்).

ஸோமே.—(தனக்குள்) ஆகா! என்ன பாட்டு! நல்ல வீணை! திலோத்தமாவின் அழகே அழகு! திலோத்தமா! உன் தேகத்திலுள்ள ஆபரணங்கள் பத்திரம்! திருடன்! திருடன்! பிடியுங்கள் பிடியுங்கள்! ஆகா! ஓட முடியவில்லையே! கால் பூமியைவிட்டுக் கிளம்ப வில்லையே! (சற்று மௌனம்.)

(சசிமுகன் என்னும் திருடன் கையிற் கன்னக்கோலுடன் மெதுவாக மார்பினால் நகர்ந்துகொண்டு வருகிறான்).

(தனக்குள் மெதுவாக) அப்பா! தோட்டத்தின் சுவரைத்தாண்டி உள்ளே வந்துசேர்ந்தேன். (மேலே பார்த்து) சரி! சந்திரன் அஸ்தமனமாகும் ஸமயத்திலிருக்கிறது; இதுவும் அதிர்ஷ்டந்தான்! சந்திரனும் திருடருக்கு அனுகூலமானவன் தான்! என்னைப்போன்ற புண்ணியவான்களுக்கு இரவானது இருளைக்கொடுத்து உதவுவதைப்போல, ஒரு தாய்கூடத் தன் குழந்தைக்கு உதவி செய்யமாட்டாள். தோட்டத்திற்குள் வந்தது ஒரு பெரிய காரியமல்ல. இனி இந்த மாளிகைக்குள் நுழைவதே அருமையான விஷயம். பிறர் தூங்கும்பொழுது ஜெயம் பெறுவதும், தந்திரத்தினால் பொருளை அபகரிப்பதுமான இந்த உத்தியோகத்தைக்

கெட்டதொழிலென்று ஜனங்கள் சொல்லுகிறார்களே! முட்டாள் ஜனங்கள். இது அவ்வளவு வீரத்தனமல்லவென்றாலும், பிறருக்கு அடிமைத்தொழில் செய்யாமல் சுவதந்திரத்தோடிருக்கக்கூடிய அலுவலென்பதைப்பற்றி ஸந்தேகமில்லை. பாரதயுத்தத்தில் இரவில் தூங்கிக்கொண்டிருந்த பகைவரை அசுவத்தாமன் இரகஸியமாகப்போய்க் கொன்று வெற்றியடையவில்லையா? ஆகையால் இது குற்றமாகாது. (நாற்புறங்களையும் உற்று நோக்கி) எங்கே கன்னம் வைக்கலாம்? எங்கே துளைபோடலாம்? ஈரத்தினால் எந்த இடம் தளர்ந்து உப்புப் பூத்திருக்கிறதோ பார்க்கலாம். மனிதர் சமீபத்தில் இல்லாத இடமாக இருந்தவேண்டும். கல் மண் முதலியவை விழுவதின் ஓசை ஒருவருக்கும் காதிற்படக்கூடாது. (சுவற்றைத் தடவிப் பார்க்கிறான் பேஷ்! இதுதான் சரியான இடம்! இங்கு உப்பறித்திருக்கிறது! அதோடு ஒரு எலிவளையுமிருக்கிறது! இது நல்ல சகுனந்தான். சொத்து நிச்சயமாய் அகப்படும்; தடையில்லை. கன்னம் வைப்பதில் நான்கு வகைகளுண்டு. சுட்டசெங்கலைப் பெயர்த்தெடுப்பது. சுடாதகற்சுவரைக் கடப்பாரையால் தோண்டுவது. மண்சுவராயிருந்தால், தண்ணீரைவிட்டுத் தோண்டுவது. மரப் பலகை உட்புறத்தில் வைக்கப்பட்ட சுவராயிருந்தால், அதை வாளினால் அறுப்பது. இது சுட்ட செங்கற் சுவர். கற்களை ஒவ்வொன்றாய்ப் பெயர்த்து எடுத்து விடுகிறேன். இதில் என்னுடைய ஸாமர்த்தியத்தைக் காட்டுகிறேன். துளையைத் தாமரைப் புஷ்பத்தைப்போலச் செய்யலாமா? அல்லது பூரணசந்திரனைப்போலச் செய்யலாமா? இல்லாவிட்டால் தண்ணீர்ப் பானையைப்போலச் செய்யலாமா? இதைப் பார்த்துவிட்டு வீட்டுக்காரர்கள் மூக்கில் கையை வைத்து ஆச்சரியப்படவேண்டும். திருடப்போனாலும் பிராம்மணன் சாஸ்திரப்படியும் புத்திசாலித்தனமாகவும் தன்வேலையைச் செய்வானென்று இதைக்காண்போர் சொல்லவேண்டும்! நான்உள்ளேபோய்த் திருடிக்கொண்டு வெளியில் வருகிறவரையில் அந்தக் கந்தனே என்னைக் காப்பாற்றவேண்டும்! (கை

குவித்து) ஊர்த்தெய்வங்களை யெல்லாம் வணங்குகிறேன். எனக்கு இந்த அருமையான வித்தையைக் கற்றுக்கொடுத்தவரான குருவின் பாதமே துணை! அவர்தான் எனக்கு இந்த மாத்திரைக் கோலைக் கொடுத்தவர். இதை வைத்துக் கொண்டு போனால் என்னை எவரும் பிடிக்க முடியாதாம். சே! என்ன வெட்கக்கேடு? அளப்பதற்குத் தேவையான நூலை எடுத்துக்கொண்டு வர மறந்துவிட்டேனே! (யோசித்து) நல்லவேளையாப் பிராம்மண ஜாதியிற் பிறந்தேன். என்னுடைய பூணூலை நான் இத்தனை வருஷமாய்த் தூக்கிச் சுமந்ததற்கு அது இந்த ஸமயத்திற்குத்தான் உபயோகப் படப்போகிறது. என்னைப்போன்ற உத்தமப் பிராம்மணருக்குப் பூணூலில்லாவிட்டால் என்ன யோக்கியதை இருக்கிறது. சுவற்றின் உயரம், கனம் முதலியவை எவ்வளவிருக்கின்றனவென்பதை ஸுலபத்தில் இதனால் அறிந்துகொள்ளலாம். காப்பு முதலிய கெட்டியான நகைகளை இழுத்து விலக்குவதற்கும், துளைக்குள் விட்டுத் தாழ்ப்பாளைத் திறப்பதற்கும், பாம்பு கடித்துவிட்டால் விஷம் ஏறாமல் உடனே இறுகக் கட்டுவதற்கும் இதைப்போல உதவி செய்யக்கூடிய ஸமய ஸஞ்சீவி வேறு என்ன இருக்கிறது? (பூணூலால் சுவரை அளக்கிறான்) சரி! இன்னும் ஒரே செங்கல் மிகுதியிருக்கிறது! இதோ எடுத்துவிட்டேன். (உள்ளே பார்க்கிறான்) ஒரே விளக்கு மங்கலாய் எரிகிறது. அதைப்பற்றிக் கவலையில்லை. உள்ளே போகிறேன். என்னைப் பாதுகாக்க அந்தக் கார்த்திகேயன் இருக்க எனக்கென்ன கவலே? (உள்ளே நுழைகிறான்) யாரோ இரண்டு மனிதர் தூங்குகிறார்கள். நானோ ஒருவன். தப்பித்துக்கொண்டு வெளியில் ஓடுவதற்கு அனுகூலமாக முதலில் வெளிக் கதவைத் திறந்துவைக்கிறேன். (கதவைத் திறக்கிறான்) அடாடா! கோமுட்டிவீட்டுக் கதவைப்போல 'கிரீச்' சென்று ஓசை செய்கிறதே! இதற்கு என்னிடத்திலா மருந்தில்லை? இரும்பு துருப்பிடித்திருக்குமிடத்தில் கொஞ்சம் தண்ணீரை விட்டால் சப்தம் இல்லாமல் போகிறது. (எதிரிலிருந்த தண்ணீரில் கொஞ்ச

மெடுத்து விடுகிருன்) சரி! இப்பொழுது ஸரியாய்ப் போய்விட்டது! இவர்கள் உண்மையில் நித்திரை செய்கிருர்களா அல்லது பாசாங்கு செய்கிருர்களா வென்று பரிட்சைசெய்து பார்க்கிறேன். இவர்கள் குறட்டைவிட்டுத் தூங்குகிருர்கள். மூச்சை அவசர மில்லாமல் ஒழுங்காய் விடுகிருர்கள். கண்களை இறுக மூடிக்கொண்டிருக்கிருர்கள். உடம்பு சோர்ந்து கிடக்கிறது. கணுக்களெல்லாம் தளர்ந்திருக்கின்றன. (நெருப்புக் குச்சியைக் கிழித்து அவர்களின் முகத்திற்கு நேரில் பிடிக்கிருன்) பொய்த் தூக்கமாயிருந்தால் வெளிச்சம் முகத்திற்பட்டவுடன் அதைப் பொறுக்கக் கூடாமையால், முகத்தில் சலனமுண்டாகும். கண்களிலும் அசைவுண்டாகும். சரி! இவர்கள் நன்ருய் நித்திரை செய்கிருர்களென்பதைப்பற்றிச் கொஞ்சமும் ஸந்தேகமில்லை. எல்லாம் ஸரியாய் இருக்கிறது! இதென்ன! தம்புரு, வீணை, புஸ்தகங்கள் முதலியவை இருக்கின்றனவே! இது தாசியின் வீடோ அல்லது பாடகன் வீடோ தெரியவில்லை. இதை ஒரு பிரபுவின் வீடென்று நினைத்தல்லவோ மதி மோசம் போய் இதற்குள் நுழைந்து விட்டேன். இல்லா விட்டால் வேறு எங்கே யாயினும் போயிருப்பேனே! விடியா மூதேவிக்கு வேலை யகப்பட்டாலும் கூலி யகப்படுவ தில்லையென்பதைப் போலாயிற்றே என்னுடைய பிழைப்பு. இது வாஸ்தவத்தில் ஏழ்மைத்தனமா? அல்லது வெளி வேஷமா? அல்லது திருடனுக்காவது அரசனுக்காவது பயந்து தன் ஸொத்தை யெல்லாம் ஒளித்து வைத்திருக்கிருனே தெரியவில்லையே! பூமிக்குள் புதைத்து வைத்திருப்பானே? இந்த மணிகளைக் கீழே உருட்டிப்பார்த்தால் மேடு பள்ள மிருப்பதும், ஸமமாயிருப்பதும் தெரியும்; அதனல் பூமி வீடு கட்டப்பட்ட பிறகு தோண்டப்பட்டதா வென்பது நன்ருய்த்தெரியும். (உருட்டுகிருன்) சீ! இவன் நித்திய தரித்திரன்! இங்கே ஒன்றும் அகப்படாது! இவ்வளவும் வீண் பாடுதான். வேறு எங்கேயாவது போகிறேன்! (போக ஆரம்பிக்கிருன்).

ஸோமே.—(சனவு கண்டு தானே உளறுகிருன்) ஓ

மாதவராயரே! திருடர்கள் கன்னம் வைக்கிறார்கள்! நகை மூட்டையைத் திருட வருகிறார்கள்! இதோ இந்த மூட்டையை நீரே வைத்துக் கொள்ளும்.

சசிமுகன்.—(திடுக்கிட்டு) உண்மையில் விழித்துக் கொண்டானோ? என்னைப்பார்த்து விட்டானோ? ஒன்றுந் தெரியவில்லையே! இது மாதவராயருடைய வீடா! தான் மிகுந்த ஏழை என்பதை எனக்குத்தெரிவிக்க இவ்விதமாகப் பரிகாசம் செய்து இடித்துக் காட்டுகிறானோ? (நெருங்கிப் பார்க்கிறான்) இல்லை இல்லை. இவன் கனவு காண்கிறான் போலிருக்கிறது. இவன் தலையின் கீழ் ஏதோ ஒரு துணி மூட்டை இருக்கிறது! சே! ஏற்கனவே பரமதரித்திர நிலைமையி லிருக்கும் இவனுடைய ஸொத்தைத் திருடி இவனை மேலும் வருத்துவது பாவம்; வேறு எங்கேயாவது போகிறேன். (போக ஆரம்பிக்கிறான்.)

ஸோமே.—ஐயா! நீர் இதை உடனே எடுத்துக் கொள்ளும். இல்லாவிட்டால் இது போய்விடும். பிறகு என்னைக் கேட்கக்கூடாது.

சசி.—மிகவும் அந்தரங்க விசுவாசத்துடன் இவ்வளவு வேண்டிக் கொள்ளும் இவருடைய வார்த்தையை மரியாதைப் படுத்தாமல் நான் எப்படி மறுத்துப்போகிறது? நான் இந்தக் காணிக்கையை அவசியம் பெற்றுக்கொண்டு இந்தப் பரமபக்தனை இரட்சிக்க வேண்டும். இந்த விளக்கின் வெளிச்சம் நம்மை ஒரு வேளை காட்டிக் கொடுத்துவிடும். ஆனால் விளக்கு இவர்களுக்கு அருகிலிருக்கிறது. இந்தச்சிமிழில் அடைத்துக் கொணர்ந்திருக்கும் வீட்டிற் பூச்சிகளை இதோ பறக்கவிடுகிறேன். (பூச்சிகளைப் பறக்கவிடுகிறான்). பலே! அதோ விளக்கினருகில் போய் விட்டன! உம்! ஆகட்டும் சீக்கிரம்; பலே! அதோ அணைத்துவிட்டன! என்ன இருள்! என்னுடைய உயர்குலத்தின் பிரகாசம் இந்தக் கேவலத் தொழிலினால் எப்படி மழுங்கிற்றோ அப்படியல்லவோ இருள் மூடிக்கொண்டது! நான் பிராம்மணனுடைய புத்திரன். நான்கு வேதங்களையும் படித்தவன். பிறரிடத்தில்

ஒரு செப்புகாசும் வாங்காதவன். அவ்விதமிருந்த நான் என்ன நிலைமைக்கு வந்து சேர்ந்தேன்! என்ன தொழிலில் அமர்ந்தேன்! மல்லிகாவை எப்படியாவது நான் அடைய வேண்டு மென்னும் ஆசையல்லவோ என்னை இப்படித் தூண்டுகிறது. என்ன செய்கிறது! இதெல்லாம் பூர்வ ஜென்ம வாஸனை! இது தவறென்று தெரிகிறது. என்மனது இதைச் செய்யக்கூடாதென்று தடுத்தவண்ணமிருக்கிறது. தேகம்மாத்திரம் தானாக இவைகளைச் செய்துகொண்டே போகிறது! அதைத் தடுக்க என்னால் முடியவில்லையே! ஆகா! இந்தப் பிராம்மணன் நமக்குஎவ்வளவு மரியாதைசெய்து நம்மை உபசரிக்கிறான்! வேதங்களைப் படித்த திருடன் ஸம்பாவனை இல்லாமல் வெறுங்கையனாய்த் திரும்பக்கூடாதென்னும் நல்ல எண்ணம்! என்ன இவனுடைய மேன்மைக் குணம்! (அருகில் போகிறான்)

ஸோமே.—(அரைத்தூக்கத்தில் திருடனுடைய கையைப் பிடித்துக்கொண்டு), நண்பரே! என்ன உம்முடைய கை இவ்வளவு குளிர்ச்சியா யிருக்கிறது?

சசி.—(தனக்குள்), சே! நான் சுத்த முட்டாள்! தண்ணீரில் கையை வைத்ததினால் என் கை குளிர்ந்திருப்பதை மறந்துவிட்டேன். (கைகளை ஒன்றோடொன்றைத் தேய்த்துச் சூடுண்டாக்கிக்கொண்டு நகை மூட்டையை எடுக்கிறான்.)

ஸோமே.—(அரை நித்திரையில்) மூட்டையை எடுத்துக்கொண்டீரா?

சசி.—(தனக்குள்), ஆகா! இந்தப் பிராம்மணோத்தமரின் உபகாரத்தை என்னவென்று சொல்வேன்! (உரக்க) ஆம்! எடுத்துக்கொண்டேன்.

ஸோமே.—(நித்திரை மயக்கத்தில்) அப்பா! கவலையொழிந்தது! இனி நன்றாயித் தூங்குகிறேன்.

(தூங்குகிறான்.)

சசி.—(தனக்குள்), பிராம்மணோத்தமரே! தூங்கும்! இப்படியே நூறுவருஷம் எழுந்திருக்காமல் நன்றாய்த் தூங்

கும்.—ஸரி! எனக்கு நேரமாகிறது. இந்த மூட்டையை வஸந்தஸேனையின் வீட்டிற்குக் கொண்டுபோய், மல்லிகாவின் கிரயத்தைக்கொடுத்து அவளுடைய அடிமைத் தன்மையை நீக்கி அவளை மீட்டுக்கொண்டு போகிறேன். (திடுக்கிட்டு) இதென்ன காலடியோசை கேட்கிறதே! யார் வருகிறார்கள்? அதோ யாரோ ஒருவன் வருகிறான். அவன் கூச்சலிடுமுன் அவனைக் குத்திக் கொன்றுவிடுகிறேன்.

(கோமளா வருகிறாள்.)

கோமளா.—(தனக்குள்) இதென்ன ஓசை இது! திருடனாயிருக்குமோ! எங்கும் இருளாயிருக்கிறதே! விளக்கை ஏற்றுகிறேன் (விளக்கை ஏற்றுகிறாள்).

சசி.—(தனக்குள்)இவள் யாரோ ஒரு ஸ்திரீயல்லவோ! சே! இவளைக் குத்தக்கூடாது! என் வேலை முடிந்துவிட்டது; மெதுவாய்ப் போய்விடுகிறேன். (மறைந்துவிடுகிறான்)

கோமளா.—கூ! கூ! திருடன்! திருடன்! வாருங்கள்! திருடன்! திருடன்! ஓடுகிறான்! ஓடுகிறான்!

ஸோமே.—(திடுக்கிட்டெழுந்து) என்ன அது? என்ன அது? கோமளா! ஏன் அப்படிக் கூச்சலிடுகிறாய்?

கோமளா.—திருடன்! திருடன்! வாரும்! வாரும்!

ஸோமே.—திருடனாவது இங்குவருவதாவது! என்ன கனவோ?

கோமளா.—இல்லையில்லை! இதோபாரும் வாசற்கதவு திறந்திருக்கிறது!

மாதவ.—ஸோமேசா! இதென்ன இங்கே இவ்வளவு கூச்சல்?

ஸோமே.—திருடன் வந்துவிட்டுப் போயிருக்கிறான்!

மாதவி.—எப்படி உள்ளே வந்தான்?

ஸோமே.—இதோ பாருங்கள் துவாரத்தை!

மாத.—ஆகா! இந்தத் துளை எவ்வளவு அழகாயிருக்கிறது! திருடன் மிகவும் ஸாமர்த்திய சாலியா யிருக்கிறானே!

ஸோமே.—நல்ல இடம் பார்த்துத் திருடவந்தான்! மூட்டாள்!

மாத.—இவன் இந்த ஊர்த்திருடனு யிருக்கமாட்டான். இவன் அந்நிய தேசத்தான். இந்த வீட்டின் வெளித் தோற் றத்தைக் கண்டு ஏமாந்து நுழைந்திருக்கிருன். நான் ஏழ்மை நிலைமையி லிருக்கிறேனென்பது இந்த ஊரில் யாருக்குத் தான் தெரியாது? திருட்டிலும் அதிர்ஷ்டம் வேண்டும். நான் நல்ல ஸ்திதியிலிருந்த பொழுது இவன் திருடவந் திருக்கக்கூடாதா? இவன் சிரமத்திற்கு ஏதாவது பொருள் கிடைத்திருக்குமே! இவன் தன்னுடைய நண்பரிடத்தில் என்னை இகழ்ந்தல்லவோ பேசுவான். "இவ்வளவு இடம்ப மாக வீடு கட்டிக் கொண்டிருக்கிருன். உள்ளே ஓட்டைச் சட்டிக்கும் வழி இல்லை" யென்று சொல்லுவானே!

ஸோமே.—ஐயோ பாவம்! அவன் இவ்வள பாடு பட்டதும் வீணுய்ப்போயிற்றே என்று விஸனப்படுகிறீர் களே! நான் உங்களிடம் கொடுத்த வஸந்த சேனையின் நகை மூட்டையில் தாம்பூலம்வைத்து அவனுக்குத் தத்தம்செய்து விடுகிறது தானே!

மாத.—நகை மூட்டையை என்னிடத்தில் கொடுத் தாயா? என்ன விளையாடுகிருய்?

ஸோமே.—(ஸந்தோஷமாக) நல்லவேளை! நான் அதை உங்களிடம் கொடுக்காமலிருந்தால், அதை அடித்துக் கொண்டுபோயிருப்பான். எருமைக் கடாவைப்போல நான் தூங்கி விட்டேனென்று சொல்லுவீர்கள்; தப்பினேன்.

மாத.—என்ன ஸோமேசா? இன்னம் தூக்கக் கலக்க மா? இதுதான பரிஹாஸம் பண்ணும் ஸமயம்? நகை மூட்டை ஜாக்கிரதையா யிருக்கிறதல்லவா? என் மனதிற் கவலை யுண்டாய்விட்டது. ஹாஸ்யம் செய்யாமல் உண்மை யாய்ப் பேசு.

ஸோமே.—இதென்ன ஆச்சரியம்! நீங்கள் தான் பரிஹாஸம் செய்கிறீர்கள்! வீணில் என்னேடு வாக்குவாதம்

செய்யாமல் நகை மூட்டை இருக்கிறதாவென்று முதலிற் பாருங்கள்.

மாத.—நீ என்னிடத்தில் எப்பொழுது கொடுத்தாய்?

ஸோமே.—உங்கள் கை குளிர்ச்சியா யிருக்கிறதென்று சொல்லிக்கொண்டே சற்று முன்பாகக் கொடுத்தேனே!

மாத.—(தனக்குள்)ஓகோ! அப்படித்தா னிருக்கவேண்டும்! (நான்கு பக்கங்களையும் சுற்றிப்பார்த்து) மித்திரா! உன்னுடைய உபகாரத்தை நான் மறக்கவே மாட்டேன்.

ஸோமே.—ஆபத்து ஸமயமென்பதை யறிந்து மூட்டையை உங்களிடத்தில் கொடுத்தேன். இது ஒரு உபகாரமா?

மாத.—நீ செய்தது அந்த உபகாரமல்ல. "தரித்திரன் வீட்டிற்குள் நுழைந்தேனே. ஒன்றும் அகப்பட வில்லையே" என்று திருடன் என்னைத் தூஷிக்காமலிருக்கச் செய்தாயே! அதுதான் உதவி! [யோசனை செய்கிறார்.]

ஸோமே.—என்ன ஆச்சரியம்! மூட்டை திருட்டா போய்விட்டது? எப்படிப் போயிற்று? நம்மை நம்பி அவள் நம்மிடத்தில் ஒப்புவித்தாளே!

மாத.—(பெரிதும் விசனத்துடன்) ஆகா! நம்பிக்கை மோசம் செய்து விட்டேனே! அவள் வந்து கேட்டால் என்ன சொல்வேன்? ஈசுவரா! (மூர்ச்சிக்கிறார்)

ஸோமே.—ஸ்வாமி! வருத்தப்படவேண்டாம். நகைகளைத் திருடன் கொண்டுபோய்விட்டால் அதற்கு நாமென்ன செய்கிறது? இதைப்பற்றி நீங்கள் இவ்வளவு விஸனப் படுவானேன்?

மாத.—அடே மித்திரா! திருட்டுப்போய் விட்டதென்று சொன்னால் என்னை யார்நம்புவார்கள்? எனக்கு என்னமோ பெருத்த துன்பம் ஸம்பவிக்கப்போகிறது! தரித்திரனிடத்தில் சந்தேகம் உதிப்பதே இந்த உலக வியற்கை. இதுவரையில் நான் ஏழ்மைத் தன்மையினால் வருந்தியிருந்தேன்; இப்பொழுது என்னுடைய பரவிய கீர்த்திக்கும் அழிவுகாலம் வந்து விட்டதே!

விருத்தம் - இராகம் - முகாரி.

போனதோ பெருமை யின்று! புகழெலா மழியக் கால
மானதோ! பொருளி ல்லான்சொல் யாவரே மதிப்பர்? தீமை
யானதோ புரிந்தே னிந்த அலக்கணிற் கருக னாத
லேனிதோ முன்னாட் டீமை? எங்ஙனம் பொறுப்பே னேழை!

ஐயோ! தெய்வமே! என்ன செய்யப்போகிறேன்?

ஸோமே.—இதைப்பற்றி உங்களுக்குக் கொஞ்சமும் கவலை வேண்டுவதில்லை. அவள் நம்மிடத்தில் ஒப்புவித்ததை பார்த்தவர் யார்? அதற்கு ஸாக்ஷியுமில்லை ஒன்றுமில்லை. நம்மிடத்திற் கொடுக்கவில்லை யென்று நான் சொல்லிவிடுகிறேன். நீங்கள் பயப்படவேண்டாம்.

மாத.—(செவிகளை மூடிக்கொண்டு) ஆகா!

விருத்தம்—இராகம் - மோகனம்.

என்னசொன் மொழிந்தாய் நண்பா! என்னுயி ரழிந்திட் டாலும்
இன்னமு மனைத்து நீங்க இழிதக வெய்திட் டாலும்
முன்னுள துறக்க மென்னு முயர்கதி யொழிந்திட் டாலும்
சொன்னசொன் மறுப்ப துண்டோ? உன்னலும் பாவ மன்றோ!

எத்தகைய பாவமொழிகளைச் சொல்லுகிறாய்! இவ்விதம் பொய் சொல்ல நான் ஒரு நாளும் ஸம்மதிக்க மாட்டேன். இதனால் என் உயிர் போனாலும் கவலையில்லை. வீடு வீடாய்ப் பிச்சை யெடுத்தாயினும் இந்தக் கடனைத் தீர்ப்பேனே யொழியப், பிறரை நான் இவ்விதம் ஒரு நாளும் வஞ்சிக்க மாட்டேன்.

(பெருத்த விசனத்துடன் ஒரு புறமாகப் போய்விடுகிறார்.)

ஸோமே.—(ஒருபுறமாக) ஐயோ! என்ன ஆபத்து வந்து விட்டது! "பட்டகாலிலே படும்; கெட்டகுடியே கெடும்" என்பது சரியாய்ப் போய்விட்டதே! அதோ யார் வருகிறார்கள்? ஓகோ! எஜமானியம்மாள் வருகிறார்கள்!

(கோகிலமும் கோமளாவும் வருகிறார்கள்).

கோகி.—அடிகோமளா! என்பிராணபதி எங்கிருக்கிறார்? அவருடைய திருமேனிக்கு யாதொரு துன்பமும் ஸம்பவிக்கவில்லையே? அவர் ஸௌக்கியந்தானே? அவரு

டைய நண்பர் ஸோமேசருக்கு யாதொரு கெடுதலு மில்லையே?

கோமளா.—தாயே! இருவரும் க்ஷேமமே! ஆனால் தாஸியினால் ஒப்புவிக்கப்பட்டிருந்த நகை மூட்டை மாத் திரம் திருட்டுப்போய் விட்டது.

கோகி.—ஆகா! என்ன ஆச்சரியம்! நகை மூட்டை போய்விட்டதா! அவர் தேகத்திற்கு யாதொரு விபத்துமில் லாமல், தப்பித்ததுகூட எனக்கு ஸந்தோஷமாகத் தோன்ற வில்லையே. பிராணனிலும் மானமல்லவோ பெரிது! அவ ருக்கு இதனால் பெருத்த அபவாதம் வந்துவிடுமே! தன் ஏழ்மைத்தனத்தினால், நகைகளை அவரே எடுத்துக்கொண் டதாயல்லவோ ஜனங்கள் நினைப்பார்கள். பொழுது விடிந் ததும் இந்த அபவாத மொழியைக் கேட்பதைவிட இப் பொழுதே நாங்கள் இருவரும் நாவைப் பிடுங்கிக்கொண்டு உயிரை விடுவதே நல்லது! (சிறிது யோசனை செய்கிறாள்). ஓகோ! இதோ என் கழுத்தில் ஒரு வைரஸரம் மிகுதியா யிருக்கிறது. என்னுடைய ஆபரணங்களெல்லாம் போயும், இது விலைமதிப்பற்றதென்று இதைமாத்திரம் விலக்காமல் வைத்திருக்கிறேன். திருட்டுப்போன நகைகளுக்குப் பதி லாக இதைக் கொடுத்து விடுகிறேன். அதோ ஸோமேஸர் நிற்கிறார்! அவர் மூலமாக இதை அனுப்புகிறேன்! ஓய்! ஸோமேஸரே! நம்முடைய எஜமானர் எங்கிருக்கிறார்?

ஸோமே.—அம்மணி! அவர் ஸகிக்கமுடியாத விஸ னத்துடன்! தன் சயன அறைக்குப் போய்விட்டார்.

கோகி.—(தனக்குள்) ஆகா! தன் வாலின் மயிரில் ஒன்று முள்ளில் மாட்டிக்கொண்டாலும், அந்த அவமானத் தைப் பொறுக்கமுடியாமல், அதன்பொருட்டு உயிரை விடும் கவரிமானல்லவோ என் பிராணகாந்தர்! அவர் என்ன செய்துகொள்வாரோ தெரியவில்லை. நான் நேரில் அவரிடம்போய் இந்த வைரஸரத்தைக் கொடுத்தால் அவர் வாங்கிக்கொள்ளமாட்டார். (உரக்க) ஸோமேஸரே! நாம் பேசாமலிருந்தால் நம்முடைய எஜமானர் தன் உயிருக்கு

ஹானி தேடிக்கொள்வார். ஆகையால் உடனே இந்த வைரஸரத்தை அவரிடத்திற் கொண்டுபோய்க் கொடுத்துத் திருட்டுப்போன நகைகளுக்குப் பதிலாக இதை அனுப்பச் சொல்லும். இதை அவர் எப்படியாவது ஏற்றுக்கொள்ளும் படி செய்யும்.

ஸோமே.—(ஸந்தோஷத்தோடு வாங்கிக்கொண்டு) அப்படியே ஆகட்டும்.

(கோகிலமும் கோமளாவும் போய்விடுகிறார்கள்.)

மாத.—(தனக்குள்).

(பாதிமதிநதி போதுமணிசடை - என்ற
திருப்புகழின் மெட்டு.]

1. பூமி நிறைபல தீமைகளில்மிடி போலவதைதுயர் எதுவேறு?
போக செறிபுகழ் யாவரொருமொழி கூறவருபவர் புவிமீது?

2 மானமணியென நாடுமனிதர்கள் வாழ இடமிது சரியாமோ?
தான தவமெனு மோதுபலவகை யான அரியவை உளவாமோ

3. மா தவயிற்று காலமுதலிது வாது தருதுயர் நிலையாகும்!
மாலை தனிலுறு காலன்வரும்வரை யாவரிடரினில் அழிவாரே?

4. பாவியெனையினி யாவதனியொடு பாதமலருற அருளீசா!
பாவவுலகினில் வாழல்பெருமிடர் போதுமடியிணை தருவாயே.

"மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே!" என்று சொன்னவர் அதிமேதாவி யென்பது இப்பொழுதே பரிஷ்காரமாயிற்று. ஸோமேஸன் தன்னுடைய மனோ வேதனையில் ஏதாவது அக்கிரமமான காரியத்தைச் செய்துவிடப் போகிறானே யென்று என் மனம் கவலைப் படுகிறது! ஸோமேசா! ஸோமேசா! அங்கு என்ன செய்கிறாய்?

(ஸோமேசன் வருகிறான்.)

ஸோமே.—ஸ்வாமி! களவுபோன நகைகளுக்குப் பதில் நகை செய்கிறேன்.

மாத.—என்னுடைய மூடத் தனத்திற்காக நகை செய்கிறாயோ? அல்லது என்விதியை நினைத்து நகை செய்கிறாயோ?

ஸோமே.—நம்மை அவமானப்படுத்த எண்ணும் விதியைப் பார்த்து இந்த வைரஸரம் நகை செய்கிறதைப் பாருங்கள்.

மாத.—(திடுக்கிட்டு). ஸோமேசா ! இதென்ன இது ? என்ன காரியம் செய்தாய் ? எங்கிருந்து இந்த நகையை அப கரித்துக் கொண்டு வந்தாய்?

ஸோமே —நான் எங்கிருந்தும் அபகரிக்கவில்லை. புரு ஷருடைய யோக்கியதைக்குத் தகுந்த உத்தமகுண மனைவி யர் செய்யக்கூடிய காரியமே இது ! காணாமற்போன நகை களுக்குப் பதிலாய் இதை அனுப்பும்படி தங்கள் பிராணபத் தினி இதை அனுப்பினார்கள். தயவுசெய்து பெற்றுக்கொள் ளுங்கள்.

மாத.—ஆகா !

விருத்தம்—இராகம் காம்போதி

வறுமையிற் சிறிது மாறா அன்பினை யுடைய பெண்டிர்
உறுகணி லுதவு நேயர் உயரற நெறியிற் சேறல்
பெறுபவ ரெனைய பொல்லாங் கெய்தினும் வறிய ராகார்.
சிறுமையு மலக்கண் யாவு மென்செயு மகன்று போமால்.

நான் ஏழை யென்றல்லவோ என்னை மதித்து வருந்தி னேன். நான் ஒருநாளும் ஏழையாகமாட்டேன். புருஷ னுடைய செல்வமெல்லாம் அழிந்தும்,தன் அன்பைத் துறக் காத மனைவியும், நம்சுகதுக்கங்களைத் தன்னுடையவை யா கப்பாவிக்கும் உண்மை நண்பனும், ஏழ்மைத்தனத்தினால் மழுங்காத நீதி நெறியும் ஆகிய மூன்றும் எனக்கிருக்க, நான் எப்படி ஏழையாவேன்? என்றாலும் நான் இந்த வைர ஸரத்தை வாங்கிக் கொள்ளமாட்டேன். ஆகா! ஒரு ஸ்திரீயி னிடத்தில் பொருளுதவி பெறும்படியாக வந்து விட்டதா என்கதி ? அவளுடைய பொருள் எனக்குவேண்டாம்.

ஸோமே.—ஸ்வாமி ! இந்த ஸமயத்தில் தாங்கள் இப்படிச் சொல்லக்கூடாது. எஜமானி அம்மாளே தங்க ளுடைய பொருளாயிற்றே. அப்படியிருக்க, அவர்களுடைய பொருளெல்லாம் உங்களுடையவைதாமே. தவிர எவ்வள வோ விலைஉயர்ந்த காணாமற்போன நகைகளின் பெறு

மானத்தை நாம் இந்தக் கேவல நிலைமையில் எப்படி ஸம்பாதிக்கமுடியும்? ஆகையால் இதை வாங்கிக் கொள்ளுங்கள்.

மாத.—(சிறிது யோசனை செய்து) ஸரி! நீ சொல்வதும் நியாயந்தான்! சீக்கிரம் நீயே வஸந்தஸேனையிடம் போய், நான் அவளுடைய நகைகளைச் சூதாடித் தோற்றுவிட்டதாகவும், அதற்குப் பதிலாக இந்த ஸரத்தை எடுத்துக் கொள்ளும்படிக்கும் தெரிவித்துக் கொடுத்துவிட்டு வா!

ஸோமே.—முழுஸரத்தையுமா கொடுக்கச் சொல்லுகிறீர்கள்? நன்றாயிருக்கிறதே! அவளுடைய நகைகளை நாம் தின்றுவிட்டோமா? அல்லது நாமே அபகரித்துக் கொண்டோமா? திருடன் கொண்டுபோய்விட்டால் அதற்கு நாமென்ன செய்கிறது? சூதாடி இழந்து விட்டதாகச் சொல்லுவானேன்? திருட்டுப்போய்விட்டதென்றுசொல்லி அதற்குப் பதில் நாலைந்து வைரங்களை அனுப்பினால் போதுமே! ஏழு சமுத்திரத்தையும் கடைந்தெடுத்த ஸாரத்தையொத்த இந்த ஸரம் முழுவதையுமா அவளிடத்திற் கொடுக்கிறது?

மாத.—ஸோமேசா! என்ன நீ உலோபியைப்போலப் பேசுகிறாயே!

ஸோமே.—தரித்திரன் எப்படி உலோபியாவான்? கொடுக்கக்கூடியபொருள் அவனிடத்தில் ஏதாவதிருந்துஅதைக் கொடுக்காம லிருந்தாலல்லவோ அவன் உலோபியாவன்?

மாத.—ஸரி! நேரமாகிறது! நான் சொன்னதைச் செய்! பொழுது விடியும் ஸமையமாய்விட்டது; நான் நித்திய கர்மானுஷ்டானம் செய்யப் போகிறேன். (போகிறார்)

ஸோமே.—(தனக்குள்) "கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே; சங்கு சுட்டாலும் வெண்மைதரு"மென்பது என்றேனும் பொய்க்குமோ? ஒருநாளுமில்லை. (போகிறான்)

# முதல் அங்கம்

---

## நான்காவது காட்சி

இடம்:—வஸந்தஸேனையின் மாளிகை. மேன்மாடியில் வஸந்தஸேனை ஸோபாவிற் சாய்ந்து கொண்டிருக்கிருள். சசிமுகன் வெளியிலிருந்து மாளிகைக்குள் நுழைகிருன்.

காலம்:—மேற்படி தினம் விடியற்காலை

**சசிமுகன்.—**

(நொண்டிச்சிந்து: நந்தன் சரித்திரம் "பழன மருங்கணையும்" என்ற பாட்டின் வர்ண மெட்டு)

எனதே உயர் நிலையாம்—அந்த
இந்திர சந்திரரும் இணையோ!

(2) மனதே நினைப்பதெல்லாம்—இந்த
மாத்திரைக் கோலினுல் யான் பெறுவேன்.

(3) இரவே எனது நகர்—அதில்
நித்திரையே படை யான் அரசன்

(4) குறைவே திருட்டிலில்லை—கலை
கற்றலுங் கண்ணையிழத்தலு மேன்?

(தனக்குள்) என்னுடைய உத்தியோகமும் சந்திரனுடைய உத்தியோகத்தைப் போலவே இரவில் பிரகாசிப்பதும் பகலில் ஒளியை இழந்து ஒடுங்குவதுமா யிருக்கிறது! இதனுலேதான் எனக்குச் சசிமுகன் (சசி=சந்திரன்) என்று பெயர் கொடுத்தார்களோ! நான் இந்த மேன்மையான உத்தியோகத்தைச் செய்வேனென்று நான் பிறந்த பொழுதே எப்படி அறிந்து கொண்டார்களோ தெரியவில்லை. என்னுடைய காரியம் சோம்பலே நிறைந்த இரவை அவமானப்படுத்தி, நித்திரா தேவியைத் தோற்கடித்து, ஏமாந்தகாவலை ஏளனம் செய்கிறதல்லவோ! ஆனுல் நான் ஒருவருக்கும் தெரியாமல் எவ்வளவோ ஸாமர்த்தியமாய் இந்தக் காரியத்தை முடித்த போதிலும், என் செய்கைகளையெல்லாம் பார்த்தவண்ணம், என்னுடன் தொடர்ந்தும் நடந்தும் ஓடியும் வருபவனும், எல்லாத் திருட்டையும் தன்

கண்ணால் காண்பவனும், எவராலும் ஏமாற்ற முடியாத அந்தப்போலீஸ் உத்தியோகஸ்தனை கடவுளேநினைக்க, என் அச்சம் அதிகரிக்கிறது. என்மனதே 'இதுகுற்றம்' 'இது குற்ற'மென்று நீதிபோதனை செய்த வண்ண மிருக்கிறது. என்ன செய்வேன்? என் மனதில் முற்றிலும் குடிகொண்ட அந்த யௌவன மங்கையின் பொருட்டல்லவோ நான் இப்படி இரவைப் பகலாக்கி, எவ்வளவோ தந்திரம் செய்ய வேண்டி யிருக்கிறது. இதுதான் வஸந்த ஸேனையின் மாளிகை. மல்லிகா எங்கிருப்பாளோ தெரியவில்லையே!

இராகம் தன்யாசி—தாளம், ரூபகம்.

பல்லவி.

எவ்விடங் காண்பேனோ? என் ரதியை
எத்தின மடைவேனோ?

சரணம்.

1. செவ்விய மேனியள்; ஜகத்திலிணையே இல்லாள்;
ஒவ்வொரு கொடிவளர் ஸௌந்தரவல்லியை (எவ்.)

2. நொடியுக மானது; நோயெனைத் தீய்த்தது;
வடிவழகியை யடை நற்றினம் வருமோ? (எவ்.)

3. இப்பெரு நிதியினுக் கிந்திர லோகமும்
ஒப்புயர் வாகுமோ? உரைத்திடப் பெறுமோ? (எவ்.)

(கையில் ஒரு விசிறியுடன் மல்லிகா வருகிறாள்)

ஆகா! அதோ வந்துவிட்டாள் என் ஸௌந்தரி! அவளை அரைக்ஷணம் காணவிட்டால் என் மனம் படும் பாட்டை என்னவென்று சொல்வேன்? என் உயிரே துடித்துப் போகிறது. ஜ்வரமடித்த உடம்பில் சந்தனக் குழம்பைப் பூசினால் அது எவ்வளவு இன்பமாயிருக்குமோ, அப்படி யல்லவோ இருக்கிறது! நெருப்பைப்போல எரிந்து தகிக்கும் என் மனதைக் குளிரச் செய்ய அதோ வந்துவிட்டாள் என் இரதி மல்லிகா! ஸரியான பெயர்தான்! மல்லிகைப் புஷ்பம் எப்படித் தன் வாஸனையினால் மனிதரைப் பரவசப் படுத்துகிறதோ அவ்விதவே இவள் என் பஞ்சேந்திரியங்களுக்கும் பிரம்மானந்தம் ஊட்டுகிறாள். (மெதுவாக) அடி மல்லிகா!

மல்லி.—யார் அது? ஓகோ! சசிமுகரா! வாரும் வாரும். இவ்வளவு விடியற்காலத்தில் எங்கிருந்து வருகிறீர்? என்ன விசேஷம்?

சசி. (புன்முறுவலோடு)—கண்ணே! எல்லாவற்றையும் தெரிவிக்கிறேன். ஸமீபத்தில் வா!

மல்லி.—உஸ்! கூச்சலிடாமல் பேசும். என் எஜமானியம்மாள் காதில் விழப்போகிறது.

வஸந்த:—(மேன் மாடியில் தனக்குள்) என்ன! மல்லிகா விசிறி எடுத்துக் கொண்டு வரப்போனுள். இன்னம் வரவில்லையே! எங்கு போயிருப்பாள்? (ஜன்னலின் வழியாகக் கீழே பார்க்கிருள்). என்ன ஆச்சரியம்! யாரோ ஒரு புருஷனோடு பேசிக்கொண்டிருக்கிருளே! ஒருவருக்கொருவர் மிகவும் பிரியமாய்ப் பேசுவதாகத் தெரிகிறது! இதற்கு முன் பழகி யறிந்தவர்களைப்போலக் காணப்படுகிறது. சே! அவளை அவன் முத்தமிடுகிருனே! ஓகோ! காதலர்களோ? மல்லிகாவும் என்னைப்போல யௌவன ஸ்திரீயல்லவா? இருக்காதா! உண்மைக் காதலை நாமேன் கெடுக்கவேண்டும்? அவர்கள் இச்சைப்படி செய்துகொள்ளட்டும். அவள் திரும்பிவரும்போது வரட்டும். கஷ்டப்பட்டவர்களுக்கல்லவா காதலின் துன்பம் தெரியும்.

மல்லி.—ஸரி! நேரமாகிறது. நான் போகவேண்டும். விஷயத்தைச் சொல்லும். (அவன் நான்கு பக்கங்களையும் கவனமாகப் பார்க்கின்றுன்). ஏன் இவ்வளவு ஜாக்கிரதையாகப் பார்க்கிறீர்? என்ன பயம்? எஜமானியம்மாள் மெத்தையின்பேரி லிருக்கிருர்கள்.

சசி.—நான் உன்னிடத்தில் ஒரு இரகஸியம் தெரிவிக்கவேண்டும். இங்கே ஸமீபத்தில் வேறு யாருமில்லையே?

மல்லி.—ஒருவருமில்லை. சொல்லலாம்.

வஸந்த.—(தனக்குள்) இரகஸியமா! அப்படியானுல் நான் இனிமேல் இவர்கள் பேசுவதைக் கவனித்தல்கூடாது

சசி.—வஸந்தஸேனை உன்னை அடிமைத் தன்மையிலிருந்து நீக்குவதற்கு எவ்வளவு பொருள் கேட்பாள்?

வஸந்த.—(தனக்குள்)அவன் என்பெயரைச் சொல்லு கிருனே!இந்த இரகஸியத்தில் நானும் ஸம்பந்தப்படுவதாய்த் தோன்றுகிறது. ஆகையால் இந்த ஜன்னலுக்கு ஸமீபத்தில் மறைந்திருந்த வண்ணம் கேட்கிறேன்.

மல்லி.—தான் இந்த மாளிகைக்கு அதிகாரி யாகும் பொழுது யாதொரு பணமும்பெருமல் என்னை விடுவிப்ப தாக என் எஜமானியம்மாள் பல தடவைகளில் தெரிவித் திருக்கிருர்கள். அதிருக்கட்டும் என்னை மீட்கத் தேவை யான அவ்வளவு பொருள் உம்மிடத்தில் ஏது?

சசி.—

விருத்தம்—இராகம் - எதுகுல காம்போதி.

என்னரு மணியே! யுன்னை யெத்தின மடைவே னென்று
பன்னரு துயரி லாழ்ந்து பரிபவ மடைந்தேன். வேண டிற்
பொன்னெரு பொருட்டோ? தீமை புரியினும் டெரிய தாமோ?
நின்னரு வேட்கை நாடி லெவ்வினை முடிக்க கிலலேன்.

பொருள் இல்லாமலா கேட்பேன்? அருமையான ஒரு வஸ்துவைப் பெற விரும்பினுல் எவ்விதமான ஹீனத்தொ ழில் செய்தாயினும்அதற்குத்தேவையான திரவியத்தை ஸம் பாதித்தல் வேண்டாமா? உன்பேரில் நான் கொண்டிருக்கும் மோகம் இலேசானதா? அதன் பொருட்டு எதைத்தான் செய்யமாட்டேன்? ஒரு அக்கிரமக் காரியம் செய்து பணம் ஸம்பாதித்தேன். அதைப்பற்றி உனக்கென்ன கவலை?

வஸ.—இவன் பார்வைக்கு நல்ல மனிதனு யிருக்கி ருனே! என்ன அக்கிரமக்காரியம் செய்திருப்பான்?

மல்லி.—

விருத்தம் - இராகம் - சஹானு.

ஐயனே! நன்றே சொன்னீ ரறிவினர்க் குரிய தாமோ?
மெய்யென நாடி யற்ப வின்பநீர் விரும்பி முற்றும்
பொய்யனுய்க் குலத்தின் மேன்மை புகலருங் கலையின் ஞானம்
வெய்யனுய் விலக்கித் தீய வியற்றிடல் தகுதி யாமோ?

ஒரு க்ஷணத்தில் ஒழியும் அற்ப ஸுகத்தை உத்தே சித்து நீர் அருமையான இரண்டு பொருட்களுக்கு ஆபத் தைத் தேடிக்கொண்டீரே!

சசி.—இரண்டு பொருள்கள் எவை?

மல்லி.—உம்முடைய தேகம் ஒன்று; பெயர் ஒன்று.

சசி.—நீ பெரிய முட்டாள். இந்தக் காலத்தில் துணிந்து செய்பவருக்குத்தான் அதிர்ஷ்ட முண்டாகிறது! அது உனக்கென்ன தெரியும்?

மல்லி.—(ஏளனமாய்) நீர் செய்தது கொஞ்சமும் குற்றமில்லாத காரியம்! என்பேரில் உமக்கிருக்கும் காதலினால் நீர் இந்த அக்கிரமம் செய்தீர். ஆகையால் இது அக்கிரமமாகாது; மிகவும் நீதியான விஷயம்!

சசி.—அடி தங்கமே! கோபித்துக் கொள்ளாதே! இந்த நகைகளை நான் ஒரு வீட்டிலிருந்து அபகரித்துக்கொண்டு வந்தேன்.

(வள்ளி சரித்திரம்: 'நெஞ்சை யடைக்குதே நானென்ன செய்குவேன் - நஞ்சைக் கொடுத்தாயோடி'' என்ற பாட்டின் மெட்டு)

இராகம்-அடாணா-தாளம், சாப்பு.

மல்லி.—

நல்ல வினைசெய்தீர்! ஐயா! இனி இங்கு நில்லாமல் ஏடுவீர்.
புல்லிய தீயவர் செய்திடுங் காரிய மல்லவோ போம்போம் நீர்.

சசி.—என்ன மொழி சொன்னாய்? எங்ஙனஞ் செல்குவேன்?
கன்னியர் மாமணியே!
நின்னை யடைந்திட இவ்வினை செய்தனேன்.
சொன்ன துநீதியன்றே?

மல்லி.—எந்தப் பிறப்பினு மேலெனவோதிடும்
அந்தணர்செய் வினையோ?
இந்தக் குணமுடையாரை விரும்பிடேன்—
-வந்தவழ் இதுவே.

சசி.—சுந்தரியே என தாருயிர் நீ யெனை
நிந்தித்தலோ முறையே?
சொந்த மனைவி யென நின்னை நாடினேன்
கோபம் விடுப்பாயே.

அக்கிரமம் செய்தாலும் நான் நன்றாய் யோசித்துத்தான் செய்வேன். நான் ஸ்திரீகள் குழந்தைகள் முதலியோரிடத்திலிருந்து திருடவில்லை. தான தருமங்களுக்காகச் சேகரம்

செய்து வைக்கப்பட்டிருந்த பொருளைக் களவாடவில்லை. விலைக்கு விற்று விடும்பொருட்டுக் குழந்தைகளைத் திருடிக் கொண்டு வந்து விடவில்லை. இதோ நான் கொணர்ந்திருக்கும் ஆபரணங்களை உன் எஜமானியிடம் கொடுத்து உன்னை விடுவித்துக்கொண்டு வந்துவிடு. ஆனால் இவற்றை எப்பொழுதும் பெட்டிக்குள் ஜாக்கிரதையாக மறைத்து வைத்துக் கொள்ளும்படி சொல்லவேண்டும்.

மல்லி.—அணிந்து கொள்ளத் தகாத ஆபரணங்களால் என் எஜமானியம்மாளுக்கு என்ன பிரயோசனம்? எங்கே? நகைகளைக் காட்டும்; பார்க்கலாம்.

சசி.—இதோபார் (காட்டுகிறான்)

மல்லி.—ஹா!இதென்ன ஆச்சரியம்! இவைகளை நான் எங்கேயோ பார்த்திருக்கிறேனே ! (யோசனை செய்கிறாள்) நீர் எங்கிருந்து இவற்றை எடுத்துவந்தீர் ?

சசி.—அதைப்பற்றி உனக்கென்ன கவலை? உன்னை வடை தின்னச் சொன்னார்களா ? அல்லது அதிலிருக்கும் துளைகளை எண்ணச் சொன்னார்களா ? கேள்வி யொன்றும் கேட்காமல் எடுத்துக்கொண்டு போ !

மல்லி.—(கோபமாக) என்னிடத்தில் உமக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை. நான் மாத்திரம் உமக்குத் தேவையோ? அப்படியானல் என்னை ஏன் விரும்புகிறீர்?

சசி.—மாதவராயரென்று ஒரு பிரபு விருக்கிறார். அவரை உனக்குத் தெரியுமா?

மல்.
வஸ. } —ஹா ! என்ன ஆச்சரியம் !

(வஸந்தஸேனையும் மல்லிகாவும் ஒரே ஸமயத்தில் மூர்ச்சிக்கிறார்கள்).

சசி.—(மல்லிகாவைத் தாங்கி) மல்லிகா ! ஏன் மயங்குகிறாய் ? விழித்துக்கொள்.—(தனக்குள்) இவளுக்கென்ன துன்பம் ஸம்பவித்ததோ தெரியவில்லையே ! கை கால்களெல்லாம் துவண்டு போயின. கண்கள் பயங்கரமாய்க் காணப்படுகின்றன. அடி மல்லிகா! இதுதான் உன் பிரிய

மோ? என்னுடன் வந்துவிட நினைப்பதே இவ்வளவு பயமாய் முடிந்ததோ?

மல்லி —(கோபமாக) என்முன்னிற்காதே; துன்மார்க்கா! போய்விடு; இதை அபகரிக்குமுன், அந்த வீட்டிலிருந்த மனிதர்களில் எத்தனைபேரைக் கொன்ருய்? உண்மையைச் சொல்.

சசி.—நான் ஒருவரையும் தொடக்கூடவில்லை.

மல்லி.—உண்மைதானு?

சசி.—நிச்சயம்! ஸத்தியம்! உன் தலையில் அடிக்கிறேன்.

வஸ.—ஆகா! உயிர் வந்தது!

சசி.—அடிமல்லிகா! நீ என்ன இந்த விஷயத்தில் இவ்வளவு கவலையைக் காட்டுகிருய்! உன்பேரில் வைத்த ஆசையினுலல்லவோ, எவ்வளவோ உயர்ந்த பரிசுத்தமான குலத்திலுதித்த நான் இதைச் செய்தேன். அடிமை நிலைமையிலிருந்து உன்னை விலக்கி, ஆயுட்கால மெல்லாம் ஸ்வதந்திரத்தையும், என் மனப்பூர்வமான பிரியத்தையும் உனக்குக் கொடுத்ததற்கு, என்னை நீ ஏளனம் செய்வதும், வேருெருவனைப்பற்றி நீ கவலைப்படுவதும் பதில் உபகாரமோ? புஷ்பிக்கும் பாலிய காலமாகிய உன்னத மரமானது வீணிற் பழங்களைச் சுமந்து, வேசைகளாகிய பறவைகளுக்கல்லவோ அவற்றை இரையாக்குகின்றது! செல்வமும், புருஷத்வமும் இன்னம் நாம் விசேஷமாய் மதிப்பனயாவும், அடிக்கமுடியாத காமாக்கினியினுல் நாசமடைகின்றன. ஆகா! எப்பொழுதும் சலனப்படும் குணமுடைய ஸ்திரீகளிடத்திலும், எப்பொழுதும் மாறும் நமது அதிர்ஷ்டத்திலும் நம்பிக்கை வைக்கும் மனிதர்கள் எவ்வளவு மடையர்கள்! ஏழைகளை ஸ்திரீகளும் அலட்சியம் செய்வதாயிருந்தால், அவர்கள்பேரில் பிரியம் வைப்பதைவிட நம்முடைய வீட்டு வாசலில் காத்திருக்கும் நாயின்பேரில் அந்த அன்பைவைத்தால், அது எவ்வளவோ நன்றியுடையதாயிருக்கும்! முதலில் அவர்களை நம்மீதில் ஆசையைக்காட்டினுல், அவர்கள் அவ்விதமிருக்கும் வரையில நாமும் பிரியத்தைக்காட்டிப் பிறகு பேசாமல் விட்டுவிடுவது நல்ல காரியம்! ஸ்திரீகள் பணத்தின்

பொருட்டு, நினைத்தால் அழுவார்கள்; நினைத்தால் சிரிப்பார்கள்; தம்மால் விரும்பப்படாதவனாயிருந்தாலும், இவர்கள் தமது பாசாங்கினால், அவனுடைய நம்பிக்கையை உண்டாக்கிக் கொள்வார்கள். ஆகையால், நற்குலத்திலுத்த யோக்கியதையுடைய யௌவன புருஷர், ஸ்மசானத்திலுண்டாகும் புஷ்பங்களைப்போல ஏராளமாகக் காணப்படும் பரத்தையரின் வலையிற்படாமல் எச்சரிக்கையாக இருத்தல்வேண்டும். ஸமுத்திரத்தின் அலைகள்கூட ஸ்திரீகளின் பிரியத்தைக் காட்டிலும் சிறிது நேரம் நிலைத்தவையாயிருக்கும். மாலைநேரத்தில் வானத்தில் உண்டாகி மாறும் நிறங்கள்கூடச் சற்று உறுதியானவையென்று நினைக்கலாம். பணமே அவர்களுடைய நோக்கம். பணமே அவர்களுடைய ஆகாரம், பானம், இன்பம் முதலியன. ஆனால் ஒருவனுடைய செல்வம் ஒழிந்து போய்விட்டால், அவனை உடனே ஓட்டிவிடவேண்டியதே காரியம்! அதுவே அவர்களுடைய குலதருமம். மின்னலின் ஒளிதோன்றிமறை தலைப்போன்றது அவர்களுடையமோகம். மனதில் ஒருவன் மீது ஆசையை வைத்துக்கொண்டு, வேறொருவனிடத்தில், தான் அவனுக்கே தன்னை அர்ப்பணம் செய்துவிட்டதாய்ப் பாசாங்குசெய்வார்கள். ஒருவனை ஆசையுடன் ஆலிங்கனம்செய்து கொண்டிருக்கையில் வேறொருவனை நினைத்துப் பெருமூச்சுவிடுவார்கள். தானாகக்கனியாததைத்தடியாலடித்தால கனியப்போகிறதா? இயற்கையிலேயே இல்லாததைவிரும்பினால் அது எப்படிக்கிடைக்கும்? கற்பாறையின்மீது தாமரைப் புஷ்பம் எப்படி உண்டாகும்? அல்லது குதிரையின் பாரத்தைக் கழுதை சுமக்குமோ? வரகு தானியத்திற்குள் அரிசி எப்படி உண்டாகும்? ஸ்திரீகளின் மனதில் ஏதாவது ஒரு நற்குண மிருக்குமோ வென்று எவ்வளவு சோதனை செய்தாலும் உள்ளேயிருப்பது குதிரைக் கொம்புதான். அந்தத்துஷ்டன் மாதவராயனையா நீ விரும்புகிறாய்! இந்த ஸங்கதி முன்னால் தெரிந்திருந்தால், அவனை ஒரே குத்தில் கொன்றுவிட்டு வந்திருப்பேனே! இப்பொழுதேபோய் அவன் உயிரை வாங்கிவிட்டு வருகிறேன்.

(புறப்படுகிறான்)

மல்லி.—(அவனைப் பிடித்துக்கொண்டு) என்ன பிரமாதமாக உளறுகிறீரே! தலை கால் தெரியாமல் ஏன் இப்படிக் கோபித்துக்கொள்ளுகிறீர்? உயர் குலத்திற் பிறந்த பிராமணராயிருந்தும், திருடினேனென்றும் குத்துகிறேனென்றும் சொல்லுகிறதற்கு வெட்கமில்லையா?

(முகத்தில் இடிக்கிருள்).

சசி.—எல்லாம் யார்பொருட்டு? உனக்காகத் தானே! நான் உனக்காக இவ்வளவு தாழ்வடைவதையும் நீ நினைக்காமல் மாதவராயனுக்குப் பரிந்து பேசுகிருயே!

மல்லி.—உண்மை அதுவல்ல. இந்த ஆபரணங்கள் என்னுடைய எஜமானியம்மாளுக்கு ஸொந்தமானவை.

சசி.—என்ன ஆச்சரியம்! உன் எஜமானியின் நகைகள் அங்கு போனதின் காரணமென்ன?

மல்லி.—ஒரு நாளிரவு திருட்டுக்குப் பயந்து, மாதவராயரிடத்தில் வைத்துவிட்டு வந்தார்கள்.

சசி.—அப்படியா! உன்னுடைய எஜமானியின் நகைகளா இவைகள்! ஆகா! தெரியாமலல்லவோ திருடிவிட்டேன்! என்ன செய்வேன்?

வஸ.—(தனக்குள்). எவ்வளவோ கெட்டவனுயிருந்தாலும் இவனிடத்திற் கழிவிரக்கங்கூட இருக்கிறதே! சே! மோகம் பொல்லாது! அதனுல் எவ்வளவு நற்குணமுடையவன்கூட, என்னென்ன தீயகாரியங்களைச் செய்ய நேருகிறது! மோகத்தினுல் நான் படும்பாட்டிலிருந்தே இவனுடைய நிலைமை எப்படி இருக்குமென்பது நன்ருய்த தெரிகிறது! ஐயோ பாவம்! என்ன செய்வான்!

சசி.—அடி! என் பிரிய மல்லிகா! இப்பொழுது நான் என்ன செய்கிறது?

மல்லி.—அது உமக்குத்தான் தெரியவேண்டும்.

சசி.—அப்படியல்ல! ஸ்திரீகளுக்கு இயற்கை ஸ்வபாவமே குரு. கல்விமதங்கொண்ட புருஷர் புஸ்தகங்களிலிருந்து விஷயங்களைத் தெரிந்து கொள்ளுகிருர்கள். அப்படித் தெரிந்து கொள்ளப்படுபவைகளை அனுபவத்திற்குக் கொண்டுவரக்

கூடாமல் தீயகாரியங்களைச் செய்கிறார்கள். ஸ்திரீகள் எல்லாவற்றையும் தாமாக அறிந்துகொள்வதோடு, அவற்றை அனுபவத்திற்குக் கொண்டுவருபவர்களாயும், அதிகப் புத்தி கூர்மையுடையவர்களாகவும் ஆகின்றனர். தானாய்க்கனியும் வாழைப்பழத்திற்கும், புகைபோட்டுப் பழுக்கவைக்கும் வாழைப்பழத்திற்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது! நீ தான் இப்பொழுது ஒரு யோசனை சொல்லவேண்டும்!

மல்லி.—அப்படியானால் நீர் உடனே திரும்பிப்போய் நகைகளை மாதவராயரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு வருவதே உத்தமமான காரியம்!

வஸ.—(தனக்குள்) பலே! மல்லிகா! கேவலம் அடிமையாயிருந்தாலும் உனக்கு எவ்வளவு கண்ணியமான புத்தி! ஆகா! அதிர்ஷ்டம் ஒன்றுதான் பட்சபாதமுடையது. அது தனவந்தர்களிடத்திலேயே விருப்போடு செல்கிறது! நற்குணம் அப்படி ஒருதலைச் சார்பானதல்ல. அது ஏழைகளிடத்திலுமிருக்கிறது. தனவான்களிடத்திலுமிருக்கிறது! நன்றாய் ஆழ்ந்துபார்த்தால் ஏழைகளிடத்திலேயே நற்குணம் அதிகமாயிருக்கிறது!

சசி.—மல்லிகா! நல்ல யோசனை சொன்னாய்! நான் திருடனென்று நேரில் அங்கு போனால் என்னை உடனே அதிகாரிகளிடம் ஒப்புவித்து விடமாட்டாரா?

மல்லி.—ஆகா! நல்ல பைத்தியம்! சந்திரன் எப்பொழுதாகிலும் சுடுதலுண்டோ? ஒருநாளுமில்லை.

சசி.—அவருடைய சாந்தகுணத்தைப்பற்றி நான் ஸந்தேகப்படவில்லை. தவிர, நான் எந்தக் காரியத்தைத் துணிந்து செய்கிறேனோ அதனாலுண்டாகும் பலன் எதுவாயிருந்தாலும் அதை அனுபவிக்க நான் கடமைப்பட்டவனே! ஆனால் இப்படிச் செய்ய வெட்கமாயிருக்கிறது! வேறு ஏதாவது யோசனை சொல்.

மல்லி.—நீர் ஒன்று செய்யும். இவைகளை எஜமானி அம்மாளிடம் திருப்பிக் கொடுக்கும்படி மாதவராயரால்

அனுப்பப்பட்ட தூதனைப்போல நீர் பாசாங்கு செய்து இவைகளை என் எஜமானி அம்மாளிடம் சேர்த்துவிடும்.

சசி.—அப்படிச் செய்தால் ?

மல்லி.—நீர் திருடனாகமாட்டீர். நகைகள் ஸொந்தக்காரரைச் சேர்ந்துவிடும். மாதவராயருக்கும் நஷ்டமில்லாமற் போய்விடும். மூன்றுபேருக்கும் இதனால் அனுகூலம்.!

சசி.—என் ஸம்பாத்தியத்தை இப்படி அபகரிப்பது திருட்டல்லவா ?

மல்லி.—ஒரு பொருள் அதன் ஸொந்தக்காரரைச் சேர்வது எப்படித் திருட்டாகும்? நீர் ஸொந்தக்காரருக்குத் தெரியாமல் இவற்றை எடுத்துக்கொண்டு வந்துவிட்டதினாலேயே, இவை உம்முடையவையாய் விட்டனவோ? வேண்டாம். வீண்வாதம் செய்யாமல் நான் சொல்வதைக் கேளும். இப்பொழுதும் மிஞ்சிப்போகவில்லை. நாம் செய்தது தவறென்று தெரிந்தால் அதை எப்பொழுது வேண்டுமானாலும் நிவர்த்திக்கலாம். மானத்தையும், கீர்த்தியையும், யாவற்றையுமிழந்து பாவ மூட்டையை ஏன் ஸம்பாதித்துக்கொள்ளுகிறீர் ? நான் சொல்வதைச் செய்யும். இது உமக்கு நன்மைதரும்! இதன் பொருட்டு நானும் உம்மிடம் முன்னினும் பதின்மடங்கு அதிகம் ஆசைவைப்பேன்.

வஸ.—(தனக்குள்) பலே ! மல்லிகா ! உண்மை நண்பனைப்போல நன்றாய் இடித்துப் புத்தி சொல்லுகிறாய் ! இவ்வளவு மேன்மைக் குணம் உன்னிடத்திலிருக்குமென்று நான் இதுவரையில் நினைக்கவே யில்லை.

சசி.—கண்ணே ! மல்லிகா ! நீ சொல்வதெல்லாம் உண்மையே ! நான் ஏழ்மைத்தனத்தினால் இவ்விதம் செய்துவிட்டேன்? செய்ததற்கு மிகவும் விஸனப்படுகிறேன் ! இனி நீ எப்படி நடக்கச் சொன்னபோதிலும் அப்படியே நான் செய்கிறேன்; தடையில்லை.

மல்லி.—ஸரி ! நீர் இவ்விடத்திலேயே இரும்.நீர் வந்திருப்பதாக எஜமானியம்மாளுக்குத் தெரிவித்துவருகிறேன்.

(வஸந்த சேனையிடம் போய்) அம்மணி! மாதவராய ரிடமிருந்து ஒரு பிராம்மணர் வந்திருக்கிறார்.

வஸ.—(புன்சிரிப்புடன்) அப்படியா! சீக்கிரம் மேலே அழைத்துவா.

(மல்லிகா திரும்பிப்போய் பிராம்மணனை அழைத்து வருகிறாள்.)

வஸ்.—ஸ்வாமி! நமஸ்காரம்! வரவேண்டும்.

சசி.—ஸுகீபவா! மங்களானி பவந்து!

வஸ.—ஸ்வாமி! இப்படித் தயவு செய்யுங்கள். இந்த ஆஸனத்தில் உட்காரவேண்டும்.

சசி.—இல்லை யில்லை. நான் அவஸரமாய்ப் போக வேண்டும். மாதவராயர் இந்த ஆபரண மூட்டையைத்தன் மாளிகையில் வைத்திருப்பதுஜாக்கிரதைக்குறைவென்றும், இதனால் தான் பெரிதும் கவலைப்படுவதாயும் தெரிவித்து இதை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்.

(மல்லிகாவினிடம் கொடுத்துவிட்டுப் போகிறான்).

வஸ.—ஸ்வாமி! தயவு செய்து கொஞ்சம் இருக்க வேண்டும். ஒரு வேண்டுகோள். இவற்றை அனுப்பிய பிரபுவுக்கு நான் ஒருவஸ்துவைக் கொடுக்கிறேன். சிரமத்தை மன்னித்து அதை ஏற்றுக்கொண்டு போகவேண்டும்.

சசி.—(தனக்குள்) நானாவது இனி அவரிடம் போகிறதாவது! நான் எங்கே கொண்டுபோகப் போகிறேன்! (வெளிப்படையாக) என்ன வஸ்து அது?

வஸ.—மல்லிகா.

மல்லி.—ஏன் அம்மணி!

வஸ.—உன்னைக் கூப்பிடவில்லை. இவர் கேட்டதற்குப் பதிற் சொன்னேன்.

சசி.—சொன்ன பதில் இன்னதென்று விளங்கவில்லையே!

வஸ.—ஏன் விளங்கவில்லை? விவரமாய்ச் சொல்லுகிறேன் கேளும். நானும் மாதவராயரும் எங்களுக்குள்

ஒரு ஏற்பாடு செய்துகொண்டோம். இவ்வாபரணங்களை அவர் யார்மூலமாய் எனக்கு அனுப்புகிருரோ அவருக்கு மல்லிகாவை நான் சன்மானமாகக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறேன். ஆகையால் தயவுசெய்து இந்த மடந்தையை ஏற்றுக்கொண்டு, இந்தப் பாக்கியம் பெற்ற தற்காக மாதவராயரை மனதாற துதியும். இப்பொழுது நன்ருய் விளங்குகிறதா ?

சசி.---(திடுக்கிட்டுத் தனக்குள்) ஓகோ! இரகஸியம் தெரிந்துபோய் விட்டாற்போலிருக்கிறதே! இதுவும் பாக்கியந்தான் [வெளிப்படையாக] மாதவராயருக்கு ஸர்வமங்களமும் உண்டாகட்டும். உண்மை யோக்கியதை இல்லாத அரசனைக் காட்டிலும் அதைப்பெற்ற தரித்திரனே பெருத்த தனவந்தனுகையால், நற்குண நல்லொழுக்கத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியது மனிதருடைய முதற்காரியம். அதையுடையவனுக்குக் கிடைக்காத பொருளில்லை. பிரகாசம் பொருந்திய சந்திரன் தன்னுடைய யோக்கியதையினுலல்லவோ, பரமசிவனுடைய சிரசில் இருக்க இடந்தேடிக்கொண்டான். ஆகா! கடைத்தேறினேன். சற்குருவாகிய உன்னுல் நான் இப்பொழுது நல்லொழுக்கத்தின் மகிமையை உணர்ந்தேன். இனி நான் நீதி நெறி வழாமல் ஒழுகுவேன். இது சத்தியம்.

வஸ.—பிரிய ஸகி மல்லிகா! இவருடன் புறப்படு; நான் உன்னை இவருக்குச் சன்மானம் செய்துவிட்டேன். எங்கே நிமிர்ந்துபார். என்னை மறந்து விடாதே.

[கண்ணீர் ததும்புகிறது.]

மல்லி.—[அழுதவண்ணம்.] ஐயோ! அம்மணி! என்பேரில் தங்களுக்கு என்னகோபமோ தெரியவில்லையே! என்னருமைத்தாயே! என்னை இப்படி விலக்கவேண்டாம். நான் ஏதாவது பிழை செய்திருந்தாலும் மன்னிக்கவேண்டும். [காலில் விழுந்து வணங்குகிருள்.]

மல்லி.—

(நந்தன் சரித்திரம். "வருகலாமோ" என்ற பாட்டின் வர்ணமெட்டு)

இராகம் மாஞ்சை - தாளம். ரூபகம்.

பல்லவி.

தருமமாமோ? அம்மா—இந்தச்
சிறுமியின் மீதுமக் கேனிந்தக் கோபமோ? (தரு)

அநுபல்லவி.

இருவருமோருயி ரென்னவே—என்று
மிருந்ததையாயினு மெண்ணவே—உந்த
மிருடா தங்கள்யான் பணிந்தேத்தினேன் தேவியே! (தரு)

சரணம்

தாயென உம்மையான்—அடைந்தேனே—நொடி
தப்பாம லருகினில்—இருந்தேனே.
நாயென நன்றியைச்—சுரந்தேனே—என்றன்
ஆவியே யுமதென—மதித்தேனே—என்மேல்
விதியோ? யென்றன்தீ மையிதாகுமோ? ஞாயமோ? (தரு.)

வஸ.—அப்படி ஒன்றுமில்லை. எழுந்திரு மல்லிகா! மனப்பூர்வமாக உன்னை இவருக்குக் கொடுக்கவேண்டுமென் னும் ஆசையினலேயே இப்படிச்சொல்கிறேனே யொழிய வேறு வித்தியாஸமில்லை. (அன்பொழுக) எழுந்திரம்மா! இவருடன்போய் ஸௌக்கியமாக வாழ்ந்து கொண்டிரு. என்னை மாத்திரம் உன் ஞாபகத்தில் வைத்துக்கொள்.

சசி.—(வஸந்தஸேனைக்கு) ஸ்திரீ ரத்னமே! உனக்கு ஈசுவரன் ஸகல மங்களமு மளிக்கட்டும். அடிமல்லிகா! உனக்கு ஸுதந்திரமும், மனைவியென்னும் மேன்மை நிலைமையுமளித்த பேருபகாரியாகிய உன் எஜமானியை நன்றி பெருக வணங்கி விடைபெற்றுக்கொள்.

வஸ.—பிரிய. மல்லிகா! ஸுகமாய்ப்போ!

("ஷாஜமான்" என்ற இந்துஸ்தானியின் மெட்டு.

மல்லி.—பெண்மணி! சென்றுவருவேன் தல்லியே!

வஸ.—கண்மணி! சென்று-வருவாய் மல்லிகா!

மல்லி.—காணக்கிடைக்காத வென்றன்—மானே! நற்றேனே! —என்னன்பே!—என்னுவியே!

வஸ,—ஆசைக்குகந்த வென்றன்மாதே! நற்கோதே! கவலாதே மறவாதே!

மல்லி.—சுந்தராங்கி! நின்னையினி—மறவேன்.

வஸ.—சொன்னமே! நின் கன்மையினி—மறவேன்.

(மல்லிகா விஸனத்துடன் வணங்கச் சசிமுகன் அவளை அழைத்துக்கொண்டு மாளிகையைவிட்டு வெளியில் வருகிறான் அந்த ஸமயத்தில் இராஜபாட்டையில் ஒருவன் அடியில் வருமாறு பறைசாற்றுகிறான்).

"துடும், துடும், துடும், துடும். இதனால் ஸகலமான ஜனங்களுக்கும் அறிவிப்பது யாதெனில்:—பிரதாபனென்னும் இடையன் அரசனாகப்போகிறானென்று ஜோசியர்கள் மூலமாய்த் தெரிகிறபடியால், அவனைப் பிடித்துச் சிறையிலடைக்கும்படி நமது மகாராஜன் உத்தரவளித்திருக்கிறார். அவனைக் காண்போர் உடனே பிடித்து ஆஜர் செய்விக்க வேண்டும். ஜனங்கள் இந்த விஷயத்தில் எவ்வித அச்சமுங்கொள்ளாமல் தம்தம் வீட்டிலிருக்க வேண்டும். துடும், துடும், துடும், துடும்."

சசி.—(மல்லிகாவிடத்தில்) என்ன ஆச்சரியம்! என்னுடைய பிரிய நண்பனாகிய பிரதாபனை அரசன் சிறைப்படுத்த முயலும் ஸமயத்தில் நான் இப்படி ஸ்திரீ விஷயத்தில் என் மனதைச் செலுத்திக் கொண்டிருக்கிறேனே! இந்த உலகத்தில் மனிதருக்கு மிகவும் அருமையானவர்கள் மனைவியும், நண்பனுமே யென்ற போதிலும் நூற்றுக்கணக்கான பெண்மணிகளினும் ஸ்நேகிதனே மேலானவன். ஆகையால் நான் முதலில் அவனிடம் போய் எங்கேயாவது மறைந்து கொள்ளும்படி சொல்லிவிட்டு வரவேண்டியது என்னுடைய கடமை. போகிறேன்.

மல்லி.—நில்லும் நில்லும்! நீர் போகவேண்டுமானால், முன்னால் என்னை யோக்கியமான ஸ்நேகிதர் யார் வீட்டிலாயினும் வைத்துவிட்டுப் போம். இப்படி என்னை விடுத்துப்போனால் நான் என்ன செய்கிறது?

சசி.—பிரிய ஸுந்தரி! கோபித்துக் கொள்ளாதே! உன்னை அந்தரத்தில் விடுத்துப்போவேனா? சீக்கிரமாக நடந்

துவா! உன்னை ஒரு இடத்தில் ஸுகமாக வைத்துவிட்டு நான் போகிறேன். (போய்விடுகின்றனர்).

(வேறொரு வேலைக்காரி வஸந்தஸேனை யிடம் வருகின்றாள்).

வேலை.—அம்மணி! மாதவராயரிடமிருந்து ஒரு பிராம்மணர் வந்திருக்கிறார்.

வஸ.—(குதூலமாக) இது உண்மையில் ஸுதினமே! அவரை உபசரித்து மரியாதையோடு உள்ளே அழைத்துவா!

வேலை.—ஆக்ஞை! (போய் ஸோமேஸனுடன் வருகிறாள்).

ஸோமே.—(தனக்குள்) ஆகா! என்ன உன்னதமான மாளிகை! என்ன செல்வம்! அரண்மனையும் இதற்கு ஈடாமோ! எத்தனை தாதிமார்! எத்தனை வேலைக்காரர்! இந்த இடத்தின் ஸுகம் ஸ்வர்க்கத்திலும் கிடைக்குமோ வென்பது ஸந்தேகம்.

வஸ.—ஸ்வாமி! ஸோமேஸரே! நமஸ்காரம்; வரவேண்டும்.

ஸோமே.—மங்களானி பவந்து! ஸுகீபவா!

வஸ.—தயவு செய்து இந்த ஆஸனத்தில் உட்காரும்.

ஸோமே.—நீயும் உட்கார்.

வஸ.—எஜமானர் க்ஷேமந்தானே?

ஸோமே.—க்ஷேமந்தான்! இவ்விடத்தில் எல்லாரும் ஸௌக்கியந் தானே?

வஸ.—தங்கள் ஆசீர்வாதத்தால்க்ஷேமமே. கௌரவமென்னும் விதை, முளைத்து, நாணமென்னும் அடிமரமாய் வளர்ந்து, நற்குணங்களென்னும் கிளைகளாய்ப் படர்ந்து, நல்லொழுக்கமென்னும் இலைகளாய் விடுத்து, தயாளகுணத்தை மலர்களாய்ப் புஷ்பித்து, நன்மை யென்னும் பழங்களைச் சொரியும் மரமாகிய இந்த மாளிகையில், பிரியமாகிய பறவைகள் ஆனந்தமாய்த் தங்கி வஸிக்கின்றன.

ஸோமே.—(தனக்குள்) ஆகா! எவ்வளவு இலக்ஷண

மாகவும் புத்திநுட்பமாகவும் பேசுகிருள். (வெளிப்படையாக) அப்படியா! மிகவும் ஸந்தோஷம்! மாதவராயர் தன்னுடைய ஆசீர்வாதத்தையும் பிரியத்தையும் உனக்குத் தெரிவிக்கச் சொன்னர்.

வஸ.—(வணங்கி) அவருடைய ஆக்ஞையை வணங்கிச் சிரசினல் ஏற்றுக் கொண்டேன். (வணங்குகின்ருள்).

ஸோமே.—ஆனல்—

வஸ.—என்ன ஆனல்?

ஸோமே.—ஒரு விசேஷம்.

வஸ.—என்ன அது?

ஸோமே.—சொல்ல நாவெழ வில்லை.

வஸ.—அதென்ன ஸங்கதி? என்னுடைய பிரபுவுக்கு ஏதாவது துன்பம் ஸம்பவித்ததா? சீக்கிரம் தெரிவித்தல் வேண்டும்.

ஸோமே.—ஒன்றுமில்லை. நகை மூட்டை....

வஸ.—நகை மூட்டைக் கென்ன? திருட்டுப்போய் விட்டதா?

ஸோமே.—இல்லை. எஜமானர் சூதாடித் தோற்று விட்டார்.

வஸ.—(தனக்குள்) இதென்ன ஆச்சரியம்! நகை மூட்டை திருட்டுப்போயிருக்கச், சூதாட்டத்தில் தோற்றுவிட்டதாகத் தெரிவிக்கிருரே! அவர் பொய் சொல்வதும் ஒரு அழகாய்த்தானிருக்கிறது! அவர் சொல்லும் இந்தப் பொய்கூட நான் அவர் பேரில்கொண்ட மோகத்தை அதிகரிக்கச் செய்கிறது.

ஸோமே.—நகைகளைப்பற்றி வருத்தப்படாதே! காரியம் மிஞ்சிப்போய்விட்டது! என்னசெய்கிறது! அவர் சூதாடுகிறவரல்ல! என்னமோ பொல்லாதவேளை இப்படி ஆனது! இதோ இந்த வைரஸரத்தை அவற்றிக்குப் பதிலாக ஏற்றுக் கொள்.

வஸ.—(தனக்குள்). ஆகா! இது இன்னமும் அதிக

ஆச்சரியத்தை விளைவிக்கிறது! என்னிடத்தில் வந்துவிட்ட நகைகளைக் காட்டிவிடலாமா? (யோசித்து) இருக்கட்டும் பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

ஸோமே.—என்ன பேசாமலிருக்கிறாய்? பதிலாக அனுப்பப்பட்ட இதை வாங்கிக் கொள்ளமாட்டாயா?

வஸ.—(புன்சிரிப்புடன்) ஏன்மாட்டேன்? (வைரஸரத்தை வாங்கித்தன் மார்பில்வைத்துக்கொண்டு). இதென்ன அதிசயம்! மாமரத்திலிருந்து புஷ்பங்களெல்லாம் உதிர்ந்து போன பிறகும் அமிர்தத்துளி விழுதலுண்டோ? நல்லது ஸோமேஸரே! நான் இன்று ஸாயங்காலம் எஜமானர் வீட்டிற்குவந்து பார்த்துப் பேசுவதாய்த் தெரிவியும்.

ஸோமே.—(தனக்குள்) அப்படியா! அவரிடத்தில் இன்னம் அதிகமாகப்பொருள் பெற உத்தேசிக்கிறாள் போலிருக்கிறது! இன்னம் கேட்டால் என்ன செய்வார் பாவம்!இதுவும் அவருக்குத் தலைவிதியா! இரவில் வந்தாளே என்று உதவிசெய்யப்போக, இந்தத் துன்பம் சம்பவித்தது! (வெளிப்படையாய்) அப்படியே தெரிவிக்கிறேன்; அம்மா!

வஸ.—நமஸ்காரம்; போய்வாருங்கள்.

(விஸனத்துடன் போகிறான்)

வஸ.—(தனக்குள்)

விருத்தம். - இராகம்—பியாக்.

எங்ஙன முரைப்பே னித வள்ளலின் பெருமை தன்னைச்
சிங்கவே றனைய ஆண்மை தெவிட்டிடா இனிய பான்மை
மங்கினு மகலாத் தூய்மை இடுக்கணு மதியா வாய்மை
தங்கும்மே யுருவாய் வந்த சுந்தரம் போலுந்த மேனி.

ஆகா! என்ன உத்தமகுணம்! எவனோ திருடிக்கொண்டு போனதை என்னிடத்தில தெரிவிக்காமல் தான் சூதாடியதாகச்சொல்லித்தன் யோக்கியதையைக் குறைத்துக்கொண்டாயினும் தன்பேரில் வைத்த நம்பிக்கைக்குக் குறைவுவராமல் நடந்து கொண்டிருக்கிறாரே! இவரல்லவோ புருஷ சிங்கம்! இவரல்லவோ புருஷரில சிரேஷ்டர்! தேகத்தில் மாத்திரம் அழகைப்பெற்று, அதை ஆபரணங்களினாலும்,

உடைகளினுலும், பரிமளகந்தங்களினுலும் அலங்கரித்துக் கொண்டு, செல்வச்செருக்கை யடைந்து இறுமாந்திருக்கும் போலிப் பிரபுக்கள் குணத்தழகைப்பெற்ற இந்த வள்ள லின் பாலதூளிக்கும் ஒப்பாவரோ! புருஷனை அடைவதாயி ருந்தால் இவ்ரையே அடைதல்வேண்டும். இல்லாவிட்டால், இந்தத்தேகத்தை அக்கினிக்கிரையாக்கவேண்டும். இருக்கட் டும்; இன்று சாயங்காலம்போய் முயன்று பாக்கிறேன்.

---

# இரண்டாம் அங்கம்

## முதற் காட்சி

**இடம்:**—மாதவராயருடைய மாளிகைக்குள் ஒரு சிறிய பூஞ்சோலை

**காலம்:**—மாலை

(ஸோமேசன் வருகிருன்)

(தனக்குள்) மாதவராயர் வஸந்தஸேனையின் வரவை அதிக ஆவலோடு எதிர்பார்த்த வண்ண மிருக்கிருர். இவ ருக்கு அவள்பேரில் இவ்வளவு ப்ரேமை உண்டாகக் காரணமென்ன! அவள் கேவலம் அற்பபுத்தியும் பேரா சையுமுடைய தாஸியல்லவோ! எவ்வளவு ஐசுவரியத்தைப் பெற்றிருந்தபோதிலும் அவளுடையஜாதிக்குணமாகிய நிர்த் தாக்ஷண்யம் போகவில்லையே! வைர ஸரத்தைப் பார்த்த உடனே, வெளிவேஷமாகவாவது ஒரு உபசார வார்த்தை கூடச் சொல்லாமல், உடனே அதை ஆத்திரத்தோடு பிடுங்கிக் கொண்டாளே! வேசைக்குக் காசின்மேலாசை யென்பது சரியாய்ப் போய்விட்டதே! அவளுக்கு எவ்வ ளவோ செல்வமிருந்தும் மேன்மேலும் அபகரிக்கும் புத்தி இருக்கிறதே யொழியத் தயை, இரக்கம், ஈகை முதலிய குணங்கள் இல்லையே! தண்டில்லாத தாமரையும், தஸ்கரம் செய்யாத தட்டானும், சண்டையில்லாத சங்கமும், பேரா சையில்லாத தாஸியும் இல்லையென்று பெரியோர் சொல் வது நிஜமே! இவை ஒன்றை விட்டொன்று என்றும் இணைபிரியாத் துணைப்பொருள்கள். அவள் இன்று வர வேண்டிய காரணமென்ன? எனக்கு இது மிகவும் ஸங்

தேகத்தைத் தருகிறது. கபடமே அறியாத மாதவராயரை அவள் ஒருவேளை தன் வலையில் விழச் செய்வாளோ! ஏழையாய் வருந்தித் தவிக்கும் இவர் இன்னம் அதிகமாகத் துன்புற்றுத் துயரக் கடலில் மூழ்க நேரிடுமோ! இருக்கட்டும்; நான் உடனேபோய் இவர் அவள் பேரில் கொண்டிருக்கும் நல்ல அபிப்பிராயத்தை மாற்ற முயலுகிறேன்.

மாத.—ஸோமேஸா! இன்னம் வஸந்தஸேனையின் வண்டி வரவில்லையா?

ஸோமே.—இல்லை. (ஒருவித வெறுப்போடு) உம்! என்னமோ! எனக்கொன்றும் பிடிக்கவில்லை.

மாத.—உனக்கு என்ன பிடிக்கவில்லை?

ஸோமே.—அபாத்திரமான மனிதரிடத்தில் நீங்கள் இவ்வளவு அபிமானம் வைப்பது?

மாத.—எப்படி?

ஸோமே.—கேவலம் அற்பகுணத்தைக் கொண்ட தாஸியிடத்தில் உங்களுக்கு இவ்வளவு சாலமுண்டானது மிகவும் தவறு. தவிர நான் போயிருந்தபோது, அவளும் அவளுடைய பணிப்பெண்களும் என்னை எவ்வளவு ஏளனம் செய்தார்கள் தெரியுமா? தாஸியின் உறவானது காலில்தைத்த முள்ளைப்போன்றது. முதலில் நுழைவதே தெரியாது. அதைப் பிறகு நாம் எவ்வளவு வருந்திப்பிடுங்கி எடுத்தல் வேண்டுமென்பதை நான் தெரிவிக்க வேண்டுவதில்லை. தாஸி நுழைந்தவீடும், சனியன் நுழைந்த வீடும் ஒழியா விஸனத்தை யடையும்; ஆகையால், அவளை நீங்கள் பார்ப்பதும் அவளுடன் ஸம்பாஷிப்பதும் பிறகு துயரைத் தரும். ஆகையால் அவளைப்பார்க்க இப்பொழுது ஸந்தர்ப்பமில்லையென்று சொல்லியனுப்பி விடுங்கள்.

மாத.—

விருத்தம் - இராகம் பைரவி.

நண்பனே! ஏனோ வந்த நங்கையை நினைத்த வாறு
புண்படு மொழியாலேசிப் புகன்றனை நவைகள் சால?
எண்படு தனத்தி னோர்க்கே விலைமகள் கூற்ற மாவள்.
தின்கொடு மிடியர் தம்மைத் தெரிவையர் நினைத்த லுண்டோ?

சே! அவளை அக்கிரமமாகத் தூஷிக்காதே. இதனால் எனக்கு யாதொரு துன்பமும் வராமலிருப்பதற்கு என்னுடைய ஏழ்மைத்தனமே ஒரு பாதுகாப்பல்லவா? பணத்தாசையுள்ளதாவி ஏழையை ஏன் விரும்புவாள்? தவிர, கற்பிற்கரசியாகிய என்மனைவி கோகிலத்திற்கு நான் துரோகம் செய்ய நினைப்பேனு!' என்னுடன் நீ இவ்வளவுகாலம் பழகியும், என் மனோவுறுதியையும், நான் எவ்வித நடத்தையுடையவனென்பதையும் அறிந்து கொள்ள வில்லையே! அவள் ஏதோ நம்மீதுள்ள அன்பினால் நம்மைக்காண விரும்புகிறாள். நாம் அதைத்தடுப்பது தருமமாமோ? அவள் எதற்காக வருகிறாளோ! அதைப்பற்றி நாம் இப்பொழுது எவ்விதம் ஊகிக்கமுடியும்?

**ஸோமே.**—அவள் வைர ஸரத்தைப் பெற்றதோடு திருப்தி யடைந்ததாய்க் காணப்படவில்லை. மேலும் ஏதாவது அபகரிக்கலா மென்னும் எண்ணத்துடன் வருவதாகத் தோன்றுகிறது! நான் சொல்வதைக் கேளுங்கள். பிறகு துன்பப்பட நேரும்.

(தனபாலன் ஒரு பக்கமாய் வருகிறான்)

(தனக்குள்) இதோ மாதவராயரிருக்கிறார். நேரில் அவரிடம் போக வெட்கமாக விருக்கிறது. ஒருவித அச்சமும் என்னை வதைக்கிறது. அதோ அந்த ஸோமேஸனுமிருக்கிறான். மெதுவாகச் சைகை செய்து அவனைக் கூப்பிடுகிறேன் (ஒரு மண்கட்டியை எடுத்து ஸோமேசன் பேரில் மெதுவாக எறிகிறான).

**ஸோமே.**—(திடுக்கிட்டு மேலே பார்த்து) ஆகா! யார் என்பேரில் கல்லைப்போட்டது?

**மாத.**—மதிளின் மீதிருக்கும் புறாக்கள் தம்விளையாட்டில் தள்ளி விட்டிருக்கலாம்.

**ஸோமே.**—(மேலேபார்த்து) ஏ போக்கிரிப் புறாக்களே! உங்களுக்கு இவ்வளவு குறும்பா! புளியம்பழங்களை உலுக்கி விடுவதைப்போல உங்களை இந்தத் தடியால் மதிளிலிருந்து ஓட்டி விடுகிறேன்.

மாத.—ஸோமேஸா! போனால் போகிறது: உட்கார்ந்து கொள். சாந்தமே உருவாகிவந்த புருக்களை வருத்தாதே! அவைகள் ஜோடி ஜோடியாய்ச்சேர்ந்து கொஞ்சிக் குலாவிக் கும்காரம்செய்து எவ்வளவு அழகாய் விளையாடுகின்றன! அவைகளைப் பிரித்து விடாதே.

தன.—(தனக்குள் புன் சிரிப்புடன்) முட்டாள் பிராம் மணன்! மேலே புருக்களைப் பார்க்கிறானே யொழிய என் பக்கமாகத் திரும்பவில்லையே! இவனுக்கு இன்னொரு வந்தன மளிக்கிறேன்.

(இன்னொரு மண்கட்டியை எறிகிறான்)

ஸோமே.—(திடுக்கிட்டெழுந்து திரும்பிப் பார்த்து) இதென்ன மறுபடியும் விழுகிறதே! (கொஞ்சதூரம் அப்பால்போய்) அதோ நிற்கிறவன் யார்? தனபாலனல்லவோ? (ஸமீபத்திற்போய்). அடே தனபாலா! வாவா.

தன.—ஸ்வாமி! தெண்டம். வருகிறது!

ஸோமே—என்ன தெண்டம் கொணர்ந்து வைக்கப் பார்க்கிறாய்? இங்கே ஏதாவது பொருளிலிருந்தாலல்லவோ தெண்டம் எங்களை வருத்தப்போகிறது! அதைப்பற்றிக் கவலையில்லை. என்ன ஸமாசாரம்? ஏதேனும் விசேஷ முண்டா?

தன.—அவர்கள் வந்திருக்கிறார்கள்!

ஸோமே.—எவர்கள்?

தன.—அவர்கள்தான் தெரியாதா?

ஸோ.—எனக்குத் தெரியவில்லையே! அது யார் அந்தச் சுவர்கள்? பெயரைச் சொல்லேன்.

தன.—உமக்கு எதுதான் தெரியும்! நூறுவடையை ஒரு நொடியில் உள்ளே முழுசு முழுசாகத் தள்ளிவிடத் தெரியும்! எந்தப் பள்ளிக்கூடத்திலும் கற்காமல் அந்த வித்தை மாத்திரம் ஸுலபமாகவே வந்துவிட்டது ஆச்சரியந்தான். அதிருக்கட்டும் ஒரு கேள்வி கேட்கிறேன்; அதற்குப்பதிற் சொல்லும்; இந்த மாமரம் எந்தக் காலத்தில் புஷ்பிக்கும்? அதாவது தெரியுமா?

ஸோமே.—என்ன என்னைப் பரிட்சிக்கிறாயோ? ஆனி ஆடி மாசங்களில் புஷ்பிக்கும்; இது தெரியாதா! முட்டாள்.

தன — அந்தப்பெயர் உமக்குத்தான் நன்றாய்ப் பொருந்துகிறது. 'அப்பா சாஸ்திரி வீட்டில் பிறந்து குப்பா சாஸ்திரி வீட்டில் வாழ்க்கைப்பட்ட எனக்கு லவணம் என்றால் எருமைச் சாணமென்று தெரியாதோ?' என்று அழுத்தம் திருத்தமாய் ஒருத்தி சொன்னாளாம். அதைப் போலிருக்கிறது நீர் சொல்வது.

ஸோ.—அதென்ன அப்படிச் சொல்கிறாய்! நான் சொன்னது ஒரு நாளும் தவறாது! நீ இவ்விடத்திலேயே இரு; இதோ எஜமானரிடம் போய்க் கெட்டுக்கொண்டு வருகிறேன். (மாதவராயரிடம் போய்) ஸ்வாமி! மாமரம் எந்தக் காலத்திற் புஷ்பிக்கும்? தயவு செய்து தெரிவியுங்கள்.

மாத.—அது எதற்காக இப்பொழுது? வஸந்த காலத்தில் புஷ்பிக்கும்.

ஸோமே.—(திரும்பி வந்து) அடே! அது வஸந்த காலத்தில் புஷ்பிக்கும்.

மாத.—அப்படியானால் நீர் சமர்த்தர்தான்! உள்ளே போய் எஜமானரிடங் கேட்டு அறிந்து கொண்டு வந்து சொன்னால், இது உமக்கு முன்னமேயே தெரிந்ததாய் விட்டதோ? நீர் சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளை தான்; இந்தப் பிரவேசப் பரிட்சையில் நீர் தவறிப்போனீர். இன்னொரு கேள்வி கேட்கிறேன். அதற்காவது நீரே பதிற் சொல்லும் பார்க்கலாம். தனம் நிறைந்த பட்டினத்தைப் பாது காப்பவர் யார்?

ஸோமே.—(அலட்சியமாக) மகாபெரிய கேள்வியோ இது? அரசன் பாது காக்கிறான்.

தன.—அப்படியானால் உம்முடைய மூளையில் அழுக்குப்படிந்திருக்கிறது; அதை வண்ணானுக்குப் போடவேண்டியதுதான் ஸரி யான சிகிச்சை. இன்னொரு முறை எஜமானரிடம் போய் இந்த மடமைக்கு மருந்தை யறிந்து வாரும்.

ஸோமே.—(மாதவராயரிடம் போய்) ஸ்வாமி ! தனம் நிறைந்த பட்டினத்தைப் பாதுகாப்பவர் யார் ?

மாத.—இவையென்ன கேள்விகள் ? உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா? பட்டினத்தைக் காப்பது சேனை யென்பதுகூட உனக்குத் தெரியாதா ?

ஸோமே.—(திரும்பிவந்து)தனபாலா! பட்டினத்தைச் சேனை காக்கிறதென்பதுகூடத் தெரியாதா? முட்டாள் ! இதெல்லாம் என்ன கேள்வி! யார் வந்திருப்பவர் என்று கேட்டதற்குப் பதிலில்லை. பைத்தியக்காரனைப்போல ஏதே தோ உளறுகிருயே! நான் கேட்டதற்கும் நீ சொன்ன தற்கும் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கு முள்ள ஸம் பந்தம் தாராளமாயிருக்கிறது.

தன.—ஐயோ பாவம்! புத்திக்கு எட்டவில்லை! மிகவும் உயரம்போலிருக்கிறது! ஒரு ஏணியாவதுவைத்து ஏறிப்பார்க்கக் கூடாதா ? நீர் சொன்ன இரண்டு மறுமொழிகளையும் ஒன்ருய் ஸம்பந்தப் படுத்தும். வந்திருப்பவர் யாரென்பது உமது புத்திக்கும் வந்துவிடும்.

ஸோமே—வஸந்த ஸேனையா வந்திருக்கிருள்! அதை உடனே சொல்லக்கூடாதா! அதற்கு இவ்வளவு பீடிகை எதற்காக? எஜமானரிடம்போய்த் தெரிவிக்கிறேன். (போகிருன்) ஸ்வாமி! கடன்காரி வந்துவிட்டாள்!

மாத்.—எனக்குக் கடன்காரி யார் இருக்கிருள் ?

ஸோமே.—பலே! நன்ருயிருக்கிறதே! நீங்கள் கொடுக்கவேண்டியசடனை இதற்குள் மறந்துவிட்டீர்களே! வஸந்த ஸேனைக்கு நீங்கள் கொடுக்கவேண்டியது நினைவிற்கு வரவில்லையா?

மாத.—என்ன விளையாடுகிருயோ?

ஸோமே—இல்லையில்லை; நிஜமே. இதோ தனபாலன் வந்திருக்கிருன். வேண்டுமானுல் அவனைக் கேளுங்கள்.

மாத.—தனபாலா! வஸந்தஸேனை வந்திருப்பது நிஜந் தானு?

தன.—ஆம் ஸ்வாமி!

மாத.—ஆகா! ஸந்தோஷசங்கதி கொண்டுவந்தவர் வெறுங்கையோடு போகக்கூடாது. இதோ எனது அங்கவஸ்திரத்தை உன் சிரமத்திற்காக எடுத்துக்கொள். (கொடுக்கிறார்) போ! சீக்கிரம் உள்ளே அழைத்துவா.

தனபால.—உத்திரவு! (போகிறான்.)

ஸோமே.—நான் சொன்னது உண்மையென்று இப்பொழுதாவது மனதிற் பட்டதா? அவள் எதற்காக வருகிறாளென்பது தெரிகிறதா?

மாத.—எதற்காக வருகிறாள்?

ஸோமே—அவளுடைய ஆபரணங்களின் கிரயம், நம்முடைய வைரஸரத்தைக் காட்டிலும் அதிகமானது. அந்த அதிகத்தைப் பெறும் பொருட்டு வந்திருக்கிறாள்.

மாத—அப்படியானால் அவள் வந்தது நியாயந்தானே! அதைக் கொடுப்பது நம்முடைய கடமையல்லவோ! வரட்டும்; அவள் இச்சையைப் பூர்த்திசெய்து அனுப்புகிறேன்.

(வஸந்தஸேனை ஒரு தோழியுடன் வருகிறாள்)

வஸ.—ஸோமேசரே! எங்கே நம்முடைய ஜடிதர்?

ஸோமே.—(தனக்குள்) ஆம் ஜடிதர்தான்! நல்ல கௌரதையான பட்டப் பெயர் பெற்றார்! (உரக்க) அம்மா! அவர் அதோ சோலைக்குள்ளிருக்கிறார்.

வஸ.—அடி ஸகி! நான் அவரிடத்தில் எப்படிப்பேசுகிறது? எனக்கு மிகவும் வெட்க மாயிருக்கிறதே!

தோழி.—வெட்கமென்ன! 'ஜடிதரே! நமஸ்காரம்,' என்று சொல்லுங்களேன்!

வஸ.—அவ்விதம்சொல்ல என்னக்குத் துணிவு எப்படி உண்டாகும்?

தோழி.—ஸந்தர்ப்பத்தில் தைரியம் தானாகே ஏற்படும்.

(வஸந்தஸேனை நாணத்துடன் மாதவராயரிடம் நெருங்கிப் புஷ்பங்களை அவர் பேரில் விசிறி) ஸ்வாமி! நமஸ்காரம்!

மாத.—ஆகா! வஸந்தஸேனு! வரவேண்டும்! வர வேண்டும்! இந்ததினம் ஸுதினம்! ஒருநாளும் கிடைக்காத கௌரவம் இன்றுகிடைத்த தல்லவா!

வஸ.—இந்த உபசாரவார்த்தைகள் என் வாயிலிருந்தல்லவோ வரவேண்டியவை!

ஸோமே.—(மாதவராயரிடம் தனிமையில்) நண்பரே! வந்தகாரணமென்னவென்பதை விசாரிக்கட்டுமா?

மாத.—மரியாதையாகக் கேள்.

ஸோமே.—வஸந்தஸேனு! ஸகலஸுக போகங்களும் நிறைந்த உன்னுடைய மாளிகையைவிட்டு இவ்வளவு தூரம் வரும்படியான சிரமத்தை ஏற்றுக்கொண்டகாரணமென்ன?

தோழி.—(ஸோமேசனிடம்) ஐயா! நீர் கொடுத்த வைரஸரத்தின் கிரயம் எவ்வளவென்று அறிந்துகொள்ள எஜமானியம்மாள் விரும்புகிருர்கள்.

ஸோமே.—(மாதவராயரிடம் தனிமையில்) நான் அப்பொழுதே சொன்னேனல்லவா! ஸரியாய்ப்போய்விட்டது பார்த்தீர்களா?

தோழி.—அதைக்கேட்பதின் காரணமென்ன வென்ருல், அவர்கள் அதைச்சூதாட்டத்தில் தோற்றுவிட்டார்கள். ஆகையால் அதன் விலையை அறிந்து கொள்ளவிரும்புகிருர்கள்.

ஸோமே.—(தனக்குள்) ஓகோ! பதிலுக்குப்பதிலோ?

தோழி.—இழந்த ஸரத்திற்குப் பதிலாக இவ்வாபரணங்களை வைத்துக்கொள்ளுங்கள்! (திருட்டுப்போன நகைகளைக்கொடுக்க, ஸோமேசன் ஆச்சரியத்துடன் பார்க்கிருன்.)

தோழி.—என்ன! அப்படிச் சோதனைசெய்து பார்க்கிறீரே! இதற்கு முன்னுல் இவற்றைப் பார்த்திருக்கிறீரோ?

ஸோமே.—இதென்ன ஆச்சரியம்! தட்டானுடைய திறமை நம்கண்களை ஏமாற்றிவிட்டதே!

தோழி.—இல்லையில்லை; உம்முடையகண்ணின்பார்வை

தான் சற்றுக்குறைவாகத்தோன்றுகிறது. இதற்குமுன் நீர் பார்த்த ஆபரணங்களே இவைகள்!

ஸோமே.—(மாதவராயரிடம் எடுத்துக்கொண்டுபோய்) ஆகா! நண்பரே! நம்மிடத்திலிருந்து திருட்டுப்போன ஆபரணங்களைப்பார்த்தீர்களா?

மாத.— ஆகா! அப்படியா! ஸந்தோஷம்! அதுவும் நமது நல்லகாலந்தான்! இவைகள் எவ்விதம் இவர்களிடம் வந்திருக்கக்கூடும்?

ஸோமே.—(தோழியிடம் இரகஸியமாக) உண்மையில் அப்படித்தானா?

தோழி —(இரகஸியமாக) உண்மையில் அவைகளே!

ஸோமே —நிச்சயந்தானா?

தோழி.—ஸத்தியமாய் அவைகளே!

ஸோமே.—(ஸந்தோஷத்துடன்). ஸ்வாமி! ஸந்தேகமேஇல்லை.

மாத.—ஸகி! உன்வாயாற்சொல்; இது நிஜந்தானா?

தோழி.—நிஜமே!

மாத.—(ஸந்தோஷத்துடன்). ஆகா! நல்ல ஸங்கதி தெரிவித்தாய்! என்னிடத்தில் எவர் ஸந்தோஷ ஸங்கதியைத்தெரிவிக்கிறார்களோ, அவரை நான் வெறுங்கையுடன் அனுப்புவதேயில்லை. இதோ இந்த வைரமோதிரத்தை எடுத்துக்கொள். (தன் விரலில் மோதிரமிருப்பதாய் நினைத்து, இழுக்கப்பார்க்கிறார். இல்லை யென்றறிந்து வெட்குகிறார்).

வஸ.—(ஒருபுறமாக) ஆகா! தனத்தைவைத்துக்கொள்வதற்கு இவரல்லவோ அருகமானவர்! என்னதாராளகுணம்! அதனாலேதான் சீக்கிரத்தில் ஏழையாய் விட்டார்! பணத்தில ஏழையானபோதிலும் தயையில மாத்திரம் இவர் முன்போலவே கோடீசுவரராயிருக்கிறார். இவரை நான் என் மனதார நினைத்துவிட்டுப் புருஷனாக அடையாவிட்டால், இந்த ஜென்மமே வியர்த்தம்!

மாத.—(தனக்குள் விஸனத்தோடு) தன்ஸந்தோஷமும் கோபமும் யாதொருபயனுமில்லாமல் போகும் நிலைமையில் நித்திய தரித்திரனாய் இருந்துவாழ்வதும் ஒரு வாழ்வாமோ! இறகுகளையிழந்த பறவைகளும், இலைகளை உதிர்த்த மரங்களும், இடிந்தவீடும், பிறருக்குக் குதூகலமாக விருந்தளிக்கும் நிலைமையி வில்லாத தரித்திரனுக்கு ஸமானமானவை.

ஸோமே.—அப்பா! நகைகள் களவுபோனபோது இவற்றை என் அங்கவஸ்திரத்தில் மூட்டைகட்டி வைத்திருந்தேன். தயவுசெய்து என் வஸ்திரத்தைக் கொடுத்துவிடுங்கள்.

வஸ.—(புன்சிரிப்போடு) ஒரு வஸ்திரந்தானா வேண்டும் ஒன்பது வஸ்திரங்கள் தருகிறேன்! (வஸந்த ஸேனை தோழியைப்பார்த்துக் கண்ஜாடைகாட்ட அவள் ஸோமே சனை அழைத்துக் கொண்டு மறைவாகப்போய்விடுகிறாள்).

வஸ.—ஸ்வாமி! நகைமூட்டை திருட்டுப் போயிருக்க, அதற்குப்பதிலாக வேறொன்றை ஏன் அனுப்பவேண்டும்? அப்படிச்செய்வது அனாவசியமல்லவா?

மாத.—

விருந்தம்—இராகம்—செஞ்சுருட்டி

மங்கையே! நன்மை மிக்க மானினீ! அவனி தன்னில்
மங்கிய வறியன் சொல்லை மதிப்பவ ருள்ளரோ? முற்றும
சங்கையே யடைவர். வாய்மை சாற்றினும் பொய்யா மின்னம்
பங்கமே புரிவா ரென்கிப் பதரெனக் கொள்வ ரன்றே!

ஸ்திரீ ரத்னமே! இதை நான் அனுப்பாவிட்டால், என்னை இனிமேல் யார்மதிப்பாகள்? திருட்டுப்போய்விட்டதென்று நான் சொன்னால் அதையாராவது நம்புவார்களா? ஏழையின் சொல் அம்பலம் ஏறுமா? தனமிருந்தால் மாத்திரம் மனிதனுக்குக் கனமேயொழிய, பொருளில்லாதவனுக்குப்புகழுமில்லை மதிப்புமில்லையே! அவன் உண்மையைச் சொன்னபோதிலும், அது பொய்யாகவே தோன்றுமே!

வஸ.— விருத்தம்-இராகம்—சங்கராபரணம்.

மறையவர் மணியே! நுங்கள் மதிப்பிலாத் தனங்கள் யாவும்
மறைந்தன வேனு மென்று மகலுமோ புகழும் பேரும்?
கிறைவழா வரிய சீர்மை நீங்கிடாச் செல்வ மாகக்
குறைவினியுங்கட் குண்டோ கோதிலாக் குணத்தின்மேலோய்!

பிரபு! தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. உலகத்தில் யாவரும், தனவந்தர்களையே மதிக்கிறார்களென்பது ஏழைகளை இகழ்ந்து அவமதிக்கிறார்களென்பதும் முற்றும் நிஜமல்ல. ஒருவன் பரம தரித்திரனாயிருந்த போதிலும் அவனிடத்தில் நற்குண நல்லொழுக்கமும் நீதி நெறிவழுவாமல் நடக்கும் மனோதிடமு மிருக்குமாயின், ஜனங்கள் அவனை எவ்வளவோ பாராட்டிப்பெருமைப்படுத்துகிறார்கள். ஒரு தனிகனிடத்தில் நற்குணமில்லாவிட்டால், ஜனங்கள் வெளிக்கு அதைக்காட்டாமல் அவனை மேன்மைப்படுததினபோதிலும்,உள்ளூற அவனை இகழ்வதே உலக இயல்பு. ஆகையால், தங்கம் குப்பையிற் கிடந்தபோதிலும் அதன் அருமை பெருமைகள் ஒருநாளும் அதற்கில்லாமற் போகா. யாரோ நன்றியற்ற சிலர் உங்களை மறந்தபோதிலும்,இந்த நகரத்தினர் பெரும் பாலரும் உங்களுடைய மேன்மையை நினைத்தவண்ண மிருக்கின்றனர். ஸ்வாமி! பிறருக்குக்கொடுக்கப் பொருளில்லையே யென்று தாங்கள் இனிச்சிறிதும் கவலைப்படவேண்டாம். இந்த அடிமைக்கு ஏராளமான பொருட்கள் தேவைக்கு அதிகமாகக் குவிந்து கிடக்கின்றன. அவற்றைத் தங்களுக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன். அவற்றை இனித்தங்கள் இச்சைப்படி உபயோகித்துக் கொள்ளலாம்.தாங்கள் இதற்காகச் சிறிதும் வருந்தவேண்டாம்.

மாத.—(தனக்குள்) ஆகா! என்ன மேன்மைக்குணம்! கற்பாறையில் தாமரை பூத்ததைப்போலவும்,ஆலகாலவிஷத்தைக்கொண்ட ஸர்ப்பத்தின் தலையில் மாணிக்கம் உண்டானது போலவும், ஈவிரக்க மென்பதே இல்லாத தாஸியின் குலத்தில்இவ்விதமான உத்தமிவந்து தித்தது விந்தையிலும் விந்தையே! (உரக்க) ஹே! பெண்மணீ! வஸந்தமே!லனை!

உன்னுடைய அழகியமொழியைக்கேட்டுப்பரமானந்தமடைந்தேன்! இவ்வளவு தயை யாருக்குண்டாகும்! நற்குணவதியாகிய நீ நீடூழி இன்பமனுவித்து வாழ அந்த ஈசுவரன் அனுக்கிரகிப்பானாக! மாதே! நான் இதுவரையில்பிறருக்குக் கொடுத்தறிவேனே யொழிய எவரிடத்தும் வாங்கியறியேன். எப்பொருளையும் நாம் நியாயமான வழியில் சம்பாதித்துச் செலவு செய்தல்வேண்டுமே யொழிய அன்னியருடைய செல்வத்தை நாம் இப்படிக் கவருதல் திருட்டாகும். ஆகா! நல்ல காரியம் செய்யச் சொல்லுகிறாய்! என்னிடத்தில் அந்தரங்க அபிமானம் வைத்தவளாய்க்காணப்படும் நீ எனக்கு இவ்விதமான தீங்கை நினைக்கலாமா? நீ எனக்கு உதவிசெய்வதாய் வாயினாற் சொன்ன அந்த அன்பான மொழியும், நினைத்த நல்ல நினைவுமே போதும். நான் அவற்றை யடைந்து தனிகனானதிலும் அதிகம்பெருமகிழ்ச்சி யடைந்தேன்.

வஸ—ஸ்வாமி! என்னை அன்னியளாகப்பாவிக்கக் கூடாது! நான் ஸார்வதாகாலமும் இடை விடாமல் தங்கள் உருவத்தையே என்மனதில் வைத்து அதையே தெய்வமாக மதித்து வழிப்பட்டுத்தங்களைப்பற்றி மனனஞ் செய்வதையே பேரின்பமாய் மதித்து வருகிறேன். தங்களைப்பார்த்துத் தங்கள் மேன்மையைப்பற்றி உணர்ந்தபின் இந்தச் சரீரத்தைத் தங்களுக் கென்றே அர்ப்பணம் செய்துவிட்டேன். ஆகையால் என்னை அங்கீகரித்துத் தங்களுக்குப் பணிபுரிபவளாய் வைத்துக்கொண்டு என்னை ஈடேற்றவேண்டும் தங்களுக்கு ஆயிரங்கோடி நமஸ்காரம். தங்களிடத்திற்சென்ற மனது இனி வேறு யாரிடத்திலும் இந்த உயிரழிவதாயிருந்தாலுஞ்செல்லாது. என்னுடையஏராளமான செல்வதையும் எனக்கு ஸ்திரீதனமாக ஏற்றுக் கொண்டு இனித்துன்பத்தையும், மனக்கவலையையும் நீக்கி இன்புற்றுவாழலாம்.

மாத—என்ன ஆச்சரியம்! இது எங்கும் நடக்காத விந்தையாயிருக்கிறதே! பரமதரித்திரனாகிய என்னைக் குல ஸ்ரீதியும் மணக்க இச்சைப்படமாட்டாளே. அப்படி இருக்கப் பணத்தலேயே கண்ணுங்கருத்து மாயுள்ளதாஸியர் குலத்திலுதித்த நீ விரும்புவது நம்பத்தகுந்ததா யில்லையே!

உன்னுடைய பேரழகைக் கண்டு மயங்கி உன்மீது ஆசை கொண்டு எத்தனையோ தனவந்தர்கள் உன் மாளிகையின் வாசலில் உனது தயவிற்காகக் காத்திருப்பார்களே! அரசன் மைத்துனனென்றால் நகரமே நடுங்கும். அவனையும் அவமதிக்கிறாய்! இதென்ன விநோதம்! இவ்வளவு மேன்மைகளை அலட்சியஞ் செய்துவிட்டு என்னை நாடுவதின் காரணமென்ன? இது கனவோ? அல்லது நினைவுதானோ? இப்படியும் நடக்குமோ! இதுவரையில் நீ என்னிடத்தில் உண்மையாய்ப் பேசியதாக நினைத்தேன். இப்பொழுதே அதை உள்ளபடி அறிந்தேன். நான் தரித்திரனென்று நீயும் என்னை ஹேளனம் செய்யவந்தாய் போலிருக்கிறது.

வஸ.—(காதைப் பொத்திக்கொண்டு) அடாடா! எவ்வளவு கடூரமான வார்த்தைகள்! ஸ்வாமி! நான் சொன்னதெல்லாம் உண்மையே யன்றி அணுவளவும் பொய்யல்ல. முற்றிலும் ஸத்யம். தங்கள் விரோதியும் தங்களுக்கு மனக் கவலையுண்டாக்க அஞ்சிப் பின்வாங்குவானே. அப்படி இருக்க, நான் அதைச் செய்வேனா? தங்களுடைய பாதஸாக்ஷியாகச் சொல்கிறேன். நான் தங்கள் பேரிலேயே காதல் கொண்டு நெடுநாளாய் இதே நோயால் வாடி வதங்கிக் கிடக்கிறேன். தாங்கள் என்னை உல்லங்கனம் செய்துவிட்டால் எனக்கு வேறுபுகலில்லை. நான் மற்றவர்களைப்போலப் பணத்திற்காக விரும்புபவள் அல்ல! குணத்திற்காக விரும்புகிறேன்! என்னை எப்படியாயினும் ஏற்றுக் கொள்ளவேண்டும். நான் இனிமேல் திரும்பி என் மாளிகைக்குப் போகமாட்டேன்.

மாத.—மாதரசி! எத்தனையோ கோடி தவம்செய்து அதன்பயனாய்க் கிடைக்கத் தகுந்த உன்னையும், உன் ஐசுவரியத்தையும் வேண்டாமென்று நான் சொல்ல வேண்டியிருப்பதைப்பற்றிப் பெரிதும் வருந்துகிறேன். என்னை மன்னிக்கவேண்டும்.

வஸ.—பிரபோ! பிறர்காலில் கேவலம் ஒரு முள்தைப்பதைக் கண்டு பொறாமல் வருந்தி இளகும் தங்களுடைய தயாளமனது என் விஷயத்தில்மாத்திரம் ஏன் இரக்கங்

கொள்ளவில்லை? இது என் அதிர்ஷ்ட ஹீனமோ? ஏன் என்னிடத்தில் தங்களுக்கு இவ்வளவு விருப்பின்மை! என்னிடத்தில் யாதாயினும் குற்றங்குறைபாடுகளைக் கண்டீர்களோ? நான்கற்பில் தவறி நடந்திருக்கலாமென்று நினைக்கிறீர்களோ? எங்கும் நிறைந்திருக்கும் ஸர்வேசுவரன் ஸாக்ஷியாகச் சொல்லுகிறேன். நான் அறிவுபெற்றமுதல் இதுவரையில் தங்களையன்றிப் பிறபுருஷரை மனதினால் நினைத்ததுமில்லை, வாயாற் குறித்ததுமில்லை, தேகத்தாற் பரிசித்ததுமில்லை. இது உறுதி! இது ஸத்தியம்! தாங்களே எனக்கு நாதன். தாய், தந்தை, நண்பர், உறவினர் முதலிய யாவரும் தாங்களே. செல்வமும், ஸகலமான பாக்கியமும், இன்பமுந் தாங்களே! நான் தொழுங் கடவுள் தாங்களே! இந்தப் பிறப்பில் நான் தங்களையன்றி வேறெதையும் விரும்பேன். தங்கள்மேற் கொண்ட ஆசையென்னும் தீயாற் கருகித் துவளும் எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்துக் காப்பாற்ற வேண்டும். தருமப்பிரபோ!

மாத.—ஆகா! என்னசெய்வேன்? ஈசுவரா! இதென்ன என்னை இவ்விதமான தரும ஸங்கடத்தில் வைத்துச் சோதனை செய்கிறாய்? ஹே! மங்கையர்க்கரசி! வருந்த வேண்டாம். உன்னிடத்தில் ஏதோ களங்கமிருக்கிறதென்று நினைத்து உன்னை மறுக்கவில்லை. உன்னைப்போன்ற உத்தமியை அடைவதை அரசர்களும் கிட்டாத பாக்கியமாகமதிப்பார்களே! அப்படி இருக்க நான் வேண்டாமென்று சொல்வேனா!

வஸ.—அப்படியானால் உயர்குலத் துதித்தோராகிய அந்தணர் கேவலம் தாழ்ந்த வகுப்பிற்குரிய என்னை அங்கீகரிப்பது தவறென்று மதிக்கிறீர்களோ?

மாத.—பெண்மணி! அப்படியல்ல! கடவுளாற் படைக்கப்பட்ட யாவரும் ஸமமானவர்களே! உயர் குலத்தினரிடத்திலும், பறையரிடத்திலும், பெண்பாலாரிடத்திலும், குழந்தைகளிடத்திலும், ஈசுவரனுடைய அம்சமாகிய ஜீவாத்மாவே இருக்கின்றதே. நாம் மாயையால் வெவ்வேறாகத்

தோன்றினும், ஆத்மாக்களெல்லாம் ஒன்றே. இந்த உண்மையை அறிந்து எல்லாரையும் ஸமமாக மதித்து யாவரிடத்தும் தயையோடும் அன்போடும் நடந்து கொள்பவர்களே அந்தணர். அந்தணர் என்பது அழகிய குளிர்ந்த தன்மையுடையவர்களுக்குக் காரணப்பெயர். ஆதலால், அவர்கள் கீழ் வகுப்பிலுள்ள பிறரைத் தம் வழிகளில் திருப்பிப், புலால் மறுத்தல், கற்றல் முதலிய நல்லொழுக்கங்களிற் பயிற்றிக் காலக்கிரமத்தில் அவர்களைத் தம்முடன் சேர்த்துக்கொள்ளக் கடவர்களென்பதுபற்றி, அவர்கள் மற்ற மூன்று வருணத்தார்களிடத்திலும் மணம்புரிந்து கொள்ளலாமென்று ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆகையால் நான் குலத்தின் உயர்வு தாழ்வைப்பற்றி நினைக்கவேயில்லை. நான் ஏற்கனவே ஒருத்தியை மணந்த கிரகஸ்தன் என்பது உனக்குத் தெரியா தென்று நினைக்கிறேன். ஸகல உத்தமகுணங்களும் நிறைந்த மனைவியிருக்க, இந்தக் காரியத்தைச்செய்து அவள் மனதிற்கு ஆறாத்துயரைத்தருவது தருமமாகுமா? இதை நீயே யோசனை செய்துபார்.

வஸ.—(மிகவருந்தி) என் பிராணநாதா! தாங்கள் என்னை இப்படிச் சோதனை செய்தால், பேதையாகிய நான் என்ன செய்யக்கூடும்? ஒரே புருஷனை நினைத்து மணக்க வேண்டுமென்பது ஸ்திரீகளுக்கு மாத்திரமே யொழியப் புருஷர்கள் ஒரு மனைவி உயிருடனிருக்கையிலேயே, மற்றவரை முறைப்படி மணந்து கொள்ளலாமல்லவோ! ஒரு ஸ்திரீ தன்கணவனிருக்கும்பொழுது வேறொருவனை மணத்தல் முடியாது. இந்த விஷயத்தில் ஸ்திரீ புருஷர்களுக்கு வித்தியாசமுண்டு. ஆகையால், என்னை ஏற்றுக் கொள்வது சாஸ்திரத்திற்கும் விரோதமாகாது. என்னை அலட்சியம் செய்து மறுத்துவிட்டால், நான் இந்த உயிரைச் சுமந்து வருந்தி வாழமாட்டேன். தங்களையே நினைத்து நினைத்து தங்கள் பொருட்டாகவே உயிரைவிட்டு விடுவதே உறுதி, ஆகா! தாங்கள் மறுக்க மறுக்க, என்மனம் படும் பாட்டை என்னவென்று விரிப்பேன்! என் உயிர் இப்பொழுதே போய்விடும் போலிருக்கிறது! என் ஆருயிர் நாதனே!

“உன் இச்சைப்படி ஆகட்டு”மென்று தங்கள் இனிய வாயால் ஒருமொழி கூறி என்னை இந்த இடர்க்கடலிலிருந்து கைதூக்கி விடக்கூடாதா? ஏழையின் முகத்தைப்பாருங்கள்; பிரபு! தங்களையே எண்ணியெண்ணிப் புண்ணான என்மனதை ஏற்றுக் கொண்டேனென்னும் அந்த மொழியமுதைச் சொரிந்து உய்விக்கக்கூடாதா? இதோ தங்களை ஆயிரந் தடவை ஸேவித்து வணங்குகிறேன்.

மாத.—ஹா! ஈசுவரா! கருணாநிதி! இதுவும் உன் சோதனையோ? கற்பிற்கரசியாகிய என் பிராண சுந்தரியின் மனதை வருத்த நினைப்பேனோ? இவள் படும்பாட்டைக் காண என்மனம் தத்தளிக்கிறதே! என்னசெய்வேன்! ஹா! ஜெகதீசா! (மூர்ச்சித்து விழுகிறார்.)

வஸ.—(துடிதுடித்து) ஐயோ! என்ன ஸம்பவித்ததோ தெரியவில்லையே! என் துரை மூர்ச்சித்து விழுந்துவிட்டாரே! ஓய் ஸோமேசரே! அடி தோழி! சீக்கிரம் வாருங்கள் (கையைப் பிசைந்துகொண்டு) சீக்கிரம் வாருங்கள்! நமது எஜமானர் மயங்கி விழுந்துவிட்டார்.

(யாவரும் ஓடிவருகிறார்கள்.)

(காட்சியின் முடிவு.)

---

# இரண்டாம் அங்கம்

---

## இரண்டாவது காட்சி

இடம்.—மாதவராயருடைய மாளிகை.

காலம்.—மறுநாட்காலை.

(வஸந்தஸேனை ஒரு சயனத்தில் நித்திரை செய்யத் தோழி அருகில் நிற்கிறாள்.)

தோழி.—அம்மா! பொழுதுவிடிந்து நெடுநேரமாய் விட்டதே! விழித்துக்கொண்டு பாருங்கள்.

வஸ.—(கண்ணைத் துடைத்துக்கொண்டு விழிக்கிறாள்) ஆகா! இப்பொழுதுதானே சயனித்துக்கொண்டேன்.

142553

இதற்குள் பொழுதுவிடிந்து இவ்வளவு நேரமாகிவிட்டதே! என்ன வெட்கக்கேடு! நான் இவ்வளவுநேரம் துயிலுவதைக் கண்ட நமது எஜமானர், என்னைப்பற்றி எவ்விதமான அபிப்பிராயங்கொண்டாரோ தெரியவில்லையே! அவர் தேகம் எப்படி இருக்கிறதோ தெரியவில்லையே! இரவில் அவரை மூர்ச்சைதெளிவித்துச் சயனத்திற் படுக்கச்செய்து நெடுநேரம் நான் அவருக்குஅருகில் சைத்தியோபசாரம் செய்துகொண்டிருந்தேன். நான் நிற்பதைப்பொருமல், என்னையும் நித்திரை செய்யும்படி அனுப்பினர். அவரைத் திரும்பவும் பாராமல் நான் நெடுநேரம் தூங்கி விட்டேனே! நீ உடனே போய், அவர் விழித்துக்கொண்டாரா வென்றுபார்த்து விட்டுவா! (தோழி போகிருள்.)

வஸ.—(தனக்குள்) ஆகா! என்ன இவருடைய மனோவுறுதி! இவர் ஏக பத்தினி விரதத்தைப் பூண்டவராக இருக்கிருரே! இவர் மனதை நான் எப்படி மாற்றப்போகிறேன்? ஈசுவரா! திக்கற்ற ஏழையான எனக்கு நீதான் துணையிருந்து என் இச்சையைப்பூர்த்தி செய்விக்கவேண்டும்.

(தோழி வருகிருள்.)

**தோழி.**—அம்மா! அவர் நம்முடைய நகரத்திய பூஞ்சோலைக்கருகிலிருக்கும் தன்னுடைய உத்தியான வனத்திற்குப் போய்விட்டார். நீங்கள் இரவில் அவருக்குச்செய்த உபசரணைகளுக்கு அவர் பெரிதும் நன்றிபாராட்டு கிருராம். வெளியிற் போகுமுன் உங்களுடன் தெரிவித்துப்போக நினைத்தாராம். நித்திரையிலிருந்த உங்களை எழுப்ப மனமில்லாதவராய்ப் போய்விட்டாராம். நீங்கள் அவரைப் பார்க்க விரும்பினுல் தனது பெட்டி வண்டியில் வைத்து அவ்விடத்திற்கு அழைத்து வரும்படி தன்னுடைய வேலைக்காரனுக்குக் கட்டளை இட்டுப்போயிருக்கிருராம்.

வஸ்.—மிகவும் ஸந்தோஷம். அவருடைய தேஜோமயமான அழகை நான் இன்னம் பூர்த்தியாக என் கண்ணுறப்பார்க்கவில்லை. இன்று என் கண்களுக்கு நல்ல விருந்து செய்விக்கிறேன். இது எந்தஇடம்? பொக்கிஷம்

O-2MDS,V

வைக்கும் இடத்தைப்போலக் காணப்படுகிறதே! ஆகா! அவர் என்பேரில் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்! மிகவும் அந்தரங்கமான இடத்திலல்லவோ நுழைந்து சயனித்துக்கொண் டிருக்கிறேன்.

**தோழி.**—அந்தரங்கமான இடத்தில் மாத்திரமல்ல; ஒவ்வொருவருடைய ஹிருதயத்திற்குள்ளும் நுழைந்து விட்டீர்கள்!

**வஸ.**—இல்லை இல்லை. இவரைச் சேர்ந்தவர்கள் என் பேரில் கோபங்கொண்டிருப்பார்களோ என்னமோ தெரிய வில்லை!

**தோழி.**—அவர்களுக்கு இனிமேலேதான் ஒருவேளை வருத்தமுண்டாகும்.

**வஸ.**—ஏன்?

**தோழி.**—நீங்கள் புறப்பட்டுப்போவதினால்.

**வஸ.**—ஆகா! அப்படியா! மற்றவர்களும் என்னை அவ் வளவு விரும்புகிறார்களா! அதுவும் ஒருபாக்கியந்தான். அவ ருடைய மனைவியாகிய உத்தமி என்னை இரவிற் பார்த்த பொழுது, என்னிடத்தில் அன்பான முகத்தைக் காட்டி எனக்கு எவ்வளவு உபசாரம்செய்தார்கள். புருஷனுக்குத் தகுந்த மனைவியே! நற்குணமே நிறைந்த இவர்களை விட்டுப் பிரிந்துபோக ஸகிக்கவில்லை. அடிஸகி! இதோ இந்த வைரஸரத்தை எடுத்துக்கொண்டுபோய் என்னு டைய அரிய ஸகோதரியாகிய கோகிலத்தினிடம் சேர்ப்பி த்து, நான் மாதவராயருடைய பணிப்பெண்ணென்றும், கோகிலத்தின் அடிமை யென்றும் தெரிவித்து, இந்த மாலை எந்தக்கழுத்திற்கு உரியதோ அதை இந்த ஸரத்தால் அலங் கரித்துக் கொள்ள நான் வேண்டியதாய்க் கேட்டுக்கொள்.

**தோழி.**—நமது எஜமானருக்கு இது திருப்தியா யிராதே.

**வஸ.**—அவர் என் மீது ஒருக்காலும் வருத்தப் பட மாட்டார். நான் சொல்வதைச் செய்.

தோழி.—ஆக்ஞை! (போய்த்திரும்பி வருகிருள்).

தோழி.—அம்மணி! ஸாத்தை வாங்கிக் கொள்ளவே மாட்டேனென்று சொல்லிவிட்டார்கள். தான் தன் கணவனையும் கற்பையுமே ஆபரணங்களாக மதிப்பதாகவும், இதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லையென்றும் சொல்லித் தடுத்தார்கள். நான் வற்புறுத்திக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன். அதோ பார்த்தீர்களா நம்முடைய எஜமானரின் குழந்தை வருகிருர்!

(சிசுபாலன் என்னும் குழந்தை விசனத்துடன் வருகிருன். கோமளா ஒரு மண்வண்டியை இழுத்துக்கொண்டு வருகிருள்.)

கோம.—குழந்தாய்! வண்டியில் உட்கார்ந்துகொள்! நான் இழுக்கிறேன்.

குழந்தை.—(கோபத்துடன்) எனக்கு இந்த வண்டி வேண்டாம்! போ! அடுத்தவீட்டு வாஸுதேவன் பொன் வண்டிவைத்திருக்கிருன்! எனக்கு மாத்திரம் மண்வண்டியோ! எனக்கு வேண்டாம் போ. (அழுகிருன்)

கோம.—குழந்தை! அழாதே அப்பா! அடுத்தவீட்டுக்காரன் கோடீசுவரன். அவனுக்கு பொன் நிறைய இருக்கிறது. பொன் வண்டி செய்து கொடுத்திருக்கிருன். பொன்னுக்கு நாமெங்கே போகிறது? உன்னுடைய தந்தை மறுபடியும் தனவந்தராகும் வரையில் பொறுத்துக்கொள். உடனே உனக்கும் பொன்வண்டிவாங்கிக் கொடுப்பார். அழாதே! வேண்டாம்! அதோ பார்; அங்கே யார் நிற்கிருர்கள் பார்! அவர்களை உனக்குத் தெரியுமா?

குழ.—(கோபத்தோடு) நான் பார்க்கமாட்டேன் போ!

வஸ.—ஆகா! என்ன அழகு! யாரே அழகுக் கழகு செய்வார்? சரியான ஆடையாபரணங்கள் ஒன்றுமில்லாவிட்டாலும் இவனுடைய இயற்கையழகும் முகவசீகரமும் யாருக்குவரும்? (கைகளை நீட்டி) கண்ணே! இங்கே வா! (எடுத்து மடியில் வைத்துக் கொண்டு முத்தமிடுகிருள்)

ஆகா! தன் பிதாவைப் போலவே இருக்கிறானே! குழந்தை! எங்கே ஒரு முத்தங்கொடு.

குழ.—(கோபத்தோடு) மாட்டேன் போ.

சோம.—அவனுக்கு இப்பொழுது கோபவேளை; அடுத்த வீட்டு வாஸுதேவன் வைத்திருக்கும் பொன்வண்டியைப்போலத் தனக்கும் வேண்டுமாம்; அதற்காக அழுகிறான். நான் செய்து கொடுத்த இந்த மண்வண்டி வேண்டாமாம்.

வஸ —பெற்றோரின் ஏழ்மையைக் குழந்தை எப்படி அறியப்போகிறது! கண்ணே! அழாதே உனக்குப் பொன் வண்டிதானே வேண்டும்? நான் வாங்கித்தருகிறேன். எங்கே ஒரு முத்தங்கொடு.

குழ.—கோமளா! இந்தம்மாள் யார்?

வஸ.—நான் உன் பிதாவின் மேன்மைக் குணமான ஐசுவரியத்தினால் விலைக்கு வாங்கப்பட்ட பணிப்பெண்.

சோம.—குழந்தை! இவர்களும் உன்னுடைய அம்மாள்தான்.

குழ —நீ பொய் சொல்லுகிறாய். என்னுடைய அம்மாளாயிருந்தால், அழகான இத்தனை ஆடையாபரணம் இருக்காதே!

வஸ.—ஆகா! நம்முடைய எஜமானர் செல்வாக்கிலிருந்ததை இவன் கண்டதில்லை யல்லவா! ஏழ்மை நிலைமையிலேயே பிறந்து வளர்ந்தவன். (தன் ஆபரணங்களையெல்லாம் கழற்றிவிடுகிறாள்) இப்பொழுது பார்த்தாயா என்னை? இப்பொழுது உனக்கு நான் அம்மாளைப்போல இருக்கிறேனா? இந்த ஆபரணங்களை நீ எடுத்துக்கொண்டு போய்ப் பொன்வண்டி வாங்கிக்கொள். (அவனை மார்பில் அணைத்து முத்தமிட்டு ஆனந்தக் கண்ணீர் விடுகிறாள்)

குழ.—நீதான் நகைகளைக் கொடுக்கிறதற்காக அழுகிறாயே! போ! எனக்கு வேண்டாம்.

வஸ.—(கண்ணைத் துடைத்துக்கொண்டு) கண்ணே! பாக்கியமே! நான் அழவில்லை. நீ இவைகளை எடுத்துக்

கொண்டுபோய்ப் பொன்வண்டி வாங்கிக்கொள்.

(நகைகளை வண்டியில் நிறப்புகிருள்)

குழ.—நீ இப்பொழுது கொடுப்பாய்; திரும்பக் கேட்பாய்; எனக்குவேண்டாம்.

வஸ.—நான் இனிமேல் கேட்கவேமாட்டேன். நிச்சயம்.

குழ.—இந்த நகைகளால் வண்டி எப்படிச் செய்கிறது? என்னுடைய அம்மாள் கோபித்துக்கொள்வாள். எனக்கு வேண்டாம்; நீயே எடுத்துக்கொள்.

வஸ.—அம்மாள் கோபித்துக் கொள்ளமாட்டார்கள். இவைகளைத் தட்டானிடம் விற்றுவிட்டுப் பொன்வாங்கி வண்டி செய்து கொள்ளலாம். எடுத்துக்கொண்டுபோ.

குழ.—ஸரி; அப்படியானல் எடுத்துக்கொண்டுபோகட்டுமா? நீ அழமாட்டாயே? அழுதால் எனக்கு வேண்டாம்.

வஸ.—ஆகா! பிதாவைப்போலப் பிறர் மனம் வருந்த ஸகியாதவன்.—கண்ணே! நான் அழவில்லை. நீ எடுத்துக் கொண்டு போ! நான் மறுபடி வரும்போது நீ எனக்குப் பொன் வண்டியைக் காட்டவேண்டும்! காட்டுகிருயா?

குழ.—(ஸந்தோஷத்துடன்) காட்டுகிறேன். இதை அம்மாளிடம் காட்டப்போகிறேன்.

(ஆபரணங்களுடன் வண்டியை இழுத்துக்கொண்டு வேகமாய்ப் போய்விடுகிருன். கோமளாவும் அவனைத் தொடர்ந்து சென்று சற்று நேரத்தில் திரும்பி வருகிருள்).

கோம.—அம்மா! வாசலில் குணசீலன் பெட்டி வண்டியைத் தயார்செய்து வைத்திருக்கிருன்.

வஸ.—ஸரி! என்னுடைய உடைகளைச் சீர்திருத்திக் கொண்டு இதோ வந்து விட்டேன். கொஞ்ச நேரம் இருக்கட்டும். (மறைவில் போகிருள்)

(விட்டு வாசலில் குணசீலன் வண்டியுடன் நிற்கிருன்)

குணசீலன்.—(தனக்குள்) அடாடா! வண்டிக்குள் போடும் மெத்தையைப் போட்டுக்கொண்டு வர மறந்து

விட்டேன். நல்லவேளை ஸமயத்தில் நினைவிற்குவந்தது. எருதுகள் ஓடுவதற்குத் துடிக்கின்றன. வண்டியை நிறுத்தி விட்டுப் போகமுடியாது. என்னுடைய வீட்டிற்குப்போய் மெத்தையைப் போட்டுக்கொண்டு இதோ வந்துவிடு கிறேன். (வண்டியை யோட்டிச் செல்கிறான்)

(அந்த ஸமயத்தில் வீரஸேனனுடைய வேலைக்காரன் பத்மநாபன் வேறொரு பெட்டிவண்டியை ஓட்டிக்கொண்டு மாதவராயருடைய வீட்டுவாசலிற்கு வருகிறான்).

**பத்ம.**—(தனக்குள்) என்ன என்னுடைய முட்டாள் தனம்! எஜமான் அவஸரமாகப் பூஞ்சோலைக்கு வண்டி யைக் கொண்டுவரச் சொன்னதையே நினைத்துக் கொண் டிருந்தேன். வெற்றிலை புகையிலை யெல்லாம் எடுத்துக் கொண்டுவர மறந்துவிட்டேன். வாய்க்கு ஒன்றுமில்லாமல் பித்துப் பிடித்தமாதிரி இருக்கிறது. கொஞ்சதூரத்தில் ஒருகடை இருந்ததைப் பார்த்தேன். இதோ மாதவராய ருடைய மாளிகை இருக்கிறது. இதன் வாசலில் வண் டியை நிறுத்திவிட்டுக் கடைக்குப்போய் வருகிறேன்.

(வண்டியை மாதவராயர் வீட்டுவாசலில் நிறுத்திவிட் டுப் போகிறான். அந்த ஸமயத்தில் வஸந்தஸேனையும் கோமளாவும் அதற்கருகில் வருகிறார்கள்.)

**கோம.**—அம்மா! இதோ வண்டி தயாராக நிற் கிறது. ஏறிக்கொள்ளுங்கள். (வண்டியின் கதவைத் திறக் கிறாள்.)

**வஸ.**—(ஏறிக்கொண்டு) ஸரி! நீ உள்ளேபோ; நான் கதவை மூடிக்கொள்கிறேன். நகைகளைக் கொடுத்ததைப் பற்றி என்னுடைய ஸகோதரி கோபித்துக் கொள்ளாமற் பார்த்துக்கொள். அடிதோழி! நீ நம்முடைய வீட்டிற்குப் போய், நான் கூடியசீக்கிரம் வருவதாகச் சொல்.

**கோம.**—ஸரி! உத்திரவுப்படி செய்கிறேன். கதவை மூடிக்கொள்ளுங்கள்.

(வஸந்தஸேனை கதவைமூடிக்கொள்ளக், கோமளா வீட் டிற்குள் போய்விடுகிறாள்.

பத்மநாபன் திரும்பவருகிறான்)

(தனக்குள்) அப்பா! இந்த வெற்றிலே போடாவிட்டால் என்பாடு ஆபத்தாய் விடுகிறது! நான் கடைக்குப்போனதி னுல் காலதாமஸமாய்விட்டது. எஜமான் கோபித்துக் கொண்டு அடிக்கவருவான்; வேகமாய் ஓட்டலாம்.

(வண்டியில் ஏறிக்கொள்கிறான்)

(அந்த ஸமயத்தில் ஒருவன் அடியில் வருமாறு பறை சாற்றுகிறான்)

"துடும், துடும், துடும், துடும். சிறைச்சாலையில் விலங் கிடப்பட்டிருந்த பிரதாபன் என்னும் இடையன் காவற் காரனைக்கொன்றுவிட்டுத் தப்பி வெளியில் ஓடிவந்த வன் எங்கேயோஒளிந்து கொண்டிருக்கிறான். அவனைக் காண்போர் உடனே பிடித்து, அரசனிடம் ஒப்பு வித்தல்வேண்டியது. அப்படிச்செய்பவர்களுக்குப்பெருத்த வெகு மதியளிக்கப்படும். துடும், துடும், துடும், துடும்."

**பத்ம.**—(தனக்குள்). இங்கு என்னமோ பெருத்த குழப்பமா யிருக்கிறது. இந்தப் பறையின் சத்தத்தைக் கேட்டு எருதுகள் பயந்து துடிக்கின்றன. நான் வேக மாய்வெளியிற் போய்விடுவதே நல்லது.

(வண்டியை ஓட்டிக்கொண்டு போய்விடுகிறான்).

(அறுபட்ட சங்கிலியுடன் பிரதாபன் ஓடிவருகிறான்)

பிரதா.—(தனக்குள்)., அப்பா! இந்தச் சங்கிலியுடன் ஓடிவருவது எவ்வளவு கடினமாக இருக்கிறது! கொடுங் கோல்மன்னனுகிய இந்த அரசனுடைய சிறைச்சாலையிலிரு ந்து என்னை அந்தச் சசிமுகனே விடுவித்தான்! அவனல்ல வோ உண்மையான நண்பன்! இவ்வித அக்கிரமம் எந்தத் தேசத்தில் நடக்கும்! எவனே ஒரு ஜோசியன் நான் அரச னுகப் போகிறேனென்று சொல்லிவிட்டானும்! அதற்காக என்னைச் சிறையிலடைத்து விடுவதாம். நன்ருயிருக்கிறது!

ஜோசியன் சொல்லிவிட்டால் அதற்குநான் என்ன செய்வேன்? இதுஎன்பேரில் எப்படிக்குற்றமாகும்? நான் என் குடிசையில் சுயேச்சையாக இருந்தேன். இப்பொழுது காராக்கிரகவாசம் கிடைத்ததே இதுதான் கைகண்ட பலன். நான் விதிவசத்தினுல் அரசனுனல் என்விதியையல்லவோ சிறைச்சாலையிலடைக்க வேண்டும். அல்லது இந்த தேசத்தரசன் தன் அரசை இழக்க நேர்ந்த தன்னுடைய தலைவிதியை நினைத்தல்லவோ அழவேண்டும். நல்ல காரியம்செய்தான்!நான் இப்பொழுது எங்கேஒளிந்து கொள்கிறது! என்னைத்துரத்திக் கொண்டு பின்னுல் அநேகர் ஓடி வருகிருர்கள்! இந்தப் பெருத்த மாளிகையின் வாசல் திறந்திருப்பது என்னை உள்ளே வரும்படி அழைப்பதைப்போலிருக்கிறது. இதில் நுழைந்து கதவின் மூலையில் சற்று மறைந்து கொள்கிறேன். துரத்திக்கொண்டுவருபவர் போய் விடட்டும்.

(மாதவராயருடைய வீட்டின் கதவுமூலையில் மறைந்து கொள்கிருன். சற்றுநேரத்தில் குணசீலன் வாசலில் பெட்டி வண்டியுடன் வந்து நிற்கிருன்).

குண.—(உரக்கக் கூவி) அடி கோமளா! வண்டி வந்து விட்டது! வஸந்தஸேனை அம்மாளை வரச்சொல்! நேரமாகிறது. எஜமானர் பங்களாவிற் காத்துக்கொண்டிருப்பார்.

பிரதா.—(தனக்குள்) சரி! நல்ல வேளைதான். இதோ இந்த மூடுபெட்டிவண்டி நமக்காகத்தான் கடவுளால் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதுவும் பாக்கியந்தான். நல்லது ஒரு காரியம் செய்கிறேன். இதில் யாரோ ஒரு ஸ்திரீ ஏறிக்கொண்டு ஊருக்கு வெளியிலிருக்கும் பங்களா விற்குப் போகிருள் போலிருக்கிறது! நான் இதற்குள் ஏறி உட்கார்ந்து கொள்கிறேன். அவள் வந்து ஏறினுல், என்னை ஊருக்கு வெளியில் கொண்டுபோய் விடும்படி மன்ருடிக் கேட்டுக்கொள்கிறேன். (பிரதாபன் பின்புறமாக வண்டிக்குள் ஏறிக்கொள்கிருன். அவன் பேரிலிருந்த சங்கிலி

யின் ஓசையைக் கேட்ட குணசிலன், வஸந்தசேனை ஏறிக் கொண்டதாக நினைக்கிறான்).

குண.—இந்த வஸந்தஸேனையின் பேரில் எத்தனை ஆபரணங்கள்! கலீர் கலீரென்னும் சப்தம் எவ்வளவு தூரம் கேட்கிறது! ஐசுவரிய மிருந்தால் என் பெண்சாதிக்குக்கூட உச்சி முதல் உள்ளங்கால் வரையில் நகைகளை மாட்டிவிடு வேன். ஏழையா யிருக்கும் நம்முடைய எஜமானருக்கு இது நல்ல காலந்தான். நல்ல கறவைப் பசுவந்து வலையில் அகப்பட்டது. ஸரி! நேரமாகிறது; ஓட்டிக்கொண்டு போகிறேன்.

(வண்டியை ஓட்டிக்கொண்டு வேறொரு தெருவிற்கு வருகிறான். அங்கு காவற் கார்களின் தலைவன் வீரகனும் சில காவற் காரர்களும் வருகிறார்கள்).

வீரகன்.—ஆடே! ஓடி வாருங்கள்! சீக்கிரம் ஓடி வாருங்கள்! அந்தத் துஷ்டன் எங்கே போனபோதிலும் விடக்கூடாது. நீங்கள் கோட்டையின் நான்கு வாசல் களிற்கும் போய் வளைத்துக்கொள்ளுங்கள். அவன் எப்படி நகரைவிட்டு வெளியிற் போகிறான் பார்க்கலாம்.

(காவற்காரர்கள் போய் விடுகிறார்கள். இன்னொரு காவல் தலைவன் சந்தானகன் வேறு சிலருடன் இன்னொரு புறமாக வருகிறான்).

சந்தா.—ஓடுங்கள்! ஓடுங்கள்! நாம் இராஜ்யத்தை ஒரு நாளும் வேறொருவனுக்கு விடக்கூடாது. வீதிகள், தெருக்கள், சந்துக்கள், தோட்டங்கள் முதலிய எந்த இடத்தையும் பாக்கிவிடாமல் தேடுங்கள். அவனைக் கண்டு பிடிப்பவனுக்கு நல்ல ஸன்மானம் வாங்கித்தருகிறேன்.

வீர.—அவன் தனியாக எப்படித் தப்பித்துக்கொண்டு போகக்கூடும். அவனுடன் யாராவது துணைவர் இருந்திருக்கவேண்டும்.

சந்தா.—அவன் இராத்திரியே போயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் இதற்குள் மாயமாய்ப் பறந்தா போய்விட்டான்.

(குணசீலன் வண்டியை ஓட்டிக்கொண்டு வருகிருன்).

சந்தா.—ஆகா! அதோ ஒரு பெட்டிவண்டி போகிறதைப் பார்த்தாயா? அது யாருடையது, எங்கே போகிறதென்று விசாரி.

வீர.—அடே! வண்டிக்காரா! நிறுத்து; அது யாருடைய வண்டி? உள்ளே இருப்பது யார்? எங்கே ஓட்டிக்கொண்டு போகிருய்?

குண.—ஐயா! இது மாதவராயருடைய வண்டி! இதற்குள் வஸந்தஸேனே இருக்கிருர்கள். அவருடைய பங்களாவிற்கு அழைத்துப் போகிறேன்.

சந்தா.—ஸரி! அப்படியானல் போகட்டும்.

வீர.—என்ன! சோதனை செய்து பார்க்காமலா?

சந்தா.—ஏன் சோதனை செய்யவேண்டும்?

வீர.—என்ன நம்பிக்கையின் பேரில் விடுகிறது?

சந்தா.—மாதவராயருடைய யோக்கியதையே போதுமான நம்பிக்கையல்லவோ! அவர் ஸம்பந்தப்படும் விஷயத்தில் ஸந்தேகப்படலாமோ?

வீர.—மாதவராயராவது வஸந்தஸேனயாவது! நல்ல காரியம் செய்தாய்! நம்முடைய உத்தியோகம் ஸம்பந்தப்பட்டவரையால் எவராயிருந்தபோதிலும் நமக்கென்ன? நாம் கண்டிப்பாய் இருக்கவேண்டியதே நம்முடைய கடமை!

சந்தா.—நல்ல கடமையைக் கண்டுவிட்டாய்! மனுஷ்யாளுடைய யோக்கியதையைக்கூடப் பாராமலே நாம் நம் கடமையை நிறைவேற்றினல் தலைக்குக் கல் வந்து சேரும். அவருடைய பெருமை யென்ன! வஸந்தஸேனயின் மேன்மை யென்ன! அவர்கள் இருவரையும் அறியாதவர்கள் யார்? அவள் போகும் வண்டியை நாம் சோதனை செய்யவாவது! உனக்கென்ன பைத்தியமோ! அந்தக்காரியத்தை நான் செய்யமாட்டேன். இராஜனுக்கு நீ மிகவும் வேண்டியவன். எது ஸம்பவித்தபோதிலும் உனக்குப் பயமில்லை. நீயே வண்டிக்குள் சோதனைசெய்.

வீர.—அதென்ன அப்படிச் சொல்கிருய்? இராஜனுக்கு நீ வேண்டியவனில்லையோ? நீயே வண்டிக்குள் பார்; இதில் ஏதாவது துன்பம் நேரிட்டால் அதற்கு நான் உத்தரவாதியாயிருக்கிறேன். நீ அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்.

சந்தா.—அடே வண்டியை நிறுத்து!

பிரதா.—(தனக்குள்). இதுவும் துரதிர்ஷ்டமா! ஆகா. இவ்வளவு பிரயாசைப்பட்டுத் தப்பித்து வந்ததும் பயனில்லாமற் போய்விடும் போலிருக்கிறதுதே! என்னிடத்தில் ஒரு கத்திகூட இல்லையே! திரும்பவும் கைதியாகச் சிறைச்சாலையில் அடைபட்டிருப்பதைவிட உயிரை விடுவதே மேலானது. நல்லது வரட்டும். பீமசேனனைப்போல என்கைகளால் முஷ்டியுத்தம் செய்கிறேன்.

(சந்தானகன் வண்டிக்குள் எட்டிப் பார்க்கிருன்.)

பிரதா.—(கைகூப்பி) ஐயா! அபயம்! காப்பாற்றவேண்டும்! இப்பொழுது என்னுடைய உயிர் உம்முடைய கையிலிருக்கிறது,

சந்தா.—பயப்பட வேண்டாம்! அபயமென்றவரை அவசியம் காப்பாற்றவேண்டியது நமது கடமையல்லவா! (தனக்குள்) புருவானது இராஜாளிப்பட்சியினிடத்தில் தப்பித்து வேடனுடைய வலையில் விழுந்ததைப்போல இவன் இங்கே வந்து அகப்பட்டுக்கொண்டான். நல்லவேளையாக வீரசன் என்னைப்பார்க்கத் தூண்டினுன். இதுவும் தெய்வச் செயல்தான். (கதவைமூடிவிட்டு வீரகனிடத்தில் வந்து) வீரகா! நான் பிரதாபனை—இல்லை—வஸந்தஸேனையைப் பார்த்தேன். வண்டிக்காரன் சொன்னது உண்மைதான். மாதவராயர் காத்திருப்பார்; வண்டியைத் தாமஸப்படுத்தாமல், ஓட்டிக்கொண்டு போகட்டும்.

வீர.—சந்தானகா! கோபித்துக் கொள்ளாதே. நீ சொல்லிய விதத்திலிருந்து, எனக்கு ஒருவித ஸந்தேகமுதிக்கிறது.

சந்தா.—என்ன ஸந்தேகம்?

வீர.—வண்டியிலிருந்து நீ திரும்பியபோது உன் முகம் மாறுபட்டது. தவிர, முதலில் நீ பிரதாபன் என்ருய்;

பிறகு அதை வஸந்தஸேனையென்று மாற்றினாய். நீ இதைச் சொன்னபொழுது உன்னுடைய குரல் தடுமாறியது.

சந்தா.—நன்றாயிருக்கிறது! அதற்காகத்தான் நீயே போகவேண்டுமென்று முதலியே சொன்னேன்! நாம் பிரதாபனைத் தேடுகிறபடியால் அவன் அகப்படவில்லை என்று சொல்ல ஆரம்பித்தேன்; இதில் ஸந்தேகமென்ன? பெட்டி வண்டிக்குள் தனியாயிருந்த ஸ்திரீயை நான்பார்த்ததைப் பற்றி அவள் என்னைக் கடிந்து கொண்டாள். அதனால் என் முகம் மாறுபட்டிருக்கலாம்.

வீர.—அப்படியானால் அவளை நான் ஒருதரம் பார்க்கிறேன். அரசனுடைய கட்டளையை நிறைவேற்றும் நம்மைக் கோபித்துக் கொள்ளவாவது? நான் போகிறேன். என்ன செய்கிறாள் பார்க்கலாம்.

சந்தா.—அடே முட்டாள்! நான் பார்த்தாய்விட்டதென்று சொல்லுகிறேன். நீ எதற்காகத் திரும்பவும் பார்க்கிறது? என்னைவிட யோக்கியதையிலும், உண்மை பேசுவதிலும் நீ மேலானவனோ? என்னைப்பற்றிச் சந்தேகப்பட்ட நீ யாரடா?

வீர.—என்னைக் கேட்க நீ யாரடா? அடே வண்டிக்காரா! நிறுத்து; ஓட்டாதே; நான் வண்டியைப் பார்க்க வேண்டும்.

(வீரகன் வண்டிக்கருகில் போகிறான். சந்தானகன் அவனுடைய தலை மயிரைப்பிடித்து இழுத்துப் பின்புறமாகக் கீழேதள்ளி உதைக்கிறான்.)

வீர.—(கோபத்துடன் எழுந்து) அடே! இப்படிச் செய்ய உனக்கு அவ்வளவு துணிவா! இதோ இப்பொழுதே நான் இராஜனிடம் தெரிவித்து உன் சிரசை அடுத்த க்ஷணத்தில் வாங்காவிட்டால் நான் வீரகனல்ல.

(போகிறான்.)

சந்தா.—சீக்கிரம் போடா! நாயே! நீ சொல்வதை யார் கேட்கப்போகிறார்கள்! நீ மிகவும் பெரிய மனுஷ்யனென்று நினைத்துக்கொண்டிருக்கிறாயோ? (குணசீலனைப் பார்த்து)

வேகமாய் ஓட்டிக்கொண்டு போ; வேறு யாராவது தடுத்தால் வண்டியை வீரகனும் சந்தானகனும் சோதனை செய்தாய்விட்டதென்று தெரிவி. (வண்டியைத்திறந்து) அம்மா! வஸந்த ஸேனை! நீங்கள் இந்த அடையாளத்தை வைத்துக் கொள்ளுங்கள். (தன் வாளைப்பிரதாபனிடம்கொடுக்கிறான்.) (இரகஸியமாக) ஐயா! சந்தானகனை மறக்கமாட்டீரென்று நினைக்கிறேன். இதைப் பிரியத்தினால் கேட்கிறேனே யொழியப் பிரதி பலனைக் கேட்கவில்லை.

பிர.—என் பூர்வ புண்ணியத்தின் பலனே நீ இன்று எனக்கு உதவி செய்தாய். அந்த ஜோசியன் சொன்னது உண்மையானால் நீ எனக்கு உயிர் கொடுத்ததற்குத் தகுந்த கைம்மாறு அப்பொழுது செய்துவிடுகிறேன்.

சந்தா.—உமக்கு ஈசுவரன் உதவிசெய்து உம்முடைய இடர்களை நீக்குவான். நேரமாகிறது நான் போகிறேன்.

(வண்டியை மூடிவிட்டு வண்டிக்காரனுக்குச் சைகை செய்ய, அவன் வண்டியை ஓட்டிக்கொண்டு போய்விடுகிறான்.)

சந்தா.—(தனக்குள்) வீரகன் இப்பொழுது இராஜனிடம் போகிறான். அவனுக்கு முன்னால் நான் போய் அவன் பேரில் குற்றம் சாட்டுகிறேன். (போய்விடுகிறான்.)

---

# இரண்டாவது அங்கம்

---

## மூன்றாவது காட்சி

இடம்.—மாதவராயருடைய உத்தியானவனச் சோலை. மாதவராயரும் ஸோமேசனும் வருகிறார்கள். காலம்: காலை.

(தகதீரமாரி இந்தினே கைஸேபதில் ஹறயே— என்ற இந்துஸ்தானிப் பாட்டின் மெட்டு)

ஸோமே.—

அதிவேகமாகவோடுகின்ற மானை நோக்கு வீர்;
மதியை கவர்ந்து சென்றதே! என்னுடைய நண்டரே!

மாத.—

அகமோ குளிர்ந்த திங்கணுள்ள யாவு மின்பமே!
ஸுகமாக வாழலாகுமிங்கு ஸொர்க்க போகமே!

ஸோ.—

கனியே சொரிந்த மாபலா கதலி கொள்ளையாய்;
இனியேது தேவை? யோடு திங்கு தேனும் வெள்ளமாய்.

மாத.—

தவயோகியோரு மாசைகொண்டு தங்குகானிது.
பவமேகப் பாவம் போக்கும்; நன்மை யாவுமிங்குள.

இந்தச் சோலை எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? நம்முடைய மற்ற நண்பர்களைப் போலில்லாமல் இது ஒன்றுதான் நம்மிடம் எப்பொழுதும் ஒரேவிதமான அபிமானத்துடனிருக்கிறது. தனவந்தன், ஏழை யென்னும் பேதமில்லாமல் இது எப்பொழுதும் குளிர்ந்த நிழலையும், பழங்களையும், இன்பத்தையும் கொடுக்கிறது.

மாத.—உண்மைதான்; பகுத்தறிவைப்பெற்ற மனிதனைக்காட்டிலும், அதைப்பெருத மரஞ்செடி கொடிகளே மேலானவை; அதைப்பற்றி ஸந்தேக மென்ன ?

(ரதுவம் ச ஸுதா-என்ற கீர்த்தனையின் மெட்டு)
இராகம்—கதனகுதூகலம்.—தாளம் ஆதி
பல்லவி

ஸோமே.—

பலவாய்க் கூடின பறவை யாடின!
மலர்வாய் வண்டினம் மோகனம் பாடின!

மாத.—

குழலோ நாதமே குயிலின் கீதமே!
மழலை மொழியால் அஞ்சுகம் கொஞ்சின.

அநுபல்லவி

ஸோமே.—

செவிக்கோர் பெரும் விருந்தே யிது.
உவப்பெய்தினேனே. ஓகோவின்பமே!

மாத.—

பவம் போக்கிடும் இடமே இது.
தவம் புரிந்தோமோ யாமிங்கேகவே!

அதோ கல்மேடை இருக்கிறது; அதிற் கொஞ்சம் உட்கார்ந்து கொள்ளுங்கள். நேற்றிரவெல்லாம் உங்களுடைய தேகம் அஸௌக்கியமாயிருந்த தல்லவா? ஆகையால் உட்கார்ந்து சிரமபரிகாரம் செய்து கொள்ளுங்கள். ஆகா! அந்த வஸந்தஸேனையின் குணமே குணம்! தங்கள் பொருட்டு அவள் எவ்வளவு பாடுபட்டாள். இரவு முழுதும் அவளுக்கு நித்திரையே இல்லையே!

மாத.—(முகம் மாறுகிறது) நாம் காலையில் இங்கு வருவதற்குப் புறப்பட்டபொழுது அவள் அலுத்து நித்திரை செய்துகொண்டிருந்தாள். அவளை எழுப்பாமலும் அவளிடம் சொல்லிக் கொள்ளாமலும் வந்து விட்டேன். அவள் எழுந்திருந்து என்னைப்பற்றி எவ்விதமான எண்ணங்கொள்வாளோ தெரியவில்லை. விருந்தாக நமது மாளிகைக்கு வந்திருக்கும் அவளை நாம் அலட்சியம் செய்து வந்து விட்டோமென்று நினைப்பாளோ? கூடியசிக்கிரம் வந்து விடுவதாயும், அதற்குமுன் அவள் போகவேண்டுமென்றால், அவளை நமது பெட்டிவண்டியில் வைத்து இவ்விடம் அழைத்து வரும்படியாகவும் சொல்லிவிட்டு வந்தேன். நேரமாகிறது நாம் வீட்டிற்குப்போகலாம். அவள் ஒருவேளை நமது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள்.

ஸோமே.—அதோ பார்த்தீர்களா நமது பெட்டிவண்டி வருவதை?

மாத.—ஆம்! ஆம்! அவளே இங்குவந்து விட்டாள். வந்ததற்குப் பலனாக இந்த உத்தியானவனத்தைப் பார்த்துக் கொஞ்சநேரம் ஸுகமாயிருந்துவிட்டுப் போகட்டும் (தனக்குள்) இவளுடைய எண்ணம் நிறைவேறப்போகிறதில்லை. நான் என்ன செய்வேன்? பதிவிரதா சிரோன்மணியாகிய என் மனைவி கோகிலத்தின் மனதில் விஸனமுண்டானால், அதனால் நான் நாசமடைந்து விடுவேனல்லவா? ஆனால், இந்தப் பெண்மணி என்பொருட்டு அரசனையும் அலட்சியம் செய்து வெறுத்து, ஓரேமனதாய் என்னையே காதலித்திருப்பதை நான் எப்படி மாற்றுவேன்? இருக்கட்டும் எவ்

விதமாயினும் முயன்று இவள் மனதை மாற்ற முயன்று பார்க்கிறேன். (குணசீலன் வண்டியுடன் வருகிறான்)

ஸோமே.—அடே குணசீலா! வண்டியில் யார் வந்திருக்கிறார்கள்?

குண.—வஸந்தஸேனை யம்மாள்!

ஸோமே.—நேரமானதால் நீங்கள் வரவில்லை யென்று நினைத்து நாங்களே வீட்டிற்குவர நினைத்தோம்; நல்ல வேளையாய் ஸமயத்தில் வந்து சேர்ந்தாய்.

குண.—ஸ்வாமி! மன்னிக்கவேண்டும். வண்டிக்கு அடியில் போடும் மெத்தையைப்போட மறந்து வந்து விட்டேன். பிறகு நினைத்துக் கொண்டு வீட்டிற்குப்போய்த் திரும்பிவந்து, வஸந்தஸேனை அம்மாளை அழைத்து வந்தேன்; தாமஸத்திற்குநானே காரணம்; மன்னிக்கவேண்டும்.

மாத.—ஸரி போகட்டும். வஸந்தஸேனையைக் கீழே இறக்கிவிடுவோம்.

ஸோ.—(ஒருபுறமாக) நாம் இறக்கிவிடுவானேன். இவள் கால் சங்கிலியாற் கட்டப்பட்டிருக்கிறதோ ? ஏன் தானுக இறங்கக்கூடாதோ? இவளுக்கு எவ்வளவு மரியாதை?

மாத.—(வண்டியின் கதவைத்திறந்து பார்த்துச் சற்று அப்பால் விலகி) ஆகா ! என்ன ஆச்சரியம் ! யார் இது ? வஸந்தஸேனையைக் காணுமோ! கம்பீரமான தோற்றத்தையுடைய ஒரு புருஷனல்லவோ இருக்கிறான்.
(பிரதாபன் கீழே இறங்கி மாதவராயரை வணங்குகிறான்)

பிரதாபன்.—ஸ்வாமி! எதிர்பார்க்காத விருந்தாக நான் இந்த வண்டியில் வந்ததற்கு என்னை மன்னிக்கவேண்டும். ஆபத்திற்குப் பாபமில்லை யென்று நியாயமுண்டல்லவா? நான் இந்த வண்டியில் வந்திராவிட்டால் என் உயிரே போயிருக்கும்; ஆகையால் இந்தப் பிழையைத் தாங்கள் மன்னிக்கவேண்டும். (வணங்கிறான்)

குண.—(நடுநடுங்கி) இதென்ன ஆச்சரியம்! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதைப்போல, இவன் வண்டிக்

குள்ளிருந்து வருகிறனே! யார் இவன்? இதற்குள் எப்படி நுழைந்தான்? வஸந்தஸேனை எங்கே? (கையைப்பிசைந்து கொண்டு ஒரு மூலையில் நிற்கிறான்).

மாத.—(பிரதாபனைப் பார்த்து) அப்படியானல், நீ வண்டியில் வந்ததைப்பற்றிச் சந்தோஷமே! நீ யார்? உனக்கென்ன ஆபத்து நேர்ந்தது? இந்த வண்டியில் நீ எப்படி ஏறிக்கொண்டாய்?

பிர.—நான் மாடு மேய்க்கும் குலத்திற் பிறந்தவன்; என் பெயர் பிரதாபன்.

மாத.—ஓகோ! நீ தானே பிரதாபன்? போதும் போதும். ஸங்கதிகளெல்லாம் எங்களுக்குத் தெரியும். போகட்டும்; எப்படியாவது நீ உயிர் தப்பி வந்தாயே அதுவே போதும். உனது விதியே நட்பாயிருந்து உன்னை இங்கு கொண்டுவந்தது.

பிர.—நான் சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடி வந்தேன். என்னைப் பலர் துறத்திவந்தனர். கடைசியாகத் தங்கள் மாளிகைக் கதவின் மறைவில் ஒளிந்து கொண்டேன். இந்தப் பெட்டிவண்டி வந்தது. அதில் வந்து ஏறிக்கொண்டேன்.

குண.—இந்தச் சங்கிலியின் ஓசையை வஸந்தஸேனையின் ஆபரணங்களின் ஓசையென்று நினைத்து ஓட்டிக்கொண்டு வந்துவிட்டேன் முட்டாளாகிய நான்.

மாத.—குணசீலா! கவலைப்படாதே! நீ செய்தது பெருத்த உபகாரம்; கடவுளே இவ்விதமாக நடக்கும்படி சூழ்ச்சி செய்திருக்கிறர். நல்லது; இவரை இதிலேயே உட்கார வைத்து இவர் வீட்டிற் கொண்டுபோய் விட்டுவா! (பிரதாபன் பேரிலிருந்த சங்கிலியை விலக்கி நீக்குகிறர்).

பிர.—ஆகா! ஸ்வாமி! தங்களுடைய குணத்தைப் புகழாதவர்களே இல்லை. அதை நான் இப்பொழுதே நேரில் காண்கிறேன். நீங்கள் விலக்கிய சங்கிலியைக் காட்டிலும் அதிக வலியுடையதும் எப்பொழுதும் நீடித்து நிற்கக்கூடியதுமான வேறொரு சங்கிலியால் என் மனதைக் கட்டிவிட்

டர்கள். இந்த உதவியை நான் ஒருநாளும் மறக்கமாட்டேன். (வண்டிக்குள் உட்காருகிருன்) உத்தரவு பெற்றுக் சொள்ளுகிறேன்.

மாத.—ஸரி! ஸுகமாய்ப் போகலாம்; அடே குணசீலா! அரசனுடைய காவலர் வந்தாலும் வரலாம். சீக்கிரமாக ஓட்டிக் கொண்டுபோ.

(குணசீலன் வண்டியை ஓட்டிக்கொண்டு போகிருன்).

மாத.—நாம் இப்பொழுது செய்த காரியம் நமது அரசனுக்குத் தெரிந்தால், நம்மை உடனே சிரச்சேதம் செய்து விடுவான். இந்தச் சங்கிலியைக் கிணற்றிற் போட்டு விடுவோம். நேரமாகிறது. வஸந்தசேனை நம்முடைய மாளிகையிலேயே இருப்பாள். நாம் சீக்கிரம்போய் அவளை வீட்டிற்கு அனுப்புவோம் வா போகலாம்.

(போய் விடுகிருர்கள்).

---

# இரண்டாவது அங்கம்

---

## நான்காவது காட்சி

இடம்—உத்தியான வனத்திர்குச் சமீபத்திலிருந்த அரசனுடைய சோலை; மகிபாலன் காஷாயம் பெற்றுச் சந்நியாசியாக வருகிருன்.

காலம்.—மேற்படி.

மகி.—(தனக்குள்)

பண்—இராகம்-செஞ்சுருட்டி-தாளம் ஆதி.

1. தலையே நீ வணங்காய் தலை-மாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனை த தலையேநீவணங்காய்(தலை)
2. கண்காள் காண் மின்களோ! கடல் நஞ்சுண்ட கண்டன் றன்னை
எண்டோள் வீசிநின் ருடும் பிரான் றன்னைக் (கண்)
3. செவிகாள் கேண்மின்களோ-சிவன் எம்மிறை செம்பவளம்
எரிபோல் மேனிப்பிரான் திறமெப்போதும் (செ).

4. வாயே வாழ்த்து கண்டாய்-மத யானை யுரிபோர்த்துப்
பேய் வாழ் காட்டகத்தாடும் பிரான் தன்னை (வா)

5. கைகாள் கூப்பித் தொழீர் கடிமாமலர் தூவிநின்று
பைவாய் பாம்பரை யார்த்தபரமனைக் (கை)

6. நெஞ்சே நீ நினையாய் நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சாடும்மலை மங்கை மணாளனை (நெ)

7. தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான் முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுள்ளே (தே)

நான் சந்நியாசியான பிறகு என் மனக்கவலை எவ்வளவு குறைந்து விட்டது! தெரியாமலோ யாவரும் இந்த நிலைமையைப் புகழுகிறார்கள். புதிதாய்க் காவியில் நனைத்த இந்த வஸ்திரம் பளுவாக இருக்கிறது. இந்தச் சோலையில் ஒரு நீரோடை இருக்கிறது. அதில் இதைநனைத்துக்கசக்கி விட்டால் பிறகு இலேசாக இருக்கும். இந்தச் சோலை மனத்திற்கு எவ்வளவு இரமணீயமாக இருக்கிறது. ஆகையினாலே தான் இராஜாவின் மைத்துனன் வீரஸேனன் இதிலேயே எப்பொழுதும் குடியாக இருக்கிறான். அவனுக்குச் சந்நியாசி யென்றால்மிகவும் கோபமுண்டாவது வழக்கம். உடனே கத்தியால் அவனுடைய மூக்கை யறுத்துவிடுவான். நான் நீரோடையில் வஸ்திரத்தைக் கசக்கிக்கொண்டு அவன் கண்ணிற் படாமல் அப்பாற் போய்விடுகிறேன்.

(சற்று தூரம்போகிறான்.)

(வீரஸேனன் உருவிய வாளுடன், தன் தோழன் சேவகன் முதலியோருடன் வருகிறான்)

வீர.—(மகிபாலனை நோக்கி) அடேதுஷ்டா! நில்லடா! எங்கே போகிறாய்? இதை விட்டு நகர்ந்தால் முள்ளங்கியின் இலையை ஒடிப்பதைப்போல, உன் தலையை முறித்தெறிவேன்.

தோழன்.—வேண்டாம், வேண்டாம். சந்நியாசியை வருத்துவது பெருத்தபாவம். இருக்க இடமற்ற வர்களுக்கு நிழலைத்தரமரங்களையும், இங்கு வருபவர்களுக்கு இன்பந்தர வேண்டுமென்னும் எண்ணத்துடன் இந்தச் சோலையையும்

ஏற்படுத்திய நீங்கள் இப்படிச் செய்வது அடாது. வேண்டாம். ஏழையை வீண் ஹிம்சிக்கவேண்டும். பாவம்.

மகி.—ஐயா! இந்த நகரத்திற்கே நீர் இரக்ஷகன். யாதொரு புகலுமில்லாத இந்த ஏழைச் சந்நியாசியின்பேரில் கோபிக்க வேண்டாம்.

வீர.—இந்தப் போக்கிரி என்னை வைவதைக் கேட்டாயா!

தோழ.—எப்பொழுது வைதான்?

வீர.—இதோ இப்பொழுது என்னை க்ஷவரகன் என்று வைதானே!

தோழ.—பலே! உங்களுக்கு நல்லகாது! "மதுரைக்குவழி எதென்ருல் குதிரைக்குச்சுழி நன்ருயில்லை" என்பதைப் போலிருக்கிறதே. இவன் தன்னை மன்னிக்கும் படியல்லவோ உங்களை நயந்து வேண்டிக்கொள்ளுகிருன்.

வீர.—அடே! முண்டனம்! உன்தலை எப்பொழுது மொட்டையாயிற்று? உன் புருஷன் இறந்து எத்தனை நாளாயிற்று? மொட்டையடித்துக் கொண்டால்தான் சந்நியாசியோ? அப்பொழுதுதான் சுவர்க்கம் நேரில் தெரியுமோ? முட்டாள்! உனக்கு இந்தச் சோலையில் என்னவேலை? இங்கே என்ன செய்து கொண்டிருக்கிருய்?

சந்நி.—ஐயா! இந்த நீரோடையில் என்னுடைய காஷாய வஸ்திரத்தை அலம்பும் பொருட்டு வந்தேன். வெறெதற்கும் வரவில்லை.

வீர.— ஓகோ! இந்த இழிதொழிலுக்காகத்தான் இந்தச் சோலை ஏற்பட்டதோ? உன் ஆபாசக்கந்தையைக் கழுவ இதுதான் இடமோ?

சந்நி.—பிரபு! நான் இப்பொழுது ஸமீப காலத்திலே தான் சந்நியாசியானேன். தெரியாமற் செய்த பிழையை மன்னித்துக்கொள்ளவேண்டும்.

வீர.—ஏன் அப்படிச் செய்தாய்? ஏனடா போக்கிரிப்பயலே நீ பிறக்கும்பொழுதே சந்நியாசியாய்ப் பிறக்கவில்லை?

(அடிக்கிருன்.)

சந்நி.—ஹா! ஈசுவரா! இதெல்லாம் உனக்கு ஸம்மதியானால் ஸரிதான்!

தோழன்.—(விலக்கி விட்டு) அடே சந்நியாசி! ஓடிப்போ! இங்கே நிற்காதே. (வீரசேனன் உதைக்கிறான், சந்நியாசி போய்விடுகிறான்.)

வீர.—அடே! இந்தச் சோலைக்கு வரும்போதெல்லாம் எனக்கு அந்த வஸந்தஸேனையின் நினைவே உண்டாகிறதே! என்ன செய்வேன்? நம்முடைய உடம்பில் உண்டாகும் புண் எப்படி நோகுமோ, அப்படி யல்லவோ அவளுடைய நினைவு என்னை வருத்துகிறது! இந்தச் சோலைக்கு அவளை அழைத்துவர எத்தனை நாட்களாய் முயன்றும் அது பலிக்கவில்லையே! அவள் இங்குவந்து விட்டால், ஒன்று அவள் என்சொற்படி இணங்கவேண்டும்; அல்லது அவளை இவ்விடத்திலேயே வெட்டிப்புதைத்து விடவேண்டும்.

தோழ.—(தனக்குள்). ஒருநாளும் அவ்விதம் நடக்கப்போகிறதில்லை.

(வஸந்தஸேனை உள்ளே இருந்த பெட்டிவண்டியை ஓட்டிக்கொண்டு பத்மநாபன் வருகிறான்)

வீர.—அடே! பத்மநாபா! வந்தாயா?

பத்ம.—ஸ்வாமி! வந்தேன்.

வீர.—ஏன் வந்தாய்?

பத்ம.—வண்டி கொண்டுவர உத்தரவானதே.

வீர.—எங்கே வண்டி?

பத்ம.—அதிலேதான் உட்கார்ந்திருக்கிறேன்.

வீர.—எருதுகள்?

பத்ம.—இதோ நிற்கின்றனவே.

வீர.—நீ?

பத்ம.—பிரபு! நாமெல்லோரும் ஒன்றாய்த்தானே இருக்கிறோம்.

வீர.—அப்படியானால் சந்தோஷம் ஓட்டு உள்ளே!

பத்ம.—எந்த வழியில் ஓட்டுகிறது?

வீர.—அதோ தெரிகிறதே இடிந்த சுவர்; அதன்பேரில் ஓட்டு.

பத்ம.—அது எப்படிமுடியும்? எருதுகளின் உயிர் போய்விடும், வண்டி ஒடிந்து நொருங்கிப்போம், என்னுடைய கழுத்தும் முறிந்துபோம்.

வீர.—அந்தக் குட்டிச்சுவருக்கு அவ்வளவு தைரியமா? நான் இராஜாவின் மைத்துனனென்பது உனக்குத் தெரியாது? எருதுகள் செத்தால் வேறு வாங்கிவிடலாம். பழைய வண்டி ஒடிந்தால் புதுவண்டி வருகிறது. உன்னுடைய கழுத்து ஒடிந்தால் வேறொரு கழுத்து வாங்கித்தருகிறேன். பயப்படாதே ஓட்டு.

பத்ம—.ஸரிதான். பழையவற்றிற்குப் புதியவை சம்பாதித்து விடலாம். எனக்குப்பதில் என் பெண்சாதி பிள்ளைகள் எப்படிச் சம்பாதிப்பார்கள்?

வீர.—அதற்கு நான் இருக்கிறேன். நீ ஒருவன் போனால் ஒன்பது மனிதரை நான் உன் மனைவிக்குச் சம்பாதித்துத் தருகிறேன். பயப்படாதே! அதெல்லாம் உனக்கென்ன கவலை? ஓட்டு.

பத்ம.—ஸரி! அப்படியானால் ஓட்டுகிறேன்! இதோ வந்துவிட்டேன். நல்லவேளை ஒரு கெடுதலும் உண்டாகவில்லை.

வீர.—போக்கிரிப்பயலே! முதலில் பொய் சொன்னாயல்லவா?

பத்ம.—நிஜந்தான் மகாப் பிரபு!

வீர.—(தோழனைப்பார்த்து) அடே! நீ முன்னால் ஏறிக்கொள்.

தோழ.—ஸரி! அப்படியே ஏறுகிறேன்.

வீர.—நில் நில்! நானல்லவோ வண்டியின் சொந்தக்காரன். உனக்கா முதல் மரியாதை? நான் முதலில் ஏறுகிறேன். நீ ஏறக்கூடாது.

தோழ.—நீங்கள் கட்டளை யிட்டபடியால் நான் ஏறப்போனேன். மன்னிக்க வேண்டும்.

வீர.—இருக்கலாம். ஆனால் முதலில் நான் ஏறும்படி நீ என்னை வேண்டிக் கொண்டிருக்கவேண்டும்.

தோழ.—மகாப்பிரபு! தயவுசெய்து ஏறிக் கொள்ளுங்கள்.

வீர.—அதுதான் ஸரி! ஏறுகிறேன். (வண்டிக்கதவைத்திறந்து ஏறி உடனே வேகமாய்க்கீழே இறங்கித் தோழன் கையைப்பிடித்துக்கொண்டு) ஐயையோ! மோசம் வந்தது; பேயோ! பிசாசோ! திருடனோ! எதுவோ வண்டியிலிருக்கிறது! திருடனாயிருந்தால் நம்முடைய ஸொத்தைக் கொள்ளையடித்துவிடுவான். பேயா யிருந்தால் நம்மை இப்படியே விழுங்கிவிடும்.

தோழ.—என்ன ஆச்சரியம்! திருடனாவது பேயாவது வண்டிக்குள் வரவாவது!

வீர.—நீயே போய்ப்பார். அது ஒரு பெண்ணைப்போ லிருக்கிறது.

வஸ.—(தனக்குள்) இதென்ன மோசமா யிருக்கிறதே! இங்கே அந்தப்பாதகன் வீரஸேனனல்லலோ இருக்கிறான்! எவ்விடத்திலும் என் துரதிஷ்டம் முன்னால் வந்து நிற்கிறதே! இவனால் என்ன துன்பம் ஸம்பவிக்குமோ தெரியவில்லையே! ஈசுவரா! என்னசெய்வேன்?

தோழ.—(உள்ளேபார்த்து) இதென்ன அதிசயம் புலிக்கூண்டிற்குள் இந்தமான் எப்படி வந்தது? பேடன்னம் தன் அழகிய ஜோடியை விடுத்துக் காக்கையை நாடி இங்கு வந்ததோ? இது என் மனதிற்கு நன்றாகத்தோன்றவில்லையே! இலாபத்தின் பேரிலேயே கண்ணுங்கருத்துமாயுள்ள, உன் தாயின் உபத்திரவத்தைப் பொறுக்க முடியாமல் அருவருப்புடன் வந்தாயோ? பிறரிடத்தில் வெறுப்பைக் கொண்டிருந்தாலும் உங்கள் ஜாதி வழக்கம் அதை வெளியிற் காட்டுகிறதில்லை. அப்படியே நீயும் செய்யத் துணிந்தாயோ?

வஸ.—ஐயா! என்னைப்பற்றி அப்படி நினைக்க வேண்டாம். என் தாய் மூலமாக இவர் எவ்வளவோ ஐசுவரியத்

த்தைத் தருவதாய்ச் சொல்லி யனுப்பி எவ்வளவோ முயன்றும் அதற்கு நான் சிறிதும் இணங்கவில்லை. வண்டி தவறி இதில் ஏறிவிட்டேன்போ லிருக்கிறது! அதனால் இந்தப் பெரும்பிழை நேர்ந்தது. நீர்தான் இந்த ஸமயத்தில் எனக்கு உதவி செய்து என்னைக் காப்பாற்றவேண்டும். ஐயா! உமக்கு அநேககோடி நமஸ்காரம். மிகவும் புண்ணியமுண்டு.

தோழ.—பயப்படவேண்டாம். நான் பார்த்துக்கொள்ளுகிறேன். ஒரு நொடியில் இந்த மடையனை நான் ஏமாற்றி விடுகிறேன். (வீரசேனனிடம் வந்து) ஆம்! இதில் உண்மையில் ஒரு பெரும்பேய்தானிருக்கிறது! அப்பாடா! எவ்வளவு பயங்கரமா யிருக்கிறது!

வீர.—இருக்கட்டும். அதுபேயா யிருந்தால் உன்னை விழுங்காமல் எப்படிவிட்டது?

தோழ.—உங்களை விட்டமாதிரி என்னையும் விட்டது. அது எப்படியாவது போகட்டும். இங்கே இருந்து நம்முடைய அரண்மனைவரையில் இருபக்கங்களிலும் குளிர்ந்த நிழலைத்தரும் மரங்களைக் கொண்ட பாட்டை இருக்கிறது. நாம் ஸுகமாக நடந்துபோகலாம் வாருங்கள்.

வீர.—ஏன் நடக்கவேண்டும்?

தோழ.—நடந்தால் நமக்கும் தேகாரோக்கியம்; களைத்துப்போன எருதுகளுக்கும் ஒருவித ஆறுதல்.

வீர.—ஆனால் அப்படியே செய்வோம்! பத்மநாபா! வண்டியைப் பின்னால் ஓட்டிக்கொண்டுவா! (சற்று நடக்கிறான்) சே! நில்! நில்! நான் ஒருநாளும் நடந்ததே கிடையாதே. இன்று ஏன் நடப்பேன்? நான் யார் தெரியுமா? நான் இராஜாவின் மைத்துனனல்லவா? ஏழையைப் போல நான் பாட்டையின் வழியாக நடப்பதா? சீ! அது அவமானம். ஜனங்கள் என்னைப்பற்றி என்ன சொல்லிக் கொள்ளமாட்டார்கள். நான் வண்டியிலேதான் வர வேண்டும்.

தோழ.—(தனக்குள்) இந்த ஆபத்திற்கு என்ன செய்கிறது? மார்க்கமொன்றுந் தோன்றவில்லையே! இருக்கட்

டும் ஒன்று செய்யலாம் (பலமாக) நான் விளையாட்டுக்குச் சொன்னேன். நீங்கள் அதை இப்படித்தானு நம்புகிறது? நீங்களாவது நடப்பதாவது! தங்களை நடக்கச்சொல்ல யார் துணிவார்கள்? வண்டியிலிருப்பது பேயல்ல. வஸந்தஸேனை தங்களைப் பார்க்க வந்திருக்கிறுள். அந்த ஸந்தோஷத்தினுல் வேடிக்கையாக ஒரு பொய் சொன்னேன்.

வீர.—அப்படியா! பலே! இன்றைக்கு எனக்கு நல்ல வேட்டை-தான்! அன்றைக்கு ஓடினவள் இப்பொழுது தானுக வந்திருக்கிறுள். பார்த்தாயா என்னுடைய 'ஸாமர்த் தியத்தை? நான் அனுமானைப் போல எவ்வளவு அழகா யிருக்கிறேன் பார்த்தாயா?

தோழ.—ஸந்தேகமென்ன! உங்களுக்கு நீங்களே இணை!

வீர.—அதனுலேதான் இணையே இல்லாத இந்தத் தேவரம்பை என்னை நாடி வந்திருக்கிறுள். நான் அன்று இவளுக்கு அதிருப்தியாக நடந்து கொண்டேன். அதைப் பற்றி இவளுக்கு மனதில் வருத்த மிருக்கலாம். நான் போய் இவள் காலில் விழுந்து மன்னிப்புக்கேட்டுக் கொள்ளு கிறேன்.

தோழ.—நல்ல யோசனை! அப்படியே செய்யுங்கள்.

வீர.—(போய் முழந்தாளிட்டு வணங்கி) ஏ! தெய்வ மாதா! நான் சொல்வதைக் கேட்டருளவேண்டும்! தாமரை மலர் போன்ற உன் கண்களால் என்னைப்பார். ஏ கந்தர்வ ஸ்திரியே! உன்பேரில் நான் கொண்டமோகத்தினுல் நான் செய்த குற்றத்தை மன்னித்து என்னை உன் அடிமையா கவும் வேலைக் காரனுகவும் ஏற்றுக் கொள்ளவேண்டும். என் கண்மணி!

வஸ.—போம் போம்! உம்முடைய உபசரணைகளெல் லாம் எனக்கு முற்றிலும் வெறுப்பைத் தருகின்றன. எழுந்து அப்பால் நடவும்.

வீர.—(கோபத்துடன் எழுந்து) ஆகா! தெய்வத்தைக் கூட ஒரு நாளும் வணங்கி யறியாத நான் உன்னை வணங்கி

னேன். அதற்குப் பதிலாக நீ இப்படியா அவமதிக்கிருய்? அடே பத்மநாபா! இவளை எங்கிருந்து வண்டியில் ஏற்றி வந்தாய்?

**பத்ம.**—ஸ்வாமி! உண்மையைச் சொல்லுகிறேன். நான் வந்தபோது வெற்றிலை பாக்கை எடுத்துக் கொண்டு வர மறந்துவிட்டேன். வண்டியை மாதவராயருடைய வீட்டின் வாசலிற் சற்று நிறுத்திவிட்டு, ஸமீபத்திலிருந்த கடைக்குப் போய், வெற்றிலை முதலிய வற்றை வாங்கிக் கொண்டு வந்தேன். அந்த ஸமயத்தில் அவர் வீட்டிற் குள்ளிருந்து இந்த ஸ்திரீ வந்து தவறுதலாய் வண்டியில் ஏறிக் கொண்டாற்போ லிருக்கிறது!

**வீர.**—தவறுதலாகவா வந்தாள்? ஆனல் என்னை நாடி வரவில்லையா? அடி வஸந்தசேனை! கீழே இறங்கு. இந்த வண்டி என்னுடையதென்பது தெரியாதோ? நான் மாத்திரம் உனக்குப் பிடிக்கவில்லை. என் வண்டி மாத்திரம் நன்ரு யிருக்கிறதா? இறங்கு கழுதை; இல்லாவிட்டால் எட்டி உதைப்பேன்.

**வஸ.**—ஐயா! மன்னிக்கவேண்டும். நான் மாதவராய ருடைய சோலைக்குப் போகிறேன். இது அவருடைய வண்டியென்று ஏறிவிட்டேன்.

**வீர.**—அந்த நித்திய தரித்திரனிடம்போக என் வண்டியை உபயோகித்துக் கொண்டாயோ நாயே? இறங்கு கீழே!

**வஸ.**—எது உமக்கு இகழ்வாகத்தோன்று கிறதோ அது எனக்கு மிகவும் மேன்மையாகத்தோன்றுகிறது. அவரவர்களின் விருப்பம்! எல்லாம் தலைவிதியின்படி நடக்கிறது.

**வீர.**—

**விருத்தம்—இராகம். மோகனம்.**

வேசையே வஸந்த சேனை! பிடிவாதம் விடுத்தா யில்லை,
காசையே மதிக்குந் தாஸி யகத்தினி லுதித்துங் கற்பி
லாசையே வைத்தா யென்று மன்னியர் வதனங் காணக்
கூசுமோர் சீர்மை பெற்ற குலமக ளெனவே சொற்ருய்!

ஜடாயு பலியின் மனைவியினுடைய தலை மயிரைப்

பிடித்திழுத்ததைப் போல இதோ உன்னைவெளியில் இழுத்துவிடுகிறேன் பார்.

தோழ.—பிரபு! பொறுத்துக் கொள்ளவேண்டும். அழகிய கூந்தலிற் கையை வைக்கவேண்டாம். மரத்தைச்சுற்றிக் கொண்டிருக்கும் புஷ்பக்கொடியை யாராவது பிடித்திழுத்து அறுப்பார்களா? இவளைவிட்டுவிடுங்கள். நான் கீழே இறக்கிவிடுகிறேன். இவள் தேவையான இடத்திற்குப் போகட்டும். நாம் வண்டியில் ஏறிக்கொண்டு அரண்மனைக்குப்போவோம். (அவளைக்கீழே இறக்கி விடுகிறான்.)

வீர.—(தனக்குள்)ஆகா! இவள் என்னிடம் எவ்வளவு அவமதிப்பாய்ப் பேசுகிறாள்! இவள் பேரில் என்மனதில் எழுந்து பொங்கும் கோபத்தை எப்படி அடக்குவேன்? இவளுக்கு ஒரு அடியாவது, குத்தாவது, உதையாவது கொடுத்து அவமதிக்காவிட்டால் என்கோபம் தணியாது. இவள் உயிரை வாங்கவேண்டும். அடே நண்பா! இவளை உடனே கொன்றுவிட்டு மறுவேலை பார்.

தோழ.—(காதை மூடிக்கொண்டு) ஆகா! நன்றாய்ச் சொன்னீர்கள்! இந்த மங்களபுரிக்கே பெருமையாய்விளங்கி ஒப்பற்ற அழகு, நற்குணநல்லொழுக்கம் முதலியவற்றைக் கொண்டுள்ளவளும் யாதொருகுற்றமும் செய்யாதவளுமான இந்த யௌவன மங்கையையா கொல்லுவது? இருந்திருந்து ஸ்திரீஹத்தியா செய்யவேண்டும்! இதனால் ஆயுட்கால முழுதும் நான் அனுபவிக்கவேண்டிய மனோ வேதனையையும் இதனாலுண்டாகும் பாபமுமாகிய பெரிய ஸமுத்திரத்தையும் எந்தத் தெப்பத்தைக் கொண்டு கடப்பேன்?

வீர.—பயப்படாதே; உனக்கு நான் ஒரு தெப்பம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்கிறேன். சிக்கிரம் ஆகட்டும்; தனிமையான இந்த இடத்தில் உன்னையார் பார்க்கப்போகிறார்கள்?

தோழ.—பிரம்மனுடைய சிருஷ்டிப்பொருள்கள்யாவும், அவற்றிற்கு மத்தியிலுள்ள இடைவெளியும், இந்த வனத்திலுள்ள தேவதைகளும், சூரியனும், பஞ்சபூதங்களும், நமது

மனமும், எங்கும் நிறைந்த கடவுளும் நாம் செய்யுங்காரியத்திற்குச்சாட்சியல்லவோ? இவைகளுக்குத் தெரியாமல் நாம் இந்தக்காரியத்தை எப்படிச்செய்யமுடியும்?

வீர.—அப்படியானல் இவள்பேரில் ஒரு துணியைப் போட்டு மறைத்து விடுகிறேன். பிறகு வேலையை முடித்து விடு. இவளை ஒருவரும் பார்க்கமுடியாது.

தோழ.—இது பைத்தியந்தான்.

வீர.—நீ ஒரு முட்டாள்! உனக்கொன்றுந்தெரியாது. நீ போ அப்பால். பத்மநாபனைச் செய்யச் சொல்லுகிறேன். அடே பத்மநாபா! எங்கே ஆகட்டும். உனக்குத் தங்கக்காப்பு இனும் தருகிறேன்.

பத்.—மகாப்பிரபு! ஸந்தோஷம். கொடுங்கள் கையில் அணிந்து கொள்கிறேன்.

வீர.—உனக்கு இன்று என்னுடன் முதல்தரமான போஜனமளிக்கச் செய்கிறேன்.

பத்.—வஞ்சனையில்லாமல் வயிறு நிறைய போஜனம் செய்கிறேன். அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்.

வீர.—உன்னை வேலைக்காரர்களுக்கெல்லாம் எஜமானனாக்குவேன்.

பத்.—அப்படியானல் தங்கள் தயவினல் நான் பெரிய மனிஷ்யனுகிறேன்.

வீர.—நான் சொல்வதைச் செய்யவேண்டும்.

பத்.—தடையென்ன! சொல்லுங்கள் அவசியம் செய்கிறேன்.

வீர.—இந்த வஸந்தஸேனையை உடனேகொன்றுவிடு.

பத்.—மகாப்பிரபு! இதுதானு ஒருபிரமாதம். இதைத் தவிர நீங்கள் எந்தக்காரியம் செய்யச் சொன்னபோதிலும் நான் செய்யாமலிருப்பேனு? அப்படி இருந்தால் என்னைக் காட்டிலும் நன்றிகெட்டவன் யார்?

வீர.—அடே! போக்கிரிப்பயலே நான் உன்னுடைய எஜமானல்லவா?

பத்.—ஸ்வாமி! உண்மைதான். தாங்கள் என் சரீரத்திற்கு எஜமானே. ஆனால் என்னுடைய பாவபுண்ணியத்திற்கு நான்தானே எஜமான். இதைச்செய்ய என் மனமும் கையும் துணியவில்லை. மன்னிக்க வேண்டும்,

வீர.—என்னுடைய வேலைக்காரனாகிய நீ வேறு எவனுக்கு இப்படிப் பயப்படுகிறாய்?

பத்.—வருங்காலத்திற்கு.

வீர.—வருங்காலமென்பவன் யாரடா அவன்?

பத்.—அவன் நம்முடைய நன்மை தீமைகளுக்குத் தகுந்த விதம் நமக்குப்பதில் செய்பவன்.

வீர.—நன்மை செய்தால் என்ன பதில் கிடைக்கும்?

பத்.—தங்களுடையதைப்பொன்ற செல்வமும் சிறப்பும் கிடைக்கும்.

வீர.—தீமைக்கு?

பத்.—என்னைப்போல அடிமைத்தொழில் செய்வதே அதற்குப்பலன். ஆகையால் மேலும் தீமை செய்ய மாட்டேன்.

வீர.—உயர்ந்த ஸ்தானத்திலிருப்பவரை அது அடிமையாக்கும். நீதான் அடிமையாயிருக்கிறாயே. உன்னை அது என்ன செய்யப்போகிறது? பயப்படாதே. நான்சொல்வதைச்செய்.

பத்.—நல்ல ஸ்திதியிலிருப்பவர் அடிமையானால் அடிமை இன்னும் எந்தவிதமான தாழ்ந்த நிலைமைக்குப் போக வேண்டுமோ! அதை நாம் ஊகித்துக்கொள்ளவேண்டாமா?

வீர.—(அடிக்கிறான்) போக்கிரி! மறுத்து மறுத்துப் பேசுகிறாயா? உனக்கு அவ்வளவு துணிபா?

பத்.—என்னை அடித்தாலும்சரி! கொன்றாலும் சரி! செய்யத்தகாத காரியத்தை நான் ஒருக்காலும் செய்யமாட்டேன்.

வஸ.—(தோழனைப்பார்த்து) ஐயா! இந்த ஆபத்தில் நீர்தான் என்னைக்காப்பற்ற வேண்டும். (வணங்குகிருள்).

தோழ.—மகாப்பிரபு! கோபிக்கவேண்டாம். பத்மநாபன் சொல்வது ஸரியான விஷயம். எவ்வளவோ புண்ணியம் செய்து பெற்ற இந்த மேன்மையை ஏன் இழக்கப் பார்க்கிறீர்கள்?

வீர.—(தனக்குள்) இந்த இரண்டு கழுதைகளும் இதைச் செய்ய அஞ்சிப் பின் வாங்குகிருர்கள். இராஜாவின் மைத்துனனுகிய என்னை எதிர்காலம் என்னசெய்யப்போகிறது. (கோபத்தோடு) அடே பத்மநாபா! என் முன்பாக நிற்காதே! போ அப்பால் (உதைக்கிருன்)

பத்.—இதோ போய்விட்டேன். (அப்பால் போகிருன்)

வீர.—(தன் அங்கவஸ்திரத்தை இறுகக்கட்டிக்கொண்டு) அடிவஸந்தஸேனே! வா இப்படி; விடு உன்பிராணனை; அவளைப் பிடிக்கப்போகிருன். தோழன் அவனைத்தடுக்கும் பொருட்டு பிடிக்கிருன்; அவன் கீழேவிழுகிருன்).

வீர.—(எழுந்து) அடே! துஷ்டா! உன் எஜமானனைக் கொல்லவா நினைக்கிருய்? இவ்வளவுகாலம் என்னுடைய அன்னத்தைத் தின்று வளர்ந்த நீ எனக்கு விரோதமாக நடக்கிருயல்லவா? (தனக்குள்) இவன் இருந்தால் காரியம் முடியாது. இவனையும் அனுப்பிவிடுகிறேன்.—அடே! பைத்தியக்காரா! நான் சொன்னது இன்னதென்பதை நீ ஸரியாக உணரவில்லையே! இதுதானு உன்னுடைய புத்திசாலித்தனம்! இவ்வளவு உயர்ந்த குலத்திற்பிறந்த நான் இந்தக் கேவலம் இழிவான காரியத்தைச் செய்ய உண்மையில் விரும்புவேனு வென்பதை அறிந்து கொள்ளக்கூடவில்லையே! இவள் பயந்துகொண்டு என் இச்சைக்கு இணங்கட்டுமென்று இப்படிச் சொன்னேன். இவ்வளவுதானு உன் புத்தி கூர்மை?

தோழ.— உயர் குலத்திற்குத் தகுந்த குணவொழுக்க

மில்லா விட்டால், மேலான பிறப்பைப்பற்றிப் புகழ்ந்து ஆத்ம ஸ்துதி செய்து கொள்வதிற் பயனென்ன ?

வீர.—உண்மை யென்னவென்ருல் நீஇங்கிருப்பதிஞல் இவள் வெட்கப்படுகிருள். கொஞ்ச நேரத்திற்கு எங்கள் இருவரையும் தனியாக விட்டுப்போ. அந்த முட்டாளும் எங்கேயோ ஓடிப்போய் விட்டான். நீ போய் அவனையும் தேடி அழைத்துவா. அதற்குள் இவள் இணங்கி விடுவாள்.

தோழ.—(தனக்குள்) அப்படியும் இருக்கலாம். நான் சற்றுநேரம் அப்பால் போகிறேன். ஐயா ! உத்திரவுப்படி நான் போகிறேன்.

வஸ.—(அவன் வழியைமறைத்து) ஐயா! என்னை இங்கு தனியாக விட்டுப்போகவேண்டாம். உம்மைத்தவிர இங்கு எனக்கு வேருெரு துணையுமில்லை. காப்பற்றவேண்டும்.

தோழ.— நீ எதற்கும் பயப்படவேண்டாம். நானிருக்கிறேன்.( வீரசேனனைப்பார்த்து, ஐயா! வஸந்தஸேனையை உம்மிடம் ஒப்புவித்துப் போகிறேன். நான் திரும்பி வரும்போது ஜாக்கிரதையாக இவளை என்னிடம் ஒப்பு விக்க வேண்டும்.

வீர.—ஸரி! அப்படியே ஆகட்டும்.

தோழ.—உண்மை தாஞ ?

வீர.—ஸத்தியம்.

தோழ.—(தனக்குள்) இவன் ஒருவேளை என்னைஏமாற்றிஞலும் ஏமாற்றி விடுவான், நான் மறைவிலிருந்து இவன் செய்வதைக் கவனிக்கிறேன்.

(போய் மறைந்துகொள்கிருன்.)

வீர.—(தனக்குள்) போய்விட்டான்; இனி இவளை ஒழித்து விடுகிறேன். (நான்கு பக்கங்களையும் சுற்றிப்பார்க்கிருன்) ஓகோ! இவன் ஒளிந்து கொண்டிருக்கிருனே! அப்படியா! என்னை ஏமாற்றவா பார்க்கிருய்? உன்னைநான் ஏமாற்றுகிறேன் பார்! (வீரஸேனன் புஷ்பங்களை எடுத்துத் தன்பேரில் அணிந்து கொள்கிருன்.) வஸந்தஸேனை என்

ணருகில்வா கண்மணி! ஏன் என்பேரில் உனக்கு இவ்வளவு கோபம்! வாவா! போதும்! என் கண்ணுட்டியல்லவோ! எங்கே ஒரு முத்தங்கொடு.

தோழ.—(தனக்குள்) ஸரி! அவள் பேரில் காதலைத் தான் காட்டுகிருன்; ஸந்தேகமில்லை! நான் இனிமேல் நிற்பது பிசகு; போகிறேன். (போய்விடுகிருன்)

வீர.—அடி! வஸந்தஸேனே! உனக்கு எவ்வளவு ஐசுவரியம் தேவையானபோதிலும் ஸரி! மழையைப்போல வருஷிக்கிறேன்; உன்னேயே என் குலதெய்வமாக மதித்துக் கொண்டாடுகிறேன். என் தலைப்பாகையை உன் காலடியில் வைத்து வணங்குகிறேன். எங்கே என்னருகில்வா!

வஸ.—

விருத்தம். இராகம் - தோடி.

ஐயனே! வீணி லென்னை யலைத்துநீர் வருத்து கின்றீர்!
தையலர் மனதை நீவிர் சற்றெனு மறியீர் போலும்.
வையென யுரப்பி யென்ற னன்பினைப் பெறுத லாமோ?
கைதவ நினையா திந்த ஆசையை விடுப்பீ ரின்றே.

ஐயா! நீர் எவ்வளவுதான் தெரிவித்த போதிலும் எனக்கு உம்மீது சற்றும் விருப்பமுண்டாகவில்லை. உம்முடைய செல்வம் யாருக்குவேண்டும்? தாமரைப்புஷ்பத்தின் இதழ்களில்சேறுபடிந்து அழுக்கடைந்திருந்த போதிலும், வண்டுகள் அந்தப்புஷ்பத்தை விட்டகலாதல்லவோ! அதைப்போல ஏழ்மைத்தன்மை யோடு கூடி யிருந்தபோதிலும், யோக்கியதாபட்சம் யாரிடத்திலிருக்கிறதோ அந்தப்புமானையே என்மனம் நாடுகிறது! அவருக்குநான் ஒருக்காலும் வஞ்சகம் செய்யநினைக்க மாட்டேன். என்னைவிணில் வருத்துவதில் என்னபயன்?

வீர—ஆகா! அப்படியா! கேவலம் நித்திய தரித்திரனுகிய மாதவராயனை என்னைக் காட்டிலும் அதிகமாய் விசேஷித்தா பேசுகிருய்? உனக்கு இவ்வளவுஅகம்பாவமா? அவன்பேரில் உனக்கு அவ்வளவு ஆசையா?

வஸ.—என் ஹிருதயத்திலேயே குடியிருக்கும் அவரை நான் எப்படி மறப்பேன்?

வீர.—நீ சொல்வது நிஜந்தானு? ஸமீபத்தில்வா. உன்னுடைய ஹிருதயத்தில் அவன் இருக்கிருனுவென்று பார்க்கிறேன். அடி! வஸந்தஸேனே! பிச்சையெடுக்கும் பிராம்மணனுடைய பிரியஸகியல்லவோ நீ!

வஸ.—ஆகா! கர்ணுமிருதமான மொழிகள்! என்னுடைய பெருமையே பெருமை! அவரைப்பற்றி நீர் பேசப் பேச என் மனதில் பிரம்மானந்த முண்டாகிறது. இன்னம் பேசலாம்.

வீர.—உன்னை இந்தஸமயத்தில் பாதுகாக்க அவனுல் முடியவில்லை. அந்தப்பேடியை நீ மிகவும் புகழ்ந்துபேசுகிருயே!

வஸ.—அவர் இங்கிருந்தால் எனக்கு இந்த அவமானம் நேர அவர் பார்த்துக் கொண்டிருப்பாரா? எனக்கு மாத்திரமல்ல! இன்னும் யாராயிருந்த போதிலும், அநாதைகளுக்குத் தீங்கு ஸம்பவித்தால் தன் உயிரைக் கொடுத்தாயினும் அவர்களைக் காப்பாற்றுவாரே!

வீர.—ஆகா! அவன் அவ்வளவு பலசாலியா! அவனல்ல, அவன் பாட்டன் வந்தபோதிலும் உன்னைத் தப்புவிக்கமுடியாது. பாஞ்சாலியை இராமர் பிடித்ததைப்போல இதோ உன்னைநான் பிடித்துக் கொல்லுகிறேன் பார்.

(அவளுடையகழுத்தைப் பிடித்துக் கொள்ளுகிருன்)

வஸ.—ஐயோ! இங்குஒருவரு மில்லையா? இங்குஅநாதையாகத் தவிக்கிறேனே!! இந்தக் கொலைபாதகன் என்னை ஹிம்சிக்கிருனே! ஹே! பிராணதுரையே! நீர் எங்கிருக்கிறீரோ தெரியவில்லையே! என்னுடைய மனோரதம்இன்னம் நிறைவேறவில்லையே! இதற்குள் என்னுடைய உயிர்போய் விடும்போலிருக்கிறதே! ஒருநாளாயினும் உம்மோடு கூடி வாழவில்லையே! இப்பொழுது இறந்தால் என்மனம் வேகுமோ! ஹே! சுந்தராங்கா! இங்குவர மாட்டீரா! இந்தக் கொலைபாதனுக்குத் தக்க சிட்சை விதிக்கமாட்டீரா! ஏ! பட்சிகளா! ஏ வண்டினங்களா! நீங்களாயினும் என்பேரில் இரக்கங்கொண்டு உடனே அவரிடம் போய்ச் சொல்லி அழைத்துவர மாட்டீர்களா? என் மனதைக் கொள்ளை

கொண்ட என் துரையை நான் எப்படிமறந்து இறப்பேன்? நேற்றிரவெல்லாம் தங்களுக்குப்பணிவிடைசெய்த அந்தப் பாக்கியம் திரும்பக்கிடைக்குமா வென்று நினைத்திருந் தேனே ! ஹா ! தெய்வமே! நீ தான் ஏழையைக் காப்பாற்ற வேண்டும்.

வீர.— இன்னம் அவனைநினைக்கிருயா? எங்கே இனி மேல் நீ வாயைத் திறந்து பேசுவதைப்பார்க்கிறேன். (அவ ளுடைய கழுத்தை இரண்டு கைகளாலும் இறுகப்பிடித்து மூச்சுவிடமுடியாமல் அழுத்துகிருன். வஸந்தஸேனை பேச முடியாமல் துடிதுடித்துக் கீழேவிழுகிருள்.)

வீர.— ஓகோ! இன்னம் துடிக்கிருயா? ஒழிந்து போ! வேசிக் கழுதை ! (கைகளால் மேலும் தொண் டையை இறுகப்பிடித்து அழுத்துகிருன். அவள் மூர்ச்சித் துக் கீழேவிழுகிருள்)

வீர.—ஒழிந்தாள் வேசி! முடிந்தது காரியம். என் கவலை யும் தீர்ந்தது! இந்தப் பாபமூட்டை இந்த வஞ்சக மண் டபம் கடைசியில் அழிந்தது. என்னைக் கையாலாகாத வனென்று நினைத்தாய்? இப்பொழுது எப்படி இருக்கிறது? நான் இராஜாவின் மைத்துனன்! என்னுடைய தயவிற்கு எத்தனையோ ஸ்திரீகள் காத்திருக்கிருர்கள். நான் எவ்வளவு நயந்து வேண்டியும் என்னை அவமதித்தா பேசுகிருய்! நீ எந்த விஷயத்தில் மற்ற ஸ்திரீகளைக் காட்டிலும் உயர்ந்த வள்? கந்தருவ ஸ்திரீயோ? அல்லது தேவரம்பையோ? எனக்கு உபயோகப்படாத உன் தேகம் பூச்சி புழுக்க ளுக்கு உபயோகப்படட்டும். எவ்வளவோ பெரிய மனுஷ்யனை எனக்கு ஒரு முத்தங் கொடுக்க மாட்டே னென்ருயே. இனி நாய் நரிகளெல்லாம் உன்னைத் தேவையான வரையில் முத்தமிடப் போகின்றன. இங்கு எவருமில்லை. நான் உன்னை அனுபவித்து ஆனந்தப்பட நீ சம்மதிக்கவில்லை யல்லவோ! நீ அருமையாய் வளர்த்த உன்னுடைய மாமிஸத்தை நாய் நரி கழுகுகள் ஸந்தோஷ மாய்த் தின்பதையாயினும் மறைவிலிருந்து பார்த்து

ஆனந்த மடைகிறேன். இந்தப் பிணத்தை யாருமறியாமல், இங்கே உதிர்ந்து கிடக்கும் சருகுகளால் மறைத்து விடுகிறேன்.

(மிகுதியிருந்த அவளுடைய ஆபரணங்களைக் கழற்றி அவளைச் சருகுகளால் மறைத்து விடுகிறான்).

(தோழனும் பத்மநாபனும் வருகிறார்கள்).

தோழ.—மகாப் பிரபு! பத்மநாபனை இதோ அழைத்து வந்தேன். வஸந்தஸேனையை ஒப்புவித்தேனே! அவள் எங்கே இருக்கிறாள்? காணோமே!

வீர.—அவள் அப்பொழுதே போய்விட்டாளே!

தோழ.—எங்கே போனாள்?

வீர.—உனக்குப் பின்னால் வந்தாளே!

தோழ.—அந்தத் திக்கிலேயே அவள் வரவில்லையே!

வீர.—நீ எந்தத் திக்கிலிருந்தாய்?

தோழ.—நான் கிழக்குத் திக்கிலிருந்தேன்.

வீர.—அப்படியானால் ஸரிதான்; அவள் நெற்குத் திசையிலல்லவோ போனாள்.

தோழ.—நான் தென்புறத்திலும் போனேனே!

வீர.—அப்படியானால் அவள் வடக்குப் பக்கமாய்ப் போயிருக்க வேண்டும்.

பத்.—நான் வடக்குப் பக்கத்திலேயே இருந்தேனே! ஒருவரையும் நான் காணவில்லையே!

வீர.—மிகுதி இருப்பது மேற்குத் தானே! ஸரிதான் அப்படித்தான் போனாள். இப்பொழுதுதான் நினைவிற்கு வருகிறது! இந்தச் சோலையில் சூரியனிருக்குமிடந் தெரியாமையால் கிழக்கு மேற்குத தெரிகிறதில்லை.

தோழ.—என்ன இது? நீங்கள் சொல்வது எனக்கொன்றும் விளங்கவில்லையே! நன்றாய்த் தெரிவியுங்கள்.

வீர.—உன் தலை, என் கால், சாட்சியாகச் சொல்லுகிறேன். நீ கவலைப்படவேண்டாம். உனக்குப் பயமென்பதே தேவையில்லை, நான் அவளை அனுப்பிவிட்டேன்.

தோழ.—எங்கே அனுப்பினீர்கள்?

வீர.—அவள் இந்த உலகத்தையே விட்டுப் பொய் விட்டாள்.

தோழ.—இதென்ன ஆச்சரியம்!

வீர.—ஆச்சரியம் ஒன்றுமில்லே. இந்தச்சருகின்கீழ் சயனித்துக் கொண்டிருக்கிருள் பார். (பிரித்துக் காட்டுகிருன்)

தோழ.—ஆகா! என்ன அக்கிரமம்! (மூர்ச்சித்து விழுகிருன்)

வீர.—இதென்ன இவனும் இறந்து விட்டாணுவென்ன? அவளிடத்தில் இவனுக்கென்ன இவ்வளவு பிரியம்! இவர்களிருவருக்கும் ஒரு வேளே ஸ்நேக மிருக்குமோ? ஆம் ஆம்! அப்படித் தானிருக்கவேண்டும்.

பத்.—(தோழனே) ஐயா! எழுந்திரும்! இத்தனேக்கும் நானே காரணம்! இவளே நானல்லவோ இங்கு அழைத்து வந்தேன். இந்தப் பழி எனக்கல்லவோ வந்து சேரும்.

தோழ.—(மிகவும் விஸனித்து) ஐயோ வஸந்தஸேஞு! அன்பாகிய ஆறு வறண்டுபோய் விட்டதோ? அழகானது, இந்தத் தேசத்தைவிட்டுத் தனது இருப்பிடத்திற்குப் பறந்து போய் விட்டதோ? ஆகா! என்ன சாந்தகுணம்! என்ன குதூகலமான மொழி! குழந்தையைப்போல விளேயாடுவாயே! இன்பங்களே நிறைந்த பெட்டியைத் திருடன் உடைத்து விட்டானே! இந்தப் பழி வீண்போகுமோ? ஸ்திரீஹத்தி தோஷம் விலகுமோ? அழகான யௌவன ஸ்திரீயை யாதொரு குற்றமுமின்றிக் கொல்வதென்ருல், தெய்வம் இந்த ஊரிலிருக்குமோ? தலேயில் இடிவிழாதோ? (தனக்குள்) இந்தக் கொலேபாதகன் இந்தக் குற்றத்தை என்பேரில் சுமத்திஞலும்சுமத்துவான். இங்கிருப்பது பிசகு நான் போய்விடுகிறேன். (வீரசேனன் அவனேப் பிடித்துக் கொள்ளுகிருன்) என்னே ஏன் தடுக்கிறீர்! உம்முடன் நான் தோழனு யிருந்தது போதும்; நான் போகிறேன். இனி உமக்குத் தகுந்த வேறெருவனே வைத்துக் கொள்ளும். நான் போகிறேன்.

வீர.—அப்படியா! நீ மிகவும் ஸாமர்த்தியசாலியாயிருக்கிறாயே! இந்த ஸ்திரீ ரத்னத்தை இங்கு கொன்றதுமன்றி நான் கேட்டால் என்னைத் தூஷிக்கிறாயா?

தோழ.—அழகு! அழகு! யோக்கியமான காரியம்! இவ்வளவு மேலான குணம் யாருக்கு வரும்?

வீர.—வாவா! கோபிக்காதே! கோபம் பொல்லாதல்லவா. அதில் இவ்விதமான காரியம் செய்வது மனிஷ்ய ஸுபாவந்தானே! உனக்குத் தேவையான பொருள் தருகிறேன். வா போகலாம்.

தோழ.—ஐயா! போதும்! உம்முடைய வெகுமதியும் வேண்டாம்; உம்முடைய நட்பும் வேண்டாம்! இனிமேல் நாமிருவரும் விரோதிகளாக இருப்போம். அவமானத்தை உண்டாக்கும் நட்பு எனக்குத் தேவையில்லை. நாமிருவரும் இனி ஒருக்காலும் சேருவதில்லை. இத்துடன் நமது ஸ்நேகம் ஒழிந்தது.

வீர.—பிரிய நண்பா! என்ன இப்படிக் கோபித்துக் கொள்கிறாய்! நேரமாகிறது; ஸ்நானத்திற்குப் போவோம் வா!

தோழ.—நீர் குற்றமற்றவராயிருந்தபோது உமக்கு நான் எவ்வளவோ பணிந்து நடந்தேன். குற்றவாளியை இனி நான் ஒருக்காலும் பணியமாட்டேன். அதிலும் ஸ்திரீயைக் கொன்றவனோடா நட்புக் கொள்ளவேண்டும். ஆகா! வஸந்தஸேனை! உன்னுடைய நற்குணத்திற்கு நீ அடுத்த ஜென்மத்திலாவது ஸுகம் பெறுவாய். உன்னைக் கொலை செய்ததற்கு ஈசுவரன் எப்படியும் பழிவாங்கிவிடுவான்.

(போகிறான்)

வீர.—கொலை செய்துவிட்டு எங்கே ஓடப்பார்க்கிறாய்? இராஜனிடம் போகவேண்டும். வா என்னுடன். அங்கு வந்து உன்னுடைய நியாயத்தைச் சொல்லித் தப்பித்துக் கொள்.

(பிடிக்கிறான்)

தோழ.—முட்டாளே போ அப்பால். (கோபத்தோடு தன் கத்தியை உருவுகிறான்).

**வீர.**—(அஞ்சிப் பின்வாங்கி) ஸரி ஸரி! உனக்கு அச்சமாயிருந்தால் நீ போய்விடு. இங்கே நிற்காதே!

**தோழ.**—(தனக்குள்). நான் இந்த நகரத்திலிருந்தால், இந்தப் படுபாவி என்பேரில் இந்தக் குற்றத்தைச் சுமத்தி என்னைப் பலதுன்பங்களுக்கு ஆளாக்குவான். நான் இந்த ஊரையே விட்டுப்போய் பிரதாபனுடன் சேர்ந்து கொள்ளுகிறேன். (போய்விடுகிருன்)

**வீர.**—அடே பத்மநாபா! என்ன! நீகூடவா பயப்படுகிருய்?

**பத்.**—ஸ்வாமி! இது மிகவும் கொடியவிஷயமல்லவா?

**வீர.**—நீயும் என்னைத்தூஷிக்க ஆரம்பித்தாயா? இதோ இந்த ஆபரணங்களை வெகுமதியாக எடுத்துக்கொள். நான் நன்ருய் அலங்காரம் செய்து கொண்டிருக்கையில் நீயும் எனக்குத்தகுந்தபடி இருக்கவேண்டாமா? நேரமாகிறது நீ வண்டியை ஓட்டிக்கொண்டு அரண்மனைக்குப்போ; நான் பின்னுல் வருகிறேன்.

**பத்.**—அப்படியே செய்கிறேன் (போய்விருகிருன்)

**வீர.**—இந்தஇரண்டு கழுதைகளையும் அரண்மனைக்குப் போனவுடன் ஒருவருமறியாமல் சிறைச்சாலையில் அடைத்து விடுகிறேன். பிறகு இந்த இரகஸியம் எப்படி வெளியில் வரப்போகிறது. இவள் உயிர் போய்விட்டதோ அல்லது இன்னம் நன்ருய்க் கொல்லவேண்டுமோ பார்க்கிறேன். ஸரி! ஒழிந்துப்போய் விட்டாள்! சருகுகளை நன்ருய்ப்போட்டு மூடுகிறேன்.— நான் உடனே நியாயாதிபதியினிடம் போய் வஸந்தஸேனையின் ஆபரணங்களை அபகரிக்கும் பொருட்டு மாதவராயன் இவளைக் கொன்று விட்டதாகப் பிராது கொடுக்கிறேன்! நல்ல யோசனை! நல்ல தந்திரம்! மாதவராயனும் ஒழிந்துவிடுவான். ஸரி போகிறேன். (போய்விடுகிருன்)

(சந்நியாசி ஈரவஸ்திரத்துடன் வருகிருன்)

(தனக்குள்) சனியன் ஒழிந்தான்! இவ்விதமான துஷ்டர்களை அந்தக் கடவுள் என் படைக்

கிருனே தெரியவில்லை ! சந்நியாசி யென்றால் இவனுக்கு எவ்வளவு கோபமுண்டாகிறது ! இவன் போகட்டுமென்று இதுவரையில் ஒரு மறைவிலிருந்து, இப்பொழுதே என்னுடைய காஷாயவஸ்திரத்தைக் கசக்கினேன். இவன் இனித் திரும்பி வரமாட்டான். வஸ்திரத்தை இந்த மரக்கிளையில் கட்டி உலர்த்துகிறேன். சே ! குரங்குகளிருக்கின்றன; கிழித்தாலும் கிழித்துவிடும். கீழேதரையில் காயவைத்தால் மண் ஒட்டிக்கொள்ளும். என்ன செய்கிறது ? அதோ இலைச் சருகுகள் முட்டாகக் குவிந்திருக்கின்றன. அதன் பேரில் காயவைக்கிறேன். (வஸந்தஸேனைகிடந்த இடத்தின் பேரில் துணியை விரித்துவிட்டு அருகில் உட்காருகிருன்).

ஆகா! இந்த உலகத்தில் என்ன இருக்கிறது!

திருவருட்பா இராகம்: தோடி.

விளக்கறியா இருட்டறையில் கவிழ்ந்து கிடந்தழுது
விம்முகின்ற குழவியினு மிகப்பெரிதுஞ் சிறியேன்
அளக்கறியாத் துயர்க்கடலில் அழுந்தி நெடுங்கால
மலைந்தலைந்து மெலிந்துதுரும் பதனின் மிகத் துரும்பேன்
இளக்கறியாக் கொடுமையெலாம் இளைத்த பழுமரத்தேன்
கெடுமதியேன் கடுமையினேன் கிறிபேசும் வெறியேன்
களக்கறியாப் புவியிடைநா னேன்பிறந்தே னந்தோ!
கருணைநடத் தரசே! நின் கருத்தை யறியேனே.

ஆழ்ந்து நினைத்துப்பார்த்தால் இவ்வுலகில் துன்பத்தையும் துயரத்தையுந்தவிர வேறொன்றுமில்லை. இங்கு நாமிருப்பதும் அநித்தியம். இந்த அற்பவாழ்வும் மோசம் நாசம் கம்பளிவேஷமாக இருக்கிறது சே! இது யோக்கியர்களிருப்பதற்கேதகாத உலகம். கொஞ்சங் கொஞ்சமாய் அகாரத்தைக் குறைத்து தேகத்தை ஒடுக்கிக் கடைசியில் என் பிராணனை விட்டுவிடுவதே நல்லமுடிவு. ஈசுவரனுடைய திருவடியையே ஸதாகாலமும் நினைத்த வண்ண மிருப்பதே நமக்குப் பெருத்த தனம். அதுவே பாக்கியம். அதுவே பேரானந்தம். அதுவே யாவும். இந்த உலகில் எனக்கு யாதொரு பற்றுமில்லை. யாரைவிட்டுப்போவதில் எனக்கு விஸனம்? ஒருவருமில்லை. ஆனால் எனக்குக் கடைசியாக உதவிசெய்த அந்த வஸந்த

ஸேனையை மாத்திரம் நான் ஒரு நாளும் மறந்ததில்லை. அவளுக்கு ஏதாவது ஒரு பதில்உதவி செய்துவிட்டாற்போதும்; என்னுடைய கடைசி விருப்பம் நிறைவேறிப்போம். அவளுக்கு எவ்விதமான உதவி செய்யப் போகிறேன் (திடுக்கிட்டு) இதென்ன ஆச்சரியம்! இந்தத் துணியின் கீழ் புஸ் என்று பெரு மூச்சுவிடும் சத்தத்தைப்போலக் கேட்டதே! ஒரு வேளை ஸர்ப்பம் இதற்குள்ளிருக்கிறதோ என்னமோ தெரியவில்லையே! ஸர்ப்பம் கடித்து நான் இறந்தால் நல்லது தான். (ஒரு கையை வெளியில் நீட்டுகிருள்) ஓகோ! ஸர்ப்பத்தைப்போலத் தானிருக்கிறது. சே! ஸர்ப்பமல்ல! தந்தத்திஞல் செய்யப்பட்ட கையைப் போலிருக்கிறதே! (வஸ்திரத்தை எடுத்துவிட்டு) இதென்ன ஆச்சரியம்! ஒரு ஸ்திரீயின் அழகிய கரமல்லவோ தெரிகிறது! இது விநோதமாக இருக்கிறதே! (சருகுகளை விலக்குகிருன்) ஆகா! என்ன காந்தி! ஒரு பெண்மணி யல்லவோ படுத்துக் கொண்டிருக்கிருள்! என்ன வஞ்சகமோ தெரிய வில்லையே! எந்தப் பாதகன் இப்படிச் செய்தானே தெரியவில்லையே. உயிர் இருக்கிறது. (நன்ருய்ப் பார்த்து) ஆகா! எனக்கு உதவி செய்த உத்தமியான வஸந்தஸேனையைப் போலிருக்கிறதே. என் மனதின் பொய்த் தோற்றமோ! சீ! இல்லை இல்லை! அந்தமாது சிரோன்மணியே இவள்! இங்குவந்த காரணமென்ன? அதோ திரும்புகிருள்! கண்ணைத்திறக்கிருள்!

(தண்ணீர் வேண்டுமென்று சைகைசெய்கிருள்.)

சங்.—(தனக்குள்) சமீபத்தில் நீரோடை இருக்கிறது ஜலத்தை எப்படி எடுத்துக் கொண்டுவருகிறது? திருவோடு கூட என்னிடத்தில் கிடையாது. இதோ மாமரமிருக்கிறது. அதின் இலைகளைத் தொன்னையாகத் தைத்து அதில் எடுத்து வருகிறேன்.

போய் ஜலங்கொணர்ந்து அருந்துவித்து ஈரத்துணியால் முகத்தைத்துடைத்து அதனுல் விசிறுகிருன்

வஸ.—(எழுந்து) ஸ்வாமி நமஸ்காரம்! இந்த உதவி செய்த தங்களை ஈசுவரன் அவசியம் காப்பாற்றுவார்.

சங்.—அம்மா! நான் யாரென்பது உங்கள் நினைவிற்கு வரவில்லையா?

வஸ.—(யோசனைசெய்து) அடையாளந் தெரியவில்லையே! சொல்லுங்கள்.

சங்.—முன்னொரு நாள் இரண்டு சூதாடிகளுக்குப் பத்து ரூபாய் கொடுத்து என்னை மீட்டது நினைவிற்கு வருகிறதா?

வஸ.—ஆம் ஆம்! ஞாபகமிருக்கிறது! அதற்குப்பின் காஷாயம் வாங்கிக் கொண்டாற் போலிருக்கிறது!

சங்.—ஆம். நீங்கள் இவ்விதம் இங்கிருக்க வேண்டிய காரணமென்ன? எந்தப் பாதகன் இப்படிச் செய்தான்? விவரத்தைத் தெரிவிக்கலாமோ?

வஸ.—எனக்கு இப்பொழுது மிகவும் களைப்பாய் இருக்கிறது. எல்லாவற்றையும் என்வீட்டிற்குப் போய்ப் பிறகு தெரிவிக்கிறேன். தயவு செய்து என்னை என் வீட்டிற் கொண்டு போய்ச் சேர்த்தால் உமக்குப் பெருத்த புண்ணியமுண்டாகும்.

சங்.—அப்படியே செய்யலாம். மெதுவாக நடந்து வாருங்கள். அருகிலுள்ள நீரோடைக்கு முதலிற்போய் ஜலம் அருந்தி மரத்தடியிற் சிறிது உட்கார்ந்து சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்கள். பிறகு மாளிகைக்குப் போகலாம். மெதுவாக நடங்கள்; இப்படி வாருங்கள். (போகிறார்கள்.)

---

# மூன்றாவது அங்கம்

## முதலாவது காட்சி

(இடம்: நியாயஸ்தலம். நியாயாதிபதி, வக்கீல்கள், விசாரணை கர்த்தா, முதலியோர் உட்கார்ந்திருக்கிறார்கள். வெளியில் ஸேவகர்கள் கட்டியத் தடிகளுடன் நிற்கிறார்கள்.)

விசா.—அடே ஸேவகா! பிராது மனுக்கள் கொடுக்க வந்திருப்பவர்களைக் கூப்பிடு.

ஸேவ.—பிராது, மனுக்கள், கொடுக்கிறவர்கள் கொடுக்கலாம். (மூன்றுதரம் உரக்கக்கூவுகிறான்)

(வீரஸேனன் வருகிறான்)

வீர.—அடே! ஸேவகப்பயலே! நான் ஒரு பிராது கொடுக்க வேண்டும். எங்கே நியாயதிபதி?

ஸேவ.—ஸ்வாமி! இங்கேயே இருங்கள். நான்போய் நியாயாதிபதி யிடம் தெரிவிக்கிறேன்.

வீர.—ஆகா! அப்படியா! ஸேவகப்பதரே! நான் யார் தெரியுமா? இராஜாவின் மைத்துனனல்லவா! நான் இவ்விடத்திலா நிற்க வேண்டும்?

ஸேவ.—ஸ்வாமி! கோபித்துக் கொள்ள வேண்டாம்; இதோ வந்து விட்டேன். (போகிறான்) நியாயாதிபதிகளே இராஜாவின் மைத்துனர் ஒரு பிராது கொண்டு வந்திருக்கிறார்.

நியா.—இராஜாவின் மைத்துனரா? தூமகேது என்னும் வால் நட்சத்திரம் தோன்றுவது ஏதாவது ஒரு தேசத்தின் நாசத்தைக் காட்டு மென்பார்கள். இந்தப் பிரபு வந்தது யாருடைய கேட்டிற்கு அறிகுறியோ தெரியவில்லை. இருக்கட்டும்; இன்றையதினம் வேறு அவசரமான சில விசாரணைகளிருப்பதாகவும், நாளைக்கு வரும்படியும் தெரிவித்தனுப்பு.

ஸேவ.—(வெளியில் வந்து) மகாப் பிரபு! இன்றைய தினம் வேறு அவஸரமான சிலவிசாரணைகளிருப்பதால் நாளையதினம் வரும்படி உத்திரவானது; நாளைக்கு வாருங்கள்.

வீர.—என்னுடைய விசாரணையை விட மற்றது அவஸரமோ? இந்தநியாயாதிபதி முழுமுட்டாள். என் ஸகோதரியின் புருஷனாகிய இராஜனிடம் போய்த் தெரிவித்து இந்தக் கழுதையை வாலறுத்து ஓட்டி விடுகிறேன். (போகிறான்)

ஸேவ.—ஸ்வாமி! ஒரு க்ஷணம் பொறுங்கள்; நான்

போய் நியாயாதிபதியிடம் மறுபடியும் தெரிவித்துப் பார்க்கிறேன் (உள்ளேபோய்) நியாயாதிபதிகளே! அவர் மிகவும் கோபித்துக் கொள்ளுகிறார். இன்றைக்குத்தன் பிராதை விசாரிக்காததைப் பற்றி இராஜா விடத்தில் தெரிவித்து தங்களை வேலையிலிருந்து நீக்கி வேறு நியாயாதிபதியை நியமிக்கப் போகிறாராம்.

நியா.—பாம்பு அற்பமான ஜெந்துவாயிருந்தபோதிலும் அதன் விஷம் எவரையும் கொல்லுமல்லவோ! நல்லது அவரை வரச்சொல்! அவர் பிராதை விசாரிக்கலாம்.

ஸேவ.—(வெளியில்போய்) மகாப்பிரபு! வரலாம், உங்கள் பிராதை இன்று விசாரிக்கப்போகிறார்கள்.

வீர.—ஓகோ! முதலில் விசாரிக்க முடியாது; இப்பொழுது முடியும்; நல்லது! இவன் என்னிடத்தில் கொஞ்சம் பயம் வைத்துக்கொண்டிருக்கிறான். நான் சொல்வதைச் செய்கிறானா இல்லையா பார்க்கலாம்.

நியா.—ஐயா! அப்படி உட்கார்ந்து கொள்ளும்.

வீர.—ஸந்தேகமென்ன? இந்தஸ்தலமே என்னுடையது. நான் உட்காருவதற்கு உம்முடைய உத்தரவு வேண்டுமோ? எங்கே உட்கார விருப்பமோ அங்கே நானே உட்காருகிறேன். (விசாரணைகர்த்தாவிடம்போய்) இங்கேதான் உட்காருவோம். இல்லை, இல்லை இன்னம் உயரத்தில் உட்காருவோம் (நியாயாதிபதிக்குப் பக்கத்தில் உட்காருகிறான்)

நியா.—ஐயா! உம்முடைய பிராது என்ன? சொல்லிக் கொள்ளும்.

வீர.—சொல்லும் ஸமயம் எனக்குத்தெரியும். அதிருக்கட்டும். நீர் முதலில் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும், நான் யார்தெரியுமா? சிறந்த குடும்பத்தில் உதித்தவன். என் தந்தை இராஜாவின் மாமனார். இராஜாவோ என் தகப்பனாருடைய மருமகன். நான் இராஜாவின் மைத்துனன். இராஜா என்னுடைய ஸகோதரியின் கணவன்.

நியா.—இதெல்லாம் எனக்கு நன்ருய்த் தெரியும். குடும்பப் பெருமையைப்பற்றி அதிகமாய்ச் சொல்லவேண்டாம். பிராதைத் தெரிவியும்.

வீர.—இதோ சொல்லுகிறேன். ஆனுல் அதில் என் பேரில் யாதொரு குற்றமுமில்லே. என் மைத்துனனுகிய இராஜன்,நான் விளேயாடி,ஸந்தோஷமாய்ப்பொழுதுபோக்க, எனக்குப் பூஞ்சோலே யொன்றைக் கொடுத்திருக்கிருர். நான் தினந்தினம் அங்கு போயிருந்துவிட்டு வருவது வழக்கம். இன்றையதினம் அங்குபோனேன். ஆகா! எதைக் கண்டேன் தெரியுமா? என் கண்களேயே நம்பக்கூடவில்லே! ஒரு யௌவன ஸ்திரீயின் சவம் கிடக்கக் கண்டேன்.

நியா.—அது யாருடைய தென்பது அடையாளந் தெரிந்ததா?

வீர.—நன்ருய்த் தெரிந்தது. அவள் நம்முடைய நகரத்திற்கே அழகா யிருந்தவள். யவராலும் புகழ்ப்பட்ட வஸந்தஸேனே. அவளுடைய ஆடையாபரணங்களேக் கண்டு பேராசை கொண்ட எந்தக் கொலே பாதகனே அவளேத் தனிமையான அந்த இடத்திற்கு அழைத்து வந்திருக்கவேண்டும். அங்கு அவளுடைய தொண்டையைப் பிடித்து நெரித்துக் கொன்று விட்டான். ஆனுல் நானல்ல.

நியா.—ஆகா! பாராக்காரர்கள் எவ்வளவு அஜாக்கிரதையாக இருந்து விட்டார்கள்! விசாரணே கர்த்தா! இதை எழுதிக்கொள்ளும், 'ஆனுல் நானல்ல' என்பதையும் எழுதிக்கொள்ளும்.

விசா.—ஸரி எழுதிக்கொண்டேன்.

வீர.—(தனக்குள்). என்ன முட்டாள்தனம்! யானே தன் தலேயில் மண்ணே வாரிப்போட்டுக் கொள்வதைப்போலப் பேசி விட்டேனே! ஸரி சொல்லியாய் விட்டது! இனி என்ன செய்கிறது! ஐயா! நியாயாதிபதி! அதிக மேதாவியாகிய தாங்கள் இந்த அற்ப விஷயத்தைப்பற்றி இவ்வளவு பிரமாதம் செய்கிறீர்களே! 'ஆனுல் நானல்ல இச்செய்கையைப் பார்த்தவன்' என்று சொல்ல உத்தேசித்தேன்.

(தன் காலை வைத்துக் கடைசியில் எழுதப்பட்டதைக் கலைத்து விடுகிருன்).

நியா.—அப்படியானல் அவளுடைய ஆடையாபரணங்களை அபகரிக்கும் பொருட்டு யாரோ அவள் தொண்டையைப்பிடித்து நெரித்துக்கொன்று விட்டதாக உமக்கு எப்படித்தெரிந்தது?

வீர.—அப்படித்தான் இருக்கவேண்டுமென்று யூகித்தேன். ஏனென்றால் அவளுடைய கழுத்து வீங்கியிருந்ததோடு, ஆபரணங்களும் போயிருந்தன.

நியா.—இருக்கலாம்.

வீர.—(தனக்குள்) உயிர் வந்தது.

நியா.—ஸரி! வஸந்தஸேனையின் தாயை முதலில் விசாரிக்கவேண்டும். அடே ஸேவகா! அவளை வரவழை.

ஸேவ.—உத்திரவு

(போய் அழைத்துக்கொண்டு வருகிருன்).

ஸேவ.—அம்மா! இப்படியேவா! இதுதான் வழி.

தாய்க்கிழவி.—(தனக்குள்) என்னுடைய குழந்தை வஸந்தஸேனை தன் நண்பர் வீட்டிற்கு நேற்றிரவு போனவள் இன்னம் வந்து சேரவில்லை. அதைப்பற்றி நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் இவன் நியாயாதிபதி அழைப்பதாகச் சொல்லுகிருன். என்ன காரணமோ என்ன ஸம்பவித்ததோ தெரியவில்லை. என் மனம் பதைக்கிறது. என்ன செய்வேன்? போனல் உண்மை தெரிகிறது. (நியாயாதிபதிக்கு) ஸ்வாமீ! நமஸ்காரம்.

நியா.—வா! அப்படியே நில்லு!

வீர.—ஓகோ தாய்க்கிழவியா! வந்தாயா! ஸரி!

நியா.—நீ வஸந்த ஸேனையின் தாயா?

தாய்.—ஆம்.

நியா.—உன் மகள் இப்பொழுது எங்கிருக்கிருள்

தாய்.—ஒரு நண்பர் வீட்டிற்குப் போயிருக்கிருள்.

நியா.—அவருடைய பெயரென்ன ?

தாய்.—(தனக்குள்). இதைத் தெரிவிப்பது ஸரியல்ல.—ஸ்வாமீ! இந்தக் கேள்விக்குப் பதிற்சொல்ல வெட்கமாயிருக்கிறது!

நியா.—நியாயஸ்தலத்திற் சொல்லுவதினால் யாதொரு குற்றமுமில்லை. இங்கே வெட்கப்பட்டால் காரியம் எப்படியாகும்? கேட்பதற்குப் பதிற் சொல்லித்தான் ஆகவேண்டும்.

தாய்.—நற்குணமே அணியாகப் பெற்ற மாதவராயருடைய மாளிகைக்குப் போனாள்.

வீர.—இவள் சொன்னதைக் கேட்டீர்களா? இதை எழுதிக் கொள்ளுங்கள். மாதவராயன்தான் குற்றவாளி.

நியா.—அவனுடைய நண்பர் எப்படிக் குற்றவாளியாவார்? அவரையும் வரவழைத்து விசாரிப்போம். அடே ஸேவகா! மாதவராயரை அழைத்துவா!

போயழைத்து வருகிறான்.)

மாத.—(தனக்குள்) இந்த நியாயஸ்தலம் ஸமுத்திரத்தைப் போலிருக்கிறதே! இதைப்பார்க்க என் மனதில் ஒருவித ஸஞ்சலமுண்டாகிறது. வழியிற் பலவிதமான கெட்டணங்கள் தோன்றின. என்ன தீங்கு ஸம்பவிக்குமோ சகு தெரியவில்லை. (நிலைப்படியில் தலை இடிபடுகிறது) ஆகா! மேலும் அபசகுனம் உண்டாகிறது—நல்லது ஈசுவர னிருக்கிறான். எல்லாம் விதியின்படி நடக்கிறது.

நியா.—அதோ மாதவராயர் வந்துவிட்டார். அவருடைய முகத்தைப் பார்த்து அவர் இவ்விதமான குற்றஞ் செய்யக் கூடியவரென்று யார் சொல்லுவார்கள்? ஒரு மனிதனுடைய அகத்தின் அழகை அவனது முகம் கண்ணாடிபோலக் காட்டுமல்லவோ!

மாத.—நியாயாதிபதிகளே! சித்தத்தின்படி இதோ வந்தேன்! அடியேனை அழைத்த காரணத்தைத் தெரிவிக்க வேண்டும்.

நியா.—மாதவராயரே! வாரும்; இந்த ஆஸனத்தில் உட்காரும்.

வீர.—அப்படியா! ஸ்திரீஹத்தி செய்தவரே! வாரும்-இந்தப் பாதகனுக்கு மரியாதை கூடவா! நல்லது ஆகட்டும்.

நியா.—மாதவராயரே! உமக்கும் இந்த ஸ்திரீயின் புத்திரிக்கும் நட்புண்டா?

மாத.—எந்த ஸ்திரீ?

நியா.—இதோ நிற்பவள்; வஸந்தசேனையின் தாய்.

மாத.—(எழுந்து வணக்கமாக) ஓகோ அப்படியா நான் இது வரையில் பார்த்ததில்லை. அம்மா! வஸந்தசேனை வீடுவந்து சேர்ந்தாளா?

தாய்.—அப்பா குழந்தாய்! இன்னம் வரவில்லை. நீ நீடூழி வாழவேண்டும். (தனக்குள்) இவர்தாம் மாதவராயரா? ஆகா! என் புத்திரியின் பாக்கியமே பாக்கியம். நல்ல சீலரையே விரும்பினாள். என்ன அழகு! என்ன மேன்மைக் குணம்! இவர் அவளுக்கு கிடைப்பாரானால் அவள் ஜென்மம் கடைத்தேறிவிடும்.

நியா.—மாதவராயரே! இவளுடைய பெண்ணாகிய தாஸி வஸந்தசேனைக்கும் உமக்கும் நட்புண்பா?

(மாதவராயர் வெட்கிக் கீழே குனிகிறார்.)

வீர.—என்ன பாசாங்கு செய்கிறான்! தான் செய்த குற்றத்தை மறைக்க இது நல்ல தந்திரம்! ஸாமார்த்தியசாலி தான்!

விசா. க.—மாதவராயரே! உம்மீது பெருத்த குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் யோசனை செய்யாமற் சொல்லும்.

மாத.—அப்படியா! அவள் இப்பொழுதுதான் ஸமீப காலத்தில் ஸாதாரணமாகப் பரிச்சயம். அதனால் குற்றமென்ன? ஸ்திரீ புருஷர்களுக்கே பாலியத்தில் விளையாட்டுக்களிருப்பது ஸகஜந்தானே!

நியா.—ஐயா! மாதவராயரே! மறைபொருளாய்ப் பேசுவதைவிட்டு வெளிப்படையாகவும் உண்மையாகவும் பேசவேண்டும். நான் இங்கு சட்டப்படி கேட்கிறேனென் பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்.

மாத.—என் பேரில் குற்றம் சுமத்துகிறவர் யாரென் பதை முதலில் தெரிவிக்க வேண்டுகிறேன்.

வீர.—இதோ! நான்தான்.

மாத.—நீங்களா! அப்படியானால் விஷயம் பெரிதாக இருக்கவேண்டும்.

வீர.—ஆம் தடையென்ன? இவ்வளவு கீர்த்திப்பெற்ற வஸந்தசேனையைக் கொன்று அவளுடைய ஆபரணங்களை அபகரித்துக் கொண்டால் அது ஒருவருக்கும் தெரியா தென்று நினைத்தாயோ?

மாத.—உமக்கென்ன புத்தி மாருட்டம் கொஞ்ச முண்டோ?

நியா.—ஸரி! போதும்; வஸந்தசேனை இப்பொழுது எங்கிருக்கிருள்?

மாத.—தன் வீட்டிற்குப் போயிருக்கவேண்டும்.

வீர.—தன் வீட்டிற்காபோயிருக்கவேண்டும்! ஆகா! என்ன துணிபு! நீ அவளை என்னுடைய சோலைக்கு இரகஸியமாய் அழைத்துவந்து கழுத்தை இறுகப் பிடித்துக் கொன்று அவளுடைய நகைகளை அபகரித்துக் கொள்ள வில்லையா? தன் வீட்டிற்குப் போயிருப்பாளென்று எப்படிச் சொல்லுகிருய்?

மாத.—(காதில் கையை வைத்து மூடிக்கொண்டு) ஆகாகா! ஈசுவரா! என்ன வார்த்தைகளைக் கேட்கும்படி வைத்தாய்! இந்த வார்த்தை என் காதில் நாராசம் நுழைந்ததைப் போலல்லவோ இருக்கிறது. போதுமையா உம்முடைய விளையாட்டு; நிறுத்தும்; இனி எனக்குக் கோப முண்டாகும்.

தாய்.—ஆகா! என் மகள் இறந்துபோய் விட்டாளா? ஐயோ! இனி என்ன செய்யப் போகிறேன். (ஒரு பக்கமாக நின்று அழுகிருள்.)

நியா.—(தனக்குள்) எவ்வளவோ கீர்த்திபெற்ற இவர் பேரில் ஒருசிறியமாசைக் கற்பிப்பதைக்காட்டிலும், ஹிமய மலையைத் தூக்கி நிறுத்துவதும் ஸமுத்திரத்திற்குக் கரை கட்டுவதும், காற்றைக் கையாற் பிடிப்பதும், எளிதில் முடியும்; (உரக்க,) எவ்வளவோ கீர்த்தியைப்பெற்ற இவர் இந்தக் குற்றத்தை ஒரு நாளும் செய்திருக்கமாட்டார்.

வீர.—அவருடைய கட்சியை நீரே எடுத்துக் கொண்டாற்போலிருக்கிறதே?

நியா.—நடுப்பகலில் சூரியனை எதிர்த்துப் பார்த்தால் நம்முடைய கண்ணெளி மழுங்கி விடாதோ? நெருப்பில் கையை நீட்டினல் கையல்லவோ எரிந்துபோம்; இவர்பேரில் அநியாயமாக அவதூறு சொன்னல் தெய்வத்திற்குச் சம்மதமாகுமோ? தலைபில் இடியல்லவோ விழும்! இவர் ஸாதாரணமான மனிதரா! ஸமுத்திரத்தை ஒத்த தன் ஐசுவரியத்தையெல்லாம் பரோபகாரத்தின் பொருட்டுத் தருமம் செய்து செலவிட்டவரும் சிறந்தவரிற் சிறந்தவரும் தயாளகுணத்தையே பூஷணமாக அணிந்தவருமான இவர் கேவலம் அற்பப்பொருளை உத்தேசித்துக் கொடிய பாதகர் செய்யக்கூடிய இந்தப் பாவத்தை ஒருநாளும் செய்திருக்கமாட்டார்.

வீர.—ஓகோ! நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் வேண்டியவர்கள் போலிருக்கிறது. உமது வேலை பிராதை விசாரிக்க வேண்டியதே யொழிய ஜோசியம் சொல்வதல்ல. எனக்கு நேரமாகிறது விசாரணை நடக்கட்டும்.

தாய்.—(தனக்குள்) இதென்ன மோசமோ தெரியவில்லையே! என் அருமைப் பெண் உயிருடனிருக்கிருளோ இல்லையோ தெரியவில்லையே! இவரை ஏன் இப்படி வருத்துகிருர்கள்? (நியாயாதிபதிக்கு) நியாயாதிபதிகளே! இவர் இந்தக் குற்றத்தை ஒருநாளும் செய்திருக்கமாட்டார். இவர்

ஒரு எறும்பைக்கூட வதைப்பவரல்லவே! தன் உயிர் போவதாயிருந்தாலும், பிறருக்கு ஒரு தீங்கும் செய்ய மாட்டாரே! இவர் எவ்வளவு ஏழ்மை நிலைமையிலிருந்த போதிலும், இவருடைய மேன்மை ஒரு நாளும் போகாது. என் மகள் தன் ஆபரணங்களை ஒரு நாளிரவு இவரிடம் வைத்து வந்தாள். அவைகள் களவுபோய்விட்டன. இவர் அவற்றை விட எவ்வளவோ விலை உயர்ந்த ஒரு வைரமாலையைக் கொடுத்தார். அப்படி இருக்க, இவர் அற்ப நகைகளுக்காகக் கொலை செய்தாரென்பது முழுதும் பொய்.

நியா.—மாதவராயரே! அவள் உம்முடைய மாளிகைக்கு எப்பொழுது வந்தாள்?

மாத.—நேற்று ஸாயங்காலம்.

நியா.—பிறகு எப்பொழுது போனாள்? நடந்துபோனாளா? அல்லது வண்டியிற் போனாளா?

மாத.—அந்த விவரம் எனக்குத் தெரியாது; அவள் இன்று காலையில் தன் வீட்டிற்குப் போகுமுன் நான் எழுந்து என் உத்தியானவனத்திற்குப் போய்விட்டேன்.

(வீரகன் அவசரமாக வருகிறான்.)

வீர.—நியாயாதிபதிகளே! நமஸ்காரம்!

நியா.—ஆகா! வீரகா! எங்குவந்தாய்? என்ன விசேஷம்?

வீர.—ஒரு பிராது சொல்லிக்கொள்ள வந்தேன். இன்று காலையில் பிரதாபனைத்தேடிக்கொண்டு போனபோது, ஒரு பெட்டிவண்டி ஊருக்கு வெளியில் அவஸரமாகப் போனதைக்கண்டேன். என்னுடன் வந்த சந்தானகன் வண்டியை நிறுத்தி அதற்குள் பார்த்தான். அதன் பிறகு நானும் உட்புறம் யார் இருந்தார்களென்பதைப் பார்க்கப் போனேன். அவன் என்னைத் தடுத்துக் கழுத்தைப்பிடித்துக் கீழேதள்ளி உதைத்தான். அதை இராஜனிடம் தெரிவிக்குமுன் தங்களிடம் சொல்லிக் கொள்ளலாமென்று வந்தேன்.

நியா.—விசாரிக்கலாம். அந்த வண்டி யாருடையது?

வீர.—அது மாதவராயருடைய தென்றும், அவரை அவருடைய உத்தியானவனத்தில் சந்திக்கும்பொருட்டு அதில் வஸந்தஸேனைபோனதாயும்வண்டிக்காரன் தெரிவித்தான்.

வீர.—பார்த்தீரா உண்மையை !

நியா.—மாசற்ற சந்திரனைக் கிரகணம் பிடிக்கும்போலிருக்கிறதே! நல்லது; வீரகா! உன் பிராதை விசாரிக்கிறேன். நீ குதிரையின்பேரில் ஏறிக்கொண்டு இவருடைய பூஞ்சோலைக்குப்போய், அங்கே கொலை செய்யப்பட்ட ஒரு ஸ்திரீயின் பிணம் கிடக்கிறதோவென்று பார்த்துவிட்டுவா !

வீர.—அப்படியே ! இதோ வந்து விட்டேன்.

(போய்த்திரும்பி வருகிறான்.)

ஆமாம்! ஒரு ஸ்திரீயின் பிரேதத்தைக் காட்டு மிருகங்கள் இழுத்துக்கொண்டு போயிருக்கக்கண்டேன்.

நியா.—ஸ்திரீ யென்பது எப்படித் தெரிந்தது ?

வீர.—அங்குகிடந்த தலைமயிரின் நீட்சி, அழகு முதலிய வற்றாலும் கால் கைகளின் அடையாளங்களினாலும் கண்டுபிடித்தேன்.

நியா.—வாரும்; மாதவராயரே ! உண்மையைச் சொல்லிவிடும்.

மாத.—என்ன ஆச்சரியம் ! என்ன அநியாயம் ! தன் உயிரைக்காட்டிலும் அதிகமாக என்மீது அன்பையும் ஆசையையுங் கொண்டவளும், நீதியிலும் அரியவளுமான அந்த ஸௌந்தராங்கியின் சிரத்திலுள்ள ஒருசிறிய உரோமத்திற்கும் தீங்குசெய்ய எனக்கு மனம் வருமா? என்னையும் என் குணத்தையும் நீங்கள் அறியமாட்டீர்களா ? இன்பஸாகரமாகிய வஸந்தஸேனையைக் கொல்ல அவளுடைய விரோதிகூட நினைக்கமாட்டானே ?

வீர.—ஐயா ! நியாயாதிபதி ! இந்தக் குற்றவாளியை இனியும் இவ்விடத்தில் உட்காரவைத்தால், நீங்களிருவரும் நண்பர்களென்று மதிக்கப்படுவீர்கள்

நியா.—மாதவராயரே! எழுந்து நில்லும்.

மாத.—நியாயாதிபதிகளே! அப்படியே நிற்கிறேன். நீங்கள் நன்றாய் யோசனை செய்யுங்கள். (நிற்கிறார்).

வீர.—(மாதவராயருக்கு அருகிற்போய் நின்று கொண்டு). ஏ மாதவராயா! என்னைப்பார்! நிஜத்தைச் சொல்லிவிடு. வஸந்தஸேனையைக் கொன்றுவிட்டதாக நாணயமாக ஒப்புக்கொள்.

மாத.—துஷ்டா!என்னுடன் பேசாதே; போ அப்பால்; —(ஒருபுறமாக) என்னுடைய உண்மை மித்ரன் ஸோமே ஸன் இந்த அவதூறைக் கேட்டால் எப்படி விஸனப் படுவானோ? மேலான குலத்திலுதித்த பரிசுத்த ஸ்வரூபி யான என் அரிய நாயகி இதைக் கேட்கஸகிப்பாளோ? ஆகா! குழந்தாய்! உன்னுடைய பாலிய விளையாட்டில், உன் பிதாவுக்கு வந்திருக்கும் மானக்கேட்டை நீ எங்கே அறி யப்போகிறாய்? எனக்கு இந்த மானஹானி வந்ததைப்பற்றிக் கூட நான் வருந்தவில்லை.இதனால் என் உயிர் போவதாயிருந் தாலும் கவலையில்லை. பதிவிரதா சிரோன்மணியான வஸந்த ஸேனை உயிருடனிருக்க வேண்டுமே என்பதுதான் என் மனதை வருத்தி வதைக்கிறது! அவள் உண்மையில் இறந் திருப்பாளென்பதை என் மனது இன்னமும் நம்பவில்லை. அவள் என் குழந்தைக்குக் கொடுத்து விட்டுப்போன ஆப ரணங்களைத்திரும்ப அவளிடம் கொடுத்துவிட்டுவரும்படி ஸோமேஸனை அனுப்பினேன். அவனும் திரும்பிவரவில்லை. ஈசுவரா! கருணாநிதே! என்ன செய்யப் போகிறேன்?

(ஸோமேசன் ஆபரணங்களுடன் நியாயஸ்தலத்திற்கு வெளியில் வருகிறான்.)

ஸோ.—(தனக்குள்). வஸந்தஸேனை அவள் மாளி கையில் காணப்பட வில்லையே! வேறு எங்குபோய்த் தேடு கிறது! என் மித்திரரை நியாயஸ்தலத்திற்கு அழைத்துப் போயிருப்பதாய்க் கேள்விப்பட்டேன். நியாயஸ்தலம் இதோ இருக்கிறது. உள்ளேபோய் விசேஷம் என்னவென்பதை அறிந்துகொண்டு பிறகு வஸந்தஸேனையைத் தேடுகிறேன். (உள்ளேவந்து).

ஆ! மித்ரரத்னமே! என்ன விசேஷம்? இங்குவந்த காரணமென்ன?

மாத.—ஸோமேசா! நான் கொலைபாதகன்; என்னைக் காதலித்த மங்கையைக் கொன்ற படுபாவி நான்.

ஸோ.—ஆகா! என்ன சொன்னீர்கள்! உங்களை இப்படிச் சொல்லத் துணிந்தவன்யார்? மங்கையையாவது கொலை செய்யவாவது?

மாத.—அதோ நிற்கும் கொடியவனே என்விதியை நிறைவேற்றுங் கருவியாக வந்திருக்கிறான்.

(காதில் விவரத்தைச் சொல்லுகிறார்.)

ஸோ.—அவள் தன் மாளிகைக்குப் போய்விட்டதாகச் சொல்லிவிடுகிறதுதானே.

மாத.—நான் என்ன சொன்னபோதிலும் பயனில்லை; ஏழையின் சொல்லை யார் நம்புவார்கள்?

ஸோ.—நியாயதிபதிகளே! இதென்ன அநியாயம் நம்முடைய நகரத்தைக் கோவில்களாலும், தடாகங்களாலும், சாலைகளாலும், மண்டபங்களாலும், ஊற்றுக்களாலும், வாவிகளாலும் அலங்கரித்த இந்த மகானுபாவரோகேவலம் அற்பமான ஆபரணங்களை அகரிக்கும் பொருட்டுக் கொலைபாதகம் செய்பவர்? நன்றாய்த் தீர்க்காலோசனை செய்துபாருங்கள். அடே வீரஸேனப்பதரே! மனிதரை வருத்தி வயிறெரியச் செய்யும் பரமபாதகா! ஒரு கொடியிலுள்ள புஷ்பத்தைப் பறிப்பதைக் கூடபாவமென்று மதிக்கும் இந்தப் புருஷோத்தமர், இகத்திற்கும் பரத்திற்கும் இகழையும் துன்பத்தையும் தரும் இந்த மகாபாதகத்தைச் செய்தாரென்று எங்கே எனக்கு முன்பாகத்தெரிவி! இதோ இந்தத் தடியால் துற்புத்தியே நிறைந்த உன் தலை ஆயிரம் சுக்கலாகும்படி உடைக்கிறேன்.

வீர.—எல்லோரும் இதைக் கேட்டீர்களா! எனக்கும் மாதவராயருக்குமுள்ள வியாச்சியத்தில் இவன் தலையிட இவனுக்கென்ன அதிகாரம்? அடே! இதோ பார் நான் உன் தலையை உடைக்கிறேன். (இருவரும் ஒருவர்மீதொரு

வர் பாய்ந்து கட்டிப்புரளுகின்றனர். ஸோமேஸன் மடியில் வைத்திருந்த ஆபரணங்கள் கீழே விழுகின்றன.)

வீர.—(அவற்றை எடுத்துக்காட்டி) இதோ பார்த்தீர்களா அவள் மேலிருந்து அபகரித்த ஆபரணங்கள். நான் சொன்னது நிஜமாய்ப் போய்விட்டது பார்த்தீர்களா! அவனுக்கு இவனும் உடந்தை.(நியாயாதிபதி தன்சிரத்தைக் கீழே போட்டுக் கொள்ளுகிறார்).

மாத.—(ஸோமேஸனுக்கு). என்னுடைய காலவித்தியாஸத்திற்குத் தகுந்தவிதம் இந்த ஸமயத்தில் இவ்வாபரணங்களும் விழவேண்டுமா! இது என்னுடைய கருமவினை. எப்பொழுது இவைகள் விழுந்தனவோ, அப்பொது நானும் விழுந்தேன். தப்புவதில்லை.

ஸோ.—நடந்த விவரங்களை நன்றாய் விளங்கச் சொல்கிறதுதானே.

மாத.—ஸந்தேகத்தைத் தரக்கூடிய இத்தனை ஸங்கதிகளுக்கு மத்தியில் உண்மை இன்னதுதானென்பதை அறிய இராஜ பீடத்திற்கு வல்லமை இல்லை. என்னசெய்கிறது! இவ்விதமாக அவமானப்பட்டு நான் உயிரை விடவேண்டு மென்றிருந்தால், அதைநாம் எப்படித் தடுக்கக்கூடும்? நடப்பது நடக்கட்டும்.

நியா.—(தாய்க்கிழவிக்கு). ஸ்திரீயே! இந்த ஆபரணங்கள் உன் மகளுக்குச் சொந்தமானவைகளா?

தாய்.—அவைகளைப் போலத்தான் இருக்கின்றன. ஆனால் அவைகள் அல்ல.

வீர.—ஏ! கிழ முண்டமே! என்ன உளறுகிறாய்? நிஜத்தைச்சொல்.

தாய்.—புரட்டனே! போ அப்பால்!

விசாக.—அடி! ஜாக்கிரதையாகப்பேசு. இவைகள் உன் மகளுடையவைகளா இல்லையா?

தாய்.—நியாயாதிபதிகளே! தட்டான் தன்னுடைய ஸாமர்த்தியத்தினால் ஒன்றைப்போல மற்றொன்றைச் செய்

யக்கூடுமல்லவா! இவைகள் என் மகளுடையாப நகைக
ளென்று நிச்சயமாக எப்படிச் சொல்லுவேன்?

நியா.—ஆம். நிஜந்தான். அப்படியும் இருக்கலாம்.—மாதவராயரே! இவ்வாபரணங்கள் உம்முடையவைகளா?

மாத.—இல்லை.

நியா.—அப்படியானல் யாருடைய ஆபரணங்கள்?

மாத.—வஸந்தஸேனையினுடைய ஆபரணங்களே.

நியா.—ஸொந்தக்காரி யிடமிருந்து உம்மிடம் இவை எப்படி வந்தன?

மாத.—அவளே கொடுத்தாள்.

நியா.—மாதவராயரே! நீர் உண்மையைப் பேசவேண்டுமென்பதை நான் திரும்பவும் சொல்ல வேண்டுவதில்லை. பொய் சொல்லவேண்டாம்.

மாத.—நான் சொல்வதைப் பொய்யென்று நினைப்பானேன்?

வீர.—அவளைக் கொன்ற பிறகு இவ்வாபரணங்களை அவள் தேகம் கொடுத்தது! இவர் சொல்வதும் உண்மைதான்.

நியா.—மாதவராயரே! நிஜத்தைப்பேசும்; இல்லாவிட்டால் துன்பம் வந்து ஸம்பவிக்கும்.

மாத.—நான் சொல்ல ஆரம்பிக்கும்பொழுதே பொய்யென்ருல் பிறகு நான் சொல்வதிற் பயனென்ன? குற்றமென்பதே இன்னதென்றறியாத குலத்திலுதித்தநான் என் முன்னேர்களுக்கு அவமானம் வரக்கூடிய காரியத்தை ஒரு நாளும் செய்பவனல்ல. குற்றமற்றவனைக் குற்றவாளியென்று ஸந்தேகித்தால், வருவதை நான் அனுபவிக்க வேண்டுவதுதான் முடிவு.

வீர.—இன்னம் ஸந்தேகமாக ஏன் பேசவேண்டும்? கொன்றேனென்று சொல்லிவிடு.

மாத.—எனக்குப் பதிலாக நீர்தாம்சொல்லிவிட்டீரே! நான்கூடச் சொல்லவேண்டுமா?

வீர.—கேட்டீர்களா? இவரே ஒப்புக் கொள்ளுகிறார்; இவர் வாக்குமூலத்தினாலேயே ஸந்தேகம் நீங்கிவிட்டது. இனிதண்டனை விதிக்கலாம்—ஐயோ பாவம்! மாதவராயரைப்பார்க்க எனக்கு மிகவும் பரிதாபமாக இருக்கிறது! இவர் இந்தக் குற்றம் செய்யாமலிருந்தால் நன்றாயிருக்கும். இதை வேறுயாராயினும் செய்திருத்தலாகாதா?

நியா.—மாதவராயரே! இப்பொழுது ஏற்பட்ட சாட்சியங்களால் நீர் வஸந்தஸேனையை கொன்றிருக்கலாமென்று ஸந்தேகமேற்படுகிறது! நீர் கொல்லவில்லை யென்பதற்கோ அல்லது வேறு யாராவது அவளைக் கொன்றார்களென்பதற்கோ உமக்கு சாட்சிகள் இருக்கிறார்களா?

மாத.—இந்த ஆபரணங்களை வஸந்தஸேனை கொடுத்தாளென்பதற்கு என்பணிப்பெண் சாட்சியிருக்கிறாள். தவிர, இன்று காலையிலிருந்து, என்னுடைய நண்பன் ஸோமேஸன் என்னுடன்கூடவே இருந்திருக்கிறான். இவ்விருவரும் சாட்சிகளிருக்கிறார்கள்.

வீர.—இவர்கள் உனக்கு அனுகூலமானவர்கள். உன் வேலைக்காரியும், நண்பனும் உன் உயிரைத் தப்புவிக்க ஏன் பொய் சொல்லமாட்டார்கள்? ஆகையால் இவர்களுடைய சாட்சியம் சிறிதும் உபயோகமில்லை. நியாயாதிபதி! நீர் இவர்களை விசாரித்தபோதிலும் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்.

நியா.—மாதவராயரே! இவர்களைத் தவிர வேறுசாட்சிகளிருக்கிறார்களா?

மாத.—இல்லை.

வீர.—அப்படியானால் நியாயாதிபதி இனி தண்டனை விதிக்க வேண்டுவதுதான்.

தாய்.—ஐயோ! என் அருமை மகனே! உனக்கு என்ன பொல்லாத காலமோ தெரியவில்லையே! நல்லமனிதருக்கு இப்படியும் ஆபத்து வருமோ? நியாயாதிபதிகளே! என்மகளுக்காக இந்தப் பிராதில் நானல்லவோ வாதியாகவர

வேண்டும்? இவர் பேரில் எனக்கு யாதொரு வியாச்சியமு மில்லை. இவரை விட்டு விடுங்கள்.

வீர.—கிழப்பிணமே! போ அப்பால்! எங்களுக்குத் தெரியாததற்கு நீயா சொல்லிக் கொடுக்கிறாய்!

நியா.—கொலைக் குற்றத்திற்கு சர்க்காரே வாதியாகை யால், உன்னைப்பற்றிக் கவலை இல்லை. நீ போகலாம்.

தாய்.—இதென்ன அநியாயம்! யாதொரு குற்றத்தை யும் செய்யாத புண்ணிய புருஷர் மீது அடாப் பழி சுமத்து கிறார்களே! இது தெய்வத்திற்கு ஸம்மதமாகுமோ? நியா யாதிபதிகளே! இது தர்மமல்ல! என்மகள் ஏதோ தலைவிதி யினால் இறந்தாள். அதற்காக யாதொரு களங்கமுமற்ற உத்தம குணமுடைய இவரைத் தண்டிக்க வேண்டாம். விட்டுவிடுங்கள்.

நியா.—ஸரி! நீ போகலாம்.

(ஸேவகர்கள் அவளை வெளிப்படுத்துகிறார்கள்)

வீர.—நேரமாறது! தண்டனை விதியும்.—

நியா.—ஐயா! இது கொலைக் குற்றம்; அதிலும் குற்ற வாளி பிராம்மணர். ஆகையால் இதை நான் தீர்மானித்தல் கூடாது. மனுநீதிப்படி இதில் அரசனே தீர்மானம் சொல்லவேண்டும். ஆகையால் என்னுடைய விசாரணை கர்த்தாவை நான் அரசனிடம் அனுப்பி, விசாரணையில் ஏற் பட்டவிஷயங்களைத்தெரிவிக்கச்சொல்லுகிறேன்.(விசாரணை கர்த்தாவைநோக்கி)நீர் உடனே அரசனிடம் போய், விவரங் களைத் தெரிவித்து, அவருடைய தீர்மானத்தை அறிந்து வாரும். பிராம்மணர் கொலைக்குற்றம் செய்தால், அவரைக் கொல்லக் கூடாதென்றும், அவரை இந்தத் தேசத்தைவிட்டு வேறு தேசத்திற்கு அனுப்பி விடவேண்டு மென்பதும் சாஸ்திர மென்று தெரியும்.

வீர.—(தனக்குள்) அப்படியானால் நான் முன்னால் அரசனிடம் போய் அவனை ஸரிப்படுத்திவைக்கிறேன்.

(போய்விடுகிறான்.)

வி. க.—உத்திரவுப்படி செய்கிறேன்.

(போய்த் திரும்பி வந்து,) நியாயாதிபதிகளே! அரசனிடம் தெரிவித்தேன்! வஸந்தஸேனையின் ஆபரணங்களை இவர் கழுத்திற் போட்டு இவருக்கு எருக்கமாலை யணிவித்து பறை முழக்கத்தோடு இவரை ஊரைச்சுற்றி அழைத்துக்கொண்டு போய் ஊருக்கு வெளியிலுள்ள மைதானத்தில் கழுமரத்தில் ஏற்றும்படி உத்திரவு பிறப்பித்தார். இவ்விதக் குற்றத்தை இனி ஜனங்கள் செய்யாமலிருக்க, இது ஒரு உதாரணமாக இருத்தல்வேண்டுமாம்.

ஸோ.—ஹா! தெய்வமே!

(மாதவராயர் மீது சாய்கிறான்.)

மாத.—யோசனையும் நியாயமுமில்லாத அரசன் இப்படித்தான் துற்புத்தி மந்திரிகளின் உபதேசத்திற் கிணங்கி, அக்கிரமங்களைச் செய்து நாசமடைகிறான். 'யானைவரும் பின்னே; மணியோசை வரும் முன்னே! கேடுவரும் பின்னே; மதிகெட்டுவிடும் முன்னே. விதியின் வலியைத்தடுக்க யாரால் முடியும்? முன் ஜென்மத்தில் நான் செய்த பாவத்தினால் இது ஸம்பவித்தது. இதைப்பற்றி யார்பேரில் குற்றம் சுமத்துகிறது? ஆகையினால் நண்பா! கவலைப்படாதே! என் ஆருயிர் மித்ரா! நான் போகிறேன். இது வரையில் நீ என்மீது வைத்திருந்த அன்பை மறந்துவிடாதே! ஆதரவற்ற என் குடும்பத்தை உன் வசத்தில் ஒப்புவித்தேன். என் மனைவியையும் குழந்தையையும் இனி நீதான் காப்பாற்ற வேண்டும்.

ஸோ.—ஐயோ! மித்ரரத்னமே அடிவேர் போனபின் மரம் உயிருடனிருப்பது முண்டோ? ஒரு நாளுமில்லை. உங்களுக்குமுன் என்உயிர் இதோ போய்விடும் போலிருக்கிறது.

மாத.—நண்பா! அப்படியல்ல! தகப்பன் இறந்தபோதிலும் அவன், பிள்ளையின் ஸ்வரூபமாக உயிருடனிருக்கிறானென்பது சாஸ்திரம். ஆகையால் என்னிடமிருந்த விதமே நீ என் குழந்தையிடத்திலுமிருந்து அவனை ஆதரிக்கவேண்டுகிறேன். இதுதான் என் கடைசி வேண்டுகோள். நான்

இறக்குமுன் என் குழந்தையின் முகத்தை ஒரு முறை பார்க்க வேண்டும்; நீ போய் அவனை அழைத்துவா; இந்த விஷயத்தை நான் இறந்தபின் என் நாயகியினிடத்தில் தெரிவிக்கலாம். (ஸோமேஸன் போகிறான்.)

நியா.—அடே! ஸேவகா! இவரைச் சண்டாளர்களிடம் ஒப்புவித்து அரசனுடைய கட்டளையை நிறைவேற்றச் சொல்லிவிடு.

ஸேவ.—இப்படி! வாரும் ஐயா!

(மாதவராயரை வெளியில் அழைத்து வருகிறான்.)

மாத.—ஜெகதீசா! இனி உன்னுடைய துணையேயன்றி எனக்கு வேறொரு துணையுமில்லை.

(நினுவினு கதிலேதுரா—என்ற பாட்டின் மெட்டு.)

பல்லவி.

நினையல ல் கதியேதையா?
ஈசா! ஜெகதீசா! பரமேசா! சர்வேசா! (நி)

அநுபல்லவி.

நாதனே! உன் சோதனையோ!
பேதையினேன் ஏது செய்வேன்?
நாதா! குணநீதா! பொற்பாதா! ஜெக நாதா! (நி)

மாத.—(தனக்குள்) ஆகா! இதுதான் பூலோகத்தின் நீதியோ? இதுதான் அரசாட்சியோ? இதுதான் செங்கோலோ? ஒரு மயிரிழையும் நீதியில் தவறாத சர்வ வல்லமையுடைய ஈசுவரனால் படைக்கப்பட்ட இந்த உலகில் இப்படி நடப்பது எனக்கு மிகவும் வெட்கமாக இருக்கிறது! இவ்விதம் நடப்பதற்கு விதி என்னும் ஒரு மூலகாரண மிருந்தபோதிலும் இப்பொழுது நேரில் பார்ப்பவர்களுக்குக் கடவுளிடத்து ஒருவித அவநம்பிக்கையும், தூஷணையும், ஒருவிதக் களங்கமும் ஏற்படுகின்றன வல்லவா? எவ்வளவு பெருத்த குற்றம்! எவ்வளவுசுருக்கமான விசாரணை! எவ்வளவு துரிதமானதீர்மானம்! நல்லநியாயஸ்தலம்! தீர்மானஞ்செய்த அரசனும்நல்லவனே! ஒருவிரோதியின்வாக்குமூலத்தைவைத்துக் கொண்டு இப்படிச்செய்தால் உலகத்தில் மனிதருக்குப்பாதுகாப்பேது? அரசனே! இப்படிக் குற்றமற்றவர்களை வருத்தி

நீ எவ்வளவு காலம் வாழப்போகிறாய்? ஏழை யழுத கண்ணீர் கூரிய வாளையொக்குமல்லவோ! அரசனே உனக்கு நரகம் ஆயத்தமாக வாசலைத் திறந்துவைத்துக் கொண்டிருக்கிறது; கவலைப்படாதே! ஸேவகா! வா போகலாம்.

(போய்விடுகிறான்.)

---

# மூன்றாவது அங்கம்

## இரண்டாவது காட்சி.

---

இடம்:—இராஜ வீதி.

இரண்டு சண்டாளர் மாதவராயரைக் கழுமர மிருந்த இடத்திற்கு அழைத்துப்போகும் ஸமயம், ஜனங்கள் நெருங்குகிறார்கள்.

இராகம். நாதநாமக்கிரியை தாளம் திரிபுடை.

மாதவராயர் பாடிக்கொண்டுவருகிறார்.

பல்லவி.

இதுவோ தலை விதியோ? எனது காலகதியோ?

அநுபல்லவி.

பொதுளும் பொருளிழந்தும் உறவோர்தமையிழந்தும்
துதியும் புகழிழந்தும் மதியாச் சிறுமைதன்னில்
பதியும் மனையும் சேயும் அகலக் கோலஞானேன்;
கதியே தினிக் கருணா நிதியே யெனது துணை (இது).

1. சண்.—இதென்ன இம்பிட்டுக் கூட்டம்! போங்கையா அப்பாலே; ஓங்களுக்கெல்லாம் இங்கிட்டு என்னயா சோலி?—

2. சண்.—பட்டிக்காட்டான் முட்டாயிக் கடையெப் பாக்கராப்புலே என்னையா இப்புடிப்பாக்கிறீங்க? என்னமோ பாவம் பெரிய வீட்டுப்புள்ளே தலைவிதியினாலே போறாரு; கூட்டங் கூடவாணும் போங்கையா.

மாத.—(ஒருபுறமாக). மனிதருடைய சத்ருவாகிய கர்ம வினையின் மாறுபாட்டை யார்தாம் அறிவர். எனக்கு இவ்விதமான காலவித்தியாசம் ஏற்படப்போகிற தென்று நான் ஒருநாளும் நினைக்கவே இல்லை. இவ்விதம்

வீர.—அப்பா! தப்பிப் பிழைத்தேன்! (தனக்குள்). இந்த நித்திய தரித்திரப் பார்ப்பானுக்கு இவ்வளவு பெருமையா!

(சந்தானகன் ஓடிவருகிறான்).

சந்தா.—ஸ்வாமீ! மோசம் வந்து விட்டது! உடனே புறப்படவேண்டும். ஒருக்ஷணம் தாமதித்தால் விபத்து ஸம்பவிக்கும்.

மாத.—சந்தானகா! என்ன இது?

சந்தா.—என்னோடு வாருங்கள்; உங்கள் மாளிகைக்கு ...போக ஒருக்ஷணம் தாமதமானால் பதிவிரதா சிரோன் ...ணியான உங்கள் நாயகியை உயிரோடு காண முடியாது.

மாத.—ஆகா! என் ஆருயிரே! என் பொருட்டு என்ன காரியம் செய்ய நினைத்தாய்!

(யாவரும் தாறுமாறாய்ப் போய்விடுகிறார்கள்.)

---

# மூன்றாவது அங்கம்.

---

## மூன்றாவது காட்சி.

மாதவராயருடைய மாளிகை. அக்னிவளர்க்கப்பட்டிருக்கிறது. அதற்கருகில் மஞ்சட்புடவையுடுத்திக்கொண்டு கோகிலம் நிற்கிறாள். குழந்தை சிசுபாலன் அவளுடைய இடுப்புப் புடவையைப் பிடித்துக்கொண்டு நிற்கிறான். ஸோமேசன் வேறொருபுறமாக நிற்கிறான்.

கோகி.—அப்பா! கண்ணே! என்னை விட்டுவிடு; நான் சொல்வதைக்கேள். உன் பிதாவுக்கு இவ்வளவு மானஹானி வந்தபின் நான் இந்த உடம்பை வைத்திருக்கக் கூடாது. வீணாய்த் தடுக்காதே.

சிசு.—அம்மா! அப்பாவும் போய்விட்டார். நீயும் நெருப்பில் விழுந்துவிட்டால் நான் என்ன செய்வேன்? இனி நான் யாரை அம்மாவென்று கூப்பிடுவேன்? நீங்கள் இல்லாமல் நான் எப்படி உயிரோடிருப்பேன்? என்னை இனிமேல் தினம் யார் கூப்பிட்டு, ஆகாரம், பட்சணம் எல்லாம் கொடுப்பார்கள்! அம்மா! நீ நெருப்பில் விழக்கூடாது.

ஸோ.—அம்மணி! பொறுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் செய்ய உத்தேசிக்கும் காரியம் பாவத்தைத்தரும். பிராம்மணனுடைய மனைவி தனிக்காஷ்ட மேறுவது தவறென்று நம்முடைய சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

கோகி.—என்னுடைய நாதனுக்கு வந்த பழிச்சொல்லைக் கேட்பதைவிட நான் இந்தப் பாவத்தைச் செய்வது உத்தமமானது. என்னுடைய குழந்தையை மாத்திரம் தயவுசெய்து நீர் அப்பால் அழைத்துக் கொண்டு போம். இவன் என்னைத்தடுக்கிறான்.

ஸோ.—அம்மணி! மன்னிக்க வேண்டும். நீங்கள் உயிரைவிடத் தீர்மானித்தால், முதலில் நான் விழுவதற்கு அனுமதி தாருங்கள்.

சிசு.—அம்மா! நான் முதலில் விழுந்து விடுகிறேன். எல்லாரும் என்னைத்தனியாக இங்கே விட்டுப் போகப் பார்க்கிறீர்களோ?

கோகி.—கண்மணி! குழந்தாய்! பிடிவாதம் செய்யாதே! நான் சொல்வதைக்கேள். இறந்துபோன உன் பிதாவுக்கும், எனக்கும் நீ உயிருடனிருந்து செய்யவேண்டிய கிரியைகள் எவ்வளவோ இருக்கின்றன. நீ இருந்து அவைகளைச்செய்யாவிட்டால், எங்களுக்கு நல்லகதி கிடைக்காது. என் தங்கமே! போ அப்பால்! நான் சொல்வதைக் கேள்.

(மாதவராயர் முதலிலும் வஸந்தஸேனை, கோமளா முதலியோர், பின்னும் ஓடி வருகிறார்கள்.)

மாத.—(தன்குழந்தையை வாரிஅணைத்து முத்தமிடுகிறார்). அப்பா! கண்ணே! உன்னைத் திரும்பவும் காணக் கிடைத்ததே!

கோகி.—ஆஹா! இவர் யார்? அவர்தாமே! (உற்றுப் பார்த்து) ஆம் அவரே! என் ஆருயிர்க்கணவரே வந்துவிட்டார்.

குழந்தை.—(சந்தோஷத்தோடு) அம்மா! இதோபார் அப்பா வந்து விட்டார். இனிமேல் அழாதே! சந்தோஷமாயிரு.

மாத.—(தன்மனைவியை அணைத்துக் கொண்டு) பிரிய ஸுந்தரி! கோகிலம்! உன் நாதன் உயிருடனிருக்கும் பொழுது, நீ உயிரைவிட நினைத்தாயே! என்ன பைத்தியம்! சூரியன் ஆகாயத்தில் பிரகாசிக்கும் வரையில் தாமரைப்புஷ்பம் தன் இதழ்களை மூடுவதுண்டோ?

கோகி.—சூரியனைக் கிரஹணம் பிடித்தமையால், அவனை இனிக்காண முடியாதென்னும் எண்ணத்தினால் தாமரை தன் இதழ்களை மூடப்பார்த்தது. அதற்குள் நல்ல காலமாய்க் கிரஹணம் நீங்கியது; இனி என்வாட்டமு மொழிந்தது; பேரின்பமடைந்தேன்.

ஸோமே.—இதென்ன கனவோ! என் கண்கள் நிஜமாகவே பார்க்கின்றனவோ! என் ஆப்த நண்பர்தாமோ இவர்! மேன்மை பொருந்திய மனைவியின் பதிவிரதா தர்மம் தலைகாத்ததோ! இவள் நெருப்பில் விழ நினைத்ததே இவளைத் தன் புருஷனுடன் சேர்ப்பித்ததோ! ஆகா!

மாத.—(ஸோமேஸனையும் ஆலிங்கனம் செய்து கொண்டு) அப்பா! ஸோமேஸா! மெச்சினேன்! உன்னைப் போல ஆபத்திலுதவும் நண்பன் கிடைப்பானோ? உன்னைப் பெற்ற எனக்கு வேறு என்னபாக்கியம் வேண்டும்!

கோம.—ஸ்வாமீ! நமஸ்காரம். (காலில்விழுகிறாள்).

மாத.—குணவதி! கோமளா! எழுந்திரம்மா! (அவள் தோள்மேல் கையைவைக்கிறார்), நான் உயிருடன் திரும்பி வராவிட்டால், என்பேரில் பிரியம் வைத்த இத்தனை பேர்களின் நிலைமை என்ன ஆமோ! ஈசுவரன் சர்வக்ஞனல்லவா; நல்லது கெட்டது அவனுக்குத் தெரியாதா?

(எழுந்திருக்கிறாள்).

கோகி.—(வஸந்தஸேனையைப்பார்த்து).வஸந்தஸேனா! பிரியஸகோதரி! நீ வந்திருப்பதை நான் பார்க்கவில்லை! ஆகா! உயிருடன் திரும்பி வந்தாயே! உன் பேரழகைத் திரும்பவும் நான் பார்க்கப்போகிறேனாவென் றல்லவோ ஏங்கி இருந்தேன்.

(இருவரும் ஆலிங்கனம் செய்துகொள்ளுகிறார்கள்).

கோகி.—வஸந்தஸேனே!உன்னுடையவிருப்பம்இன்ன தென்பதை நான் நன்றாய் அறிவேன். அன்றிரவு உனக்கும் என் கணவருக்கும் நடந்த சம்பாஷணை எனக்கு முற்றிலுந் தெரியும்.

வஸந்த.—அக்காள்! தங்கள் நற்குணத்தைப்போல இந்த உலகில் வேறு எவரிடத்திலும் இருக்குமோ! எந்த விஷயத்திலும் தங்கள் மனம் கோணக்கூடாதென்பதே என்னுடைய ஓயாக்கவலை. என்னைத் தங்களுடைய பணிப் பெண்ணாக நீங்கள் இனி மதிக்கவேண்டுகிறேன்.

கோகி.—ஆசா! நல்ல வார்த்தை சொன்னாய்! நீ. எனக்கு அருமையான ஸகோதரியல்லவா! நாமிருவரும் இனி நமது நாதனுக்குப் பணிப்பெண்கள்.
(கோகிலம் வஸந்தஸேனையின் கரத்தைப்பிடித்து மாதவ ராயர் வலக்கரத்தில்வைத்து) ஸ்வாமி! வஸந்தஸேனையையும் இனி என்னைப்போல மனைவியாக ஏற்றுக் கொண்டு எங்கள் இருவரையும் பணிப்பெண்களாக மதிக்கவேண்டும்.

மாத.—எல்லாம் வல்லவனும் ஸர்வமங்களரூபியுமான ஜெகதீசனுக்கல்லவோ நாமெல்லோரும் பணிசெய்ய வேண்டியவர்கள். வாருங்கள் நாமெல்லோரும் அவருடைய பெருமையைப்பற்றி ஸ்தோத்திரம் செய்துவிட்டுப் பிறகு நம்முடைய புதிய அரசனிடம் போவோம். எனக்கு இந்த இராஜ்யத்தில் முதல் மந்திரி உத்யோகம் கிடைத்திருக்கிறதாம்.

கோகி.—ஆகா! அப்படியா! எல்லாம் ஜெகதீசன் செயல்.

(காட்சி முடிகிறது)

Commercial Press, Madras, S. E.

அவமானத்திற்குட்பட்டு துஷ்ட விலங்கைப்போல வீதியின் வழியாகக் கட்டி இழுக்கப்படும் நிலைமைக்கு வருவே னென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. ஆனால் என்னைக் காணும் நகரத்தினர் யாவரும் கண்ணீர்விட் டழுகின்றனர். நரகத்தின் மத்தியில் ஒரு துளி தேன் வாயில் விழுந்ததைப் போல, இதைக்காண என் மனம் சற்று ஆறுதலடைகிறது; யாவரும் என்னைக் காப்பாற்றும்படி ஈசுவரனைப் பிரார்த்திக் கிறார்கள்.

1-சண்.—அடியாத்தே! ஊர்ச்சனங்கள்ளாம் இப்புடியா அளுவும்! கண் கொண்டுதான் பார்க்கமுடியலியே!

2-சண்.—அடே அந்தாலே பாருடா! ஊட்டுசன்னல் லே நிக்கிற பொட்டச்சிங்கள்ளாம் அளுவுறாங்கடா!

1-சண்.—(தண்டோராப்போடுகிறான்) துடும் துடும் துடும் துடும்; ஊருஜனங்களுக்கெல்லாம் தெரிவிப்பது என்னமெண்டால், நகராதிபதி ஊட்டு மாதவராயரு, தேவி டியா வஸந்தஸேனையைக் கொன்னுப்புட்டு, அவளொடெ நவையெல்லாம் எடுத்துக் கிட்டாராம். அதுக்காவ அவரை நம்ப மவராசா கொன்னுட ஆக்கினை பண்ணிப் புட்டாங்க. இந்தமாதிரி பண்ணறவங்களுக்கு இப்படியே தலைபோயி டும். துடும் துடும் துடும் துடும்.

மாத.—(காதில் கைகளை வைத்து மூடிக்கொண்டு) ஹா! ஈசுவரா!

விருத்தம்—இராகம்: முகாரி.

ஈசனே! யேழை யிந்தத் தூஷணை பெறவோ வந்தேன்?
மாசிலா நெறியே நின்றேன், மரித்திடல் மதியே னிந்த
ஏசுறு மொழியைக் கேட்க எங்ஙனஞ் சகிப்பேன் றாழ்ந்த
நீசரா லிறக்குங் கால நேர்ந்ததோ? சதியே யாமோ?

என்ன கதிக்கு ஆளாக்கினாய்! என்ன கர்ன்ன கடூரம்! இம் மொழிகள் என் காதில் விழ நான் என்ன மகாபாவம் செய் தேனோ! என் தந்தை தன் கச்சேரிக்குப் போனபோது வீதியில் அவர் வரவைக்கட்டியக்காரர் புகழ்ந்து தெரிவித்த

தற்குப் பதிலாக எனக்கு இவ்விதமான கீர்த்தி ஏற்பட்டதோ! ஹா! புண்ணியாத்மாவாகிய என்னுடைய தந்தையின் பெயரைக்கெடுக்கப் பாதகனாகிய நானேன் பிறந்தேன்? கம்பீரச் சின்னங்களுடன் என் பிதா இந்த வீதியிற் போன காலத்தில், தன் மகனுக்கு இதே இடத்தில் இவ்வித மரியாதை கிடைக்கப் போவதை அறிந்திருப்பாரானால், அவருடைய பெருமையும் குதூகலமும் எங்கு போயிருக்கும்! ஓகோ! அதோ என் மித்திரன் ஸோமேசனும், என்னருமைக் குழந்தை சிசுபாலனும் வருகிறார்கள் (சண்டாளரிடம்) நண்பர்களே! நீங்கள் எனக்கு ஒரு அனுமதி தர வேண்டும்.

1-சண்.—என்னையா ஓணும்? சொல்லையா: ஒடனே தாரோம். ஒங்க நல்ல கொணம் ஒண்ணே போதுமே! நம் மராசாவுக்குக்கூட ஒன்னொட ரோக்கிதே வருமா! கேளையா.

2-சண்.—எத்தினி தரம் எங்களுக்குக்கூட சோறு, துணி யெல்லாம் ஒங்க வளவுலேந்து கெடச்சுதே! அதெல்லாம் மறப்பமா? நாங்க சின்னச்சாதிப் பறையரா இருந்தாலும், நீங்க சேஞ்ச ஒவகாரம் நெனைக்காமப்போனா குடிக்கிற கஞ்சிலெ ஆண்டவன் மண்ணு போடமாட்டாரா?

மாத.—அதோ என் குழந்தை வருகிறான். அவனுடன் கடைசியாக ஒரு முறை பேச அனுமதி தரவேண்டும்.

1-சண்.—இத்தானா பெரமாதம்! பேசுங்கசாமி! செனங்கள்ளாம் அப்பாலே போங்க; கொளந்தைக்கி வளிவுடுங்க.

(ஸோமேசனும் சிசுபாலனும் வருகிறார்கள்.)

ஸோ.—குழந்தாய்! அதோ பார் உன் பிதாவை.

சிசு.—ஹா! அப்பா! அப்பா! (ஆவலோடு தகப்பன் பேரில் விழுகிறான்.)

மாத.—வாடா! என் செல்வமே. (வாரி அணைத்து அவன் கையைப் பிடித்துக்கொண்டு) ஆகா!

**விருத்தம்—இராகம் ஸகானு.**

சேயனே! கண்ணே! இந்தச் செவ்விளங் காத்திறைல் நீ
தீயெனக் கிடவோ பாவி யென்சுத ஞக வந்தாய்?
மாய நீ யென்செய் வாயோ? மலிபுகழ் செல்வம் யாவும்
நீ யென மதித்தே வந்த நினைவினி யகன்ற தையோ!

அழகிய இந்தச் சிறிய கையால் எனக்குக் கொள்ளிவைக்கப் போகிருயோ? ஐயோ! குழந்தைப் பருவத்திலேயே என்னை நீ இழந்துவிட்டால் இன்னும் சில வருஷங்களில் என்னுடைய நினைவே இல்லாமற்போய் விடுமே! ஒரு தகப்பனிருந்தானென்பதை உனக்கு நினைப்பூட்ட நான் உனக்கு என்ன பொருளை வைத்திருக்கிறேன்! பொருள்களை வாரிக்கொடுத்து ஊரில் யாவருக்கும் நன்மை செய்தேன். அதனுல் உனக்குமாத்திரம் மீளாத்துன்பத்தைக் கொடுத்தேனுகையால் நான் உனக்குமாத்திரமே விரோதியானேன். நீ பிற்காலத்தில்தரித்திரத்தால்வருந்தும்போது,இந்தப்பாவிவயிற்றில் ஏன் பிறந்தேனென்று தூஷிப்பாய். அதையெல்லாம் கேட்க நான் கடமைப்பட்டவனே! இப்பொழுது நான் என்னுடையதென்று உனக்குத் தரக்கூடியது என்னுடைய பூணூல் ஒன்றுதான். இதைத் தருகிறேன். தங்கம், நவமணி, முதலியவற்ருற்செய்த ஆபரணங்களெல்லாம் பிராம்மணனுக்குப் பூணூலைப் போல அவ்வளவு பெருமையான பூஷணமல்ல. இதனுல் நாம் தெய்வங்களுக்கும் இருஷிகளுக்கும் ஆராதனை செய்யும் மேன்மையைப் பெறுவதால் இது ஒன்றே நமக்குப் போதுமான ஐசுவரியம்! சாஸ்திரக்கிரமப்படி நான் உனக்குப் பூணூற் கலியாணம் செய்துவைக்கக் கொடுத்து வைக்காப்பாவியானபோதிலும், இப்பொழுது இதைக் கழுத்தில் தரித்துப் பார்க்கிறேன்.

(தன்பூணூலை எடுத்து அவன் கழுத்திற் போடுகிருர்)

1-சண்.—சாமி நேரமாவுது; ராசாகோவிச்சுக்குவாரு போதும். போவலாம்.

சிசு.—அடே! சண்டாளப்பயலே! என் அப்பாவை எங்கே கூப்பிடுகிருய்?

மாத.—அப்பா! கண்மணி! நான் உயிரைவிடப்போகி றேன். இயமன் வந்து காத்துக் கொண்டிருக்கிறன். என் காலம் முடிந்து விட்டது. என்னை இனி பார்க்கமாட்டாய். எங்கே! என்னைக்கட்டிக் கொண்டு ஒரு முத்தங்கொடு.

2-சண்.—அடே கொளந்தே! சின்னச்சாதிலே பொறந்த வங்கள்ளாம் சண்டாளர் ஆவமாட்டாங்க; நல்ல புண்ணியவாங்களை வதைக்கருங்கபாரு அவுங்கதான் சண்டாளரு.

சிசு.—அப்படியானல் என்னுடைய அப்பாவை ஏனடாகொல்ல நினைக்கிருய்?

1-சண்.—அது ராசா உத்திரவு! நாங்க என்ன பண்ணுவம்? பாவ புண்ணியம் அவுருது.

சிசு.—அப்படியானல் நான் வருகிறேன்; என்னைக் கொன்றுவிடு. அப்பாவை விட்டுவிடு. அப்பாவைப்பார்க்காமல் போனல் அம்மா சாப்பிடாமல், அழுது உயிரை விட்டு விடுவாள். அப்பாவைக் கொல்லக்கூடாது. என்னை அழைத்துக்கொண்டு போங்கள்.

2-சண்.—ஆகா! புலி வவுத்துலே பூனைபொறக்குமா? கொளந்தெ என்ன தகிரியசாலி! நீ சேனு நாளைக்கு சொகமாயிருக்க அந்த சாச்சாத்துக்கடவுளுசெய்வாரப்பா!

மாத.—(குழந்தையை அணைத்து) ஆகா! தன்யனுனேன்! இதுவல்லவோ உண்மைச் செல்வம்! உற்றார் உறவினர் நம்மிடத்திற் காட்டும் ஆசாபாசத்தைக் காட்டிலும் இன்பந்தரக்கூடிய பொருள்வேறு என்ன இருக்கிறது!

ஸோ.—ஹே நண்பர்களா! என்னுடைய ஸ்நேகிதரை விட்டுவிடுங்கள். உங்களுக்கு ஒரு சரீரந்தானே வேண்டும்; இதோ என்னுடைய தேகத்தை உங்கள் வசம் ஒப்பு வித்தேன். என்னைக் கொண்டுபோங்கள்.

-சண்.—இதென்ன பைத்தியம்! ராசாஆக்கினையை மீறி வேறே மனிசரைக் கொண்டு போவமுடியாது; நேர் மாச்சு; போவலாம்.

(யாவரும் போகின்றனர். மறுபடியும் ஒருதரம் முன் மாதிரி பறை சாற்றுகின்றனர்.

(அதற்கருகிலிருந்த அரண்மனை மேன்மாடியில் ஒரு அறையில் அடைபட்டிருந்த பத்மநாபன் தனக்குள்) இதென்ன ஆச்சரியம்! இப்படியும் அநியாயம் செய்வதுண்டா! ஒரு பாவத்தையுமறியாத மாதவராயரைக் கொல்வதா? நான் சோலையிலிருந்து வந்த முதல் என்னை வஞ்சித்து இந்த அறையில் போட்டு அடைத்திருக்கிறான் கொலைபாதகன். நான் இந்தச் சமயம் எப்படி வெளியில் போவேன்? நில்லுங்கள்! நில்லுங்கள்! வஸந்தஸேனையைப்பாவியாகிய நானேசோலைக்கு அழைத்துப் போனேன். அங்கே வீரசேனன் சொல்லிற்கு அவள் இணங்கவில்லையாதலால் அவனே கொன்றவன். இந்தப்புண்ணியவானல்ல; இவரைவிட்டு விடுங்கள்.—(தனக்குள்), நான் சொல்வது இவர்கள் காதில் விழவில்லையோ? போகிறார்களே! நான் இந்த ஸமயத்தில் சும்மா விருந்தால் நிரபராதியான ஒரு பெரிய மனிதருடைய உயிர் போய்விடும். நான் எப்படி வெளியில்போவேன்? கதவை வெளியிற்பூட்டியிருக்கிறானே; இந்த ஜன்னலின் வழியாகக் கீழே குதிக்கிறேன். இதனால் இறந்தாலும் ஸரி, நல்லவிஷயமானதால் மோக்ஷமாயினும் கிடைக்கும். (கீழே குதிக்கிறான்) ஹா! உயரம் அதிகமானதால் நன்றாய் அடிபட்டு விட்டது! ஐயோ! எழுந்திருக்க முடியவில்லையே! அவர்கள் போய்விடுகிறார்களே! என்ன செய்வேன்? என் உயிர் இதனால் போனாலும் போகிறது. (மெதுவாக எழுந்திருக்கிறான்) ஓடிப்போய் உண்மையைத் தெரிவித்து அவரை விடுவிக்கிறேன். அதன் பிறகு என் உயிர் போவதானாலும் கவலையில்லை. (அடிபட்டு வருந்தும் தேகத்துடன் மெதுவாக எழுந்து தட்டித்தடுமாறிக் கொண்டு ஓடிவருகிறான்)

1-சண்.—(சற்று தூரத்தில்) என்ன ஆச்சிரியங்கறேன்! நம்பளே ஆரோ அளெக்கிறானே! என்னாத்துக்கோ தெரியலையே!

பத்ம.—நான் சொல்வதைக் கேளுங்கள்; மாதவராயர் குற்றவாளியல்ல. நானே வஸந்தஸேனையைப் பூஞ்சோலைக்கு அழைத்துப்போனவன். அங்கே என் எஜமானனே அவளைக் கொன்றவன்.

2-சண்.—அடியாத்தே! புதுமையாக்கீதே! நீசொல்றது நெசந்தானய்யா?

பத்ம.—சத்தியம்! நான் நியாயஸ்தலத்திலேயே இதைச் சொல்லியிருப்பேன். என்னை என் எஜமானன் ஒரு அறைக்குள் விட்டுப் பூட்டிவிட்டார்.

(வேறொரு பக்கமாக வீரஸேனன் ஏப்பம் விட்டுக் கொண்டுவருகிறான்.)

வீரஸே —(தனக்குள்) இன்றைக்கு முதல்தரமான ஸாப்பாடு! வயிற்றைத் தூக்கிக்கொண்டு நடக்கமுடியவில்லையே! என்விருப்பத்திற்கு இணங்காத வஸந்தஸேனையை ஒழித்தேன்! அவள் ஆசைவைத்த மாதவராயன் பேரில் பழியைச் சுமத்தினேன்-இதுஸுதினமானதால், நல்ல விருந்து ஸாப்பிட்டேன்; அதோசண்டாளர் அவனை அழைத்துக் கொண்டு போகிறார்கள். நானும் அவனைக் கொல்வதைப் பார்த்துஎன்கண்களுக்கும்விருந்துசெய்விக்கிறேன்(கொஞ்ச தூரம் போய்) அதோ பத்மனுபன் போகிறானே! அவனை நான் சிறையிலல்லவோ அடைத்து வைத்திருந்தேன்! அவன் உண்மையை வெளியிற் சொல்லி விடுவானோ என்னவோ தெரியவில்லையே! நானும் போய் ஸமயத்திற்குத்தகுந்தவிதம் நடந்து கொள்ளுகிறேன் (வருகிறான்.)

பத்ம.—இதோ வந்தார் என் எஜமானர்!

1-2. சண்.—சாமி!தெண்டம்!

வீர.—அடேபத்மநாபா! நீ எங்கே போகிறாய்? வா என்னிடம்.

பத்ம.—நல்ல யோக்கியர்! வஸந்தஸேனையை கொன்றதுமன்றி, மகா உத்தமரான மாதவராயரையுங் கொல்ல வழிதேடினீரோ?

வீர.—அடே! எவ்வளவோ யோக்கியனை நானா ஒரு ஸ்திரீயைக் கொல்பவன்?

ஜனங்கள்.—ஆம்! நீதான் அவளைக்கொன்றவன். மாதவராயரல்ல.

வீர.—அப்படி எவன் சொன்னவன்?

ஜனங்கள்.—இந்த நற்குணமுள்ள மனிதனே சொல்லுகிறான். நீதான் கொன்றிருப்பாய்.

வீர.—ஜனங்களே! நான் சொல்வதைக் கேளுங்கள். இவன் என்னுடைய அடிமை! இவனுக்குத் திருட்டுக்கை அதிகம்! அதற்காக இவனைத் தண்டித்து ஒரு இடத்தில் தனியாக பூட்டிவைத்திருந்தேன். அந்த விரோதத்தை வைத்துக்கொண்டு இப்படிச் சொல்லுகிறான். அடே! பத்மநாபா! உண்மையைச் சொல்; நான் சொல்வது ஸரிதானே! (தன் விரலிலிருந்த ஒரு மோதிரத்தை ஒருவருக்கும் தெரியாமல் கழற்றிக்கொண்டு அவனுக்கருகில் போய் அதை அவன் கையில் இரகசியமாகக் கொடுத்து) இதை நீ எடுத்துக்கொள் முன் சொன்னதை மாற்றிச் சொல்லிவிடு.

பத்.—(மோதிரத்தை ஜனங்களுக்குக் காட்டி) இதோ பாருங்கள். இந்த மோதிரத்தை இலஞ்சங்கொடுத்துப் பேசாமலிருக்கச் சொல்லுகிறார்.

வீர.—(மோதிரத்தைப் பிடுங்கி) பார்த்தீர்களா! பார்த்தீர்களா! இதுதான் திருட்டுப்போன மோதிரம்! இதற்காகத்தான் இவனைத் தண்டித்தேன். இவன் முதுகைப் பாருங்கள்; இவனுக்கு எத்தனை அடிவாங்கிக் கொடுத்திருக்கிறேன்.

1-சண்.—சரிதாங்க! இவன் பொய்தான் சொல்றான்! வா போவலாம். நம்பவேலேயைப் பாப்பம்.

பத்.—ஆகா! அடிமையா யிருப்பதின் இகழ்வு இதுதான்! நான் நிஜத்தைச் சொன்னபோதிலும் ஒருவரும் நம்பமாட்டேனென்கிறார்கள். (மாதவராயர் காலில் விழுந்து) பிராம்மணோத்தமரே! என்னலான பாடுபட்டேன்.

ஒன்றும் பலிக்கவில்லை. குற்றமற்ற உங்களைக் கொண்டு போகிறார்களே! என்ன செய்வேன்? உங்களை அந்த ஈசுவரனே காப்பாற்ற வேண்டும்.

மாத.—நல்ல மனிதனுக்கு அநியாயமாய் ஆபத்து வந்துவிட்டதே யென்று மனதிரக்கங்கொண்டு உன்னாலான உதவி செய்ய முயன்றாய். என் தலைவிதி குறுக்கே நின்று வழிமறிக்கிறது. நீ அதற்கென் செய்வாய்? கவலைப்படாதே! எழுந்திரப்பா! நீ மகா யோக்கியன்! ஸ்வாமி உன்னுடைய நற்குணத்திற்குத் தகுந்த நற்கதி யளிப்பார். உன் கடமையை நீ செய்துவிட்டாய்; எழுந்திரு.

வீர.—ஹே! சண்டாளப் பயல்களா! ஏன் இப்படித் தாமசம் செய்கிறீர்கள்? உடனே அழைத்துப்போய் இராஜனுடைய கட்டளையை நிறைவேற்றுங்கள். இனித் தாமதித்தால், நீங்களும் தண்டனை பெறுவீர்கள்.

சிசு.—ஐயா! என் தந்தையை விட்டு விடுங்கள். அவருக்குப் பதிலாக நான் வருகிறேன்.

வீர.—இரண்டு பேரையும் கொன்று விடுங்கள். அப்பனும் மகனும் கூண்டோடு கைலாசம் போகட்டும்.

மாத.—இவனுடைய இச்சைபடியே எல்லாம் நடக்கிறது! அப்பா கண்மணி! நீ உன் தாயாரை அழைத்துக் கொண்டு இந்த ஊரைவிட்டு என்னாலுண்டான இந்த அவமானம் காதிற்படாத வேறோரிடத்திற்குப்போய் ஸௌக்கியமாக இருங்கள். மித்ரா! இவனை அழைத்துக் கொண்டு போ.

ஸோ.—(விசனத்துடன்) ஐயா! உமக்குப் பிறகு நான் உயிருட னிருப்பே னென்று நினைக்க வேண்டாம்.

மாத.—ஸோமேசா! ஜீவாத்மா நம்முடைய கைக்குட்பட்டதல்ல. உன்னுடைய உயிரைவிடவும், வைத்துக் கொள்ளவும், நீயா அதற்கு நாதன். அதற்கு அதிகாரி வேறொருவனிருக்கிறான். இந்த உலகத்திற்கு வந்தகாரியம் முடியும் வரையில் எவனும் இதைவிட்டு ஈசுவரனுடைய அனுமதியின்றிப் போகமுடியாது. அவஸரப்படாதே

நன்றாய் யோசனை செய்து பார். அநாதையான இவர்களை நீ காப்பாற்றவேண்டும். என்னுடைய கடைசி வேண்டு கோளைச்செய் ; நேரமாகிறது. போ !

ஸோ.—(தனக்குள்) இவர் சொல்வது நியாயமாயிருந்த போதிலும், இவர் இறந்தபின் நான் அதை எப்படி ஸகித்துக் கொண்டிருப்பேன் ? முதலில் இவருடைய மனைவியைத் தேற்றிவிட்டுப் பிறகு என் உயிரை விடுகிறேன்.—ஸரி ஸ்வாமி! இதுதான் கடைசியாக உங்களுடைய ஸுந்தரமுகத்தை நான் பார்ப்பதோ.——(அவரை ஆலிங்கனம் செய்து குழந்தையை எடுத்துக்கொள்ளுகிறான். குழந்தை அப்பா ! அப்பா ! வென்று அழுகிறான்.)

வீர.—அடே நான் அந்தப் பையனையும் கொல்லச் சொன்னேனே !

1-சண்.—(அழுத்தமாக) ராசா உத்திரவில்லீங்க ; நாங்க கொல்லமாட்டோம். இவரைமட்டுந்தான் கொல்லச் சொன்னாரு. (ஸோமேசன் குழந்தை இருவரைவிட்டு மற்றவர் மேலும் போகின்றனர்.)

1-சண்.—சரி ! இதுதான் எடம். கள்ளுவுமரம் அதோ பாத்தியா ? இதுலே தூக்கிப் போட்றது ஒன்னொட மொறை.

2-சண்.—என்னொட மொறையானா நான் மெதுவாத் தான் போடுவேன். எங்கப்பன் செத்துப் போனப்ப என்னெக் கூப்பிட்டு, 'அப்பா ! ஆரெனாச்சும் கொல்ல உத்திரவானா, அவசரப்படாமே நிதானி. ராசாவுக்குப் புள்ளே கிள்ளே பொறந்திச்சின்னா, குத்தவாளியெ உடச்சொல்லிப் புடுவாங்க. அப்படி யில்லேனா, குத்தவாளி தப்புதம் செய்யல்லேன்னு ஏதாச்சும் நல்ல சாக்கி கெடச்சு உட்டுட உத்திரவாவலாம். அப்படி இல்லாமெப்போனா ஒரு ராசா போயி இன்னொரு ராசாவர்லாம். அதுக்காவ உட்டுடலாம்' இன்னு எங்கப்பன் சொன்னான்.

வீர.—(ஒரு புறமாக) ஓகோ ! இராஜன் மாறப்போகிறானோ ! சண்டாளப் பயலே ! இருக்கட்டும்.

**1-சண்.**—சரி சேனு நேரமாச்சு! ஆவட்டும் நிக்காதே.

**2-சண்.**—(கைகுவித்து) ஐயரே! நாங்க ராசா உத்திரவைச் செய்யரோம். எங்க பேருலே தப்புதமில்லே; எங்க பேருலே வருத்தப்படாதே! ஏதாச்சும் சொல்லிக்கிணுமாணு சொல்லிக்க. நாங்க ஒருபாவத்தையும் அறியாதவங்க. குத்தங் கொறையிருந்தா மன்னிச்சுக்கோ; மவராசா!

(வணங்குகிருன்).

**மாத.**—ஆகா! என்ன இவர்களுடைய நற்குணம்! பலரைக் கொன்று, ஹிருதயம் கல்லாயிருக்கப் பெற்ற சண்டாளரேயாயினும் என் விஷயத்தில் நிரம்ப இரக்க முடையவரா யிருக்கிருர்கள்! நான் குற்றவாளியல்ல வென்பது ஸாதாரணப் பாமர ஜனங்களுக் கெல்லாம் இயற்கையிலேயே தெரிந்துபோ யிருக்கிறது! அந்த நியாயாதிபதிக்கும் அரசனுக்கும் மாத்திரம் உண்மையை அறிந்து கொள்ளும் திறமை இல்லாமற் போனதுதான் ஆச்சரியம்! தருமமே ஜெயமென்பது பொய்யாகுமோ? இதோ என்னைக் கொல்லப்போகிருர்கள். அதர்மமே ஜெயமடையும் போலிருக்கிறது! விதியானது என்னைப் பலமாக இழுத்துச் செல்லும்பொழுது நான் எவ்வளவு முயன்றபோதிலும் என்ன பயன்? இந்தக் கழுமரத்திலா என்னைப்போடப் போகிருர்கள்! ஆகா! ஈசுவரா!

**திருவருட்பா; இராகம்: எதுகுல காம்போதி.**

பதியேயெம் பரனேயெம் பரமனே யெமது பரா
 பரனே-யானந்த பதந்தரு மெய்ஞ்ஞான
நிதியே மெய்ந்நிறைவே மெய்ந்நிலையே மெய்யின்ப
 நிருத்தமிடும் தனிமை நிபுண மணிவிளக்கே
கதியே யென்கண்ணே யென் கண்மணியே யெனது
 கருத்தே என் கருத்தி லுற்ற கனியே செங்கனியே
துதியே யென் றுரையே யென்ருேழா வென்னுளத்தே
 சுத்த நடம்புரிகின்ற சித்தசிகாமணியே!

உயர் குலத்திற் பிறந்ததும், நகராதிபதியின் புதல்வனாயுதித்ததும், நற்குண நல்லொழுக்கத்தைப் பெற்று யாவரும் துதிக்கும் பாக்கியத்தை யடைந்ததும், இந்தப் பெருமையைப் பெறுவதற்குத் தானே? ஆகா! கொடிது கொடிது!! மேலான நிலைமையிற்பிறந்து, பற்பல புகழைப்பெற்று இவ்விதம் பாதாளத்தில் வீழ்வதைவிட, ஒரு ஏழையாய்ப் பிறந்து, யாதொரு இடைஞ்சலு மில்லாமலிருப்பது எவ்வளவு மேலானபதவி. மலையின் பேரில் ஆகாயத்தை யளாவிய பெருத்த மரமாய் வளர்ந்து, புயற்காற்றால் முறிபட்டுப் பாதாளத்தில் விழுவதைக்காட்டிலும் தரையில், கட்டைப் புல்லாயிருந்து பலர்கால்களாலும் மிதிபடும் தன்மையிலிருப்பது மேல். ஏனென்றால், அந்தப்புல் காய்ந்து கட்டையா யிருந்தபோதிலும் அதற்கழிவில்லை. ஒருமழை பெய்தால், அழகாய்த் துளிர்த்துக் கொள்ளுமல்லவா! மகா பாவியான நான் ஏன் நல்லவர்கள் வயிற்றில் பிறந்தேன்? என்னால் அவர்களுக்குமல்லவோ என்றும் மாறாத அவமானமும் இழிவும் உண்டாயின.

(அப்படியே கண்மூடி விசனித்து நிற்கிறார்)

(வஸந்தஸேனையும் சந்நியாசியும் வருகிறார்கள்)

சந்.—அம்மா! நகருக்கு ஸமீபத்தில் வந்தோம். எங்கே அழைத்துப் போகவேண்டும்?

**வஸ.**—என் ஆருயிர்க்காதலராகிய மாதவராயருடைய வீட்டிற்கு முதலிற்போகவேண்டும். சந்திரனைக்கண்டு அல்லி மலர்வதைப்போல, அவர் முகத்தைக்கண்டால், என்னுடைய உயிர் திரும்பிவரும்.

சந்.—ஸரி! இப்படியே போகலாம். இதென்ன ஸமுத்திரகோஷத்தைப் போலிருக்கிறதே!

**வஸ.**—பெருத்த கூட்டமாக இருக்கிறதே! காரணமென்ன வென்று விசாரியும்.

**1-சண்.**—சரி! கடைசிமுறை பறை சாத்துகிறேன்; துடும் துடும் துடும் துடும்; ஊருசனங்களுக்கெல்லாம்

தெரிவிப்பது என்ன மெண்டால் நகராதிபதி ஊட்டு மாதவ ராயரு, தேவிடியா வஸந்தஸேனையைக் கொன்னுப்புட்டு அவளொடெநவையெல்லாம் எடுத்துக்கிட்டாரு; அதுக்காவ, அவரை நம்பமவராசா கொன்னுப்புட ஆக்கினே பண்ணிப் புட்டாங்க. இந்த மாதிரிபண்ணறவங்களுக்கு இப்புடியே தலெபோயிரும் ; துடும் துடும் துடும் துடும்.

வஸ.—ஆகா! இதென்ன இது? என் செவிகள் எதைக் கேட்டன ?

சங்.—அம்மணி ! இதென்ன அதிசயம்! உங்களை மா தவராயர் கொன்ருராம். அதற்காக அவருடைய உயிரை வாங்கப்போகிருர்களாமே !

வஸ.—ஆகா ! பாதகி என்னல் என் துரைக்கு என்ன ஆபத்து நேர்ந்தது ! சீக்கிரம் சீக்கிரம் ! என்னை அங்கே அழைத்துப்போம்.

சங்.—இப்படியே வாருங்கள், வேகமாய் வாருங்கள்.

வஸ.—விலகுங்கள். வழிவிடுங்கள்.

(மாதவராயர் முதலியோரிருந்த இடத்திற்கு வருகிருர்கள் அவரைக் கழுவிலிடத்தூக்குகிருன்).

வஸ.—நிறுத்துங்கள் ! நிறுத்துங்கள் ! கொல்லப்பட்டவள் இதோ வந்தேன் ! நிறுத்துங்கள்.

2-சண்.—ஆருடா இது ?

வஸ.—ஆகா ! ஸ்வாமி ! பாவியாகிய என்னல் உங்களுக்கு இந்தக் காலகதி வந்ததோ ! (வந்து அவர் மார்பில் விழுந்து ஆலிங்கனம் செய்ய, அவர் சற்று அப்படியே இருந்து விலகுகிருர்)

ஜன.—வஸந்தஸேனே ! வஸந்தஸேனே !

2-சண்.—வஸந்தஸேனையா? என்ன ஆச்சரியம் !

சங்.—நல்லகாலந்தான் இவர் இதுவரையில் உயிரோடிருந்தது !

1-சண்.—ஐயா இன்னும் நாலுவருஷம் உயிரோடே இக்கட்டும்.

வீர.—இதென்ன அதிசயம்! வஸந்தஸேனை எப்படியோ உயிருடன் வந்துவிட்டாளே! நான் இனிமேல் இங்கிருப்பது பிசகு; ஓடிப்போகவேண்டும். (போகிருன்)

1-சண்.—அண்ணே! அவனெ உடாதே! ஓட்ருன்! (இருவரும் ஜனங்களும் அவனைத் தொடர்ந்து போகிருர்கள்)

மாத்.—காயும் பயிரில் மழை பெய்ததைப்போல் கழுவிற்குமேல் உயர்த்தப்பட்ட என்னைக் காப்பாற்றியது யார்? இவள் வஸந்தஸேனைதானே? அல்லது அவளைப்போல ஒரு உருவம் என்னைக்காக்கும்பொருட்டே ஆகாயத்திலிருந்து குதித்ததோ! நான் விழித்துக்கொண்டிருக்கிறேனே? அல்லது கனவு காண்கிறேனே! என் புத்தி மாருட்டமடைந்ததோ! என்னை இந்த விபத்திலிருந்து விலக்கும்பொருட்டு அவளே தெய்வலோகத்திலிருந்து மனித ஸ்வரூபத்துடன் தோன்றினளோ?

வஸ.—(அவர்பாதத்தில் விழுந்து) எவ்வளவோ மேன்மையைப் பெற்ற தங்களுக்கு, இந்தத் தீங்கு ஸம்பவிக்கக் காரணமா யிருந்தவள் எவளோ அவளே வந்தனள்!

மாத.—ஆகா! கடைசியில் தருமமே ஜெயமடைந்ததோ! ஈசுவரனுடைய மகிமையே மகிமை!—இந்தச் சந்நியாசி யார்?

வஸ.—இவரே என் உயிரை காப்பாற்றியவர்.

மாத,—அப்படியா! ஸ்வாமீ! நமஸ்காரம்? தங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்?

(அருகில் ஒரு பெருத்த சத்த முண்டாகிறது)

"பிரதாபராஜனுக்கு ஜெயமுண்டாகட்டும். புதிய அரசன் நீடூழிவாழ்வாராக." (சசிமுகன் வருகிருன்)

(தனக்குள்) இந்த தேசத்து அரசன் செய்த அக்கிரமச்செயல்களுக்கெல்லாம் பிராயச்சித்தமாக அவனை இந்தக்

கைகளே கொன்றனை. மூவுலகத்தையும் கவரக்கூடிய வல்லமை பெற்ற பிரதாபனுடைய குணமே குணம்! அவன் சிம்மாசனமேறியவுடன் செய்த முதற்காரியத்தி லிருந்தே அவனுடைய மனதின் மேன்மை நன்குய்த் தெரி கிறது. இது தான் இடம். மாதவராயர் இங்குதா னிருப் பார்! ஆகா! அதோ வஸந்தஸேனையும் நிற்கிருளே! (மாத வராயரை வணங்கி). ஸ்வாமி! நமஸ்காரம்.

மாத.—ஐயா! தாங்கள் யார்?

சசி.—உங்கள் மாளிகையில் கன்னம்வைத்து, உங்க ளிடம் வஸந்தஸேனையால் ஒப்புவிக்கப் பட்டிருந்த நகை களைத் திருடியவன் நான்தான். என்னுடைய குற்றத்தைத் தங்களிடத்தில் ஒப்புக்கொண்டு, தங்களுடைய மன்னிப் பைப் பெறவந்தேன்.

மாத.—அப்படியா! ஸந்தோஷம்! நீர் செய்தது குற்ற மல்ல! நல்லகாரியமே செய்தீர். வேறு ஏழையின் வீட்டில் திருடி, அவனை வருத்துவது இதனுல் இல்லாமற் போயிற் றல்லவோ!

சசி.—ஆகா! எப்பொழுதும் மேன்மைக்குணமே! ஸ்வாமி! தங்களுக்கு ஒரு ஸந்தோஷ ஸமாசாரம் கொண்டு வந்திருக்கிறேன். யாவருக்கும் தீமை செய்து வந்த நமது கொடுங்கோ லரசனைக் கொன்றுவிட்டோம். அவனுக்குப் பதிலாக பிரதாபன் சிம்மாசனம் ஏறிவிட்டான். உயர்குலப் பிறப்பும் நற்குணமும் பெற்ற தங்களுக்குத்தன் மரியாதை யைச் செலுத்த என்னையனுப்பினுன்,

மாத.—என்ன அதிசயம்! இதுதான் ஸர்வவல்லமை யுடைய கடவுளின் செயலோ?

சசி.—கடைசியாக உங்களுடைய வண்டியில் ஏறிப் போன அந்த உதவியை அவன் மறக்கவே இல்லை. இனி எப்போதும் மறப்பதில்லை என்றும் தெரிவித்தான். நீங்கள் செய்த பேருதவிக்குச் சன்மானமாகத் தங்களை முதல் மந் திரியாக்கி யிருக்கிருன்.

மாத.—ஹா! கருணைநிதே! உன்னுடைய திருவிளையாட்டை என்னவென்றுசொல்லுவேன்?

ஜனங்கள்.—அவனை இப்படி இழுத்துக்கொண்டு வாருங்கள்; இப்படி இழுத்துவாருங்கள்; துஷ்டராஜனுக்குத் தகுந்த மைத்துனன்; உதையுங்கள்; கொல்லுங்கள்; குத்துங்கள்.

(ஜனங்கள் வீரஸேனனைக் கட்டியிழுத்து வருகிறார்கள்)

வீர.—ஐயோ! ஐயோ! நாயை அடிப்பதைப்போல அடிக்கிறார்களே! கொல்லுகிறார்களே! என்னசெய்வேன்? யாரிடத்தில் உதவிக்குப்போவேன்? விரோதிகளெல்லாரும் ஒன்றாய்ச்சேர்ந்து கொண்டார்களே! ஒன்றும் தோன்றவில்லையே! அதோமாதவரா யனிருக்கிறான்! அவனை வேண்டிக் கொள்கிறேன். (காலில்விழுந்து) ஐயா! என்னை நீரே காப்பற்ற வேண்டும். இவர்கள் என்னைக் கொல்லுகிறார்கள்.

ஜனங்கள்.—ஸ்வாமி! அவனை இப்பால் உதைத்துத் தள்ளுங்கள். துஷ்டனை ஒழித்து விடுகிறோம்.,

வீர.—ஓ. மாதவராயரே! இந்த ஸமயத்தில் எனக்கு உம்மைத் தவிர யாரும் துணையில்லை. காப்பாற்றவேண்டும்! அபயம்!

மாத.—வீரஸேனா! பயப்படாதே! நீ என்னை விரோதியாக மதிக்கிறாய். நான் உன்னை அப்படி நினைக்கவேயில்லை.

சசி.—இந்தக் கொலைபாதகனை அப்பால் இழுத்துக் கொண்டு போங்கள். ஸ்வாமி! இந்தப் பரமபாதகனை ஏன் காப்பாற்றவேண்டும்.—ஜனங்களே! இவனைக் கட்டி யானைக் காலில் உருட்டிவிடுங்கள் இல்லாவிட்டால் வாளால் இவன் தேகத்தை இரண்டாய்ப் பிளவுங்கள். இவன் உயிருடனிருந்தால், எத்தனையோ ஏழை ஜனங்களை வயிறெரியச் செய்வான்.

மாத.—பொறுங்கள்! பொறுங்கள்! நான் சொல்வதைத் தயவு செய்து கேளுங்கள்.

வீர.—நற்குணமே நிறைந்த உத்தமரே! உம்மையே அடைக்கலமாய் நம்பி வந்தேன். என் உயிரைக் காப்பாற்றும். இனி உமக்கு நான் யாதொரு தீங்கும் நினைப்பதே இல்லை.

ஜனங்கள்.—இவனைக் கொல்லுங்கள்; மகா பாவியாகிய இவனை உயிருடன் விடக்கூடாது.

(மாதவராயருடைய கழுத்திலிருந்த எருக்கமாலையை வஸந்தஸேனை கழற்றி வீரஸேனனுடைய கழுத்திற் போடுகிறாள்.)

வீர.—ஹா! வஸந்தஸேனை! பெண்மயிலே! என் பேரில் இரக்கங்கொள். இனி நான் உன்னை நினைப்பதே இல்லை.

சசி.—இவனை உயிருடன் விட்டால் நகரத்திற்குப் பெரிதும் துன்பமுண்டாகும். இன்னம் யாருக்கு இவன் எவ்விதத் தீமை செய்வானோ! இவனுடைய உயிரை வாங்குங்கள்.

மாத.—ஐயா! இப்படி வாரும் நான் சொல்வதைக் கேட்பீரா?

சசி.—ஆட்சேபனை யென்ன?

மாத.—அப்படியானால் இவனை விட்டு விடுங்கள்.

சசி.—நல்ல காரியம் வஸந்தஸேனையை கொல்ல நினைத்ததுமல்லாமல் உங்களுடைய உயிருக்கும் உலைவைத்தானே! இந்தப் படுபாவியையா உயிருடன் விடுகிறது?

மாத.—எவ்வளவு விரோதியானபோதிலும் இவன் மனப்பூர்வமாக அபயமென்று நம்முடைய காலில் விழுந்த பிறகு இவன்பேரில் நம்முடைய வாள்படலாமோ? நாம் இவனுக்குக் காட்டும் தயையே இவனுக்குப் பெருத்த தண்டனையாகும். விட்டு விடுங்கள்.

சசி.—ஆகா! இதுவல்லவோ உத்தமகுணம்! ஸரி; உங்கள் சித்தம் போல ஆகட்டும்; இவனை விட்டு விடுங்கள்.

(வீரசேனன் விடப்படுகிறான்)

72 மேளராக மாலிகை (தெலுங்கு) 1—0—0

இஃது உலகப்பிரஸித்தராய் விளங்கிக்கொண்டிருந்த ஸங்கீதவித்வான் வேதஸ்ரீ மஹாவைத்யநாதையரவர்கள், தஞ்சாவூரை ஆண்ட His Highness சிவாஜி மஹாராஜா அவர்களுடைய மாப்பிள்ளை M. R. Ry ஸாகாராம் ஸாகேப் அவர்களுடைய வேண்டுகோளின் பேரில், நூதனமாய் அற்புதந்தோன்ற இயற்றிய எழுபத்திரண்டு மேளராக மாலிகை இலக்கணப்படி ஸ்வரப்படுத்தி தாளக் குறிப்புடன் தெலுங்கு லிபியில் பிரசுரித்திருக்கிறது. ஸங்கீத வித்வான்களுக்கும் ஸங்கீதம் கற்றுக் கொள்பவருக்கும் மிகவும் இன்றியமையாதது. இதில் மஹா வைத்யநாதையரவர்களுடைய பரமகுருவாகிய வையை ஆணையா அவர்கள் இயற்றிய கீர்த்தனைகளில் சிலவற்றையும் மஹா வைத்யநாதையரவர்கள் தமயனார் இராமஸ்வாமி ஐயரவர்கள் இயற்றிய கீர்த்தனைகளில் சிலவற்றையும் சேர்க்கப் பட்டிருக்கிறது.

N. B. எல்லா ஸங்கீத புஸ்தகங்களும் கிடைக்கும்.

## சுதேசி கைத்தொழிலை ஆதரியுங்கள்.



### சுதேசிப் பொத்தான்கள்

எங்கள் பொத்தான்கள் பால்போல் வெளுப்பாயும், இரும்புபோல் அழுத்தமாயும், வேலைப்பாடமைந்ததாயும் என்றும் அழியாத மெருகுள்ளதாயும் இருக்கின்றன. மேல் நாடுகளிலிருந்து இரக்குமதியாகும் பொத்தான்களை விட விலை குறைவு ரூ 0—3—6 க்கு இந்தியா போஸ்டேஜ் அரை அணா ஸ்டாம்புகள் அனுப்புகிறவர்களுக்கு மேலே படத்தில் காண்கிறபடி பொத்தான் ஒரு ஸெட் ஸாம்பிலாக அனுப்பப்படும். வேண்டுவோர் கீழே கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு விகிதம் வேறு. கடிதங்கள் இங்கிலிஷ் அல்லது தமிழில் எழுதவும்.

**The Madras Button Works**

**Managing Proprietors**

S. S. MANIA & Co., Vepery, MADRAS, N.C.

## கீர்த்திபெற்ற மணியா புளுட



3-வருஷ உத்திரவாதமுள்ள ஹார்மோனியங்கள்.

| அளவு. | | நீளம். | அகலம். | உயரம். |
|---|---|---|---|---|
| ஸிங்கிள் ஸெட் | அங்குலம். | 21 | $9\frac{1}{2}$ | 9 |
| டபிள் ஸெட் | அங்குலம். | 21 | $11\frac{1}{2}$ | 9 |

உங்களுக்கு வாஸ்தவமாய் உயர்ந்த ஹார்மோனியம் வேண்டுமானால், நல்லமரம், முதல்தரமான ரீட்ஸ், நல்ல நாதம், இவற்றுடன் எல்லா சீதோஷ்ண நிலைமைக்கும் பொறுத்தமான "மணியா புளுட்" ஹார்மோனியம் திருப்திகரத்தைக் கொடுக்கும். விலை விபரம் பின் வருமாறு :—

நெ. 1 "அமெரிக்கன் ரீட்ஸ்" ஸிங்கிள் ஸெட் மூன்று ஸ்தாயி c to c (சங்கராபரண மேளம்) 3 stops விலை ரூ 27—0—0

நெ. 1 a do do டபிள் ஸெட் 4 stops ரூ 47—0—0

நெ. 2 பாரிஸில் செய்த "ஸ்டார் ரீட்ஸ்" ஸிங்கில்ஸெட் மூன்று ஸ்தாயி c to c (சங்கராபரண மேளம்) 3 stops விலை ரூ 40—0—0

நெ. 2 a do do டபிள் ஸெட் 4 stops ரூ 60—0—0

நெ. 3 பாரிஸில் செய்த "எஸ்டிவீ ரீட்ஸ்" ஸிங்கிள்ஸெட் மூன்று ஸ்தாயி c to c (சங்கராபரண மேளம்) 4 stops விலை ரூ 45—0—0

நெ. 3 a do do டபிள் ஸெட் 5 stops ரூ 65—0—0

நெ. 4 பாரிஸில் செய்த "கேஸரில் ரீட்ஸ்" ஸிங்கிள் ஸெட் மூன்று ஸ்தாயி c to c (சங்கராபரண மேளம்) 4 stops சித்திர வேலைப்பாடுடன் விலை ரூ 50—0—0

நெ. 4 a do do டபிள் ஸெட் 5 stops சித்திர வேலைப்பாடுடன் விலை ரூ 70—0—0

நெ. 5 போல்டிங் கால்பெட்டிகள் ரூபா 100 முதல் ரூபா 250 வரையில் ஆர்டரின் பேரில் செய்யப்படும்.

## கீர்த்திபெற்ற மணியா புளூட்



47553
600 008

# ச்ருதிப் பெட்டி.

2—வருஷம் உத்திரவாதம்.

| அளவு. | நீளம். | அகலம். | உயரம். |
| --- | --- | --- | --- |
| அங்குலம் | 16 | 3 | 8 |

ஸங்கீத வித்வான்களுக்கும், பாகவதர்களுக்கும், வைணீக வித்வான்களுக்கும், அவரவர்களுக்குத் தகுந்தபடி நாதத்தை அதிகப்படுத்தவும் குறைத்துக் கொள்ளவும் செய்யப்பட்டிருக்கிறது. நாதம் மிகவும் கார்வை உள்ளது. ரயிலில் பிரயாணம் செய்யும்போதும் வண்டியில் போகும்போதும் சௌகர்யமாக எடுத்துப்போக மிகவும் அநுகூலமானது. டிரங்கில் வைத்துக்கொண்டு போகலாம். தம்பூரில் கொஞ்சம் முந்திப் பிந்தி ஏற்படும் கலவையை ஸரிப்படுத்திக் கொள்வதுபோல், இந்த வாத்தியத்திலும் ச்ருதியை ஸரிப்படுத்திக் கொள்ளலாம். மத்யமச்ருதியும் செய்து கொள்ளலாம். முதல் தரமான பாரிஸ் "ஸ்டார் ரீட்ஸ்" மூன்று—ஸ—மூன்று—ப—மூன்று—ஸ—ஆக 9 ரீட்ஸ் வைக்கப்பட்டிருக்கிறது. விலை ரூ 18—0—0

"மணியா ஸ்ருதிப்பெட்டியை" வைக்க உயர்ந்த தேக்குமரத்தில் செய்த பெட்டி பூட்டுசாவி உள்பட ரூபா 2—0—0

மேலே தெரிவித்த ஒவ்வொரு "மணியா புளூட்" ஹார்மோனியத்தையும், ஸ்ருதிப்பெட்டியையும் ச்ருதி ஞானம் உடைய ஸங்கீத வித்வானைக்கொண்டு சுத்தமாக ட்யூன் (மேளம்) செய்யப்படுகிறது. இம் "மணியா புளூட்" ஹார்மோனியங்கள் ச்ருதிப்பெட்டிகளின் நாதம் ஸௌஸ்ஸ்வரம் கார்வை இவைகள் சிறப்பைப்பற்றி பிரதிதினமும் எமக்குக் கிடைக்கும் ஏராளமான கடிதங்களே இதற்கு போதுமான அத்தாக்ஷி.

N. B. வெளியூர் ஆர்டர்கள் நன்றாய்க் கவனிக்கப்படும். வெளியூர் ஆர்டர் ஒவ்வொரு பெட்டிக்கும் 5 ரூபா அட்வான்ஸ் அனுப்ப வேண்டும்.

---

எஸ். எஸ். மணியா அண்டு கம்பெனி, வேப்பேரி, மதராஸ்.